
www.padippakam.com



# இலங்கை:

# அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும்

என்.சரவணன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும்

என். சரவணன்

வெளியீடு

பதிப்பகம்

படிப்பகம்

www.padippakam.com


| | | |
|---|---|---|
| நூல் - | : | இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும் |
| ஆசிரியர் - | : | என். சரவணன் |
| முதல் பதிப்பு - | : | ஒக்டோபர் 2001 |
| அட்டை வடிவமைப்பு - | : | மொ.ல. செனவிரத்ன |
| வெளியீடு - | : | மூன்றாவது மனிதன் பதிப்பகம்<br>37/14, வொக்ஸ்சல் லேன்<br>கொழும்பு - 02. |
| விலை - | : | 230 இலங்கை ரூபாய் |

| | | |
|---|---|---|
| Title - | : | Sri Lanka Women in Politics & Women's Politics |
| Author - | : | N. Sarawanan |
| E-mail - | : | sarawanan@journalist.com<br>sariniharsara@hotmail.com |
| Web Page - | : | www.go.to/saraonline |
| First Edition - | : | October 2001 |
| Cover design - | : | M. L. Senevirathne |
| Published by - | : | Moonravathu Manithan Publication<br>37/14, Vauxhall Lane, Colombo - 02<br>Tel : 01 - 302759<br>E-mail : 3man@sltnet.lk |
| Pages - | : | 178 |
| Price (Sri Lanka) - | : | Rs. 230.00 |
| ISBN - | : | 955 - 97535 - 0 - 9 |


படிப்பகம்

www.padippakam.com

பெண் போராளிகளுக்கு...



படிப்பகம்

www.padippakam.com

## பதிப்புரை!

நண்பர் என். சரவணனின் "இலங்கை அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும்" என்ற இந் நூலை வெளியிடுவதில் பதிப்பாளர் என்ற வகையில் மகிழ்ச்சி அடைகிறேன். நண்பர் சரவணன் ஈழத்து தமிழ்ச் சூழலில் மேற் கிளம்பிவரும் பல்துறை ஆர்வமும் தேடல்மிக்க ஆய்வாளனாக தனது உழைப்பின் ஊடாக தன்னை நிலைநிறுத்தி வருபவர். அவரது அக்கறைக்குரிய உழைப்புகள் பல் தளங்களில் கால் பதித்தாலும் மிகக் குறிப்பாக விளிம்பு நிலை மக்களின் துயர் குறித்தே சரவணனது எழுத்துக்கள் அதிகம் மையப்பட்டுள்ளது.

இவ் அக்கறை; தமிழ்ச் சூழலில் குறிப்பாக ஈழத்து தமிழ் சிந்தனை, செயற்பாட்டுச் சூழலில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற தேடலாக அமைகிறது. சமத்துவம் மறுக்கப்படுகிற பெண்கள், தாழத்தப்பட்டோர், அரசியல், இராணுவ ரீதியாக அடக்கி ஒடுக்கப்படுகின்ற மானிடர் நிறைந்த நமது சூழலில், இவைகள் பற்றிய மிகத் திறந்த உரையாடல்களும் எழுத்துக்களும் நமக்கு முக்கியமாகின்றன. இந்த வகையில் சரவணனது எழுத்துக்கள் நமது காலத்தின் முக்கிய திறப்புகளாகும்.

"சரிநிகர்" பத்திரிகையில் சரவணன் பணியாற்றிய காலங்கள் சரவணனின் ஆளுமை விரிவுக்கும் ஆழத்திற்கும் பங்காற்றியுள்ளது. இந்நூலின் அடிப்படையான விடயங்கள் சரிநிகரில் தொடராக வெளிவந்தவை. வாசகர் என்ற நிலையில் சரிநிகரில் தொடராக வெளிவந்த காலத்தில் இக்கட்டுரைகளை தொகுத்து நூலுருவாக்க வேண்டுமென விரும்பியவர்களில் நானும் ஒருவன். இன்று அவ்வெழுத்துக்கள் விரிவாக்கம் பெற்று நூலாகின்றது. சரவணன் அவர்களின் மிகச் சிறப்பான பண்பு சரியான விமர்சன, திருத்தங்களை ஏற்றுக் கொள்வதாகும். முடிந்த முடிவு என்பதில் அவர் எப்போதும் நம்பிக்கை கொண்டவரல்ல. இந்நூல் பற்றிய கருத்துக்களையும், விமர்சனங்களையும் தெரிவிப்பது நமது கடமையாகிறது.

வெளியீட்டுப் பணியில் எனது பளுவைக் குறைத்து இந்நூலை வெளியிட என்னை ஊக்கப்படுத்திய நண்பர் சரவணனுக்கு எனது நன்றிகள்!

எம். பௌஸர்.
பதிப்பாளர்.



படிப்பகம்

## குறிப்புரை!

பெண் நிலைச் சிந்தனை ஈழத்துத் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமாகி ஒன்றரைத் தசாப்தங்கள் கடந்து விட்டன. இன்று அது தவிர்க்க முடியாத சிந்தனைத் துறையின் எல்லா அம்சங்களிலும் ஆளுமை செலுத்துகிற ஒரு துறையாக வளர்ச்சி அடைந்துள்ளது. அரசியல், பண்பாடு, மொழியியல், சமூகவியல், பொருளியல் மற்றும் அறிவியல் உள்ளிட்ட அனைத்துத் துறையிலும் பெண்நிலைச் சிந்தனையின் பரிமாணம் வெகுவாக உணரப்படுகிறது. இச் சிந்தனை இன்னமும் முழுச் சமூகத்தினதும் சிந்தனையின் உள்ளீடான அம்சங்களில் ஒன்றாக வளர்ச்சி பெற்று விட்டதாகக் கூறமுடியாது என்றாலும், அது அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் தீவிரமாக முன்னேறி வருகிறது. 80களின் முற்கூறுகளிலேயே இதற்கான ஆரம்பக் கூறுகள் தெளிவாக வெளிப்படத் தொடங்கியிருந்தன. ஆயினும் அது 90களில் தான் ஆழமும் விரிவும் கொண்டு வளர்ச்சியடைந்தது. மரபார்ந்த சிந்தனையும், ஆணாதிக்க வழிப்பட்ட நோக்கு நிலையும் மிகத் தீவிரமாக கேள்விக்குள்ளாக்கப்பட்டதுடன், சகல துறை சார்ந்த முயற்சிகளும் பெண்நிலை நோக்கிலிருந்து ஆராயப்படுவதும் விமர்ச்சிக்கப்படுவதும் இக்காலப்பகுதியில் தான் தீவிரம் பெற்றன. இந்தச் சிந்தனையை உள்வாங்கிய, அல்லது அதன் பாதிப்புக்குட்பட்ட பல எழுத்துக்கள் பத்திரிகை வாயிலாகவும் நூலுருவிலும் வெளிவரத் தொடங்கின.

பாரதி வழி பெண்ணுரிமைச் சிந்தனை ஈழத்துத் தமிழ்ச் சூழலிற்குப் புதிய ஒன்றல்ல. பெரியார் வழிச் சிந்தனை இன்னுமோர்படி வளர்ச்சி கண்டிருந்தது. தமிழ்ச் சூழலின் அரசியற் போக்கின் மாற்றமானது, பெண்கள், சமூக உற்பத்தியில் ஆற்றும் பங்களிப்பின் அளவு மேலும் விருத்தியடையக் காரணமாக அமைந்தது இலவசக் கல்வியும், தொழிற்துறையை நோக்கிய அதன் பாடவிதான அமைப்பும், அரசின் இன ஒதுக்கல் கொள்கை காரணமாக, திணிக்கப்பட்ட பொருளாதார நெருக்கடிகளும் சமூக உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பு பெரிதும் அதிகரிக்க காரணமாய் அமைந்தன எனலாம். பாரதி - பெரியார் வழியான பெண்விடுதலைச் சிந்தனைகளில் நிலவிய சமூக சீர்திருத்த கருத்துக்களின் வளர்ச்சியானது, மேற்குலகில் பெண்நிலைச் சிந்தனைகள் உருப்பெற்று வளர்ச்சியுற்றதையடுத்து அவை இங்கு பற்றிக் கொள்வதற்கேற்ற 'எரிபற்று நிலை'யை தமிழ் சூழலில் ஏற்படுத்தியிருந்தது. 80களில் எழுந்து வந்த புதிய அரசியல் அலை, விடுதலை இயக்கங்களின் தோற்றமும் தீவிரமான செயற்பாடும், தத்துவார்த்த தளத்திலான புதிய தளங்களை நோக்கிய விவாதங்களுக்கும் புரிதல்களுக்கும் அடிகோலின. பெண்ணியச் சிந்தனை இக்காலப்பகுதியில் மிகவும் வேகமாக இளம் புத்திஜீவிகள் மத்தியில் பரவலடையத் தொடங்குகிறது. 'சக்தி', 'தோழி' போன்ற விடுதலை இயக்க சார்பாக வெளியிடப்பட்ட சஞ்சிகைகள் பெண்நிலைச் சிந்தனையை வெளிப்படுத்துபவையாக வெளிவந்தன என்பதை இவ்விடத்தில் குறிப்பிட்டுச் சொல்லல் தகும்.

பெண்நிலைச் சிந்தனையின் வருகையானது, ஏற்கனவே இருந்து வந்த ஆணாதிக்க சிந்தனையின் ஆதிக்கத்தை உடைத்துக் கொண்டு மேற்கிளம்பி வரவேண்டிய ஒரு செயற்பாடாக அமைந்ததால், அதன் ஆரம்ப கால வேகமானது சமூக அரசியல் இயக்கப் போக்கில், பெண்களின் பங்களிப்பை மறுதலிக்கிற தீவிரவாத நிலையை - பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எதிர்நிலையை எடுக்கும் போக்குகளை காட்டக் காரணமாகவும் அமைந்திருந்தது. ஆயினும், விடுதலைப் போராட்ட அணிகளுள்ளே பெண்நிலைச் சிந்தனை விடுதலைப் போருக்கு முரணற்ற விதத்தில் ஒன்றுக்கொன்று பலமாக அமைய முடியும்என்ற சிந்தனைகள் வளர்ச்சி பெறவும் இந்த எதிர்நிலைப் போக்குகள் பங்களிப்புச் செய்திருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

தமிழ் சூழலில் பெண்நிலைவாத சிந்தனையை பரவலாக்குவதில் தீவிரமாக செயற்பட்ட்வர்களில் இரு பெண்நிலைவாதிகளான செல்வி திருச்சந்திரன், சித்திரலேகா மெளனகுரு ஆகியோர் மிகவும் முக்கியமானவர்கள். மார்க்சியம் தொடர்பாகவும், விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களில் விவாதத்துக்கு இடமிருப்பினும், அவர்கள் பெண்நிலைவாதத்தை தமிழ் சூழலில் வேரூன்றச் செய்த பங்களிப்பின் முக்கியத்துவம் எந்த விவாதத்திற்கும் அப்பாற்பட்டதாகும்.

90களில் இந்தச் சிந்தனையானது மேலும் விரிவான மட்டத்திற்கும், தளங்களிற்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. சூரியா அமைப்பின் பெண் சஞ்சிகை, பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் நிவேதினி, சரிநிகர் பத்திரிகை ஆகியவை இந்தத் தளவிரிவுக்கு பெரிதும் பங்காற்றின எனலாம். சரிநிகர் மாற்றுச் சிந்தனையை இலக்காக கொண்டு செயற்பட்ட ஒரு பத்திரிகை என்ற முறையில் பெண்நிலை சார்ந்த பல்வேறு தளங்களிலுமான படைப்புகள், விவாதங்கள், கட்டுரைகள் என்று பலவற்றை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்து வந்தது. குறிப்பாக மொழியில் பெண்நிலை சிந்தனையின் பாற்பட்ட அவதானத்தை அது தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. இந்த அடிப்படையில் சரிநிகரில் நண்பர் சரவணனால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூலாகும். ஏற்கனவே, சரிநிகரில் வெளியான பெண்கள் தொடர்பான பெண்நிலை சார் எழுத்துக்கள் 'நான் ஒரு பெண்' என்ற தலைப்பில் பாரதி வெளியீட்டகத்தால் நூலுருவில் வெளியிடப்பட்டிருக்கிறது. சரவணனின் இந்நூல் இவ்விதத்தில் இரண்டாவது தொகுப்பு எனலாம். இந்த தொகுப்புக்காக மேலும் சில விடயங்களை சேர்த்து விரிவுபடுத்தியிருக்கிறார் சரவணன். இந்த விரிவுபடுத்தல் மேலும் செம்மையுடனும் மேலதிக தகவல்களுடனும் இன்னும் விரிவாக்கப்பட வேண்டியது. சில தகவல்களில் போதாமையும் விவாதங்களில் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டிய அம்சங்களும் சில இடங்களில் தெரியத்தான் செய்கின்றன, ஆயினும் அவை விடயத்தின் கனதி காரணமாக இத்தகைய ஒரு சிறு நூலில் குறைகாணக்கூடிய விடயமாக தோன்றவில்லை. எவ்வாறாயினும், பெண்நிலை நோக்கு நிலையிலிருந்து இலங்கையின் அரசியல் நிகழ்வுகளை ஆராயும் முதல் நூல் என்ற வகையில்

www.padippakam.com

இதன் முக்கியத்துவமும், அவசியமும் குறைத்து மதிப்பிடக் கூடியவை அல்ல. இந்நூல் இவ்விடயம் தொடர்பான மேலும் விரிவும் ஆழமும் கொண்ட தேடல்களுக்கும் விவாதங்களுக்கும் இட்டுச் செல்லும், அதற்கான ஒரு ஆரம்பப் புள்ளியாக நின்று, அதற்குரிய உந்துதலை தரும் என்று கருதலாம்.

நண்பர் சரவணன் சரிநிகர் பத்திரிகையில் ஒரு பயிற்சி நிலைப் பத்திரிகையாளராக சேர்ந்தவர். நோர்வேக்கு புலம் பெயர்ந்து செல்வதற்காக அதிலிருந்து விலகும் போது அவர், சரிநிகரின் ஆசிரியர் குழு உறுப்பினர்களுள் ஒருவராக இருந்தார். அரசியல், பெண்ணியம், சாதியம், மலையகம் குறித்த விடயங்களில் தீவிர அக்கறையுடன் செயற்பட்டு வந்த ஒரு கட்டுரையாளராகவும், செய்தியாளராகவும் அவர் விளங்கினார். தேடலும், விடா முயற்சியுடன் கூடிய உழைப்பும் கொண்ட அவர் இத்துறைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். அவர் திரட்டிய தகவல்களும், அவற்றை அடிப்படையாக வைத்து அவர் எழுதிய கட்டுரைகளும் பலரது கவனிப்பையும் ஈர்த்தவையாக விளங்கின; சர்ச்சைகளுக்கும் விவாதங்களுக்கும் வழி கோலுபவையாக அமைந்தன. தமிழ் சூழலுக்கு புதிய தகவல்களையும், படிப்பினைகளையும் அறிமுகப்படுத்துபவையாகவும் இருந்தன. இந்நூலில் உள்ள விடயங்களே அதற்குப் போதுமான சான்றாக உள்ளதை நூலைப் படிக்கும் வாசகர்கள் புரிந்து கொள்ளலாம்.

பொருத்தமான காலம்: முக்கியமான விடயம்: தேடல்மிக்க ஆசிரியர்: சிறந்த வெளியீட்டாளர் என்ற சகல அம்சங்களும் ஒன்றே பொருந்திய இந்நூல் நிச்சயம் வாசகர்களின் வரவேற்பை பெறும்: அவர்களின் சிந்தனைகளுக்கு நிச்சயம் விருந்தாக அமையும்: புதிய எல்லைகளை நோக்கி அவர்கள் செல்வதற்கான அடிப்படைகளை அது வெளிப்படுத்தும்: ஈழத்தின் தமிழ்ச் சூழலில் பெண்நிலை சிந்தனை அடிப்படையில் வெளிவந்த நூல்களுள் தவிர்க்க முடியாத ஒரு முக்கிய இடத்தை இது பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

சரிநிகர் ஆசிரியர்களுள் ஒருவன் என்ற முறையிலும், நூலாசிரியர் சரவணனுடன் கடந்த எட்டு வருட காலங்களாக சேர்ந்து பத்திரிகையில் ஒன்றாக வேலை செய்தவன் என்ற முறையிலும் சரவணனின் இந்நூல் இப்போது வெளிவருவதையிட்டு நான் மிகவும் சந்தோசமடைகின்றேன். ஆர்வமும், துடிப்பும், உழைப்பும் வேகமும் கொண்ட நண்பர் சரவணன் இந்நூலை அதன் அடுத்த பதிப்பில் மேலும் விரிவுபடுத்தி வெளியிடுவார் என்று நம்புகிறேன்.
சரிநிகர் சார்பாகவும், தனிப்பட்ட முறையிலும் அவருக்கு எனது வாழ்த்துக்கள்.

எஸ்.கே.விக்னேஸ்வரன்
*சரிநிகர்*
*02.10.2001*



படிப்பகம்

www.padippakam.com

# செல்லுமுன்....

அதிகாரத்துவத்தை ஒழித்துக்கட்ட அதிகாரம் நமக்குத் தேவை என்பார் டொக்டர் அம்பேத்கார்.

உலகெங்கிலும் சகல பிரச்சினைகளும் மையங்கொண்டிருப்பது இந்த அதிகாரத்துவப் பிரசிசினையிலேயே. இந்த அதிகாரத்துவம் தான் வலுத்தவரையும் சளைத்தவரையும் தீர்மானிக்கிறது. இந்த அதிகாரத்துவம் தான் சுரண்டலையும் அச்சுரண்டலுக்கான நியாயங்களையும் கற்பிக்கிறது. அதே அதிகாரத்துவம் தான் சமத்துவம் கோரி நிற்கின்ற எந்த தரப்பாயினும் நசுக்கி சின்னாபின்னப்படுத்தி தனதிடத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறது.

ஒடுக்குமுறைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் சமூக சக்திகளில் முக்கிய சக்தியாக பெண்கள் காணப்படுகின்றனர். இங்கு ஆணாதிக்கம் அதிகாரம் படைத்த நிலையிலும், பெண்கள் அவ்வதிகாரத்துக்கு வெளியில் இருந்து கொண்டு அவ்வதிகாரத்துக்கு பலியாகும் சக்தியாக விளங்கி வருகின்றனர்.

ஆணாதிக்கமயப்பட்ட சகல சூழல்களிலிருந்தும் தப்பி அதிகாரத்தில் பெண்களும் பங்கு செலுத்துவது என்பது எளிமையான காரியமல்ல. அதற்கான (அதிகாரத்துக்கான) நீண்ட போராட்டம் பெண்கள் தலைமையேற்று நடத்தப்பட வேண்டியுள்ளது. புரட்சிகர சமூக மாற்றத்துக்கான அரசியல் முயற்சிகளை மேற்கொள்கின்ற எந்தச் சக்தியும் இதனைப் புறக்கணித்து விட முடிவதில்லை.

இலங்கை அனுபவத்தைக்கொண்டு இலங்கையின் அரசியலில் பெண்களும், பெண்களினது அரசியலும் என்கிற விடயத்தை ஆராய முற்பட்டுள்ளேன்.

எந்தவொரு வெற்றியும் எதிரியைத் தனிமைப்படுத்துவதிலும், அடக்கப்படும் தரப்பினரின் ஆதரவைப் பெறுவதிலுமே தங்கியுள்ளது என மாவோ சே துங் குறிப்பிடுவார். பெண்களின் விடுதலைக்கான அரசியற் போராட்டத்தில் ஆணாதிக்கத்தை தனிமைப்படுத்தல் அவசியமாகிறது. அதற்கு ஆதரவாளர்கள் மத்தியில் கருத்துப் பிரச்சாரம் செய்தலும் ஆணாதிக்கக் கட்டமைப்பை அம்பலப்படுத்துவதும் முன்நிபந்தனையாகிறது. இவை குறித்த அம்பலப்படுத்தல்கள் சமரசமற்ற முறையில் விடாப்பிடியாகத் தொடர்ச்சியாகச் செய்யப்பட வேண்டியது அவசியம். நமது கல்வி முறைமை எத்தனை மாற்றங்களுக்குள்ளான போதும் ஆணாதிக்கத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிற இன்றைய கல்வி முறைமை, திருப்பித் திருப்பி ஆணாதிக்கத்தை நிறுவி நிலைநாட்டுவதில் விடாப்பிடியாக தொழிற்படும் தொடர்பூடகங்கள் குறித்து



படிப்பகம்

www.padippakam.com

அதிக சிரத்தை காட்ட வேண்டியது பெண்கள் தமது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்நிபந்தனையாக இருப்பதாகவே தோன்றுகிறது. அந்தளவு ஆதிக்க சித்தாந்தங்களை தூசுதட்டி ஜனநாயகப்படுத்துவதைப் போன்ற பூச்சாண்டியை காட்டிக் கொண்டு அதிகாரத்துவ ஐதீகங்களையும், புனைவுகளையும், மீளுறுதி செய்து கொள்கின்றன. ஆதிக்க சமூக அமைப்பில் தகவமைத்துக் கொண்டு, சமரசம் செய்து கொண்டு வாழ்தலே நவீன பெண்ணின் கடமையென திருப்பித் திருப்பிச் சுற்றிவர போதிக்கின்ற ஒரு சூழலில் நாம் வாழ்கின்றோம்.

இலங்கையில் பாராளுமன்ற அரசியல் என்பது நீண்ட படிப்பினைகளை சகல புரட்சிகர சக்திகளுக்கும் வழங்கியுள்ளது. அதன் பிற்போக்குப் பாத்திரம், பாராளுமன்றவாதத்துக்குப் பலியாகிய இடதுசாரிகள் என்பன நல்ல பாடங்களே. முதலாளித்துவ ஜனநாயகத்துக்குள் குந்திக்கொண்டு பாராளுமன்றத்துக்கூடாக அரசியல் அதிகாரத்தைப் பெற முயன்ற முயற்சிகளும், கடினப்பட்டு அதில் பெற முடிந்த சாதனைகள் குறித்தும், அச்சாதனைகளைக் கூட எந்த ஆதிக்க சக்திகளினால், சமூகப்பிரிவுகளினால் பெற முடிந்தது என்பது குறித்தும் இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் ஆராய்கின்றன.

இலங்கையின் அரசியற் செயற்பாடுகளைப் பொறுத்தளவில் தேசிய அரசியல் (இதில் பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள் என்பனவற்றை உள்ளடக்கும்.), தொழிற்சங்க அரசியல், போராட்ட அரசியல், வெகுஜன அரசியல் என்கிற பகுப்பாய்வின் கீழ் ஆராய்வது விரிவானதாக இருக்கும். இதனை விட இலங்கையில் பெண்ணிய அரசியற் கருத்துருவாக்கச் செயற்பாடுகளுக்கென்று ஒரு வரலாறு உண்டு. இந்த வரலாற்றுப் பாத்திரத்தில் சம்பந்தப்பட்ட பலர் இருக்கிறார்கள். பல பெண்கள் அமைப்புகள் இருக்கின்றன. இது குறித்த அத்தியாயத்திற்கு எனக்கு அவகாசம் கிடைக்கவில்லை. அது போல மலையகப் பெண்களின் அரசியற் போராட்டங்கள் குறித்த தனியான கட்டுரை போதாமை பற்றி உணர்ந்ததால் அதனையும் இத்துடன் சேர்க்கவில்லை. பெண்களும் ஆயுதப் போராட்டமும் பற்றிய அத்தியாயம் பூரணமானதல்ல. அதில் சேர்க்கப்படவேண்டிய தகவல்கள் பல உள்ளன என்பதை ஒப்புக்கொள்கிறேன். முதலில் இருப்பதை அப்படியே இப்போதைக்கு கொண்டுவருவதையே செய்திருக்கிறேன். மேலும் இது முழுமையான ஒரு ஆய்வுமல்ல. இதன் போதாமையை காட்டி நான் இந்நூலைவெளிக்கொணர்வதில் இழுத்தடித்துக் கொண்டிருப்பதையிட்டு பல நண்பர்களும் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார்கள். முதலில் இருப்பதை அப்படியே வெளியிடு என்பது அவர்களின் கோரிக்கையாக இருந்தது. இதன் மீது வைக்கப்படும் விமர்சனங்கள், கருத்துக்கள், திருத்தங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு நிச்சயம் அடுத்த பதிப்பு கொண்டு வரப்படும் என்பதை வாசகர்களுக்கு அறிவிக்கிறேன்.

சரிநிகரில் 1994, 1995 காலப்பகுதியில் தொடராக "பாராளுமன்ற அரசியலில் பெண்கள்" எனும் தலைப்பில் வெளிவந்து கொண்டிருந்த போது பலர் இதனை நூலாக்கும்படி வாசகர்களும், நண்பர்களும் கேட்டுக் கொண்டனர். அதன் பின்னர் பல பல்கலைக்கழக மாணவர்கள் சரிநிகருக்கு வந்து இது இதன் பிரதிகளை பல தடவைகள் எடுத்துக் கொண்டு சென்றனர். சரிநிகரில் வெளிவந்த பல தொடர் கட்டுரைகளை நூலாக்கும் தேவை அப்போது இருந்தும் அதற்கான வளங்களை நாங்கள் கொண்டிருக்கவில்லை. எனவே இதனை நூலாக்கும் முயற்சியும் பின்போடப்பட்டுக் கொண்டே போனது. ஐரோப்பாவிலுள்ள நண்பர்கள் வெவ்வேறு விடயங்கள் சார்ந்த எனது கட்டுரைகள் பலவற்றை நூலாக்குவதாக உறுதி தந்தார்கள். இந் நூலைக் கொண்டு வருவதற்கான



படிப்பகம்

www.padippakam.com

செலவில் ஒரு பகுதியை நண்பர்கள் சிவானந்தன் மற்றும் தவநாதன் ஆகியோர் நல்கினர். எனவே இதனை வெளியிட முடிந்தது.

1995க்குப் பின் நடந்த அனைத்து தேர்தல்களின் போதும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறித்த புதிய நிலைமைகளை எழுதுவதற்கூடாக புதுப்பித்துக்கொள்ள முடிந்தது. இந்த நூலில் இவையனைத்தையும் உள்ளடக்கியும், புதிதாக சில அத்தியாயங்களை சேர்த்தும் இந்த நேரத்தில் வெளிக்கொணர்கிறேன். முக்கியமாக இலங்கையின் சர்வஜன வாக்குரிமை பெற்றதிலிருந்து இது வரையான பாராளுமன்றத் தேர்தல்களை மையப்படுத்திய கட்டுரைகளை விட, உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள், என்பனவற்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் பற்றியும் உள்ளடக்கியிருக்கிறேன். மேலும் ஆயுதப் போராட்ட அரசியல் பெண்களின் பங்களிப்பு பற்றியும் ஒரு அத்தியாயத்தை இணைத்திருக்கிறேன். இலங்கையின் சமகால அரசியலுடன் தொடர்பு படுத்திக் கொண்டே அக்குறிப்பிட்ட சூழல்களில் பெண்களின் அரசியல் பங்களிப்பு குறித்து அலசப்படுகின்றன. பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் பின்னணிகளை சுருக்கமாக விளக்கிவிட்டுச் சென்றிருக்கின்றேன். பல இடங்களில். கருத்துக்களை உறுதி செய்யவென அட்டவணைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை வாசிப்பை இலகுபடுத்தும். இவற்றை விட சரிநிகரில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்து அவ்வப்போது எழுதிய கட்டுரைகளையும் பின்னிணைப்பாக இணைத்துள்ளேன். கூடவே தமிழீழ ஒறுப்புச் சட்டம் பற்றிய விமர்சனமும், மனம்பேரி பற்றிய கட்டுரையையும் இணைப்பாக சேர்த்திருக்கிறேன். அக்கட்டுரைகள் இதனை வாசிக்கும் எவருக்கும் துணை சேர்க்கும் என்று நம்புகிறேன்.

இக்கட்டுரை வெளிவருவதற்கு முன்னர் இதன் சாராம்சக் கட்டுரையை நிவேதினியில் பிரசுரித்த செல்வி திருச்சிந்திரன், சரிநிகரில் தொடர்கட்டுரையாக வெளிவந்த போதும் சரி,, இந்நூலை வெளிக்கொணர்கையிலும் சரி, கருத்து முன்வைத்து, சரிபிழை திருத்தி உதவிய நண்பர்கள் சிவகுமார், விக்னேஸ்வரன், யோதிலிங்கம் ஆகியோருக்கும், இதனை வெளியிடும் மூன்றாவது மனிதன் பதிப்பகம் மற்றும் நண்பர் பெளஸர், அனைத்து கட்டுரைகளையும் மீள கணிணித்தட்டச்சு செய்து தந்த எனது மாணவிகளும் நண்பிகளுமான பிரியா, ருக்ஷாந்தி,, இம்மாகுலேட் ஆகியோர், ஆயுதப் போராட்டமும் பெண்களும் அத்தியாயத்திற்கு உதவி புரிந்த அன்பு நண்பி ராஜினி,, அட்டையைத் தயாரித்த தோழர் மொ.ல.செனவிரத்ன, இந் நூலை வெளிக்கொணரும் தேவையை தொடர்ந்தும் உணர்த்திக் கொண்டிருந்த எனது அன்பான துணைவியும் சக்தி இதழின் ஆசிரியருமான தயாநிதி,, எனது எழுத்து வேலைகளுக்கு எப்போதும் பின்னால் நின்று ஒத்துழைப்பு தரும் அம்மா கோமதி,, அப்பா நடராசா, ஆவணங்கள் சேகரிப்பின் போது எனக்கு ஒத்துழைப்பு தந்த தேசிய நூலக சேவைகள் சபை, தேசிய சுவடிகூட திணைக்களம், கொழும்பு மியூசிய நூலகம் என்பவற்றின் பணியாளர்கள், மற்றும் அனைவரும் எனது நன்றிக்கு என்றும் பாத்திரமானவர்கள்.

இந்நூலை இலங்கையின் அரசியலில் மட்டுமன்றி உலக அரசியல் வரலாற்றிலும் கூட தங்களின் தடம் பதித்து தங்களின் அர்ப்பணிப்பால், தமது போராற்றலால் வியக்க வைத்த உலகின் நிகரற்ற பெண் போராளிகளுக்கு சமர்ப்பணம் செய்கிறேன்.

கருத்துக்கள், விமர்சனங்களை எதிர்பார்க்கிறேன்.

நன்றிகள்

**- என்.சரவணன்**



படிப்பகம்

www.padippakam.com

பொருளடக்கம்


| | |
|---|---|
| செல்லுமுன் | 4 |
| பெண்களின் அரசியலும் அரசியலில் பெண்களும் | 12 |
| வாக்குரிமைக்கான பெண்களின் போராட்டம் | 16 |
| டொனமூர் முன் சாட்சியம் | 20 |
| முதற் பிரவேசம் | 29 |
| சுதந்திரம் வரை | 34 |
| இரண்டாவது பாராளுமன்றம் | 40 |
| டொரின் விக்கிரமசிங்க | 43 |
| அமைச்சரவையில் முதற் பெண் | 46 |
| புரட்சிகர விவியன் | 52 |
| பெண் தலைமையில் கட்சி | 57 |
| 6வது பாராளுமன்றம் | 68 |
| உறவு முறைச்செல்வாக்கு அதிகம் | 73 |
| குடியரசின் முதற் பிரதமர் | 77 |
| சிறிமாவின் குடியியல் பறிப்பு | 80 |
| 9வது பாராளுமன்றம் | 85 |
| 10வது பொதுத்தேர்தல் | 90 |
| முதல் பெண் ஜனாதிபதி | 97 |
| மில்லேனியத் தேர்தல் | 103 |
| ஆண் உறவு முறைச் செல்வாக்கு | 106 |
| பாராளுமன்ற அரசியலின் இறுதியாக | 110 |
| உள்ளூராட்சி மன்றம், மாகாண சபைகளில் பெண்கள் | 114 |
| பெண்களும் அரசியற் கட்சிகளும் | 117 |
| ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் | 124 |


**பின்னிணைப்புகள்...**


| | |
|---|---|
| மகளிர் தினமும் மகளிர் பிரதிநிதித்துவமும் | 146 |
| பெண்களின் பிரதிநிதித்துவம் | 149 |
| அரசியற் பிரதிநிதித்துவமும் சில கேள்விகள் | 155 |
| போராளி மனம்பேரி | 159 |
| தமிழீழ ஒறுப்புச் சட்டமும் பெண்களும் | 164 |
| விடுதலையின் மைற்கற்கள். | 173 |
| உசாத்துணை | 176 |




படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை: பெண்களின் அரசியலும், அரசியலில் பெண்களும்

இன்றைய இலங்கையின் சனத்தொகையில் 49 வீதத்தினர் பெண்களாவர். இது ஏறத்தாழ நாட்டின் சனத்தொகையில் அரைப் பங்கினராகும். இருப்பினும் இவ்வீதாசாரத்திற்கேற்ப பெண்கள் ஆட்சி நிர்வாகத் துறைகளில் பங்கு பற்றல் இல்லாமல் இருக்கின்றனர்.

பாராளுமன்றத்தில் இது வரை பெண்களின் பிரதிநிதித்துவ வீதாசாரம் என்பது 5 வீதத்திற்கும் குறைவானதாகவே காணப்பட்ட போதும், இதுவரை இலங்கையின் ஆட்சி அதிகாரம் பெண் தலைமையில் நான்கு தடவைகள் கைப்பற்றப்பட்டு ஆட்சி அதிகாரத்தை செலுத்துமளவிற்கு இருந்துமுள்ளனர். அத்துடன் காலத்துக்குக் காலம் அமைச்சரவைக-ளிலும் பல பதவிகளை வகித்து அமைச்சு விவகாரங்களிலும் பங்காற்றியிருக்கின்றனர்.

ஆனாலும் இவற்றாலெல்லாம் பெண்களின் உரிமைகள் வென்றெடுக்கப்பட்டனவா? அரசியலுக்கு வந்த பெண்கள் பெண்களைத் தான் பிரதிநிதித்துவப்படுத்தினார்களா என்ற கேள்விகளை எழுப்பினால் சூனியமே மிஞ்சும்.

எனவே, ஆட்சி அதிகாரப் பங்கு பற்றுதலை நோக்கிய அடுத்தக்கட்ட வளர்ச்சி பற்றி சிந்திப்பதனால் நமது பெண்களின் கடந்தகால அரசியல் பங்களிப்பை மீள தொகுத்துப் பார்த்தல் அவசியமாகும்.

அந்த வகையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைக்கான அன்றைய காலக் கோரிக்கைகள், கடந்து வந்த பாதைகள், மற்றும் இன்றும் சமூகத்தில் பெண்களின் பின்தங்கிய நிலை என்பவற்றை பற்றிய ஒரு மீள்பார்வை செய்யப்பட்டாக வேண்டும்.

இலங்கையின் சுதந்திரம் 'கத்தியின்றி இரத்தமின்றி பெறப்பட்டது" என்று கூறப்படுவதைப் போல் இலங்கையில் பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கான வாக்குரிமைப் போராட்டம் கூட நீண்டகால முயற்சிப் படிநிலைகள் இன்றி பெறப்பட்டதாகும். இதன் அர்த்தம் வாக்குரிமைக்காக பெண்கள் போராடவில்லை என்பதல்ல. உலகின் பல நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கைப் பெண்களின் வாக்குரிமைப்



படிப்பகம்

www.padippakam.com

போராட்டம் தீவிரம் பெறுவதற்கு முன் கிடைத்து விட்டிருந்தது.

பெண்களின் அரசியல் சமவுரிமை என்பது பெண்ணிய கோரிக்கைககளில் வலியுறுத்தப்படும் முக்கிய அம்சங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. என்றாலும் அவ்வுரிமைக்கான விசேட முயற்சிகளெதுவுமின்றி ஓடுமாற்றில் கூடச்சேர்ந்தோடும் கிளைநதி போல இடப்பாக ஓடும் அரசியல் ஓட்டத்துடன் சேர்ந்து கொள்வதே நடைமுறை வழக்கமாகி விட்டது என்பதை மறுக்க முடியாதுள்ளது.

1978இல் கொண்டு வரப்பட்டு தற்போது அமுலிலுள்ள அரசியலமைப்பின்படி இலங்கையின் ஆண்களும் பெண்களும் சமமாக மதிக்கப்படுதலை 27 (2) C எனும் சரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. 1981இல் பெண்கள் சமத்துவமாக நடத்தப்படுதலை இல்லாதொழிக்கின்ற சர்வதேச ஒப்பந்தமான CEDAW எனும் ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது. 1993 இல் இலங்கையில் பெண்கள் சாசனம் அறிமுகப்படுத்தப்பட்டு அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

### பெண்களின் வாக்குரிமை

இலங்கைப் பெண்களின் வாக்குரிமைப் போராட்டம் தொடர்பாக விளங்கிக் கொள்வதற்கு ஏனைய உலக நாடுகளில் இப்போராட்டம் தொடர்பாக என்ன நடந்தது கொண்டிருந்தது என்று தெரிந்து கொள்வது உதவியாக இருக்கும்.

பொதுவாக இன்று நடைமுறையிலுள்ள தந்தை வழிச்சமூக ஆணாதிக்க சூழ்நிலையானது குடும்ப அமைப்பு முறையின் மூலம், பெண்களிடம் பொறுப்புக்களைச் சுமத்தி விட்டுள்ளது. ஆதிக்கம் செலுத்தும் உரிமை ஆணிடமிருந்து பெண்களின் கைக்கு மாறி விடும் என்ற அச்சத்திலும் அடக்கி ஆளும் அதிகாரத்தை ஆண் மட்டுமே வைத்திருக்க வேண்டும் என்ற மரபுவழி கருத்தியல் குணாம்சத்திலுமே இது ஊன்றியுள்ளது எனக் கூறலாம்.

இந்த ஆதிக்க சித்தாந்த பின்புலத்திலிருந்தே பல நாடுகள் பெண்களுக்கான வாக்குரிமையை வழங்குவதில் மறுப்புத் தெரிவித்திருந்தன. அல்லது தாமதித்திருந்தன.

உலகிலேயே பெண்களுக்கு முதன்முதல் வாக்குரிமை வழங்கிய நாடு நியூசிலாந்து. இங்கு 1918ம் ஆண்டு பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டது.

ஜனநாயகக் கோட்பாடுகளை உலகிற்கு அறிமுகப்படுத்திய மேற்கத்தேய நாடுகள் கூட பெண்களுக்கான ஜனநாயக பாரபட்சத்தை காட்டத் தவறவில்லை.

பாராளுமன்றம் தோன்றிய நாடான பிரித்தானியாவில் பல ஆண்டுகளாக "வாக்குரிமைப் போராட்டம்" நடந்து வந்துள்ளது. பல ஆண்டு காலமாக அங்கு சொத்து படைத்தவருக்கும், கல்வியறிவு படைத்தவர்களுக்கும் மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. இங்கிலாந்தில் 1918இல் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் கூட 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும் மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. 1928இல் கொண்டு வரப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட சர்வஜன வாக்குரிமையின் மூலமே 21 வயதுக்கு மேற்பட்ட பெண்களும் வாக்குரிமை பெற்றனர்.

உலகில் பல நாடுகள் பெண்களுக்கான வாக்குரிமை வழங்குவதில் மிகவும் தயக்கம்



படிப்பகம்

www.padippakam.com

காட்டியிருந்தன. பிரான்ஸ் நாட்டில் பெண்கள் 1945இலேயே வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டனர்.

ஜப்பானில் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் 1947இல் அமெரிக்காவின் தலையீட்டுடன் நடந்த தேர்தலிலேயே ஜப்பானியப் பெண்கள் முதன் முதலில் வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டனர். அதற்கு முன் ஜப்பானில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. அவர்கள் தங்களுக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்பதைத் தெரிவிப்பதற்கு தேர்தலின் போது வாக்குச்சீட்டில் அவர்களின் பெயரை எழுதி நிரூபிக்க வேண்டும்.

ஜனநாயகம் பற்றிப் பேசிய பல மேலைத்தேய முதலாளித்துவ நாடுகள் பல ஜனநாயக ரீதியல் பெண்களுக்கான சம வாக்குரிமையை வழங்குவதில் - தயக்கம் காட்டின - தாமதித்தன.

## பெண்களின் வாக்குரிமைக்கு எதிர்ப்பு

இலங்கையை இறுதியாக ஆண்ட காலனியாதிக்க ஆங்கிலேயர்கள் (1796 - 1948) தமது காலனித்துவ நாடுகளில் எழுந்து வந்த தேசியவாத எழுச்சி காரணமாக அவர்களுக்கான தூசான சலுகைகளை வழங்கி அவற்றைத் தணிக்க முயன்றனர். அந்த வகையில் இலங்கையின் பிரச்சினைகளை ஆராய்ந்து அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்காக 'டொனமூர்" என்பவரின் தலைமையிலான குழு இலங்கைக்கு அனுப்பி வைத்தனர்.

1927 டிசம்பர் தொடக்கம் 1928 ஜனவரி வரை அவர்கள் ஆணைக்குழுவொன்றை அமைத்து விசாரணை நடாத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தனர். இவ்வறிக்கையின் படி இலங்கைக்கு 'சர்வஜன வாக்குரிமை" வழங்கினர். பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளில் சர்வஜன வாக்குரிமையைப் பெற்ற முதல் நாடு இலங்கை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'டொனமூர்' அறிக்கையில் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது ஆண்களாயின் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் என மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கான காரணம் அன்று டொனமூர் குழுவின் முன் பெண்கள் வாக்குரிமையைப் பற்றிய சிபாரிசை முன் வைப்பதில் தேசிய தலைவர்கள் எனக் கூறப்படுவோரில் பெரும்பாலானோர் தயக்கம் காட்டியிருந்ததுடன், பெண்களின் வாக்குரிமைக்கெதிரானவர்களும் பெருமளவில் இருந்ததும் தான். இலங்கை தேசிய காங்கிரஸ் போன்றன கூட ஆண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுவதையே வலியுறுத்தியிருந்தன. (இவ்வமைப்போடு சில அமைப்புக்கள் சேர்ந்தே பிற்காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது.)

இலங்கை தேசிய காங்கிரசானது இலங்கைக்கான பூரண சுயாட்சிக் கோரிக்கையை முன்வைத்துப் போராடியிருக்கவில்லை. அரச அதிகாரத்துவத்தை அரசியல் சீர்திருத்தத்துக்கூடாக கொஞ்சம் கொஞ்சமாகப் பெற விரும்பினர். இலங்கை தேசிய காங்கிரஸின் நடவடிக்கைகளில் ஆரம்ப காலங்களில் ஈடுபட்ட பெண்களில் டொக்டர் நல்லம்மா முருகேசு, ஐ.கங்குலி, மகேஸ்வரி செகராஜசிங்கம் ஆகியோர் முக்கியமானவர்கள். பெண்களுக்கான வாக்குரிமை பற்றி இலங்கை தேசிய காங்கிரஸ் வலியுறுத்த வேண்டும் என்று இவர்கள் கட்சிக்குள் அழுக்கக் குழுவாக



படிப்பகம்

www.padippakam.com

செயற்பட்டிருக்கவில்லையென்றே தெரிகிறது.

சேர்.பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் கூட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கத் தேவையில்லை என டொனமூர் குழுவினரிடம் முறையிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது பற்றி 'தேசபக்தன்' (13.4.1928) இதழில் மீனாட்சியம்மாள் (இவர் மலையகத்தின் பழம்பெரும் தலைவர் கோ.நடேசய்யரின் மனைவி) எழுதிய கட்டுரையில்

> 'இந்தியாவை விட முற்போக்கடைந்திருப்பதாக கூறப்படும் இலங்கையில் ஸ்திரிகளுக்கு சுதந்திரம் கொடுக்கக்கூடாது என்றால் இலங்கை எவ்விதத்தில் முற்போக்கடைந்திருக்கிறது..? சேர் பொன்.இராமநாதன் போன்றோருக்கு இலங்கையில், பெண்கள் பொதுசன சேவையில் ஈடுபடக்கூடாதென்றால் ஒரு பெண் கூட எக்காலத்திலும் வெளியில் வரக்கூடாது என்று ஒரு சட்டத்தை நிரந்தரமாக ஏற்படுத்த முயற்சித்தல் மேலாகும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் அரசாங்க சபை சர்வசன வாக்குரிமையை உள்ளடக்கியிருந்த டொனமூர் யாப்பு 2 மேலதிக வாக்குகளாலேயே நிறைவேறியிருந்தது. சேர்.பொன்னம்பலம் இராமநாதன் உட்பட பலர் எதிர்த்தே வாக்களித்திருந்தனர். சிறுபான்மை இனங்களின் நலன்களைப் பேணவில்லை, போதிய சுயாட்சி வழங்கப்படாமையினாலும் டொனமூர் திட்டத்தை சேர் பொன்னம்பலம் இராமநாதன் எதிர்த்திருந்தாலும் கூட பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதையும் கூடவே அவர் எதிர்த்திருந்தது மறுக்கக்கூடிய ஒன்றல்ல.

1928ம் ஆண்டு நவம்பர் மாதம் 8 திகதி அரசாங்க சபையில் 'டொனமூர்" யாப்பு தொடர்பான விவாதத்தின் போது பொன்னம்பலம் இராமநாதன் கீழ்வருமாறு உரையாற்றியிருந்தார்.

> 'சர்வஜன வாக்குரிமையானது எமக்கு எதுவித நன்மையையும் அளிக்காது என்று கூறிக் கொள்கிறேன்."
>
> 'ஆணையாளர்கள் வயது வந்தவர்களுக்கான வாக்குரிமையைப் பற்றி கூறுகிறார்கள்... இவர்கள் எதற்காக இந்த நாறிப்போன தத்துவத்தை எமக்கு போதிக்கிறார்கள். எதற்காக எமது தொண்டைக்குள் இவற்றைத் திணிக்கிறார்கள்."

இதே பொன்னம்பலம் இராமநாதன் டொனமூர் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

> 'நீங்கள் எங்கள் பெண்களை அவர்பாட்டில் இருக்க விடுங்கள். கடவுளின் விருப்பப்படி அவர்கள் இந்த உலகத்தில் கீழானவர்களாக உள்ளமை எதற்காக என்பது பற்றி நீங்கள் அறிய நியாயமில்லை. பெண்களின் முழு வாழ்க்கையும் அவர்களது கவனமும் வீட்டிலேயே இருக்க வேண்டும். அதற்கப்பாலான ஒரு உலகமில்லை. வீட்டுப் பொறுப்பிற்கப்பால் அவர்கள் செல்வதற்கு இடம்கொடுக்க வேண்டாம்."

(சாட்சியம் இலக்கம் 101. சாட்சியமளித்த தினம் - 20 டிசம்பர் 1927)



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குரிமைக்கான பெண்களின் போராட்டம்

டொனமூர் விசாரணைக் காலப்பகுதியில் வெளிவந்த பெரும்பாலான பத்திரிகைகள் கூட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுவதை எதிர்த்தும் நையாண்டி புரிந்தும் செய்திகள், கட்டுரைகள் என்பவற்றைப் பிரசுரித்திருந்தன.

ஈழகேசரி 1930-09-10 இதழில் பெண்களும் வாக்குரிமையும் என்ற ஆசிரியத் தலையங்கத்தில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

> '...தமக்கென்று ஓர் சொந்த அபிப்பிராயத்துடன், விஷயங்களைப் பூரணமாக ஆலோசனை செய்து சரி பிழையறியும் ஆற்றலும் பெண்களிடத்திலிருக்கிறதா...? ஆண்களே வாக்குரிமையைப் பற்றி சரியாக அறியாதிருக்க பெண்கள் எப்படி அறியப் போகிறார்கள்...? பெண்களுக்கு இதனை வழங்கியதன் மூலம் நன்மையைக் கொண்டு வரும் என்பது ஐயத்திற்கிடமானதாகும்..."

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'இந்து சாதனம்" பத்திரிகையில் (8.11.1928) பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

> '...கொழும்பிலுள்ள ஆண் தன்மை பூண்ட தன்னிஷ்ரப் பெண் ஜென்மங்கள் சிலரின் கேள்விக்கிசைந்தே விசாரணைச் சபையாரும் 'பெண்ணென்றால் பேயுமிரங்கு"மென்னும் பழமொழிப்படி உடன்பட்டு விட்டார்கள். இது எங்கள் சமயம், சாதி, தேசம், பழக்கவழக்கம், கொள்கை என்று சொல்லப்படுபவன எல்லாவற்றிற்கும் முழு மாறானதாகும்...மேலும் பறங்கியர், ஒல்லாந்தர் முதலான அந்நிய சமயத்தினர் இலங்கையைப் பரிபாலித்தபோது கூட சமயநிஷ்டூரம் செய்தனரேயன்றி இந்த விதமாக எங்கள சாதிக் கட்டுப்பாட்டையழித்து இங்குள்ள பெண்களைப் பொதுக் கருமங்களிற் பிரவேசிக்கச் செய்து பொது மகளிராக்கி விடவில்லை..."

அவ்வாறு அன்றைய பத்திரிகைகள் கூட 'பெண்களுக்கு வாக்களிக்கும் ஆற்றல் இல்லை" என்றும் வாக்குரிமையை கோரிய பெண்களை



படிப்பகம்

www.padippakam.com

'தன்னிஷ்ரப் பெண் ஜென்மங்கள்" என்றும் பொதுக் கருமங்களில் ஈடுபடும் பெண்களை 'பொது மகளிர்" என்றும் அதிகளவு ஏளனம் புரிந்தும் இகழ்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

**பெண்களின் வாக்குரிமைக்காகப் போராடியவர்கள்.**

ஒரு பக்கம் பெண்களின் வாக்குரிமைக்கு எதிராக பலர் குரல் கொடுத்து வந்த அதே நேரம் பெண்களுக்கான வாக்குரிமையைக் கோரியும் அதற்கு ஆதரவளித்தும் சில முயற்சிகள் நடந்தன.

கோ.நடேசய்யர், பெரி.சுந்தரம் ஆகியோர் (முறையே சாட்சியம் எண் 36,38) 07ம் திகதி டிசம்பர் 1927இல் டொனமூர் குழுவின் முன் சாட்சியமளிக்கையில் 'பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும்" என்பதை வலியுறுத்தியிருந்தனர்.

(டொனமூர் சீர்திருத்தம் அமுலுக்கு வருமுன் அறிக்கை வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் 'டொனமூர் அறிக்கை வெளிவந்தது, பெண்களுக்கும் வாக்குரிமை" என தேச பக்தனில் மிகவும் பாராட்டியிருந்தார். ஆனால் அவர் பாராட்டிய பெண்களுக்கான வாக்குரிமை அம்சம் என்பது '31 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மட்டுமே" என்பது குறிப்பிடத்தக்கது. கோ.நடேசய்யர், இதுவேனும் கிடைத்ததே என்ற நோக்கில்லிருந்தே அன்று அக்கருத்தை அவர் வெளியிட்டிருக்கக்கூடும்.

மறுபுறம் ஏ.ஈ.குணசிங்கா போன்றவர்கள் சர்வஜன வாக்குரிமையையும், விசேடமாக பெண்களுக்கான வாக்குரிமையையும் ஆதரித்தது மட்டுமன்றி, இதற்கு ஆதரவாக எழுதியும், கூட்டங்கள் நடாத்தியும், டொனமூர் குழுவினரிடம் சாட்சியமளித்துமிருந்தார்.

இன்னொரு புறம் 1928 ஜனவரியில் 'பெண்கள் வாக்குரிமைச் சங்கம்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

பெண்கள் வாக்குரிமைச் சங்கத்தின் ஸ்தாபக அங்கத்தவரில் திருமதி.ஈ.ஆர்.தம்பிமுத்துவும் ஒருவர் ஆவார். இவரது கணவர் திரு.தம்பிமுத்து கிழக்கு மாகாணத்துச் சட்டசபைப் பிரதிநிதியாக இருந்தபோது சட்டசபையில் 1920 ஒகஸ்ட் 13ம் திகதியன்று வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் பால்வேறுபாடு காரணமாக ஒடுக்கப்படுவதில் இருக்கும் தடைகளை நீக்குமாறும், பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவேண்டும் என்ற பிரேரணையையும் முன்மொழிந்தவர் ஆவார். ஆனால் அப்போது அப்பிரேரணை சட்டசபையில் ஆதரவு பெறவில்லை. (CNC-649) பின்னர் 'பெண்கள் வாக்குரிமைச் சங்கம்" நிறுவப்பட்ட போது அதன் உப தலைவர்களில் ஒருவராக திருமதி தம்பிமுத்து தெரிவு செய்யபட்டார். 1927ஆம் ஆண்டு டிசம்பர் 7ம் திகதி முதன்முதல் இச்சங்கத்தை ஸ்தாபிப்பதற்காகப் பெண்கள் கூடிய போது திருமதி. தம்பித்துவே பெண்கள் வாக்குரிமைச் சங்கம் (Women Franchise Union) என்ற பெயரைப் பிரேரித்தார்.

டேஸி பண்டாரநாயக்கவின் (இவர் பின்னாளில் பிரதமராக பதவி வகித்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் தாயார்) தலைமையில் அரம்பிக்கப்பட்டிருந்த இவ்வமைப்பில் திருமதி ஈ.ஆர்.தம்பிமுத்து உட்பட திருமதி. நல்லம்மா, டொக்டர்.மேரி ரட்ணம், டபிள்யு ஏ.டி.சில்வா, அக்னஸ் டீ சில்வா, திருமதி கேராட் வீரக்கோன் ஆகியோரும் அங்கம் வகித்தனர். அவ்வமைப்பின் முதல் தலைவியாகவும் டேஸி



படிப்பகம்

பண்டாரநாயக்கா இருந்தார்.

உப தலைவர்களில் ஒருவராக ஈ.ஆர்.தம்பிமுத்து இருந்தார். (பெண்களின் வாக்குரிமைப் போராட்டம் முற்றுப்பெற்றதும் இவ்வமைப்பு, அகில இலங்கைப் பெண்கள் சம்மேளனமாக (All Ceylon Women Conference) ஆக மாறியது.

இச்சங்கத்தின் கிளையொன்றை "ரய்கம்" பகுதியில் 1929 நவம்பர் 22ம் திகதி ஆரம்பித்த போது அதற்கு டெஸி டயஸ் பண்டாரநாயக்க தலைமை தாங்கினார். அவரோடு 'சத்தியவாகீஷ்வர அய்யர், ஏ.சி.ஜீ.விஜேகோன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் டேஸி டயஸ் பண்டாரநாயக்க கீழ்வருமாறு உரையாற்றினார்.

> 'அரசியல் வேறுபாடு இன, மத, ஜாதி போன்ற வேறுபாடுகளுமின்றி பெண்கள் வாக்குரிமைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமது குறிக்கோள், சகல தேர்தல்களிலும் பங்கு கொள்ள பெண்களுக்கும் வாக்குரிமை கிடைக்கச் செய்வது, இலங்கைப் பெண்களின் கடமை, பொறுப்பு ஆகியவை தொடர்பான அனுபவத்தை கிடைக்கச் செய்வது போன்றவையே..."

பெண்களுக்கு வாக்குரிமை வேண்டுமெனக் கோரி 1928ஆம் ஆண்டு ஜனவரி 14ம் திகதி இவ்வமைப்பு சாட்சியமளித்தது. (டொனமூர் குழுவிடம் இறுதியாக இவ்வமைப்பே சாட்சியமளித்திருந்தது.-சாட்சியம் இலக்கம் -141)

டொனமூர் ஆணைக்குழுவின் முன்னிலையில் பெண்கள் வாக்குரிமைச் சங்கம் சாட்சியமளித்ததன் பின் பெண்களுக்கு ஏன் வாக்குரிமை தேவை? என்ற தலைப்பில் நீண்ட துண்டுப் பிரசுரம் ஒன்றை அவ்வமைப்பு வெளியிட்டது. பெரும்பாலும் ஆணைக்குழு முன்னிலையில் அவ்வமைப்பு அளித்த சாட்சியத்தின் அடிப்படையாகக் கொண்டே மேலும் பல தகவல்களுடன் இது வெளியிடப்பட்டிருந்தது. பெண்களுக்கு வாக்குரிமை தேவையில்லை என வாதிடுவோருக்கு தர்க்க ரீதியிலான பதில் அதில் கொடுக்கப்பட்டிருந்தது. அத்துண்டுப் பிரசுரத்தில் இருந்த சில குறிப்புக்கள் கீழ்வருமாறு:

> 'வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு வாக்குச்சீட்டில் புள்ளியிடுவது எப்படியென்று தெரிந்திருத்தலே போதுமானது...பால் ரீதியான பாகுபாட்டைக் காரணமாக வைத்து நாட்டுப்பிரஜைகளின் வாக்குரிமையை இல்லாமல் செய்வது நாட்டுக்கு முன்னேற்றத்தை அளிப்பதாகாது... பெண்கள் சுதந்திரமாக முன்னேற அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டே ஆக வேண்டும்.
>
> பெண்களின் உரிமையை தட்டிக்கழிக்கும் உரிமை எந்தவொரு அரசாங்கத்துக்கும் கிடையாது. இன்று பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தால் வீட்டு நிலமை மோசமாகும், வீட்டு ஐக்கியம் பாதிக்கப்படும் என்றெல்லாம் பேசப்படுவது பெரும் முட்டாள்தனமானவாதம். பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட நாடுகளில் இதற்கு உதாரணங்களைக் காணலாம். பெண்களுக்கான சுதந்திரமில்லை எனக் கூறப்படும் மத்திய கிழககு நாடுகளில் கூட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. பாலஸ்தீன சட்டசபையில் பிரதிநித்துவம் வகிக்கும் 334 பேரில் 14 பேர் பெண்களாவார்..."

www.padippakam.com

டொனமூர் குழுவின் முன் சாட்சியமளித்தவர்களில் பெண்களின் வாக்குரிமையைப் பற்றி குரலெழுப்பியோர் குறைவாகவே காணப்பட்டனர். குறிப்பாக தமிழ் தலைவர்களில் பலர், ஏனைய இனத்தவர்களையும் விட பெண்களின் வாக்குரிமைக்கு எதிராக குரலெழுப்பியிருந்தனர். இதுபற்றி டொனமூர் அறிக்கையில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

'தமிழ் (இந்து) சமூகத்தின் தலைவர்கள் பலர் வாக்குரிமை மேலும் விஸ்தரிக்கப்படுவதை விரும்பவில்லை..."

ஆனாலும் பெண்களின் சாட்சியங்களைத் தொடர்ந்து டொனமூர் குழுவினர் பெண்களின் வாக்குரிமைக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தனர். எமது நாட்டுப் பெண்களின் வாக்குரிமையின் அவசியத்தை வேற்று நாட்டவர் நியாயப்படுத்திப் பேச வேண்டிய மோசமான நிலை அன்றிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**டொனமூர் குழுவினர்**

'பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதன் மூலம் இலங்கையில் குழந்தை இறப்பு வீதம், வீடமைப்பு, சுகாதாரம், குழந்தைசார் நலம், மருத்துவம், கற்பிணிகளுக்கான நடவடிக்கைகள் என்பவற்றில் வளர்ச்சி ஏற்படும்..."

என கருத்து தெரிவித்தனர். அதன்படி அவர்கள் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டாலும் அது 31 வயதாக இருக்க வேண்டுமென மட்டுப்படுத்தினர். ஆனால் இது நடைமுறைக்கு வந்த போது அன்றிருந்த அரசாங்க காரியதரிசியால், தேசாதிபதி சேர்.கேர்பற்ஸ் ஸ்டேன்லி என்பவருக்கு ன்வைத்த சிபாரிசு காரணமாக பெண்களுக்கும் 21 வயதில் வாக்குரிமை வழங்கப்பட்டது.

பிரித்தானியாவில் சகலருக்கும் 1918இல் வாக்குரிமை வழங்கப்பட்ட போதும் பெண்களின் வாக்குரிமை வயது 30 ஆகவே இருந்தது. 10 வருட போராட்டதின் பிறகு அதாவது, 1928 இலேயே பெண்கள் 21 வயதில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக்கொண்டனர். ஆனால் இலங்கையில் 1931இல் ஒரே தடவையில் இலங்கைப் பிரஜைகளுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட போதே பெண்களும் ஒரே நேரத்தில் வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கைப் பெண்களின் வாக்குரிமைப் போராட்டம் என்பது சந்தர்ப்பத்திற்கமைய குரலெழுப்பி அதை உடனேயே பெற்றுக் கொண்டதனாலேயே 'பெண்கள் எவ்வித போராட்டமுமின்றி வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டனர்" என இலகுவாக கூறக்கூடியதாகவுள்ளது. அதாவது 1931இல் சர்வஜன வாக்குரிமை தொடர்பில், தங்களுக்கு பாரபட்சம் காட்டக்கூடிய சூழல் மேலெழுந்த வேளை, தாங்கள் அதற்காகப் போராடினார்கள். அது ஒரு உடனடி எழுச்சியாகவே காணப்பட்டது என்று கூட கூறலாம்.

பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்ட முதன்மை நாடுகளில் இலங்கையும் அடங்குகின்றது. அதே போல் வாக்குரிமை வயதெல்லையை 21இலிருந்து 18க்கு குறைத்த முதன்மை நாடுகளில் இலங்கையும் ஒன்று. இன்று இலங்கைப் பெண்கள் 18 வயதிலேயே வாக்களிக்கத் தகுதி படைத்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# டொனமூர் விசாரணைக் குழுவின் முன் அளித்த சாட்சியம்!

1927ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி இலங்கை வந்த டொனமூர் குழுவினர் தங்களது விசாரணையை முடித்துக் கொண்டு 1928 பெப்ரவரி 4ம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டனர். இவர்கள் தங்களது முழு விசாரணை அறிக்கைகளையும் இங்கிலாந்திலேயே ஆராய்ந்ததன் பின்னர் 1928 யூன் 26ம் திகதியன்று இலங்கைக்கான குடியேற்ற நாட்டுச் செயலாளர் 'திரு.பஜ.ஏ.கிளற்றர் பர்க்" இற்கு தங்களது அறிக்கைகளை அனுப்பி வைத்தனர். அன்றைய அரசாங்க காரியதரிசியான பேர்னர்ட் ஹென்றி போர்டில்லியன் என்பவரால் தேசாதிபதி 'சேர்.ஹேர்பற்ஸ் ஸ்டேன்லி"க்கு விடுத்த சிபாரிசின் பேரில் 30 வயது என்ற எல்லை. 21 வயதுக்கு மேற்பட்ட எல்லா பிரஜைகளுக்கும் வாக்குரிமை என மாற்றிப் பின் அமுல்படுத்தப்பட்டது.

டொனமூர் அறிக்கையில் பெண்களின் வாக்குரிமை பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

> 'பெண்கள் வாக்குரிமை பற்றிய கேள்வியை நாம் கருத்துடன் ஆராய்ந்துள்ளோம். அவர்கள் சார்பில் எடுத்துக் கூறப்படும் வழக்கமான வாதங்கள் ஆண், பெண் சமத்துவம் என்பவற்றை விட, இலங்கையில் குழந்தை இறப்பு, உயிர்வீதம், வீடமைப்பில் சீர்திருத்தத்



படிப்பகம்

தேவை, குழந்தை நலம், மருத்துவம், கர்ப்பிணிக்களுக்கான உதவி ஆகியவற்று வளர்ச்சி ஏற்பட வேண்டிய தேவை ஆகியன பற்றிக் குறிப்பிட்டிருந்தமை எம்மைக் கவர்ந்தன. இச்சிக்கல்கள் யாவற்றையும் தீர்ப்பதில் பெண்களின் ஆர்வமும் உதவியும் மிகுந்த பலனளிக்கும். மேலும் கீழைத்தேய நாடுகளில் அண்மையில் சில ஆண்டுகள் வரை பெண்கள் தங்கள் அரசியல் உரிமைகளைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கவில்லை. இருப்பினும் இந்நிலை தற்போது மாறி வருகிறது. இலங்கைப் பெண்களுள் பல வகையினரும் சேர்ந்த பெரும் குழு ஒன்று தங்களுக்கு வாக்குரிமை வேண்டும் என எம்மை வேண்டியபது. வாக்கைப் பயன்படுத்துவதில் இந்தியப் பெண்களுக்குள்ள திறமை இலங்கைப் பெண்களுக்கும் உண்டு என்ற வாதத்தை மறுப்பது கடினமாயிற்று. இந்தியப் பெண்களுள் நியாயமான தொகையினர் ஏலவே வாக்குரிமை பெற்றுள்ளனர்."

(டொனமூர் யாப்பினை ஆய்ந்த சிறப்பாணைக்குழுவின் அறிக்கை-தமிழ்ப் பதிப்பு-பக்கம்-121, 122)

1928 ஜனவரி 14ம் திகதி பெண்கள் வாக்குரிமைச் சங்கம் டொனமூர் ஆணைக்குழுவின் முன்னர் சாட்சியமளித்தது. அவர்கள் காலை 11 மணிக்கு வந்தனர். (சாட்சியம் இலக்கம்-141)

**டொனமூர்:**

நீங்கள் எங்களுக்கு டிசம்பர் 9ம் திகதியிட்டு அனுப்பிய கடிதம். அத்தோடு திகதியிடப்படாது அனுப்பிய கடிதங்களுக்கும் நாங்கள் வந்தனமளிக்கின்றோம். 1919இலிருந்து 1925வரை செயற்பட்ட தேசிய காங்கிரஸ் தொடங்கியதிலிருந்து. சாட்சியத்தை ஆரம்பிப்பீர்கள் என நம்புகிறோம்.

**திருமதி.குணசேகர:**

"எங்களுள் நன்றாக பேசக்கூடியவர்கள் வந்திருக்கிறார்கள். முதலில் நீங்கள் எங்களது குறைகளைக் கேட்டுக் கொள்ள இசைந்ததன் பிறகு நாங்கள் எங்கள் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவிக்கிறோம். இப்போது எமது வாக்குமூலத்தை வாசிக்கும்படி நான் திருமதி. ஜியோ டி சில்வா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

**திருமதி.ஜியோ டி சில்வா:**

"எங்கள் சங்கமானது சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும். நாங்கள், முதலில் எங்களுக்குள் இதனைப்பற்றி பேச அவசியம் இல்லை என்று எண்ணியிருந்தோம். ஏனெனில் உங்களுக்கு முன் வாக்குமூலமளிக்க நியமிக்கப்பட்ட ஆடவர் சிலர் எங்களுடைய நலன்களைப் பற்றிப் பேசுவார்கள் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இது விடயத்தில் நாங்கள் எதிர்பார்த்தது பொய்யாகவில்லை. ஆடவர் சிலர் எங்களுக்கான உரிமைக்கெதிராகப் பேசியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் சில ஆடவர் எங்களுக்கான வாக்குரிமை கொடுப்பதற்கு தயாராகவும் உள்ளனர். பெண்களுக்கான வாக்குரிமையைப் பற்றிக் கதைக்க யாரும் இல்லாததனாலேயே அந்த சிலர் எங்களுக்காக கதைக்க முன்வந்திருந்தனர். எனவே தான் நாங்களும் எங்களுக்கான வாக்குரிமை தொடர்பாக தொழிற்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் டிசம்பர் 7 ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தோம். அன்று தான் எங்கள் சங்கத்தை ஸ்தாபித்தோம். அனேகமான

யோசனைகளை அன்று நாங்கள் தீர்மானித்தோம். அவை எங்கள் குறிப்புப் புத்தகத்தில் இருக்கின்றன.

பெண்களின் பிரச்சினை எல்லா நாடுகளிலும் இப்போது கவனத்திற்கு எடுக்கப்படுகிறது. பிரித்தானியா, கனடா, நியூசிலாந்து, ஆஸ்திரியா, அமெரிக்கா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, ஹங்கேரி, நோர்வே, சுவீடன், இந்தியா, பர்மா முதலியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

அமெரிக்கா, பிரித்தானியா, டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, ஒல்லாந்து, ரூமேனியா, சேர்பியா, போலந்து, பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் பெண்களுக்கு இது வரை வாக்குரிமை வழங்கப்பட்டு விட்டது.

"வாக்குரிமையானது ஐரோப்பியப் பெண்களுக்கே பொருந்தும். கிழக்கே உள்ள பெண்களுக்கு பொருந்தாது" என எங்களுக்கு முன்னர் சாட்சியம் அளித்த சிலர் சொல்லியிருந்தார்கள். ஆனால் இந்தியாவிலும், பர்மாவிலும் எப்படி வழங்கப்பட்டது. இந்திய, பர்மிய சகோதரிகள் எல்லோரும் வாக்குரிமை பெற்றிருகின்ற போது எங்களுடைய வாக்குரிமையைத் தடுக்க முயற்சிப்பவர்களை நாங்கள் சந்தேகிக்கிறோம். ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் இந்தியாவில் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்தியப் பெண்கள் சங்கத்தினரால் 1926-1927ல் வெளியிடப்பட்ட அறிக்கையிலிருந்து அவர்களது கஷ்டங்கள் தெரியவருகிறது. இந்தியாவில் இந்தப் பெண்கள் சங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக ஆணுக்கு நிகராக பெண்களும் வாக்குரிமை பெற்றார்கள். சட்டசபைத் தேர்தலில் பெண்கள் ஆர்வத்தோடு ஈடுபடுகிறார்கள். தங்களுடைய வாக்குகளை ஒழுங்காகப் பிரயோகிக்கிறார்கள்.

இப்போது இந்தியாவில் பெண்கள், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், வங்காளம், அஸ்ஸாம், பர்மா, பஞ்சாப், டில்லி, மத்திய மாகாணம் முதலிய இடங்களில் வாக்குரிமையைப் பெற்றிருக்கிறார்கள். பெண்கள் சட்டசபையில் அங்கத்தினர் ஆகலாம் என்று இந்திய அரசாங்கத்தில் சென்ற வருடம் ஏப்ரல் மாதம் தான் அனுமதிக்கப்பட்டது. இலங்கையில் பெண்கள், வாக்குரிமை பெறுவதற்கான நல்ல சூழ்நிலை இருக்கிறது. இலங்கையில் 'பெண்கள் கல்வி இந்தியாவை விட சிறந்திருக்கிறது. இந்தியாவில் 100க்கு 2 பெண்களே கல்வி அறிவு படைத்தவர்கள். ஆனால் 1921ம் ஆண்டு இலங்கையின் அறிக்கையில் இருந்து இலங்கைப் பெண்களின் கல்வி அறிவு 100க்கு 21 எனத் தெரிய வருகிறது.

எனவே இந்தியாவிலிருக்கும் சகோதரிகளுக்கு நிகராக நாங்களும் வாக்குரிமை தகுதிபடைத்தவர்களாவோம்.

கல்வி தொடர்பான அதிகாரி 1923இல் தெரிவித்த அறிக்கையிலிருந்து ஒரு வருடத்தில் 12,789 பெண்கள் என்கின்ற ரீதியில் அரசாங்க பள்ளிக்கூடங்களில் அனுமதி அதிகரிக்கப்படுவதாக தெரிகிறது. அரசாங்க உதவியின்றி நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் 1130 பெண்கள் ஒரு வருடத்தில் அதிகரிக்கப்படுகிறார்கள்.

நாங்கள் அரச நிர்வாகத் துறைகளில் ஆர்வமில்லாததாக சிலர் கூறியுள்ளனர். எங்களை அத்துறைகளில் அறிமுகம் செய்வது எவ்வாறெனில் எங்களுக்கு வாக்குரிமை கொடுப்பதனாலேயே. அப்படிச் செய்வதன் மூலமே அறிந்து கொள்ள களம் கிடைக்கிறது.

இப்போது சட்டத்தில் ஒருவன் சட்டசபை அங்கத்தினனாக வேண்டுமானால் தன்னிடமோ அல்லது மனைவி பேரிலோ ரூபா. 600 பெறுமதியான சொத்து இருக்க

www.padippakam.com

வேண்டுமெனக் கூறப்படுகிறது. தன் மனைவிக்கு சொத்திருந்தால் கூட ஆணுக்கு வாக்குரிமை கிடைக்கும். ஆனால் அப்பெண்ணின் சொத்து பெண்ணுக்கே வாக்குரிமை வழங்கப்படாமல் செய்கிறது. (சபையில் சிரிப்பு) இதை நாங்கள் அநியாயம் என நினைக்கிறோம். ஒருவர் தனது மனைவியின் பேரில் ரூபா.1500 பெறுமதியான சொத்து இருந்தால் வாக்காளனாகி விடலாம்.

இங்குள்ள பெரும்பாலான பத்திரிகைகள் வாக்குரிமையை ஆதரிக்கின்றன. நாங்கள் 'டெயிலி நியூஸ், டைம்ஸ்' முதலான பத்திரிகைகள் கூறியிருப்பதைக் காண்கிறோம்.

எங்களுக்கு வாக்குரிமை கொடுப்பதற்கு இன்னொரு தடை என்னவென்றால், நாங்கள் வாக்குரிமை பெற்று விட்டால் எங்கள் குழந்தைகளையும், வீடுகளையும் பற்றி நாங்கள் கவலை கொள்ள மாட்டோம் என்பது. இன்று உலகில் பெண்களுக்கு 29 நாடுகளில் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இத்தேசங்களிலெல்லாம் மேற்படி நிலைமை பிரச்சினைக்குரிய ஒன்றாக இல்லையே.

வாக்குரிமை பெற்று விட்டாள் என்பதற்காக ஒரு பெண் வீட்டைப் பற்றியும், குழந்தைகளைப் பற்றியும் நினைக்க மறந்து விடப்போவதில்லை.

வீட்டிற்கு வெளியில் நடக்கும் விடயங்களில் ஈடுபடுவதன் மூலம் பெண்களின் அறிவு விசாலமாகின்றது. அது அவர்களுக்கு நன்மையையே பயக்கும்.

இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் 294வது பிரிவை மாற்றுவதற்கு நாங்களே பொறுப்பாளியாக இருந்தோம் நாங்கள் இங்கு குறுக்கிட விரும்புகிறோம். சிறை இன்ஸ்பெக்டர், சப் ஜெனரல் அவர்களுக்கும், மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களுக்கும் இலங்கையிலுள்ள அதிகமான பெண்களால் கையொப்பமிடப்பட்ட இரண்டு மனுக்களை அனுப்பியிருந்தோம். அதனால் தான் அந்தச் சட்டப்பிரிவு மாற்றப்பட்டது. இதற்கு முன்பு 'கருச்சிதைவு' செய்பவர்களுக்கு மரணதண்டனையே வழங்கப்பட்டது.

நாங்கள், கருச்சிதைவு செய்து கொண்ட மேலும் எட்டுப் பெண்களை விடுதலை செய்யுமாறும் மனுக் கொடுத்திருந்தோம்.

இது ஒரு முக்கிய விடயமாக இருந்ததால் அரசும் கவனத்திற்கெடுத்தது. இதில் குறிப்பாக ஒரு 16 வயது சிறுமி 'கருச்சிதைவு' செய்து கொண்டதற்காக மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டு, பின் 20 வருடங்களுக்கு சிறைத்தண்டனையாக மாற்றப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டாள். நாங்கள் ஐந்து வருடங்களுக்குப்பின் அச்சிறுமியையும் இன்னும் மூன்று பெண்களையும் விடுதலை பெறச் செய்தோம்.

இன்னும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். பெண்களுக்கான வாக்குரிமை பெறும் ஆர்வம் சமீபத்தில் கிளம்பியதல்ல. 1919இல் நடைபெற்ற இலங்கை தேசியக் காங்கிரஸில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது" சட்டசபையானது ஐம்பது அங்கத்தினர்களுடன் கூடியிருக்க வேண்டும். அதில் 5இல் 4 பங்கு அங்கத்தினர்கள் எல்லைக்குத்தக்கபடி அதில் ஆண்களாலும் குறிக்கப்பட்ட பெண் வாக்களர்களாலும் தெரிவு செய்யப்பட வேண்டும். அந்த சட்டசபையில் ஒரு உத்தியோகத்தர் மிகுதியாக இருக்க வேண்டும். இவர்கள் அனைவரும் சேர்ந்து சபைக்கு தலைவரைத் தெரிவு செய்ய வேண்டும்" என்று கூறப்பட்டது.

இந்தத் தீர்மானத்தைப் பிரேரித்தவர் யார் என்பதை அறிய விரும்புகிறீர்களா? அது சேர் பொன்னம்பலம் இராமனாதனாலேயே பிரேரிக்கப்பட்டது. அவர் இதற்கு முன்னர்



படிப்பகம்

www.padippakam.com

உங்களுக்கு முன்பு வந்து பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதைக் கண்டித்துப் பேசியிருந்தார். அதை சேர்.மத்தேயுகாதன். அவை மரியாதையற்ற வார்த்தைகள் என்றும் அவர் அப்படிப் பேசலாகாது என்றும் எதிர்த்துப் பேசியிருந்தார். (சிரிப்பு).

அவர் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டால் வீட்டில் சமாதானமும். சீர்திருத்தமும் பாதிக்குமெனக் கூறினார். இந்திய, பர்மிய சகோதரிகள் தம்முடைய வாக்குகளைப் பாவிப்பதனால் வீட்டில் சமாதானமில்லாமல் போய்விட்டது என அவர் அபிப்பிராயப்படுகிறாரா?

1919இல் பெண்களின் வாக்குரிமையை ஆதரித்தும், இரண்டு வாரங்களுக்கு முன் உங்கள் முன்னிலையில் வாக்குரிமை அளிக்கப்படக்கூடாது என்றும் கூறியதைப் பார்த்தால் 'பன்றியின் முன் நல்ல இரத்தினங்கள் சிதறி இருப்பதைப் போல்' இருக்கிறது. அவருடைய வாக்குமூலத்தின் பாதிப்பின் காரணமாகவே நாங்கள் எங்கள் நிலைமையைப் பலப்படுத்த ஆரம்பித்தோம். அதனாலேயே எங்கள் கூட்டமும் அதிகரித்தது. நாங்கள் திருமணம் செய்யப்பட்டவர்களுக்கு வாக்குரிமை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

1911இல் பெண்கள் கல்வி 100க்கு 12ஆக இருந்தது. பத்து வருடங்களுக்குப்பின் (இரட்டிப்பு) அது 100க்கு 21ஆக ஆகிவிட்டது. இதுவே கட்டாயக்கல்வி வந்திருப்பின் 100க்கு 75ஆக அதிகரிக்கப்படலாம். கொழும்பில் ஒரு பள்ளிக்கூடத்தில் 900 சிறுமிகள் படிக்கின்றனர். 10,000 சிறுமிகள் படிப்பில்லாமல் திரிகின்றனர். பள்ளிக்கூடங்களில் இலவசமாகப் படிக்கலாம். ஆனால் ஏழை ஜனங்கள் தம் குழந்தைகளுக்கு வாசிக்கப் புத்தகங்களையும் சாப்பாட்டையும் எவ்வாறு வாங்கிக் கொடுப்பர். பள்ளிக்கூடங்களில் சிறுமிகளுக்கு புத்தகங்கள் இலவசமாகவும், ஒரு வேளை சாப்பாடு இலவசமாகவும் கொடுக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு நல்ல தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு மேற்கு தேசங்களில் உள்ள சமையல் வேலைகள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

இன்று 100க்கு 65 பெண்கள் வேலை செய்து வருகிறார்கள்.

**டொக்டர்.திருமதி.மேரி ரத்தினம்:**

வாக்குரிமை விடயம் 1904லிருந்தே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அச்சமயத்தில் இலங்கையில் சுதேச தொழிலாளர்களுக்கு ஓர் யூனியன் (சங்கம்) இருந்தது. அப்போது இருந்த ஆங்கிலேய பிரெஞ்சு அங்கத்தவர்கள் கிறிஸ்தவ மதப் பெண்கள் சங்கத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அப்போதே பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென்பது விவாதத்திற்கு வந்தது. இப்போது 23 பெண்கள் சங்கங்கள் இருக்கின்றன. 1924இல் பல பெண்கள் சங்கங்கள் இருந்தன. பின்னர் இச்சங்கங்களில் பல ஒன்றாக இணைக்கப்பட்டன.

**டொக்டர்.நல்லம்மா சத்தியவாகீஸ்வரமய்யர்:**

இந்த இலங்கை பூராவும் உள்ள ஆஸ்பத்திரிகளில் பெண்களுக்கு மருத்துவம் செய்யப்படும் ஆஸ்பத்திரிகளின் நிலை மோசமாக உள்ளது. இலங்கையில் பிரசவ ஆஸ்பத்திரிகளைப் பார்த்தால் ஒன்று மட்டுமே கொழும்பில் உள்ளது. யாழ்ப்பாணத்தில் மிஷனைச சோநத பிரசவ ஆஸபததிரி ஒனறு இருககிறது. மறற இடஙகளில எலலாம பொது ஆஸ்பத்திரிகள் தான் இருக்கின்றன. அவை சிலவற்றில் பிரசவம் பார்க்க முடியாது. இலங்கையின் பொது வசதி முறை தாறுமாறாக உள்ளது. இலங்கையில் பெண்களின் பழக்கவழக்கங்களும் மோசமான நிலையில் இருக்கின்றது. அவர்கள் பொதுவாக பொது



படிப்பகம்

வைத்தியசாலைகளுக்கு போவது கூடக் கிடையாது.

**திருமதி.இரத்தினம்:**

டொக்டர் நல்லம்மா சொன்னவற்றுள் நானும் மேலதிகமாக சிலவற்றைக் கூறலாமா?

**டொனமூர்:**

**சரி**

**திருமதி:இரத்தினம்:**

இந்த ஆஸ்பத்திரியில் சராசரி 138 நோயாளிகள் வருகின்றனர். ஆனால் 82 படுக்கைகள் மட்டுமே இருக்கின்றன. சென்ற மாதம் 324 பிரசவ கேஸ்கள் நடந்தன. ஆனால் 82 படுக்கைகள் மட்டுமே இருந்தன. அதாவது, பெண்கள் பிரசவமாகி சராசரி ஐந்து அல்லது ஆறு நாட்களில் வெளியே அனுப்பப்பட்டுள்ளனர். 63 பேர் மூன்று நாட்களுள் வெளியே அனுப்பப்பட்டுள்ளனர். 75 பேர் நான்கு நாட்களுள் வெளியே அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஏழைகள். ஐந்து வருடங்களுக்கு முன் வைத்திய இலாகா அதிகாரிகள் ஒரு நிலத்தை வாங்கினார்கள். ஆனால் ஒரு பயனும் ஏற்படவில்லை. வைத்திய அதிகாரிகள் பொது வேலைத்திணைக்களத்தின் மீது பழியைப் போடுகிறார்கள் (சிரிப்பு). எங்களுக்கு வாக்குரிமை இருக்குமானால் இவ்வளவையும் நாங்களே பார்த்துக் கொள்ளுவோம் (மறுபடியும் சிரிப்பு).

**சேர்.ஜாபரி பட்லர்:**

தாங்கள் இது தொடர்பாக சட்டசபை அங்கத்தவர்களோடு தொடர்பு கொண்டீர்களா? இந்தக் கொடிய விடயங்கள் சட்டசபையில் பெண்களாலேயே கொண்டுவரப்பட வேண்டுமென நான் நினைக்கிறேன்.

**டொக்டர் இரத்தினம்:**

அதனால் தான் நாங்கள் எங்களுக்கு வாக்குரிமை கொடுக்கும்படி கேட்கிறோம்.

**சேர்.ஜாபரி பட்லர்:**

நீங்கள் இப்போது தான் இந்த அரசியல் வழியைத் தேடுகிறீர்கள். இது சட்டசபை அங்கத்தவர்களது தவறேயன்றி வேறில்லை. நாங்கள் வைத்திய இலாகாவின் மேல் தவறு என்று நினைத்திருந்தோம்.

**டொக்டர் ஷீல்ஸ்:**

சட்டசபை அங்கத்தினர்கள் பத்திரிகைகளை மட்டுமே வாசித்து வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறோம் (சிரிப்பு).

**டொனமூர்:**

பாராளுமன்ற அங்கத்தினர்கள் பத்திரிகைகளை வாசிப்பது போல சட்டசபை அங்கத்தினர்களும் வாசிக்கிறார்கள் (சிரிப்பு)

**சேர் மத்தேயு காதன்:**

இந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கம் இப்படிப்பல விடயங்களில் பெண்கள் ஊக்கம் எடுத்துக் கொள்வதையும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வழிவகைகளைத் தேடுவதையும் கொண்டதாக இருக்கிறது என நான் அறிந்து கொண்டேன். அவர்களின் பிரச்சினைகளை எவரும் கண்டு கொள்ளவில்லை என்பதைத்

தெரிந்து கொண்டதுடன் தமது குறைகளைச் சட்டசபையில் பேசத் துணிந்துள்ளனர். சட்டசபையைச் சேர்ந்த ஆண்கள் தமது கோரிக்கைகளுடன் பெண்களுக்கான குறைகளையும் கோரியிருக்கலாம். ஆனால் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டால் அனைத்தும் தீரும்.

கூட்டம்:

ஆமாம்.

**சேர் மத்தேயு காதன்:**

நீங்கள் சட்டசபையில் தான் அங்கத்தவராக விரும்புகிறீர்கள் என நான் நினைக்கவில்லை.

**டொக்டர் ஷீல்ஸ்:**

நல்ல நிலைமையான வாழ்வைப் பெற விரும்புகிறீர்களா?

**வெல்வி ஹேன்ஸ்டர்:**

ஆமாம்.

**டொக்டர் ஷீல்ஸ்:**

அரசாங்க பள்ளிக் கூடங்களில் சமையல் வேலை சொல்லிக் கொடுக்கப்படுகிறதா?

**திருமதி டீ சில்வா:**

கிழக்கு தேசச் சமையல் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை. அத்துடன் சோறு கறி சமைக்கும் விதமும் சொல்லிக் கொடுக்கப்படவில்லை.

**டொக்டர் இரத்தினம்:**

அதுவும் கொழும்பில் மட்டும் தான் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

**டொனமூர்:**

இச்சங்கம் கடந்த டிசம்பரில் ஆரம்பித்து இவ்வளவு வளர்ச்சி அடைந்திருப்பதைப்பற்றி நான் பாராட்டுகிறேன். இத்தனை அங்கத்தினர் இருப்பார்களென்று எவரும் எதிர்பார்க்கமாட்டார்கள்.

**திருமதி இரத்தினம்:**

சுமார் 200 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

**டொனமூர்:**

அங்கத்துவ விதியைப்பற்றி கொஞ்சம் கூறுகிறீர்களா? உங்கள் சங்கத்தில் எல்லா ஜாதியினரும் அங்கத்தினர் ஆகலாமா?

**டொக்டர் இரத்தினம்:**

எல்லா ஜாதியினரும் அங்கத்தினர் ஆகலாம்.

**டொனமூர்:**

முஸ்லீம்களும் கூட வா?

**திருமதி இரத்தினம்:**

www.padippakam.com

ஆமாம். அவர்களும் கூடத்தான்.

**டொனமூர்:**

சரி, யாராவது முஸ்லீம் அங்கத்தினர்கள் இருக்கிறார்களா?

**திருமதி ஐயோ டி சில்வா:**

வாக்குரிமை விடயத்தில் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டால் தாங்களும் இச்சங்கத்தில் சேருவதாக பல முஸ்லீம் பெண்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**திருமதி குணசேகர:**

இங்கே இரண்டு மலேயா பெண்கள் அங்கத்தவர்களாகி இருக்கிறார்கள்.

**டொனமூர்:**

நீங்கள் என்னுடைய ஆர்வத்தை அதிகரிக்கிறீர்கள். சரி, இப்போது உங்களுக்கு வாக்குரிமை வழங்கிவிட்டால் நாட்டில் எந்தவொரு அதிருப்தியும் ஏற்படாதா?

**கூட்டம்:**

கிடையாது. இராது.

**டொனமூர்:**

நீங்கள் நாடு முழுவதற்கும் உரிமை கேட்பது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. நீங்கள் 1921இல் மிஸ்டர் தம்பிமுத்துவின் ஒத்துழைப்பை நன்றி கூறியதற்காக சந்தோஷப்படுகிறேன். அவரைத் தவிர வேறு எவராவது உங்களை ஆதரித்திருக்கிறார்களா?

**திருமதி டீ சில்வா:**

இலங்கை காங்கிரஸ் ஆதரித்திருக்கிறது.

**டொனமூர்:**

ஆனால் அது உத்தியோகபூர்வமாக அல்ல. இவ்விடயம் தேர்தல் காலங்களில் வெளியாக்கப்படவில்லையா?

**திருமதி டீ சில்வா:**

நான் அவ்வாறு நினைக்கவில்லை. எங்களுடைய நிலைமையை உங்களிடமே பொறுப்பளிக்கிறோம்.

**டொனமூர்:**

எங்களுடைய தீர்மானம் எதுவாயினும் நீங்கள் ஆமோதித்தே தீர வேண்டும் (சிரிப்பு).

**திருமதி டீ சில்வா:**

பெண்கள் ஆண்களுக்காக எவ்வளவு உழைக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

**டொனமூர்:**

நீங்கள் இது விடயத்தில் எங்களுடைய தீர்மானத்தை ஆமோதிப்பதோடு இல்லாமல் மற்றவர்களையும் அவ்வாறு செய்யச் சொல்லுதல் வேண்டும்.

பெண்களே! நாங்கள் உங்களைப் பாராட்டுகிறோம் இது தான் எங்களது கடைசி



படிப்பகம்

விசாரணையாதலால் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய உங்களுக்கு எமது நன்றிகள். நாம் எமது விசாரணையை மிகுந்த சந்தோஷத்துடன் செய்தோம். இன்று காலையுடன் எமது விசாரணைகள் முடிந்தன. சென்று வாருங்கள்.

மேற்படி சாட்சியத்தில் (12 பேர்கள் அடங்கிய பெண்கள் குழு) பெண்கள் வாக்குரிமைச் சங்கமானது சில பிற்போக்கான கோரிக்கைகளை முன்வைக்கின்ற போதும் அவை. குறிப்பிட்ட அந்த காலப்பகுதியில் அவ்வமைப்பின் கொள்ளளவு வெளிப்பாட்டு நிலை காரணமாகவே எனப் புரிந்து கொள்ள வேண்டுமேயன்றி இலகுவாக அவர்கள் மீது குற்றஞ் சுமத்திவிட முடியாது.

பெண்களின் அரசியல் குறித்து எழுதப்பட்ட பல எழுத்துக்களில் "பெண்கள் வாக்குரிமைச் சங்கமானது சகல பெண்களுக்குமான வாக்குரிமையைக் கோரியிருந்தன" எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் மேற்படி சங்கம் டொனமூர் ஆணைக்குழு முன்னிலையில் அளித்த சாட்சியத்தின் மூலப்பிரதியை எடுத்து நோக்கினால் அக்கருத்து வலுவிழந்ததாகக் காணப்படுவதைக் காணலாம்.

"பெண்கள் வாக்குரிமைச் சங்கம்", மணமான பெண்களுக்கான வாக்குரிமையை வலியுறுத்த முயற்சித்திருக்கிறது. ஆயினும் இவ்வலியுறுத்தலுக்கப் பின்னால் மணமான பெண்களுக்கு மட்டுமே வாக்குரிமை தேவை" என்ற நோக்கம் இருந்திருக்காது என்றே தோன்றுகிறது.

பெண்கள் வாக்குரிமைக்கு எதிரான ஆணாதிக்க சூழல் வலுப்பெற்றிருந்த அந்த நேரத்தில் மணமான பெண்களுக்காவது வாக்குரிமையைப் பெற முயற்சிப்போம் என்று கூட எண்ணியிருக்கலாம்.

www.padippakam.com

# முதற் பிரவேசம்

முதன் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பெண், லேடி எட்லின் மொலமூரே'. இவரது தந்தையான 'ஜோன்' ஹென்றி மீதெனிய அதிகாரம் என்பாரின் மரணத்தைத் தொடர்ந்து அவரது தொகுதியான 'ருவன்வெல்ல'வில் 1931 நவம்பரில் நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் அவரது மகளான மொலமூரே அம்மணி போட்டியிட்டு அரச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

அரசியலைப் பற்றிய இலங்கைப் பெண்களின் அக்கறையற்ற அக்காலத்தில் அவர் தெரிவு செய்யப்பட்டமை பெண்கள் அரசியலில் பங்கு பற்றுவதற்கான துணிவையும் ஆரம்பத்தையும் கொடுத்தது.

**அரசாங்க சபையில் முதற் பெண்**

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அரசாங்க சபையில் திரு.மீதெனிய அதிகாரம் நான்கு மாதங்களும் ஒரு தினமும் மட்டுமே அங்கத்துவம் வகிக்க முடிந்தது. 1931 செப்டெம்பர் 5ம் திகதி அவர் இறந்தார். அவரது ஈமச்சடங்குகள் முடிந்ததன் பின் அவரது நெருங்கிய நண்பர்கள் மீதெனிய அதிகாரத்தின் மகள் எட்லினிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தனர். அதாவது தகப்பனின் மரணத்தைத் தொடர்ந்து வெற்றிடமாகியுள்ள ருவன்வெல்ல ஆசனத்தை, தொடர்ந்தும் மீதெனிய பரம்பரையே பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்பதே அது.



படிப்பகம்

www.padippakam.com

சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கின்ற போதும் அரசாங்க சபையில் பெண்களின் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் மேற்படி வேண்டுகோளுக்கிணங்க எட்லின் மொலமூரேவுக்கு சாத்தியமானது

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுவை எட்லின் மொலமூரே 1931 ஒக்டோபர் 5ம் திகதி சமர்ப்பித்தார். எட்லினுக்கு வழங்கப்பட்ட நிறம் வெள்ளை. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதன் முறையாக பெண்ணொருவர் போட்டியிடுகின்றமையால் பெண்கள் வாக்குரிமை சங்கம் எட்லினுக்கு ஆதரவு வழங்கப் போவதாக ஒக்டோபர் 14ம் திகதியன்று தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அதற்கிணங்க எட்லினின் வெற்றிக்காக பெண்கள் வாக்குரிமைச் சங்கம் பெரும் பிரச்சார வேலைகளை மேற்கொண்டது. தேர்தல் பிரச்சாரங்களுக்கு முன்நின்று உழைத்தவர் டேஸி டயஸ் பண்டாரநாயக்கா. இவர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்காவின் மனைவியாவார். பிற்காலத்தில் இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்த S.W.R.D. பண்டாரநாயக்காவின் தாயாரே டேஸி பண்டாரநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது. (தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் பாட்டி)

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின் திருமதி. எட்லின் மொலமூரேவுக்கு வாழ்த்துத் தெரிவிக்க வந்தவர்கள் மத்தியில் உறையாற்றிய எட்லின் பின்வருமாறு தெரிவித்தார்.

> "அரசாங்க சபையில் பெண்ணொருவர் அங்கத்துவம் வகிக்கக் கிடைத்தது பெண் குலத்துக்கே பெருமையளிக்கிறது. நான் பழுத்த மூன்று சிங்கங்களுடன் போட்டியிட வேண்டியிருந்தது. எனவே எனது வெற்றி பெண்குலத்துக்கான பெரு வெற்றியாகக் கருதப்பட வேண்டும்."

எட்லின் மொலமூரேவின் சத்தியப் பிரமாணம் 1931 நவம்பர் 29ம் திகதி அரசாங்க சபையில் நடைபெற்ற போது அரசாங்க சபை கலரியில் பெண்கள் நிரம்பிக் காணப்பட்டனர்.


நேசம் சரவணமுத்து

இலங்கையின் வரலாற்றில் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல் பெண்மணி எனும் ஸ்தானத்தை எட்லின் பெற்றுக் கொண்டார். மேற்சபைக்குத் தெரிவான முதற் பெண்ணும் இவர் தான்.

### அரசாங்க சபையில் முதற் தமிழ்ப் பெண்மணி

ருவன்வெல்ல தொகுதியில் நடந்த இடைத் தேர்தலின் மூலம் எட்லின் தனது தகப்பனின் அரசியல் செல்வாக்கு, தனது உயர்குடிச் செல்வாக்கு பெண்களின் பிரச்சாரம் காரணமாகவே அரசியலில் நுழைய முடிந்தது. எட்லின் மொலமூரே தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடத்துக்குள் தகப்பனின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி இன்னுமொரு பெண் அரசாங்க சபைக்குள் நுழைந்தார். அவர் தான் கொழும்பு வடக்கு தொகுதியிலிருந்து தெரிவான நேசம் சரவணமுத்து.

இலங்கை சர்வசன வாக்குரிமை பெற்றதன் பின் மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட முதற் தமிழர் டொக்டர் ரட்னஜோதி சரவணமுத்து. அது மட்டுமன்றி



படிப்பகம்

முதலாவது தேர்தல் முறைப்பாட்டுக்குரிய நபரும் இவராவார். (ரட்னஜோதி சரவணமுத்து 1931 தேர்தலில் 5795 வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார்.)

திரு. ரட்னஜோதியின் தெரிவை ரத்துச் செய்யும்படி அவருடன் போட்டியிட்டு தோல்வியடைந்த டொக்டர்.எச்.எம்.பீ.ரிஸ் கொடுத்த முறைப்பாட்டின் மீது 1932 மார்ச் 8ம் திகதியன்று நீதவான் டிரிபார்க்ஸ் வழங்கிய தீர்ப்பின்படி

1.லஞ்சம் வழங்கியமை.

2.சுதந்திரமாக வாக்கைப் பயன்படுத்துவதற்குத் தடையாயிருந்தமை.

3.பொய்யான தகவல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரம் அச்சடிப்பதற்கு பணம் வழங்கியமை.

போன்ற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து டொக்டர் சரவணமுத்துவின் பிரதிநிதித்துவம் இரத்துச் செய்யப்பட்டது.

இதன் காரணமாக கொழும்பு வடக்கில் 1932 மே 28இல் நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் டொக்டர்.சரவணமுத்துவின் மனைவி நேசம் சரவணமுத்து போட்டியிட்டு - 8681 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வென்றார். இலங்கையின் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் அரசாங்க சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முதற் தமிழ் பெண் நேசம் சரவணமுத்து என்பது குறிப்பிடத்தக்கது. அவருடன் போட்டியிட்ட தொழிற்கட்சியைச் சேர்ந்த எம்.எல்.எம்.ரியால்-4433 வாக்குகளையும் டி சொய்சா ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரியாக இருந்த டொக்டர் எச்.எம்.பீரிஸ் -3333 வாக்குகளையும் வெள்ளவத்தையைச் சேர்ந்த டபிள்யூ.ஏ.பெல்சிகர் - 116 வாக்குகளையும் பெற்றிருந்தார்.

துரதிர்ஷ்டவசமாக திரு.சரவணமுத்துவும் சரி, அவரது மனைவி நேசம் சரவணமுத்துவும் சரி அவர்களது முதலாவது பதவிக்காலத்தில் 8 மாதங்களுக்கு மேல் நீடிக்கவில்லை.

நேசம் சரவணமுத்துவுக்கு எதிராகச் செய்யப்பட்ட தேர்தல் முறைப்பாடொன்றின் மூலம் அவரது உறுப்பினர் பதவியும் பறி போனது.

டொக்டர் சரவணமுத்து தனது மனைவி நேசம் சரவணமுத்துவுக்கு ஆதரவளிக்கக் கோரி விநியோகித்திருந்த துண்டுப்பிரசுரத்தை ஆதாரமாகக் கொண்டே அந்த விசாரணை நடந்தது. விசாரணை செய்த எ.சீ.டோல்டன் 1932 செப்டம்பர் 27 அன்று திருமதி. நேசம் சரவணமுத்துவின் உறுப்பினர் பதவி இரத்துச் செய்ததாக அறிவித்தார்.ஆயினும் இந்தத் தீர்ப்பினால் அவரது சிவில் உரிமை பறிக்கப்படவில்லை.

எனவே கொழும்பு வடக்கில் 1932 நவம்பர் 12ல் இன்னுமொரு இடைத் தேர்தல் நடத்தப்பட்டது. இத் தேர்தலில் மீண்டும் நேசம் சரவணமுத்து போட்டியிட்டு அவருடன் போட்டியிட்ட காசிச் செட்டியை விட 7730 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

முதலாவது அரசாங்க சபையின் ஆயுட்காலம் முழுவதும் நேசம் சரவணமுத்து பதவி வகித்தார். இரண்டாவது அரசாங்க சபை தேர்தல் 1936 பெப்ரவரி 22ம் திகதி நடந்த போது மீண்டும் நேசம் சரவணமுத்து கொழும்பு வடக்கில் போட்டியிட்டு வெற்றி

பெற்றார். இத்தேர்தலில் தொழிற் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜோசப்.டி. சில்வா, டொக்டர் எஸ்.சீ.போல் மற்றும் பீ.ஜே.ஆர். ரொட்றிகோ ஆகியோரைத் தோற்கடித்து நேசம் சரவணமுத்து 4932 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

இரண்டாவது அரசாங்க சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பெண் பிரதிநிதி இவர் ஒருவரே. நேசம் சரவணமுத்து அரசாங்க சபையில் சுகாதாரம் தொடர்பான நிர்வாகக் குழுஅங்கத்தவராகவும் கடமையாற்றினார்.

நேசம் சரவணமுத்து இரண்டாவது அரசாங்க சபையின் ஆயுட் காலம் முடிவதற்கு முன்1941 ஜனவரி 10ம் திகதி இறந்தார். அந்த நேரத்தில் நேசம் சரவணமுத்துவின் கணவரான டொக்டர் ரத்னஜோதி சரவணமுத்து கொழும்பு நகர மேயராகப் பதவி வகித்துக் கொண்டிருந்தார். அவர் தொழிற் கட்சியின் வேட்பாளர் ஈ.ஏ.குரேவை தோற்கடித்து, 1941 ஜனவரி 8ம் திகதி நகர மேயராகப் பதவியேற்றார். அன்று கொழும்பு மாநகர சபையின் அங்கத்தவராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்தனாவினாலேயே சரவணமுத்துவின் பெயர் நகர மேயராக முன் மொழியப்பட்டிருந்தது.

டொக்டர் சரவணமுத்து 15 வாக்குகளைப் பெற்று நகர மேயர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட போது அவருடன் போட்டியிட்ட டொக்டர் குரே 8 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். டொக்டர் குரேயின் பெயரை அன்றைய தொழில் கட்சித் தலைவர் ஏ.ஈ.குணசிங்க முன்மொழிந்தார்.

நேசம் சரவணமுத்துவின் மரணத்தைத் தொடர்ந்து வெற்றிடமான கொழும்பு வடக்கு தொகுதியில் நடந்த இடைத் தேர்தலில் அவரது கணவர் மேயர் ரத்னஜோதி சரவணமுத்து போட்டியிட்டார். இவருடன் போட்டியிட்டவர் ஏ.ஈ.குணசிங்காவின் மைத்துனரான ஜோசப் டி சில்வா ஆவார். இவர் பிரபல நாடகாசிரியரும் சட்ட வல்லுனருமான ஜோன் டி சில்வாவின் மகனாவார். அடுத்து போட்டியிட்ட வேட்பாளர் பிரபல வைத்தியர் எஸ்.சீ.போல். அன்றைய கால கட்டத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கை தேசிய காங்கிரசுக்கும் மற்றும் தொழிற்கட்சியின் தலைவர் ஏ.ஈ. குணசிங்காவுக்கும் இடையிலான பலப்பரீட்சையாக இந்த இடைத் தேர்தல் காணப்பட்டதென அரசியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அன்று அரசியல் அரங்கில் பிரபலம் அடைந்திருந்த டி.எஸ்.சேனநாயக்க, சேர் ஜோன் கொத்தலாவல, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, டட்லி சேனநாயக்க ஆகியோர் டொக்டர் ரத்ன ஜோதி சரவணமுத்துவை ஆதரித்தனர்.

ஆனால் இறுதியில் ஏ.ஈ.குணசிங்காவின் பிரதிநிதியான ஜோசப்.டி.சில்வா வெற்றி பெற்றார்.

அரசாங்க சபையின் காலத்தில் தேர்தல் முறைப்பாடு விடயத்தில் சாதனை புரிந்திருந்த கொழும்பு வடக்கில் இன்னுமொரு தேர்தல் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த முறைப்பாட்டை ஜோசப் டி சில்வாவுக்கு எதிராக அன்றைய கொழும்பு மேயர் ஆர்.சரவணமுத்து செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டுக்கான தீர்ப்பு 1941 டிசம்பர் 22ம் திகதி ஓ.எல்.டி.. ஹெக்டர் என்பவரால் வழங்கப்பட்டது. இத் தீர்ப்பின் படி ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதன் காரணமாக ஜோசப் டி சில்வாவின் அரசாங்க சபை பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டது. அதே நேரம் இவரது ஊழல் நடவடிக்கைகளுக்குத் துணை புரிந்தார் என்ற குற்றச்



படிப்பகம்

சாட்டின் பேரில் ஏ.ஈ.குணசிங்காவின் பிரதிநிதித்துவமும் இல்லாமல் செய்யப்பட்டது. ஒரு தேர்தல் முறைப்பாட்டில் இன்னொருவரது பிரதிநிதித்துவமும் பறிக்கப்பட்ட முதற் சந்தர்ப்பம் இதுவாகத்தான் இருக்கும். மைத்துனரை கொழும்பு வடக்கில் வெல்லச் செய்வதற்கு போய் இறுதியில் தனது அரசியலையும் தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியதாயிற்று.

**எட்லின்**

எட்லின் மீதெனிய அதிகாரி (மொலமூரே) 1890ஆம் அண்டு செப்டம்பர் முதலாம் திகதி ருவன்வெல்ல மீதெனிய பரம்பரையில் பிறந்தவர். திரு.ஜோன் ஹென்றி மீதெனிய அதிகாரி அவர்களும், திருமதி எமலி சேனநாயக்கவும் இவரது தகப்பன் தாயாவார். கொழும்பு பிஷப் கல்லூரியில் தனது கல்வியை முடித்துக் கொண்டு 1912இல் மொலமூரே எனப்படுபவரை விவாகம் புரிந்தார். இவ்விவாகம் அன்றைய தேசாதிபதியாகவிருந்த சேர் ஹென்றி எட்வர்ட் மெகலம் ஆகியோர் உட்பட பல உயர் மேட்டுக்குடி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்ட பெரும் ஆடம்பரத் திருமணமாக நடாத்தப்பட்டது.

எட்லின் மொலமூரே இரண்டாவது அரசாங்க சபை தேர்தலில் போட்டியிட்ட போதும் லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட கலாநிதி என்.எம்.பெரேராவுடன் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். அத்தேர்தலில் கலாநிதி என்.எம்.பெரேரா 15275 வாக்குகளையும், திருமதி.எட்லின் மொலமூரே 12,300 வாக்குகளையும் பெற்றிருந்தார். இதன்பின்பு இவர் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடவில்லை.

சோல்பரி யாப்பு திட்டத்தின் கீழ் 1947இல் உருவாக்கப்பட்ட செனற்சபைக்கு நியமிக்கப்பட்ட முதற்பெண் எட்லின் மொலமூரே ஆவார். 1961 வரை செனற்சபையில் அங்கம் வகித்த திருமதி. எட்லின் மொலமூரே 1955இல் மேற்சபையில் உப தலைவராகத் தேந்தெடுக்கப்பட்டார். வரலாற்றில் அப்பதவி வகித்த ஒரே பெண்ணும் இவரேயாவார்.

கிறிஸ்தவ பெண்கள் சங்கம, லங்கா மஹிலா சமித்தி, ஐக்கிய தேசியக் கட்சியில் பெண்கள் பிரிவு போன்ற அமைப்புகளில் இருந்து செயற்பட்டிருந்தார். 1977ஆம் ஆண்டு யூலை 27ஆம் திகதி தனது 87ஆவது வயதில் மரணமடைந்தார்.

## 1931 -1-14 இடைத்தேர்தல் முடிவுகள்

| | |
|---|---|
| திருமதி.எட்லின் மொலமூரே (வெள்ளை நிறம்) | 13866 |
| திரு.ஆர்.எஸ்.எஸ். குணவர்தன (சிகப்பு நிறம்) | 4468 |
| திரு.ஈ.ஏ.வீ.டி.சில்வா | 1050 |
| திரு.எலன் சேனநாயக்க (மஞ்சள்) | 718 |
| *வாக்களித்தோர்* | *21,094* |
| *நிராகரிக்கப்பட்ட வாக்குகள்* | *92* |
| *மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை* | *31,562* |
| *எட்லின் பெற்ற அதிகப்படியான வாக்குகள்* | *9,398* |

www.padippakam.com

# சுதந்திரம் வரை

1936 வரை பெண்கள் அரசாங்க சபைக்கு மட்டுமே பிரதிநிதித்துவம் வகிக்க முடிந்தது. உள்ளூராட்சி சபைகளில் அதுவரை காலம் பிரதிநிதித்துவமளிக்க சட்ட ரீதியிலான அனுமதி கிடைத்திருக்கவில்லை. 1936 பெப்ரவரி மாதம் நடந்த அரசாங்க சபைக் கூட்டத்திலேயே உள்ளூராட்சி சபைகளில் பெண்களை பிரதிநிதித்துவமளிப்பதற்கான சட்ட மூலம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இது ஐந்து மேலதிக வாக்குகளால் மட்டுமே நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

1936 மார்ச்சில் நடந்த தேர்தலில் மூன்று பெண்கள் போட்டியிட்டனர். ஹட்டன் தொகுதியில் போட்டியிட்ட திருமதி.சீ.எஸ்.ராஜரட்ணத்தை விட இரண்டாயிரம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று கோ.நடேசய்யர் வென்றார். ருவன்வெல்ல தொகுதியில் போட்டியிட்ட எட்லின் மொலமூரேயும் தோல்வியடைந்தார். இறுதியாக கொழும்பு வடக்கிலிருந்து நேசம் சரவணமுத்து ஒருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை வரலாற்றில் அரசவைக்கு தெரிவு செய்யப்பட்ட முதற் தமிழ்ப் பெண்மணி என்ற அந்தஸ்து மட்டுமல்லாமல், பொதுத் தேர்தலில் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதற் பெண்ணும் நேசம் சரவணமுத்து என்பது குறிப்பிடதக்கது. 1936 அரசாங்கத்தில் சுகாதார நிர்வாகக் குழுவில் (அன்றைய அமைச்சரவை முறை) அங்கமும் வகித்திருந்தார். இலங்கையின் அமைச்சரவையில் அங்கம் வகித்த முதற்பெண்மணியும் நேசம் சரவணமுத்துவே. இத்தொகுதியில் 50 வீத பெண்கள் இத் தேர்தலில் வாக்களித்திருந்த போதும், பெண்களின் வாக்குகள் நேசம் சரவணமுத்துவின் வெற்றிக்குக் காரணமாக அமைந்திருக்கும் எனக் கூற முடியாது. ஏனெனில் நேசம் சரவணமுத்துவின் வர்க்கப் பின்னணிக்கு இருந்த அந்தஸ்தும் அதனூடான செல்வாக்குமே பெருமளவு காரணமாக இருந்திருக்கும் எனலாம். அவருக்கு இலங்கை தேசிய காங்கிரசைச்



படிப்பகம்

சேர்ந்த மேட்டுக்குடியினரின் ஆதரவு இவருக்கு இருந்தது.

1936இல் நடத்தப்பட்ட அரசாங்கசபைத் தேர்தலில் பதவிக்கமர்த்தப்பட்ட அரசாங்கத்தில் பதவிக்காலம் 1941இல் நிறைவு பெற்றதுடன் 1941 ஜனவரியில் அடுத்த தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அரசியல் திட்ட சீர்திருத்தம் தொடர்பாக அன்றைய அமைச்சரவைக்கும் குடியேற்ற நாட்டு காரியதரிசிக்கும் இடையில் நடைபெற்ற பிரச்சினைகள் காரணமாகவும் 1939இல் தொடங்கிய இரண்டாம் உலக மகா யுத்தத்தின் தீவிரம் காரணமாகவும் அத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இது பற்றி 1940 யூன் 15இல் குடியேற்றநாட்டு செயலாளர் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

> "எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு முன் நடத்தப்பட வேண்டிய தேர்தல்: தற்போதைய அரசியலமைப்பு தொடர்பாக இன்று பலர் மத்தியில் தோன்றியுள்ள அதிருப்தியின் காரணமாகவும் பொருத்தமானதொரு தேர்தல் முறையைக் கொண்டு வருவது, தேர்தற் பிரிவுகளை உருவாக்குதல் என்பவற்றை கருத்திற் கொண்டு இரு வருடங்களுக்குத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டியுள்ளது."

இறுதியில் இத்தேர்தல் ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

1941செப்டெம்பர் முதலாம் திகதி இன்னுமொரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் இலங்கைக்கான மாற்று அரசியல் சீர்த்திருத்தம் தேவையென்பதை 'முடி' உணர்ந்திருப்பதாகவும் அதற்கான ஒரு ஆணைக்குழுவோ பேச்சுவார்த்தைக் குழுவோ நியமிக்க வேண்டிய தேவையையும் உணர்ந்திருப்பதாகவும் ஆனால் தற்போதைய யுத்தச் சூழ்நிலையில் அவை முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக இரு நாடுகளும் கொண்டிருந்த முரண்பாடுகளின் காரணமாக மேலும் இரு வருடங்களுக்கு தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது என்ற போதும் யுத்தத்தைக் காரணம் காட்டி அரசியல் சீர்த்திருத்தம் தள்ளிவைக்கப்பட்டது இலங்கையின் தேசியவாதிகள் என அழைக்கப்பட்டவர்களின் கடும் விமர்சனத்துக்குள்ளாகியது.

1943 மே மாதம் 26ம் திகதி இன்னுமொரு அறிக்கை விடுக்கப்பட்டது. அதில் யுத்தம் முடிந்த பின் இலங்கைக்கான அரசியல் சீர்திருத்தத்திற்கான வேலைகள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கைக்கான அரசியல் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழுவின் அறிக்கை 1945 ஒக்டோபர் மாதம்9ம் திகதி இலங்கையிலும் இங்கிலாந்திலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது.

இரண்டாவது அரசசபையின் ஆயுட் காலம் ஒன்பதாவது வருடத்தை அடைந்து கொண்டிருந்த அந்த நேரத்தில் சோல்பரி அரசியல் அமைப்பை தயக்கமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் என டி. .எஸ். சேனநாயக்க 1945நவம்பர் 8ம் திகதி அரசாங்க சபையில் கேட்டுக் கொண்டார்.

டி.எஸ். சேனநாயக்க இவ்வாறு தெரிவித்திருந்தார்.

> "அது (சோல்பரி அரசியல் திட்டம்) நிச்சயமாக பொறுப்பான உரிமைகளை வழங்கியிருக்கிறது. கேக் கொடுக்கப்படாததற்காக பாணை நிராகரிக்காதீர்கள்"

சோல்பரி அரசியல் திட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கான மசோதா, பிபிலே தொகுதி

www.padippakam.com

உறுப்பினர் தஹநாயக்காவினது ஒரேஒரு எதிர்ப்பின் மத்தியில் நிறைவேற்றப்பட்டது. 1947ல் நடைமுறைபடுத்தப்பட்ட அந்த அரசியற் திட்டம் 1972 மே 22ம் திகதி "இரண்டாவது குடியரசு அரசியல் அமைப்பு" வரும் வரை அமுலில் இருந்தது.

**1947 தேர்தல்**

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழான முதற் தேர்தலுக்கான வேட்பு மனு 1947 யூலை 26ல் தாக்கல் செய்யப்பட்டது. 89 உறுப்பினர்களுக்காக 362 பேர் போட்டியிட்டனர். இவர்களில் மூவர் மட்டுமே பெண்கள்.

கிரிஎல்ல தொகுதியிலிருந்து லங்கா சமசமாஜ கட்சியின் சார்பில் திருமதி புளோரன்ஸ் சேனநாயக்க, அம்பலாங்கொடை- பலப்பிட்டிய தொகுதியிலிருந்து கொம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஸ்ரீமதி அபய குணவர்த்தன, கொழும்பு மத்தியிலிருந்து சுயேட்சை வேட்பாளராக திருமதி ஆயேஷா ரவுப் ஆகியோர் இத்தேர்தலில் போட்டியிட்டனர். ஆயேஷா ரவுப் முதலாவது முஸ்லிம் வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பிரதிநிதிகள் சபைக்கு போட்டியிட்ட மூன்று பெண்களில் கிரிஎல்ல தொகுதியிலிருந்து புளோரன்ஸ் சேனநாயக்க மட்டுமே தெரிவு செய்யப்பட்டார்.

இத் தேர்தலில் தன்னுடன் போட்டியிட்ட ஐவரையும் தோல்வியடையச் செய்து 2241 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று திருமதி புளோரன்ஸ் சேனநாயக்க தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் மத்திய கொழும்பில் 15 பேருடன் போட்டியிட்டு திருமதி அயேஷா ரவுப் 8486 வாக்குகளைப் பெற்ற போதும், தோல்வி கண்டார். அத்தோடு அம்பலங்கொட பலப்பிட்டிய தொகுதியில் போட்டியிட்ட ஸ்ரீமதி அபய குணவர்த்தனவும் 3105 வாக்குகளை மட்டுமே பெற்றுத் தோல்வி கண்டார்.

இலங்கையில் சுதந்திரத்தின் போதான பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட முதற்பெண் எனும் பெருமை திருமதி டேசி மரியா புளோரன்சைச் சாரும். இவர் ஏகாதிபத்திய விரோத 'சூரிய மல்' இயக்கத்தில் செயற்பட்டு வந்ததன் மூலம் அரசியலுக்குள் பிரவேசித்தார். இவரது கணவரான ரெஜி சேனநாயக்க லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்தவர். அத்தோடு பெரும் வசதி படைத்தவராகவும் தோட்ட உரிமை யாளராகவும் இருந்த போதும் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெரும் சேவை புரிந்தவர் என்பதால் மக்கள் மத்தியில் ஆதரவு இருந்தது.

1903 ஜூன் 19ம்திகதி மொரட்டுவையில் பிறந்த புளோரன்ஸ் மொரட்டுவ வேல்ஸ் பெண்கள் கல்லூரியில் கற்று பின்னர் அதே பாடசாலையில் ஆசிரியராகவும் கடமையாற்றினார். திருமணத்தின் பின் கணவரோடு சேர்ந்து லங்கா சமசமாஜக் கட்சியில் பணியாற்றினார். லங்கா சமசமாஜக் கட்சி தலைவரான கலாநிதி என்.எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா, பிலிப் குணவர்தன மற்றும் எட்மன்ட் சமரக்கொடி ஆகியோர் பிரித்தானியராட்சியின் போது போகம்பர சிறைச்சாலையிலிருந்து தப்பியதன் பின் அவர்களுக்குப் புகலிடம் வழங்கியது ரெஜி சேனநாயக்க தம்பதிகளே. இவர்கள் தப்புவதற்கான திட்டங்களை அமைத்ததிலும் ரெஜி சேனநாயக்கவுக்கு பங்குண்டு.

ஆங்கிலேயராட்சியில் இந்தியாவில் தலைமறைவாக இருந்த ல.ச.ச.க. தலைவர்களுக்கு எதிராக பிடியாணை விடுக்கப்பட்டிருந்த போது பிலிப் குணவர்தனவின் மனைவி குசுமாவை பாடசாலை மாணவியாக வேடமிட்டு இந்தியாவுக்கு அழைத்துச் சென்றதும்



படிப்பகம்

புளோரன்ஸ் தம்பதிகளே. இவர்கள் ல.ச.ச.க.வுக்குள் அன்று பெரும்பங்காற்றியிருந்தனர்.

இலங்கைப் பாராளுமன்றத்தின் முதற் பெண் உறுப்பினரான புளோரன்ஸ் தொழிலாள வர்க்கத்துக்காகவும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வந்தவர் எனும் பெயர் இன்னுமுண்டு. 1952 ஆம் ஆண்டு தேர்தலின் போது இவர் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பாராளுமன்ற அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

அதற்கு வெளியில் சமூக வேலைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டார். இறுதியில் 1988 டிசம்பர் 3ம் திகதி தனது 85வது வயதில் மரணமடைந்தார்.

1952 ஏப்ரல் 8ம் திகதி முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அப்படி கலைக்கப்பட்ட நேரத்தில் பாராளுமன்றத்தில் மூன்று பெண்கள் அங்கம் வகித்திருந்தனர். அவர்களில் ஒருவர் புளோரன்ஸ் மற்றையவர் குசும் சிறிகுணவர்த்தன, மற்றையவர் தமராகுமாரி ஆகியோராவர்.


குசும்சிறி குணவர்தன

**குசும்சிறியின் வருகை**

சவுத் வெஸ்டரிங் பஸ் கம்பனி வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்திய குற்றச் சாட்டின் பேரில் 3 மாத சிறைத் தண்டனை அனுபவித்த பிலிப் குணவர்த்தன 1947 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 11,922 வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். இதற்கு எதிராக உயர் நீதி மன்றம், மேன்முறையீடு செய்த போதும் அது தோல்வியில் முடிந்தது.

1948 பெப்ரவரி 28ம் திகதி அவரது உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது.

அத் தொகுதியில் இடைத் தேர்தலுக்கான வேட்பு மனு 1948 ஏப்பிரல் 19ம் திகதி தாக்கல் செய்யப்பட்டது. பிலிப் குணவர்தனவின் மனைவி குசும் சிறிகுணவர்தன (குசுமா) இத் தேர்தலில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். இலங்கையின் சரித்திரத்தில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பெண்ணாக திருமதி குசும் சிறி குணவர்தன சாதனை படைக்கிறார். 1952 இல் அவிஸ்ஸாவெல்ல தொகுதியிலும் 1956ல் கிரிஎல்ல தொகுதியிலும் போட்டியிட்டு வெற்றி பெற்ற குசும் சிறி இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் 11 வருடகாலம் சேவையாற்றினார்.

கொழும்பு மியுசியஸ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் போதே சூரியமல் இயக்கத்திலும் சமசமாஜக் கட்சியிலும் மிகவும் தீவிரமாக உழைத்த குசுமா தன்னுடைய ஹொஸ்டல் நண்பியான விவியன் குணவர்த்தனாவின் தொடர்பினூடாகவே அரசியலுக்கு வந்தார். லங்காசமசமாஜக் கட்சி தொடக்கப்பட்டதோடு பல அரசியல் கூட்டங்கள், மாநாடுகள் என்பவற்றில் கலந்து கொண்ட குசுமா தன்னோடு ஒன்றாக அரசியல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிலிப் குணவர்தனவை 1939ல் திருமணம் முடித்தார். திருமணத்தின் பின், பிலிப் தம்பதிகளின் வாழ்க்கை அரசியல் காரணங்களினால் சிக்கலுக்குள்ளாகியது. பிலிப் குணவர்தன சிறையிலடைக்கப்பட்டதோடு அவரது மனைவி குசுமாவை ரகசியப் பொலிஸார் நாடு முழுவதும் தேடினர். ஆனால் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்த இவர்களை இந்திய ரகசிய பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்திருந்தனர். குசுமா சிறையிலிருக்கும் போது ஒரு நிறை மாதக் கர்ப்பிணி.. குசுமா இந்திய

www.padippakam.com

சிறைக்குள்ளேயே இருந்த போது ஆண் மகன் கிடைத்தது. (இந்த மகன் தான் இன்றைய சந்திரிகா அரசாங்கத்தில் மீன்பிடி அமைச்சராக இருக்கும் இந்திக குணவர்த்தன) 1948இல் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்ட குசும் சிறிகுணவர்தன, 1952ம் ஆண்டு நடந்த இரண்டாவது பாராளுமன்ற தேர்தலில் அவிஸ்ஸாவெல தொகுதியில் 929 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

1956ம் ஆண்டு தேர்தலில் பிலிப் குணவர்த்தன இருபத்திரண்டாயிரம் (22000) அதிகப்படியான வாக்குகளைப் பெற்று அவிஸ்ஸாவெல்ல தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட அதே நேரம் ஒன்பதாயிரம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று குசும் சிறி குணவர்தன கிரிஎல்ல தொகுதியிலிருந்து தெரிவானார்.

1960ஆம் ஆண்டு தேர்தலில் கிரிஎல்ல தொகுதியை வெற்றி கொள்ள அவரால் இயலவில்லை. அதற்குப் பின் 1965ம் ஆண்டு தேர்தலிலும், 1967ம் ஆண்டு இடைத் தேர்தலிலும், 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் கொலன்னாவ தொகுதியில் போட்டியிட்ட குசுமா தொடர்ந்தும் தோல்விக்குள்ளானார். அதன் பின் பாராளுமன்ற அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் தேசிய மொழிகளில் பேசுவதற்கான அனுமதி வழங்கப்பட்டதன் பின் தேசிய மொழியில் இரண்டாவது உரையாற்றிய பெருமை குசுமா குணவர்த்தனாவைச் சாரும். முதலாவதாக பேசியிருந்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆவார்.

**தமராவின் வருகை**

மூன்றாவதாக பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பெண் தமராகுமாரி இலங்கரத்தின.

கண்டி தொகுதி உறுப்பினரான திரு இலங்கரத்னவுக்கு எதிரான தேர்தல் முறைப்பாட்டை விசாரணை செய்த காலிங்க 1949 பெப்ரவரி 10ம் திகதி அளித்த தீர்ப்பின் மூலம் அவரின் உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது.

மீண்டும் ஒரு இடைத் தேர்தல் 1949யூன் 18ம் திகதி நடத்தப்பட்டது. இதில் இலங்கரத்னவின் மனைவி தமராகுமாரி இலங்கரத்ன சுயேட்சையாக இடதுசாரி வேட்பாளராகப் போட்டியிட்டார். அன்று ஆட்சியிலிருந்த ஐ.தே.க.வின் சார்பில் ஏ.சீ.எல்.ரத்வத்தையும் அரசாங்க சபையில் உறுப்பினராக இருந்த ஆர்.ஈ.ஜயதிலகவும், டி.பி.வடுகொடபிட்டியவும் போட்டியிட்டனர்.

தமராகுமாரிக்கு இடதுசாரிகளின் ஆதரவே பெரும்பாலும் கிடைத்திருந்தது. ஆனாலும் இத் தேர்தலில் 24 வயதை மட்டுமே அடைந்திருந்த தமராகுமாரி இலங்கரத்ன 2050 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று கண்டி தொகுதியில் வெற்றி பெற்றார். பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட வயதில் குறைந்த இளம் பெண்ணும் இவரே.

தமரா குமாரிக்கு எதிராகவும் தேர்தல் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதும் நீதிமன்றத்தால் அது நிராகரிக்கப்பட்டது.

1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமரா குமாரி கண்டி தொகுதியில் போட்டியிட்ட போதும் வெற்றி கிடைக்கவில்லை. 1965ஆம் ஆண்டு கலகெதர தொகுதியில் போட்டியிட்ட போது 574 வாக்குகளால் தோல்வியடைந்தார். 1970ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பாராளுமன்றத்துக்குச் சென்றார்.



படிப்பகம்

## 1936 பெப்ரவரி 22 பொதுத்தேர்தல் முடிவுகள் (கொழும்பு வடக்கு)

| | |
|---|---|
| நேசம் சரவணமுத்து | 9752 |
| எம்.ஜே.டி.சில்வா 4809 | |
| டொக்டர் எஸ்.சீ.போல் | 2828 |
| எஸ்.எப்.ஆர்.ரொற்றிகோ | 2224 |
| *பெற்ற மேலதிக வாக்குகள்* | *4943* |
| *அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்* | *19343* |

## 1947 ஜூலை பொதுத் தேர்தல் முடிவுகள் (கிரிஎல்ல தொகுதி)

| | |
|---|---|
| புளோரன்ஸ சேனநாயக்க | 5535 |
| டி.கே.டபிள்யூ.சந்திர சேகர | 3794 |
| ஏ.ஈ.பி.கிரிஎல்ல 2439 | |
| எச்.ஏ.ஜீ.கலடுவாவ 2428 | |
| பீ.எஸ்.ராமச்சந்திர 1120 | |
| ஏ.எம்.எஸ்.எல்.பதனி முகாந்திரம் | 366 |

## 1949.06.18.கண்டி இடைத் தேர்தல் முடிவுகள்

| | |
|---|---|
| திருமதி தமராகுமாரி இலங்கரத்ன | 10062 |
| ஏ.சீ.எல்.ரத்வத்தை 8012 | |
| ஆர்.ஈ.ஜயதிலக்க 1137 | |
| டீ.பி.வடுகொடபிட்டிய | 270 |

www.padippakam.com

# இரண்டாவது பாராளுமன்றம்

இலங்கையின் இரண்டாவது பொதுத் தேர்தல் 1952ம் ஆண்டு நடந்தது. சில பின்னணிச் சம்பவங்கள் இத் தேர்தலுக்கான காரணங்களாக அமைந்தது. குறிப்பாக இருபது வருடங்களுக்கு இலங்கை அரசியலில் முக்கியஸ்தராக இருந்தவரும் இலங்கையின் முதற் பிரதமமந்திரியுமான டி.எஸ். சேனநாயக்க 1952ம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி காலிமுகத் திடலில் குதிரைச் சவாரி செய்து கொண்டிருந்த போது கீழே விழுந்து இறந்து போனார். அப்போது கைத்தொழில் அமைச்சராக இருந்த அவரது மகன் டட்லி சேனநாயக்க மார்ச் 26 அன்று பிரதமராக நியமிக்கப்பட்டார். அவர் நியமிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் அதாவது ஏப்பிரல் 8ம் திகதி முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அடுத்த தேர்தலும் நிர்ணயிக்கப்பட்டது. ஏப்பிரல் 28ம் திகதி வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட போது 12 பெண்கள் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் மே மாதம் 24,25,26, மற்றும் 30ம் திகதி ஆகிய நான்கு நாட்கள் நடத்தப்பட்டது. இத் தேர்தலின் போது எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் போட்டியிட்டிருந்தது. "ஐக்கிய தேசிய கட்சி சிங்கள மகாசபையுடன் ஏற்கனவே உடன்பட்டிருந்த விடயங்களை கருத்திற் கொள்ளத் தவறி விட்டது" என்ற குற்றச் சாட்டை முன் வைத்து 1951ஜூலை 12ம் திகதி பண்டாரநாயக்கா ஐ.தே.க. வை விட்டு விலகினார் என்ற போதும் அரசியல் விமர்சகர்கள் விலகலுக்கான உண்மையான காரணமாக மேற்படி காரணத்தைக் கொள்ளவில்லை. மாறாக அதை ஒரு சாட்டாகவே கருதுகின்றனர். ஐ.தே.க.வின் தலைமைப் பதவி டி.எஸ். சேனநாயக்காவுக்குப் பின்னர் தனக்கே கிடைக்கும் என பண்டாரநாயக்க எதிர்பார்த்திருந்தார் என்றும். ஆனால் டி.எஸ்.சேனநாயக்காவின் மகன் டட்லிக்கு அப் பதவி கிடைக்கும் சாத்தியம் உருவானதன் பின்னர் தான் ஐ.தே.க.வை விட்டு விலகினார் என்றும் கருதப்படுகிறது. இத் தேர்தலில் 12 பெண்கள் போட்டியிட்டிருந்த போதும் (முதலாவது பொதுத் தேர்தலில் மூவர் மட்டுமே போட்டியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது) இருவர் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தேர்தலின் போது சில சிறப்பம்சங்களைச் சுட்டிக் காட்டலாம்.

அவிஸ்ஸாவெல்ல தொகுதி தேர்தலில் இரு பெண்களுக்கிடையிலேயே போட்டி நிலவியது. அவர்களில் ஒருவர் விப்லவகாரி சமசமாஜக் கட்சியின்



படிப்பகம்

சார்பில் போட்டியிட்ட குசும்சிறி குணவர்தன. மற்றையவர் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்ட திருமதி கிளோடா ஜயசூர்ய. இறுதியில் 929 மேலதிக வாக்குகளால் குசும்சிறி குணவர்தன வென்றார். திருமதி கிளோடா ஜயசூர்ய முன்னால் அவிஸ்ஸாவெல தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பேர்னாட் ஜயசூர்யவின் மனைவியாவார்.

களனி தொகுதியில் போட்டியிட்ட நால்வரில் இருவர் பெண்கள். இத்தொகுதியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் திருமதி விமலா விஜயவர்த்தனாவுக்குமே பலத்த போட்டி நிலவியது. விமலா விஜயவர்த்தன ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மாமியார். இத்தொகுதியில் விவியன் குணவர்தன லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட போதும் குறைந்த வாக்குகளையே பெற்றார். இறுதியில் ஜே.ஆர். வெற்றி பெற்றார்.

தெஹியோவிட்ட தொகுதியில் போட்டியிட்ட தொழிற்கட்சி வேட்பாளர் திருமதி. எ.பி. ஜயதிலக்க லங்கா சமசமாஜக் கட்சியின் வேட்பாளரான தனது சகோதரன் எட்மன் சமரக்கொடியுடன் போட்டியிட்டார். தொழிற்கட்சியைச் சேர்ந்த ஆர்.ஈ.ஜயத்திலக்கவை மணந்த ஏ.பி.ஜயத்திலக்க இத்தேர்தலில் தனது சகோதரனோடு போட்டியிட்டு தோல்வியுற்றார். எட்மட் சமரக்கொடி வென்றார்.

ஹொரணை தொகுதியில் குடியரசு கட்சியின் சார்பில் போட்டியிட்ட எஸ்மி பெரேரா (மத்துகம) பாராளுமன்ற உறுப்பினர் வில்மட் ஏ. பெரேராவின் மனைவி தோல்வியடைந்தார்.

தம்பதெனியா தொகுதியில் போட்டியிட்ட திருமதி டோனா கெரோலின் ரூபசிங்க குணவர்தன: லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர்களில் ஒருவரான பிலிப் குணவர்தனவின் சகோதரர். கண்டி தொகுதியில் போட்டியிட்ட தமரா குமாரி இலங்கரத்ன 7644 வாக்குகள் பெற்ற போதும் 3705 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

கலஹா தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட சீதா குமாரி வல்கம்பாய 596 வாக்குகளை மட்டும் பெற்று தோல்வியடைந்தார்.

மாவனல்ல தொகுதியில் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் என்.எச்.சீலவத்தி 739 வாக்குகளை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தார்.

முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்த திருமதி புளோரன்ஸ் சேனநாயக்க கிரிஎல்ல தொகுதியில் தோல்வியடைந்தார்.

இத் தேர்தலில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களை கட்சி ரீதியாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-2, லங்கா சமசமாஜகட்சி-2. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி-1, விப்லவகாரி சமசமாஜகட்சி-2, குடியரசுக் கட்சி-1.தொழிற்கட்சி-1, ஐக்கிய தேசிய கட்சி-1, சுயேட்சை வேட்பாளர்கள்-2.

எவ்வாறாயினும் இத்தேர்தலில் இரு பெண்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவரான குசும்சிறி குணவர்தன (பிலிப் குணவர்தனவின் மனைவி. முன்னைய பாராளுமன்றத்திலும் அங்கத்துவம் வகித்தவர்.

தெரிவு செய்யப்பட்ட அடுத்த பெண் பிரதிநிதி டொரின் விக்ரமசிங்க. இவர் ஒரு விதேசப் பெண்யாவார். அக்குரஸ்ஸ தொகுதியில் போட்டியிட்ட இவர் அவருடன் போட்டியிட் சீ.விஜயசிங்கவை விட 1001 கூடுதல் வாக்குகளைப் பெற்று வென்றார். இத்தேர்தலில் பெண்கள் பலர் போட்டியிடுவதற்கு காரணமாக அமைந்த காரணியாக அவர்களது குடும்ப அரசியல் பின்னணியானது கூடிய தாக்கத்தை செலுத்தியிருந்ததைக் காணலாம்.

# 1952ஆம் ஆண்டு தேர்தலில் பெண்கள்

| | | |
|---|---|---|
| **அகுரெஸ்ஸ** | | |
| 1.திருமதி டொரின் விக்ரமசிங்க | (LSSP) | 16626 |
| 2.சரத் விஜேயசிங்க | (UNP) | 15625 |
| **அவிஸ்ஸாவெல்ல** | | |
| 1.திருமதி குசும்சிறி குணவர்தன | (VLSSP) | 19414 |
| 2.திருமதி கிளோடா ஜயசூரிய | (UNP) | 18485 |
| **களனி** | | |
| 1.திருமதி விவியன் குணவர்தன | (LSSP) | 4857 |
| 2.திருமதி விமலா விஜயவர்தன | (SLFP) | 15868 |
| 3.ஜே.ஆர்.ஜெயவர்தன | (UNP) | 22103 |
| 4.டி.ஆர்.ஜெயவர்தன | (I) | 673 |
| **ஹொரணை** | | |
| 1.திருமதி எஸ்மி பெரேரா | (R.P) | 5145 |
| 2.எம்.டி.எச்.ஜெயவர்தன | (UNP) | 27746 |
| 3.வில்பிரட் சேனநாயக்க | (SLFSP) | 7367 |
| 4.ஆரியதாச ஜயவர்தன | (LSSP) | 8248 |
| **கண்டி** | | |
| 1.திருமதி தமராகுமாரி இலங்கரத்ன | (SLFP) | 7644 |
| 2.ஈ.எல்.சேனநாயக்க | (UNP) | 11349 |
| 3.திலகரத்னம் சோமசுந்தரம் | (I) | 277 |
| **கலஹா** | | |
| 1.சீதா குமாரி வல்கம்பாய | (I) | 596 |
| 2.ஸ்டேன்லி எட்வட் சிறிமான்னே | (SLFP) | 4725 |
| 3.பீ.தென்னகோன் | (I) | 6356 |
| 4.டீ.பீ.பானாபொக்க | (UNP) | 10962 |
| **தம்பதெனிய** | | |
| 1.டோனா கெரோலின் ரூபசிங்க | (LSSP) | 2874 |
| 2.ஆர்.எம்.பீ.வை.சிறிவிமலரத்ன | (LSSP) | 4440 |
| 3.ஆர்.ஜீ.சேனநாயக்க | (UNP) | 20003 |
| **மாவனெல்லை** | | |
| 1.திருமதி என்.எச்.சீலவத்தி | (I) | 739 |
| 2.எச்.எல்.ரத்வத்த | (UNP) | 10847 |
| 3.சீ.ஆர்.பெலிகம்மான | (MEP) | 14225 |
| **தெஹியோவிட்ட** | | |
| 1.திருமதி எப்.பி.ஜயதிலக்க | (LP) | 982 |
| 2.எட்மன்ட் சமரகொடி | (LSSP) | 8848 |
| 3.சோமவீர குணசேகர | (UNP) | 8766 |
| **கிரீஎல்ல** | | |
| 1.புளோரன்ஸ் சேனநாயக்க | (LSSP) | 3192 |
| 2.ஜெயவீர குருப்பு | (SLFP) | 7369 |
| 3.ஏ.ஈ.டி.சிரிஎல்ல | (UNP) | 9978 |

www.padippakam.com

# டொரின் விக்கிரமசிங்க



1907ஆம் ஆண்டு பெப்ரவரி 13ஆம் திகதி இங்கிலாந்தில் செஷர் பகுதியில் பிறந்த டொரின் விக்கிரமசிங்க ஆசியாவிலேயே பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது அந்நிய நாட்டுப் பெண் என்பது முக்கியமான ஒன்று. இவர் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த டொக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கவின் மனைவியாவார்.

டொரின் இங்கிலாந்தில் பல முற்போக்காளர்களை உருவாக்கிய கல்லூரி எனச் சொல்லப்படும், ஹர்பட்ஷயரில் உள்ள சென் கிரிஸ்டோபர் கல்லூரியில் கல்வி பயின்றார். அப்போது அக்கல்லூரியில் கிருஷ்ணமேனன் (பிற்காலத்தில் இந்தியாவில் வெளியுறவு அமைச்சராக இருந்தவர்.) லண்டனில் கல்வி கற்றுக் கொண்டே வரலாறு கற்பிக்கும் விரிவுரையாளராக இருந்தார். அவரது விரிவுரையினூடாக இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றிய சிநிதனைகள் மாணவர்கள் மத்தியில் புரவின. இவரிடம் கற்ற டொரின் கிருஸ்ணமேனனின் ஆலோசனையின்படி 1926இல் பல்கலைக்கழகத்தில் பொருளாதார அரசியல் துறைகளைக் கற்கத் தொடங்கினார்.

பல்கலைக்கழகத்தில் முக்கிய பிரமுகராக இருந்தவரும் மார்க்சீய கருத்துக்களைக் கொண்டவருமான ஹெறால்ட் லஸ்கியின் கருத்துக்களால், ஈர்க்கப்பட்டார். டொரினோடு கல்வி கற்ற சமகாலத்தவர்களில் கலாநிதி என்.எம்.பெரேரா ஜெகநாத் கொஸ்லா (பிற்காலத்தில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றியவர்) ஆகியோரும் உள்ளடங்குவர். இந்திய சுதந்திரப் போராட்ட ஆதரவாளராகவும் இந்திய இலங்கையர்களால், முன்னெடுக்கப்பட்ட ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளுக்கும் அதரவாக டொரின் செயல்பட்டார். இந்தப் பழக்கங்களின் வாயிலாக எஸ்.ஏ.விக்கிரமசிங்காவுடன் தொடர்பு கொள்ளக் கிடைத்திருந்தது. டொரின் தனது படிப்புக்குப்பின் இந்தியாவுக்குப் போய் இந்திய சுதந்திரப் போராட்டத்தில்,



படிப்பகம்

www.padippakam.com

கலந்து கொள்ளும் நோக்குடன் இந்தியாவுக்குச் சென்று தொழில் புரியும் முயற்சிகளைச் செய்து வந்தார் என்ற போதும், அம்முயற்சிகள் தோல்வியடைந்தன. டொரினுக்கு இலங்கையில் வேலையொன்றை தேடித்தருவதாக எஸ்.ஏ.விக்கரமசிங்க ஒப்புக் கொண்டதன்பின் டொரின் இலங்கை வரத் தீர்மானித்தார். 1930இல் இங்கிலாந்திலிருந்து கப்பலில் புறப்பட்டார் டொரின். அந்தக் கப்பலில் பயணம் செய்த தோட்ட உரிமையாளர்களை காரசாரமாகக் கண்டித்து விமர்சித்த டொரின் பலரது கவனத்துக்குமுள்ளானார். 1930நவம்பர் மாதம் கொழும்பை வந்தடைந்தார். அவர் மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டார்.

அந்தப் பாடசாலையில் தனது அரசியல் வேலைகளையும் செய்யத் தொடங்கினார். அப்பாடசாலையில் கடமையாற்றிய ஏனைய ஆசிரியர்களும் தேசிய அரசியல் சுதந்திரப் போராட்டம் என்பனவற்றில் ஈடுபாடு கொள்வதற்கு டொரின் காரணமானார். இந்த ஆசிரியர்கள் பிற்காலங்களில் "சூரியமல்" இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபாடு கொண்டனர். பாடசாலை மாணவர்களுக்கும் கூட தேசிய உணர்வு ஊட்டப்பட்டது.

1933 ஏப்ரல் 26ஆம் திகதி டொரின் எஸ்.ஏ.விக்கிரமசிங்காவை மணந்தார்.

எஸ்.ஏ.விக்கிரமசிங்க 1931இல் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அந்நிய அரசாங்கத்துக்கு எதிராகவும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம் செய்து குரல் கொடுத்து வந்த எஸ்.ஏ.விக்கிரமசிங்காவை மணந்ததன் பின் கொழும்பில் மிகப் பெரிய பௌத்த மகளிர் பாடசாலையான விசாகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டார். இப்பாடசாலையில் முற்போக்கான சீர்திருத்தங்களில் அக்கறையோடு ஈடுபட்டார். 1932இல் காந்தி சிறையில் இருந்த போது எஸ்.ஏ.விக்கிரமசிங்காவும் டொரினும் சென்று சந்தித்து வந்தனர்.

இலங்கையின் முதலாவது அரசியற் கட்சியும் இடது சாரிக் கட்சியுமான லங்கா சமசமாஜக் கட்சி தோற்றம் பெறுவதற்கு துணைபுரிந்த காரணிகளில் ஒன்றாக "சூரிய மல்" இயக்கத்தைச் சொல்லலாம். சூரிய மல் இயக்கத்தை தோற்றுவித்தவர்களில் டொரினும் ஒருவர். அவ்வியக்கத்தில் தீவிரமாக இயங்கினர்.

> "நவம்பர் 11ஆம் திகதியன்று சூரியமல்" (சூரிய காந்திப்பூ) தாங்கிக் கொண்டு... உங்கள் ஆத்ம கௌரவத்தைதையும் இறைமையையும் வெளிக்காட்டுங்கள்... ஏகாதிபத்திய யுத்தத்துக்கு ஒத்துழைப்புக்கு நீங்கள் தயாரில்லை என்பதை வெளிக்காட்டுங்கள்.... ஒவ்வொரு சூரியமல்லுக்கும் ஏகாதிபத்திய, பாசிசவாதத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான தாக்குதலாகும்...."

என சூரிய மல் இயக்கம் பற்றி பிரச்சாரம் செய்யப்பட்டது.

எஸ்.ஏ.விக்கிரமசிங்க லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து முரண்பட்டு விலகி பின்னர் கொம்யுனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்தார். 1947ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்ட கொம்யூனிஸ்ட் கட்சிக்கு மொத்த ஆசனங்களில் மூன்று ஆசனங்களே கிடைத்திருந்தது. 1952ஆம் ஆண்டு தேர்தலிலும் கொம்யூனிஸ்ட் கட்சி 3 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. இத் தேர்தலில் தான் அக்குரெஸ்ஸ தொகுதியில் டொரின் விக்கிரமசிங்க போட்டியிட்டார். எஸ்.ஏ.விக்கிரமசிங்காவின் சகோதரியின் கணவரான சரத் விஜயசிங்கவும் அதே தொகுதியில் ஐ.தே.க.வை பிரதிநிதித்துவப்படுத்தி டொரினோடு போட்டியிட்டார்.

பலத்த போட்டியின் மத்தியில் இடம்பெற்ற இத்தேர்தலில் "வெள்ளைக்காரப் பெண்", "அந்நியநாட்டவள்" போன்ற கோஷங்களை எழுப்பி டொரினுக்கு எதிராக எதிர் வேட்பாளர்கள் செயற்பட்டனர். எவ்வாறாயினும் டொரின் சமூகத்தில் பலரால் ஏற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளப்பட்டவராக இருந்தமையால் வெற்றி பெற்றார். முதற்தடவையாக ஆசிய நாடொன்றில் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட விதேச பெண்ணாக வரலாற்றில் பதியப்பட்டார் டொரின்.

பாராளுமன்றத்தில் பல முற்போக்கான கருத்துக்களை முன்வைத்து பல உரைகளை ஆற்றியிருக்கிறார் டொரின்.

"பெண்களுக்கு ஆண்களுக்கு வழங்கப்படும் சம்பளம் போன்று சமமான சம்பளம் வழங்கப்பட வேண்டும்." என அன்றைய அரசவையில் குரல் கொடுத்திருந்தவர் டொரின்.

1952இலிருந்து 1956வரை டொரின் அரசவையில் அங்கம் வகித்தார்.

1956ஆம் ஆண்டு தேர்தலில் அவர் போட்டியிடவில்லை என்ற போதும் தனது பிரதேசத்தில் தொடர்ந்தும் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் பங்குகொண்ட பெண்களில் டொரினின் பங்களிப்பு முக்கியமானது என்ற கருத்து இன்னும் பலரிடம் உண்டு.

(டொரின் விக்கரமசிங்க பற்றிய தகவல்களில் பெரும்பாலானவை குமாரி ஜெயவர்தன எழுதிய Doreen wickramasinghe A Western Radical in Sri Lanka எனும் நூலிலிருந்து பெறப்பட்டவை)



படிப்பகம்

www.padippakam.com

# அமைச்சரவையில் முதற் பெண்

**11956 தேர்தல்**

இலங்கையின் அரசியற் சரித்திரத்திலேயே 1956 ஆம் ஆண்டு தேர்தல் "பெண்கள் அரசியற்துறையில்" முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக விளங்குகிறது. இத்தேர்தலின் பின் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் பெண் ஒருவர் அமைச்சர் பதவி வகிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 1956 தேர்தலுக்கு அடிகோலிய அரசியற் பின்னணிச் சம்பவங்களை இங்கு நோக்குவது அவசியமாகிறது.

1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி, பாராளுமன்ற ஆசனங்கள் 94 இல் 54ஐக் கைப்பற்றியிருந்தது. டட்லி சேனநாயக்கா பிரதமராகப் பதவியேற்றார். அவரது அரசாங்கத்தின் ஆயுட்காலம் 1957 வரைக்கும் இருந்த போதிலும், 1956இலேயே தேர்தலை வைக்க வேண்டி ஏற்பட்டதற்கான காரணங்கள் பல. 1953 'ஹர்த்தால் போராட்டம்' அக்காரணங்களில் முக்கியமானது. அதேபோல் நாடு முழுவதும் சிங்களம் மட்டும் அரசமொழி" எனும் கோஷம் முக்கிய இடம் பெறுகிறது.

அரிசி விலையை 25 சதத்திலிருந்து 70சதத்திற்கு உயர்த்தியமை, தபால் மற்றும் ரயில் போக்குவரத்து கட்டண உயர்வு, பாடசாலை மாணவர்களின் மதிய உணவு நிறுத்தம் என்பனவற்றை டட்லி அரசாங்கம் தமது வரவு செலவுத் திட்டத்தினூடாக மக்களுக்கு சுமையாக்கியது. இதைத் தொடர்ந்து லங்கா சமசமாஜக்கட்சி தலைமையில் இடதுசாரிக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஓகஸ்ட் 12 இல் நடாத்திய ஹர்த்தால் போராட்டத்தின் போது 12 பேர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி இறந்து போயினர். இந்த மாபெரும் ஹர்த்தாலின் போது மிரண்டு போன டட்லி அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த HMS-New Foundland எனும் யுத்தக் கப்பலை தமது தற்காலிக வதிவிடமாகக் கொண்டது. இக்கப்பலில் இருந்தபடியே அமைச்சரவைக் கூட்டத்தையும் கூட்டி, ஓகஸ்ட் 8ம் திகதி ஊரடங்குச் சட்டம் பிறப்பிப்பதற்கான தீர்மானத்தையும் எடுத்தது. இதைத் தொடர்ந்து சில நாட்களிலேயே டட்லி பதவியை விட்டு விலகினார்.

டட்லி பதவி விலகிய ஒக்டோபர் 12ம் திகதி சேர் ஜோன் கொத்தலாவல இடைக்காலப் பிரதமராகப் பதவியேற்றார். ஹர்த்தால் நாட்களில் பெண்கள் வீதி எங்கும் அடுப்பை வைத்து அதில் ரொட்டி - அப்பம் என்பவற்றை சுட்டு சாப்பிட்டு அரசாங்கத்திற்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர்.



படிப்பகம்

சிங்களம் மட்டும் அரசமொழி எனும் கோஷம் 1955ம் ஆண்டு காலப்பகுதியில் பெரும் கோஷமாக வெளிக்கிளம்பியது. ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டுமே அந்தக் கோஷத்திற்க்கு யார் தலைமை கொடுப்பது எனும் போட்டியில் ஈடுபட்டனர். மொழியை பிரச்சினையாக்கி வாக்குகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களை தங்களை நோக்கி திசை திருப்ப மொழிப் பிரச்சினையை ஆயுதமாக்கினர்.

அதுவரை காலமும் சிங்களத்தையும் தமிழையும் அரச மொழியாக அங்கீகரித்திருந்த கட்சிகள் (லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தவிர்ந்த) "சிங்களம் மட்டும்" யோசனையை அங்கீகரித்தனர். நாடு முழுவதும் எழுந்த அந்தக் கோஷத்தைத் தொடர்ந்து: தமிழ்க் கட்சிகள், அரசியலமைப்பில் சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் வகையில் திருத்தம் மேற்கொள்ளுமாறு வேண்டினர். அரசு அதை உதாசீனம் செய்ததைத் தொடர்ந்து, அதுவரை அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்து வந்த தமிழ் உறுப்பினர்கள் அரசாங்கத்திலிருந்து விலகினர்.

ஐக்கிய தேசியக் கட்சி 1956 பெப்ரவரி 18ம் திகதி நடாத்திய 'களனி மாநாட்டில்' 'சிங்களம் மட்டும்' அரச மொழியாக்கப்பட வேண்டும் எனும் யோசனையை கட்சி ரீதியில் தீர்மானித்தது. அதே தினம் ஆளுநருக்குப் பிரதமர் வழங்கிய ஆலோசனைப்படி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு அடுத்த தேர்தலுக்கும் அத்திவாரமிடப்பட்டது. வேட்புமனுத்தாக்கல் மார்ச் 8ம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் பெண்கள் 5 பேர் வேட்பு மனுத்தாக்கல் செய்தனர். மேற்படி பெண் போட்டியாளர்களில் தெடிகம தொகுதியில் போட்டியிட்ட விமலா கன்னங்கர புதியவர். இவர் டட்லி சேனாநாயக்க அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டதைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தெடிகம தொகுதியில் போட்டியிட்டார். இவர் ஓதர கம்தொழாபத்து கிராம நிர்வாக சபையின் தலைவியாக இயங்கிக் கொண்டிருந்தவர்.

பதவியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியைப் பொது எதிரியாகக் கொண்டு அதனை தோல்வியுறச் செய்யும் நோக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜகட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டன. பின்னர் எஸ்.டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் விஸ்வலங்கா சமசமாஜக்கட்சி, சிங்கள பாஷா பெரமுன மற்றும் இன்னும் சில சுயேட்சை உறுப்பினர்களையும் கொண்டு 1956 பெப்ரவரி 22ம் திகதி "மக்கள் ஐக்கிய முன்னணி" எனும் அமைப்பை ஏற்படுத்தினர்.

இத்தேர்தலில் போட்டியிட்ட 5 பெண்களில் 3 பெண்கள் வெற்றி பெற்றனர். தெடிகம தொகுதியில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட விமலா கன்னங்கர 16,456 வாக்குகளால் தோல்வியடைந்தார். அவிஸ்ஸாவெல்ல தொகுதியில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட க்ளோடா ஜயசூர்ய 22,252 வாக்குகளால் தோல்வ்யடைந்தார். இத்தொகுதியில் பிலிப் குணவர்தன வென்றார். லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட விவியன் குணவர்தன அத் தொகுதியில் 7352 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். கிரிஎல்ல தொகுதியில் போட்டியிட்ட குசுமா குணவர்தன 9963 வாக்குகளால் வெற்றி பெற்றார். மீரிகம தொகுதியில் போட்டியிட்ட விமலாவும் வெற்றி பெற்றார்.

**விமலா விஜயவர்தன**

1956 ஏப்ரல் 12ம் திகதி பதவியேற்ற மக்கள் ஐக்கிய முன்னணியின் அமைச்சரவை சுகாதார அமைச்சராக விமலா கன்னங்கர பதவியேற்றார். இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் முதன் முறையாக அமைச்சர் பதவி வகித்த பெண் என்ற பெருமை இவரைச் சாரும். இலங்கை உயர் சேவைகளில் பெண்களும் நியமிக்கப்பட வேண்டும் என்று

கோஷம் எழுப்பி, பின் 1948ஜனவரி மாதம் அளவில் 'ஐக்கிய பெண்கள் முன்னணி' என்ற அமைப்பையும் தோற்றுவித்த விமலா விஜயவர்தன 'கட்டான'வில் பெரும் உயர் மத்திய தரவர்க்க வியாபாரியான கரோலிஸ் சில்வா என்பவரின் மகள். கொழும்பு விசாகா மகளிர் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவர் தன்னளவு பணம் படைத்த பணக்காரரான டீ.சி.விஜயவர்தனவைத் திருமணம் புரிந்தார். இடதுசாரி இயக்கங்களோடு இணைந்து அரசியல் வேலைகளில் அதுவரை ஈடுபட்டுவந்த இவர் 1952இல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து களனி தொகுதியில் ஜே.ஆர்.ஜெயவர்தனாவுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். அத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் முக்கிய பங்காற்றியிருந்தார்.

மீரிகம தொகுதியில் போட்டியிட்ட விமலா விஜயவர்த்தன 25,297 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். அதுவரை பெண்கள் பெற்ற மேலதிக வாக்குகளில் இதுவே கூடிய பெறுமானமாகக் கருதப்படுகிறது.

பண்டாரநாயக்கவின் அமைச்சரவையில் 'சர்ச்சைக்குரியவர்' என அழைக்கப்பட்ட விமலா புகழ் பெற்ற பண்டா-செல்வா ஒப்பந்தத்தையும் பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் இருந்து கொண்டே எதிர்த்தார். 1956இல் மொழிச்சட்ட விவாதத்தின் போது அகுரெஸ்ஸ தொகுதி உறுப்பினர் பதவியில் இருந்து விலகி, முடிந்தால் தன்னோடு போட்டிக்கு வரும்படி டொக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கவுக்கு சவால் விட்டார்.

மக்கள் ஐக்கிய முன்னணி உடைந்து பிலிப் குணவர்த்தனவின் தலைமையிலான குழு அரசாங்கத்திலிருந்து வெளியேறியபின் அமைக்கப்பட்ட பண்டாரநாயக்காவின் இரண்டாவது அமைச்சரவையில் உள்நாட்டு அலுவல்கள், வீடமைப்புத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

விமலா விஜயவர்தன பண்டாரநாயக்க கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தார். விமலா பண்டாரநாயக்க கொலை வழக்கில் ஆறாவது சந்தேக நபர் ஆவர்.

1959 செப்டெம்பர் 25ம் திகதி பண்டாரநாயக்க கொழும்பு றோஸ்மீட் பிளேஸில் உள்ள தனது இல்லத்தில் சுடப்பட்டு அடுத்த நாள் மரணமடைந்தார். பண்டாரநாயக்க கொலை வழக்கில் சந்தேக நபர்களாகப் பலர் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். பண்டாரநாயக்கவைச் சுட்டவர் தல்துவே சோமராம ஹிமி எனும் பிக்கு. இவர் நான்காவது சந்தேக நபராகக் கொள்ளப்பட்டார். இரண்டாவது சந்தேக நபரான ஹேமச்சந்திர பியசேன ஜயவர்த்தன, விமலா விஜயவர்தனவுக்கு நெருங்கியர். ஹேமச்சந்திர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர். 1952இல் விமலா விஜயவர்தன களனியில் போட்டியிட்ட போது அவருக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தவர். முதலாவது சந்தேக நபரான களனி ரஜமகா விகாராதிபதி மாப்பிட்டிகம புத்தரக்கித தேரோவும் இச் சம்பவத்துடன் நெருங்கிய தொடர்புடையவர் எனக் குற்றம் சாட்டப்பட்டவர். இவர் ஐக்கிய பிக்குகள் முன்னணியின் உறுப்பினர். இவருக்கும் விமலாவுக்கும் தொடர்பு இருந்தது கண்டு பிடிக்கப்பட்டதுடன் இவர்கள் ஒன்று கூடி உரையாடிய பல விபரங்களும் வெளியாகியிருந்தன.

(ஆதாரம்:"பிரதமர் பண்டாரநாயக்கா கொலை விசாரணையில் வெளியாகும் அரசியல் ரகசியம்" -திவயின -25.09.1994)

பண்டாரநாயக்க கொலையை விசாரணை செய்த பின் விமலாவை விடுவித்த நீதிவான் பின்வருமாறு கருத்து வெளியிட்டார். "...ஆறாவது சந்தேக நபர் இந்த நாட்டின் தேசியப் பத்திரிகைகளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டவர். பிரதமர் கொலையின் பின் ஏற்பட்ட

www.padippakam.com

மோசமான நிலைமையைச் சரியான வழிக்குக் கொண்டு செல்ல முடிந்தது இப் பத்திரிகைகளினாலேயே. அதே போல் தனக்கு எதிராக இருந்த அரசியல் அழுத்தங்களை வெளிக் கொணர்வதற்கும் பத்திரிகைகளே அவருக்கு காரணமாக இருந்தன."

குசுமா ராஜரட்ன

1956 தேர்தலில் வெலிமட தொகுதியில் மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கே.எம்.பி.ராஜரட்ன போட்டியின் போது கட்டுக்காசைக் குறிப்பிட்ட தினத்தில் கட்டாத குற்றம் பற்றிய வழக்கு விசாரணையில் நீதிபதி எச்.டபிள்யூ.ஆர். வீரசூரிய வழங்கிய தீர்ப்பில் ராஜரட்னவின் தேர்வை ரத்துச் செய்தார்.



குசுமா ராஜரட்ன

1957 மே மாதத்தில் வழங்கிய அத் தீர்ப்பின் காரணமாக செப்டெம்பர் மாதம் 7ம் திகதி இடைத்தேர்தலை நடத்த வேண்டியேற்பட்டது.

அத் தேர்தலில் போட்டியிட்ட ராஜரட்னவின் மனைவி குசுமா ராஜரட்ன 11,453 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

இடைத் தேர்தலில் வெற்றி பெற்றவுடனேயே பாராளுமன்றத்திற்கு "ஸ்ரீ" எழுத்து பொறிக்கப்பட்ட வாகனத்திலேயே வந்தார். அது வரை ஸ்ரீ இலக்கம் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அந்த நாட்களில் வட கிழக்கெங்கும் 'ஸ்ரீ எதிர்ப்பு' போராட்டம் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

1958 ஏப்பிரல் 9ம் திகதி ஸ்ரீ சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து விமலா தலைமையிலான ஒரு குழு றோஸ்மீட் பிளேஸிலிருந்து பிரதமர் இல்லத்தை முற்றுகையிட்டுக் கொண்டது. இக் கூட்டத்தில் கலந்து கொண்டு பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கைவிடும்படி அவர்கள் கோரிக்கையை விடுத்தனர். பண்டாரநாயக்காவும் அவ் உடன்படிக்கையைக் கைவிடுவதாக எழுத்து மூல உறுதியை இதன் போது தான் வழங்கினார்.

குசுமா முதலாவதாக முகம் கொடுத்த பாராளுமன்ற விவாதம் பண்டா-செல்வா ஒப்பந்தம் தொடர்பானது. பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் போது பின்வருமாறு அவர் உரையாற்றியிருந்தார்.

> "கௌரவ உப சபாநாயகர் அவர்களே! மக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தபடி இரு வருடங்களுக்கு முன்னர் டொக்டர் என்.எம்.பெரேரா சிங்களமும் தமிழும் அரச கரும மொழியாக அரசியலமைப்புக்குள் திருத்தம் கொண்டு வர வேண்டும் என இந்த சபைக்கு முன் மொழிந்த போது அதனை எதிர்த்து "சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக வேண்டும்: அது அரசியலமைப்பிலும் இடம் பெற வேண்டும்" என்றும் அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பிரதமர் அவர்கள் கூறி இருந்தார்கள். ஆனால் அது இன்னமும் செய்யப்படவில்லை. சிங்கள மக்களின் அடிப்படை உரிமை. சிங்கள மொழிச் சட்டத்திலேயே தங்கியுள்ளது. எனவே அது அரசியலமைப்பில் உள்ளடக்கப்படுவது அவசியம். அப்படி இல்லாவிடில் அரசியமைப்பைத் திருத்தம் செய்வதில் அர்த்தம் இல்லை..... ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் தான் சிங்கள மக்களை அழிப்பதற்காக சிறுபான்மை இனங்களுக்கு விசேட சலுகைகளை வழங்கினர். சிறுபான்மை இனங்களிலும்



படிப்பகம்

www.padippakam.com

தமிழர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கினார்கள். பாரதத்தை இரண்டாக உடைத்து சுதந்திர அரசுகள் இரண்டை உருவாக்குவதற்காக முஸ்லிம் மக்களை இந்து மக்களுக்கு எதிராக இயக்க சூழ்ச்சி செய்ததைப் போலவே, சிங்கள மக்களுக்கு எதிராக தமிழரையும் தூண்டிவிட்டுள்ளனர். இது எவ்வளவு தூரம் சாத்தியமாக இருக்கிறது என்பதற்கு உதாரணம் மேல் நாட்டு (உடரட்ட) ஒப்பந்தம் [illegible] சிங்களவருக்குச் சொந்தமாக இருந்தது. ஆனால் இன்று இரு மாகாணங்கள் - வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களையும் தமிழர்களின் தலைவர்கள் தங்களது பாரம்பரிய பிரதேசம் என்று சொல்லும் அளவிற்கு துணிவு பெற்றிருக்கின்றனர். எனவே பிரதமரின் சமஷ்டி ஒப்பந்தம் சிங்கள மக்களை தமிழ் மக்களுக்குக் காட்டிக் கொடுக்கும் செயலாகவே நாங்கள் கருதுகின்றோம். என்றாவது இந்த தேசத் துரோக ஒப்பந்தத்தை சட்டமாக்குவதற்கு சிங்கள மக்கள் இடம் தர மாட்டார்கள் என்பதைக் கூறி வைக்க விரும்புகின்றேன்."

(ஆதாரம் : Hansard-House of Represntative -26-11-1957)

பண்டா-செல்வா ஒப்பந்தம்: பொது மக்களின் எதிர்ப்புகளுக்கு உள்ளாகியிருக்கிற சூழ்நிலையில் "பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துங்கள்" என்று கோரினார். இலங்கைக்கான யூகோஸ்லாவிய தூதுவரை நாட்டைவிட்டு வெளியேற்றும் படியான யோசனையையும் அவர் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். பாராளுமன்றத்தில் வெளிநாட்டு தூதுவர் ஒருவர் தொடர்பான யோசனை சமர்ப்பித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவே.

1960 மார்ச் பொதுத் தேர்தலின் போது வெலிமட தொகுதி: ஊவா பரணகம. வெலிமட தொகுதியில் அவரது கணவர் கே.எம்.பி ராஜரட்னவும் ஊவா பரனகம தொகுதியில் ஜாதிக விமுக்தி பெரமுன (தேசிய விடுதலை முன்னணி) சார்பில் குசுமாவும் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். 1960 யூலை தேர்தலில் ராஜரட்ன தம்பதிகள் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

எனினும் சட்ட விரோதமாக ஆர்ப்பாட்டம் செய்தமை, காயப்படுத்தல்களில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் பதுளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ராஜரட்ன இரண்டரை வருடச் சிறைத் தன்டனை விதிக்கப்பட்டார். தனது சிறைத் தண்டனையை நீக்கும்படி பாராளுமன்ற கட்டிடத்துக்கு முன் உண்ணாவிரதம் மேற்கொண்ட ராஜரட்னாவை அவரது பிட்டகோட்டே வீட்டுக்குக் கொண்டு வந்து வீட்டுக்குள்ளேயே சிறை வைத்தனர் (House arrest). குசுமா ராஜரட்ணவும் கணவரோடு சிறை இருக்க வேண்டி ஏற்பட்டது. பின்னர் அவரது தண்டனை குறைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1962 யூன் மாதம் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் கே.எம்.பி ராஜரட்ண வெற்றி பெற்றதுடன் 1965ஆம் ஆண்டு அரசாங்கம் வரை ராஜரட்ண தம்பதிகள் அங்கம் வகித்தனர்.

பௌத்த மதத்தை அரச மதமாக்குவது, நாடற்ற இந்திய வம்சாவழி மக்கள் ஐந்து இலட்சம் பேரையும் இந்தியாவுக்குத் திருப்பியனுப்புதல் ஆகிய இரண்டு காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றத்தில் ஸ்ரீ.ல.சு.க. மற்றும் லங்காசமசமாஜ கட்சி கூட்டரசாங்கம் கொண்டு வந்த விவாதத்தின் முடிவில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் (1964 டிசம்பர் 3ம்திகதி) குசுமா ராஜரட்ன எதிர்த்து வாக்களித்தார். ஒரு வாக்கு வித்தியாசத்தில் அரசு தோல்வியைத் தழுவியதால் 1965 பொதுத் தேர்தலுக்கு வழி கோலியது.

1965 பொதுத் தேர்தலில் மீண்டும் ஊவா பரனகம தொகுதியில் போட்டியிட்ட குசுமா,



படிப்பகம்

1951 மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். ஐக்கிய தேசிய கட்சி அத் தேர்தலின் போது ராஜரட்னா தம்பதிகளுக்கு எதிராக எவரையும் நிறுத்தவில்லை. ஆனாலும் வெலிமட தொகுதியில் திரு கே.எம்.பி. ராஜரட்னா தோல்விக்குள்ளானார். 1965 மார்ச் 27ம் திகதி அமைக்கப்பட்ட டட்லி சேனநாயக்காவின் கூட்டரசாங்கத்தில் குசுமா உள்நாட்டுப் பிரதியமைச்சராகப் பதவியேற்றார்.

இருந்த போதும் டட்லி சேனாநாயக்கா கூட்டரசாங்கத்தில் 'கூட்டு' தொடர்ந்தும் இறுக்கமாக இருக்கவில்லை. தமிழ் மொழி விசேட ஏற்பாட்டு சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து குசுமா ராஜரட்ண பிரதியமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அதைத் தொடர்ந்து அவ் அரசாங்கத்திலிருந்து நம்பிக்கை இழந்த தமிழரசுக் கட்சியும் 1968ல் விலகிக் கொண்டது. பன்னிரண்டு வருடமாக பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டிருந்த குசுமா 1970இற்குப் பின் அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகிக் கொண்டார்.

## 1956ஆம் ஆண்டு தேர்தலில் பெண்கள்

| | | |
|---|---|---|
| **கொழும்பு வடக்கு** | | |
| 1.திருமதி விவியன் குணவர்தன | (LSSP) | 16,841 |
| 2.வீமன் பெரேரா | (MEP) | 1,229 |
| 3.ஜே.சீ.டி.சில்வா விஜயரத்ன | (UNP) | 9,489 |
| 4.டபிள்யூ.டி.டி.சில்வா | (I) | 1,305 |
| **கிரிஎல்ல** | | |
| 1.எச்.சந்திரபால குணசேகர | (LSSP) | 1,011 |
| 2.ஏ.ஈ.பி.கிரிஎல்ல | (UNP) | 6,309 |
| 3. திருமதி குசும்சிறி குணவர்தன | (MEP) | 16,272 |
| **அவிஸ்ஸாவெல்ல** | | |
| 1. திருமதி கிளோடா ஜயசூரிய | (UNP) | 7,818 |
| 2. பிலிப் குணவர்தன | (MEP) | 30,070 |
| 3.எச்.எம்.எஸ்.ஜயவர்தன | (I) | 258 |
| **தெடிகம** | | |
| 1. மைத்திரிபால ஹேரத் | (MEP) | 22,816 |
| 2.திருமதி விமலா கன்னங்கர | (UNP) | 6,360 |
| 3. டபிள்யு.ஏ.முனசிங்க | (I) | 191 |
| **மீரிகம** | | |
| 1. திருமதி விமலா ஜயவர்தன | (MEP) | 36,193 |
| 2. ஜோன் எட்மன்ட் அமரதுங்க | (UNP) | 10,896 |
| 3. எச்.பீ.ஜயவர்தன | (I) | 399 |
| 4.ஏ.ஏ.ஸ்டேன்லி டயஸ் | (I) | 375 |

## 1957ஆம் ஆண்டு செப்டம்பர் 7இல் வெலிமட தொகுதியில் நடந்த இடைத்தேர்தல்களின் முடிவுகள்-பெண்கள்

| | | |
|---|---|---|
| 1. திருமதி குசுமா ராஜரட்ன | (I) | 14,069 |
| 2.எம்.பீ.ஏ.ஜயசுந்தர | (I) | 2,616 |

www.padippakam.com

# புரட்சிகர விவியன்



விவியன் குணவர்தன

1956 ஆம் ஆண்டு தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினர்களில் விவியன் குணவர்தன முக்கியமானவர்.

"இலங்கையின் இடதுசாரி அரசியலில் பங்கு பற்றிய பெண்களிலேயே தீப்பிளம்பு" என விவியன் குணவர்தனாவை அழைப்பர். விவியன் 'பொரளுகொட' பரம்பரையைச் சேர்ந்தவர். தகப்பனின் பெயர் டொன் லென்சன் குணத்திலக்க, தாயின் பெயர் எமிலி எஞ்சலினா குணவர்தன. (இவர் அன்று லங்கா சமசமாஜ கட்சியில் இருந்த பிலிப் குணவர்தன, ரொபட் குணவர்தன ஆகியோரது உடன் பிறந்த சகோதரி). விவியன் 1916 செப்டெம்பர் 18ம் திகதி பிறந்தார். தந்தை குணதிலக்க ஒரு வைத்தியர். விவியன் சிறுவயதில் தகப்பனுடன் சென்று நோயாளிகளைப் பார்த்து வருவதில் பிரியமுடையவர். கம்பஹ பெரிய ஆஸ்பத்திரி திறப்பு விழாவின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அன்றைய தேசாதிபதி மனிங் பிரபுவின் மனைவியை வரவேற்க டொக்டர் குணதிலக்க சிறுமியான விவியனை ஏற்பாடு செய்திருந்தார்.

பிரதம அதிதிக்கு பூச்செண்டு கொடுத்து வ்வியன் வரவேற்கும் காட்சி கொண்ட புகைப்படம் விவியனின் வீட்டில் பல காலமாக தொங்க விடப்பட்டிருந்தது.

"எனக்கு விபரம் தெரியும் காலம் வந்த போது அந்தப் புகைப்படத்தை உடைத்து கிழித்து குப்பையில் வீசி எறிந்தேன். எனது தகப்பனார் வந்து ஏன் அப்படி செய்தாய் என்று கேட்ட போது ஏகாதிபத்திய



படிப்பகம்

www.padippakam.com

பிரதிநிதியின் மனைவிக்கு பூச்செண்டு கொடுத்து வரவேற்றதற்காக நான் இன்று வெட்கப்படுகிறேன் என்றேன்.

எனது தகப்பன் ஆங்கிலேய விசுவாசி.. அவருக்கு நான் செய்த காரியம் கோபத்தை உண்டு பண்ணியிருந்தது. எனது தந்தை எங்களுடன் சிங்களத்தில் கதைத்ததில்லை. அதே போல் எனது தாய் ஆங்கிலத்தில் கதைத்ததில்லை. எனது தாய் தேசிய விடுதலையில் அக்கறையுடையவர்".

என்கிறார் விவியன்.

தந்தை அரசாங்க வைத்தியராக இருந்த காரணத்தினால் பல இடங்களுக்கு மாற்றப்படுவார். எனவே விவியன் கொழும்பில் அவரது மாமனார்களான பிலிப் குணவர்தன, ரொபட் குணவர்தன ஆகியோரது அரவணைப்பில் கொழும்பு மியூசியஸ் பெண்கள் பாடசாலை விடுதியில் தங்கிக் கல்வி கற்றார். பாடசாலை விடுமுறை தினங்களில் அவிஸ்ஸாவெல்லயில் இருந்த பிலிப்பின் வீட்டில் பொழுதைக் கழிப்பது வழக்கம். அங்கிருந்த மாக்ஸீய புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினார். மாமனார்களால் அரசியல் அறிவு புகுத்தப்பட்டார். இடதுசாரி சிந்தனைகளால் கவரப்பட்ட விவியன் இடதுசாரி அரசியலுக்குப் பரிச்சயமாகத் தொடங்கினார்.

இதேவேளை முதலாம் உலகப் போரில் பாதிக்கப்பட்ட போர் வீரர்களின் நலன்களுக்காக ஆங்கிலேயர்களால் 'பொப்பி மல்' (பொப்பி மலர்) விற்கப்பட்டது. ஏகாதிபத்தியப் போருக்கு எங்களால் உடைந்தையாக முடியாது என அதனை எதிர்த்து இடதுசாரித் தலைவர்கள் 'சூரியமல்' இயக்கத்தைத் தோற்றுவித்து சூரியகாந்தி மலர் விற்றனர்.

ஒவ்வொரு வருடமும் யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்ட நாளான நவம்பர் 11ம் திகதியை 'பொப்பிமல்' தினமாகக் கொண்டு முழு இலங்கையிலும் 5 நிமிட மௌனம் செலுத்தப்படும். பல பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்படும். சகலரும் தங்களது வேலைகளை நிறுத்தி இதில் பங்கு கொள்ள வேண்டும். விவியன், பாடசாலை மாணவத் தலைவியாக இருந்து கொண்டே 'சூரியமல்' இயக்கத்துக்காக பிரச்சாரம் செய்தனர். பொப்பிமல் தினத்தன்று மௌனம் செலுத்தப்படும் நேரத்தில் தோழிகளோடு சேர்ந்து இசைக்கருவிகளை இசைத்து ஆர்ப்பாட்டம் புரிவார்.

'சூரியமல்' இயக்கத்தினூடாக அரசியலில் தீவிரமாக பங்கு கொள்ள விவியன் உந்தப்பட்டார்.

"நமது நாட்டை அந்நியர்களிடமிருந்து விடுவிக்க வேண்டும் என்ற கருத்து என்னிடம் வளரத் தொடங்கியது. என்ற போதும் அன்று இந் நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு பற்றல் என்பது குறைவாகவே இருந்தது.அன்றும் சரி இன்றும் சரி சமூகத்தில் பெண்கள் இரண்டாந்தரப் பாலினராகவே மதிக்கப்படுகிறார்கள். இன்னமும் பெண்களே வீட்டையும் பிள்ளைகளையும் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆணாதிக்க கருத்தே நிலைபெற்றிருக்கிறது. சூரியமல் இயக்கத்திலும் எங்களோடு ஈடுபட்ட பெண்கள் சொற்பமானவர்களே." "நமது நாட்டை விடுதலை செய்ய வேண்டுமானால் சூரியமல் வாங்குங்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னம் அது" என நாடெங்கும் பிரச்சாரம் செய்தோம்."

இவ் அரசியல் வேலைகள் விவியனின் தந்தைக்குத் தெரிய வந்த போது அவர் கண்டிப்பாக எதிர்த்தார். தனது சிறிய தாய் (பிலிப் குணவர்தனவின் சகோதரி) வெளியே



படிப்பகம்

www.padippakam.com

செல்லும் போது அவருடன் வெளியில் போய் வருவதாகக் கூறி தந்தைக்குத் தெரியாமல் அரசியல் கூட்டங்களுக்குப் போய் வருவார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இலங்கை இடது சாரிகள் அக்கறை கொண்டிருந்த அந்த நேரத்தில் இலங்கை வந்த கமலா தேவி சட்டோபாத்தியாய போன்றோரின் கூட்டங்களிலெல்லாம் கலந்து கொள்வார் விவியன்.

பாடசாலை பரீட்சையில் சித்தியடைந்த விவியனை மேற்படிப்புக்கு பல்கலைக்கழகம் அனுப்ப தந்தை அனுமதிக்கவில்லை. என்ற போதும் அவர் லண்டன் பல்கலைக் கழகமொன்றில் பட்டதாரியானார். அதனை எவ்வளவு தூரம் ரகசியமாகச் செய்திருந்தார் என்றால், பல்கலைக்கழக பரீட்சை முடிவு செய்தித் தாளில் பிரசுரிக்கப்பட்டிருந்த போது அதில் தனது மகளும் சித்தியடைந்திருக்கும் செய்தி கண்ட பின் தான் தந்தைக்கே அது பற்றி தெரிந்தது.

தனது மாமனார்களோடு இணைந்து லங்கா சமசமாஜக் கட்சியில் சேர்ந்து வேலை செய்வதற்கு தந்தையிடம் அனுமதி கேட்டு அது தந்தையால் மறுக்கப்பட்டது என்ற போதும், இரகசியமாகக் கட்சி வேலைகளில் ஈடுபட்டார். இந்த அரசியல்வேலைகளின் போது தான் கட்சியில் இயங்கிக் கொண்டிருந்த லெஸ்லி குணவர்தனவைச் சந்தித்தார். இருவரும் காதல் கொண்டனர்.

இந்த காதல் விவியனின் தந்தை குணதிலகவுக்கு தெரிய வந்த போது கோபமடைந்தார். விவியன் வீட்டிலிருந்து வெளியில் செல்ல தடை விதிக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் விவியன் - லெஸ்லி ஆகியோரை இணைத்து வைத்தது நீதிமன்றத் தீர்ப்பொன்றே. தனது காதலியான விவியன் குணதிலக்க வீட்டில் கைதியாக அடைத்து வைக்கப் பட்டிருக்கிறார் என்றும் அவரது எதிர்காலம் அதில் அடங்கியிருப்பதாகவும் ஹேபியஸ் கோப்பஸ் வழக்கொன்றை லெஸ்லி குணவர்தன நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். லெஸ்லி குணவர்தன தரப்பில் வாதாடிய வழக்கறிஞர் பின்னாளில் இலங்கை ஜனாதிபதியாக ஆன ஜே.ஆர்.ஜெயவர்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

> "உண்மையில் எனது தந்தை இதனை எதிர்க்க சாதிப் பிரச்சினையே முக்கிய காரணம். தந்தை கொவிகம சாதி, லெஸ்லி 'கராவ' சாதி. கொவிகமவை விட கராவ குறைந்த சாதி என்ற காரணத்தினாலேயே எனது தந்தை எதிர்த்தார். ஆனால் அதை கோர்ட்டில் சொல்ல முடியாதே. எனவே வேறு விதமாக இதனைக் கையாள முயற்சித்தார்."

என்கிறார் விவியன்.

இந்த வழக்கின் போது டொக்டர் குணதிலக்க "எனக்கு இன்னும் இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். எங்கள் குடும்பம் கோட் வாசல் கூட மிதிக்காத குடும்பம். எனது குடும்பத்துக்கு இது பெரும் இழுக்கு"என்றார்.

நீதி மன்றத்தில் லெஸ்லி,

> " நான் உங்களுக்கு சந்தர்ப்பம் அளித்திருந்தேனே, விவியனை அவரது மாமாவின் வீட்டுக்கு கொண்டு சென்று வைத்திருந்தீர்களாயின் 10 நாட்களின் பின் நான் முறையாகக் கூட்டிச் சென்றிருப்பேனே. அப்படிச் செய்திருந்தால் கோர்ட் போக வேண்டிய அவசியமிருக்காதே"

என்றார்.

ஏன் இந்தத் திருமணத்தை எதிர்க்கிறீர்கள் என நீதிபதி கேட்ட போது திரு.குணதிலக்க, "எனது மகள் காதலிக்கும் நபர் தேச விரோதக் கட்சியின் உறுப்பினர்.



படிப்பகம்

லங்காசமசமாஜக் கட்சி தேச விரோதக் கட்சி எனப் பேசப்படும் ஒரு கட்சி. எனது மகள் அக்கட்சியைச் சேர்ந்த ஒருவரை கட்டினால் தேச விரோத குற்றத்துகான தண்டனையை அவரும் அனுபவிக்க வேண்டி வரும். எனவே தான் எனது மகளை அவருக்குத் திருமணம் முடித்து வைக்கத் தயாரில்லை".

என்றார்.

இடையில் குறுக்கிட்ட விவியன்

"எனக்கும் கதைக்க சந்தர்ப்பம் வேண்டும் கோட்டார் அவர்களே! அவர் கூறும் தேச விரோத கட்சியில் நானும் இரகசியமாக அங்கம் வகிக்கும் உறுப்பினர் என்பது என் தகப்பனாருக்குத் தெரியாது. எனவே ஒரு தேச விரோதக் கட்சியொன்றின் உறுப்பினருக்குக் கிடைக்கக்கூடிய தண்டனை நானும் அனுபவிக்க வேண்டிய ஒன்றே"

என்றார் விவியன்.

"நான் திரு. குணதிலக்கவைக் கண்டிக்கிறேன். வயதுக்கு வந்தவர்கள் தங்கள் விருப்பப்படி இணைவதற்கு உரிமையுண்டு. இவர்கள் இருவரும் பல காரணங்களால் ஒருமித்திருக்கும் போது ஏன் அவர்களை இணையத் தடுக்கிறீர்கள்."

என நீதிபதி கேட்டார்.

கோர்ட்டிலிருந்து வெளியேறிய குணதிலக்கவின் பின்னால் ஆசீர்வாதம் பெறுவதற்குச் சென்ற போது அதனை உதாசீனம் செய்து விட்டு குணதிலக்க சென்றார்.

லெஸ்லி-விவியன் திருமணத்திற்கு நீதி மன்ற அனுமதி கிடைத்ததும் டொக்டர் குணதிலக்க நேராக ஏ.ஈ. குணசிங்க வெளியிட்ட 'சிங்க ஹண்ட' பத்திரிகைக் காரியாலத்திற்குச் சென்றார். ('சிங்க ஹண்ட' பத்திரிகை இடதுசாரிகளை எதிர்த்து பிரச்சாரம் செய்யும் பத்திரிகையாக தொழிற்பட்டுக் கொண்டிருந்தது.) அங்கு பிரசுரிக்கும்படி ஒரு அறிக்கையைக் கொடுத்தார்.

"மாக்ஸிஸ்டுகள் எனச் சொல்வோர் மூத்தவர்களது சொல்லை உதாசீனம் செய்யச் சொல்பவர்கள். அவர்களுக்கு எந்தவொரு ஆதரவையும் எவரும் வழங்காதீர்கள். அவர்கள் தேசத் துரோகிகள்" என்ற தனது அறிக்கை வெளியிடப்பட்டிருந்த அப் பத்திரிகையில் 500 பிரதிகளைக் கொண்டு சென்று, பொரளுகொட பிரதேசவாசிகளுக்கு இலவசமாக விநியோகித்தார் விவியனின் தந்தை.

விவியனின் தனிப்பட்ட வாழ்க்கை கூட இப்படி ஆர்ப்பாட்டமாகவே இருந்தது.

விவியன் - லெஸ்லி திருமணம்1939ஜனவரி 30ம்திகதி நடந்தது.

விவியன் குணவர்தன 1956ல் பாராளுமன்றத்துக்குப் பிரவேசித்த போதும் 1950 தொடக்கம் கொழும்பு மாநகர சபை உறுப்பினராக இருந்திருக்கின்றார்.

1952ஆம் ஆண்டு தேர்தலில் களனித் தொகுதியில் பிலிப் குணவர்தன, விமலா குணவர்த்னாவை நிறுத்தினார். (பிலிப் குணவர்தன லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து முரண்பட்டுக் கொண்டிருந்த காலம் அது) எனவே அத் தொகுதியில் போட்டியிட்ட இரு பெண்களும் தோல்வியடைந்தனர். ஜே.ஆர். அத்தொகுதியில் வெற்றி பெற்றார்.

1956ம் ஆண்டு தேர்தலில் விவியன் வெற்றி பெற்றார். 1956ம் ஆண்டு தேர்தலில் பாராளுமன்றத்தில் தம்பதி ஜோடிகள் அங்கம் வகித்திருந்தனர். விவியன் - லெஸ்லி, மற்றும்

www.padippakam.com

பிலிப் குசுமா ஆகியோரே அவர்கள். 1960ஆம் ஆண்டு மார்ச் மாத தேர்தலில் கொழும்பு வடக்கில் போட்டியிட்டு 844 வாக்குகளாலும் 1960ஆம் ஆண்டு ஜுலை மாத பொதுத் தேர்தலில் 144 வாக்குகளாலும் தோல்வியுற்றார் விவியன்.

இத்தேர்தலின் போது கொழும்பு வடக்கில் உள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்கள் இவருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்திருந்தன.

> " விவியன் குணவர்தன எனும் மாக்ஸியவாதிக்கு வாக்களித்தால் உங்களுக்கு நாங்கள் வழங்கும் சகாய நிதிகளை நிறுத்தி விடுவோம். இவர்களுக்கு மதமென்று ஒன்றும் கிடையாது. எவரும் அவருக்கு வாக்களிக்கக்கூடாது."

எனப் பிரச்சாரம் செய்திருந்தன. கொழும்பு வடக்கைச் சேர்ந்த கத்தோலிக்க தேவாலயங்களின் பிரச்சாரம் விவியனை தோல்வியுறச் செய்வதில் பெரும் பங்காற்றியிருந்தது என்றால் அது மிகையில்லை.

1956 மொழிப் பிரச்சினையின் போது தமிழ்-சிங்கள சம மொழி அந்தஸ்துக்காக போராடிய விவியனை 'யாழ் தேவி' என சிங்கள இனவாத தரப்பினர் பட்டப்பெயர் சூட்டியிருந்தனர்.

1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொரல்லையில் நடந்த இடைத் தேர்தலில் விவியன் குணவர்தனா வெற்றி பெற்றார். 1965ஆம் ஆண்டு தேர்தல் வரையான குறுகிய காலம் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்ததுடன் அக்காலப் பகுதிக்குள் உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சராக பதவி வகித்தார். இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் முதற் பெண் பிரதி அமைச்சர் என்ற பெருமை விவியனைச் சேரும்.

1970ஆம் ஆண்டு தேர்தலில் தெஹிவளை, கல்கிஸ்ஸ தொகுதியில் போட்டியிட்டு 1967மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். 1977ஆம் ஆண்டு இரத்மலானை தொகுதியில் போட்டியிட்ட போதும் லலித் அத்துலத் முதலியினால் தோற்கடிக்கப்பட்டார். அதன் பின் அவர் எந்தத் தேர்தலிலும் பங்குபற்றவில்லை.

அரசியல் விமர்சகர்கள் பலர் கூறுவதைப் போல விவியன் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி அரசியல் வாழ்க்கையிலும் சரி ' புரட்சிக்காரி' யாகவே இருந்திருக்கிறார்.

(விவியன் குணவர்தன பற்றிய பெரும்பாலான தகவல் 20-06-1995 அன்று அவருடைய வீட்டில் வைத்து அவருடனான உரையாடலின் போது பெறப்பட்டவை)



படிப்பகம்

www.padippakam.com

# முதன் முதலில் பெண் தலைமையில் கட்சி

## 1960 மார்ச் தேர்தல்

1960ஆம் ஆண்டு மார்ச் தேர்தல் நடத்தப்பட்டதற்குப் பின்னணியில் சில முக்கிய காரணங்கள் தொழிற்பட்டிருந்தன.

குறிப்பாக 1959 செப்டெம்பர் 25ம் திகதியன்று அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா தனது இல்லத்தில் வைத்து பிக்கு ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து செப்டெம்பர் 26ம் திகதி பேராசிரியர் விஜயாநந்த தஹாநாயக்கா இடைக்காலப் பிரதமராக நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையின் ஐந்தாவது பிரதமராவார்.

பண்டாரநாயக்கா படுகொலையோடு வெற்றிடமான அத்தனகல்ல தொகுதிக்கான இடைத்தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைப்பெற்ற போது பணடாரநாயக்காவின் ஆதரவாளர்கள் பலர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் மனைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவை அரசியலுக்கு கொண்டுவர விரும்பினர். அவர்களின் நிர்ப்பந்தம் காரணமாக சிறிமாவோ பண்டாரநாயக்கா இடைத் தேர்தலில் போட்டியிட முன் வந்தார். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பாக அல்ல. சுயேட்சை வேட்பாளராக போட்டியிட முன்வந்தார்.

இதற்கிடையில் தஹநாயக்காவின் அரசாங்கத்தில் அமைச்சரவை மாற்றங்களில் காணப்பட்ட இழுபறி நிலைமையினாலும் அரசா.ங்கத்திற்குள் இருந்த பலத்த முரண்பாடுகள் காரணமாகவும் டிசம்பர் 5ம் திகதி அமைச்சரவையைக் கலைத்தார். புதிய பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான அறிவித்தலையும் விடுத்தார். அதன்படி 1960 ஜனவரி 4ம் திகதி வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

இத்தேர்தலின் போது அதுவரை காலமும் இருந்த 89 தேர்தல் தொகுதிகள் 145 தேர்தல் தொகுதிகளாக உயர்த்தப்பட்டது. அதே போல் இத்தேர்தலின் போது முன்னைய தேர்தலை விட அதிக வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அதேபோல் இதுவரை காலமில்லாத அளவிற்கு அதிக பெண்களும் இத் தேர்தலில் பேட்டியிட்டனர். பெண் வேட்பாளர்கள் 14 பேரும் பின்வரும் எண்ணிக்கையில் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டனர்.

லங்கா சமசமாஜக்கட்சி-5

ஐக்கிய தேசியக் கட்சி-3

இலங்கை ஜனநாயகக் கட்சி-2

தொழிற் கட்சி-1

தேசிய விடுதலை முன்னணி-1

மக்கள் ஐக்கிய முன்னணி-1

சுயேட்சை-1

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி நடந்த 4வது பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 14 பெண் வேட்பாளர்களில் மூவர் மட்டுமே வெற்றி பெற்றனர். லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் தெஹியோவிட்ட தொகுதியில் போட்டியிட்ட சோமா விக்கிரமநாயக்க 546 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். கலிகமுவ தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட விமலா கன்னங்கர 3547 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வென்றார். இவர்கள் இருவருமே பாராளுமன்றத்துக்குப் புதிய முகங்கள்.

வெலிமட தேர்தற் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திருமதி குசுமா ராஜரட்ன ஊவா பரணகம தொகுதியில் போட்டியிட்டு 1967 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வென்றார். இத் தேர்தலில் அவரது கணவர் கே.எம்.பி.ராஜரட்ன வென்றார்.

1960 மார்ச் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனித்தே போட்டியிட்டது. ஸ்ரீ.ல.சு.க. சார்பில் தேர்தல் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டவர் சீ.பி.டிசில்வா என்ற போதும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையே ஸ்ரீ.ல.சு.க ஆதரவாளர்கள் தங்கள் தலைமையாகக் கொண்டிருந்தனர். இத்தேர்தலில் ஐ.தே.க.வுக்கு 50 ஆசனங்களும் ஸ்ரீ.ல.சு.க.வுக்கு 46 ஆசனங்களும் கிடைத்திருந்தன. ஸ்ரீ.ல.சு.க.வுக்குக் கிடைத்த இந்த 46 ஆசனங்களும் கூட ஸ்ரீமாவோவினாலேயே பெற முடிந்தது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். 1960 யூலை தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டு, ஸ்ரீமாவோவின் தலைமையில் வேலைகள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து கிடைத்த வெற்றியைப் பார்க்கின்ற போது அது நிரூபணமாகிறது.

**1960 யூலை தேர்தல்.**

எவ்வாறெனினும் 1960 மார்ச்சில் உருவாக்கப்பட்ட நான்காவது பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் 33 நாட்கள் மட்டுமே நீடித்தது.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சி தோல்வியடைந்தது. (இது சிம்மாசன உரை என்பது குறிப்பிடத்தக்கது.) தமிழரசுக் கட்சி சிம்மாசனப்பிரசங்கத்தை எதிர்த்து வாக்களித்தது. பின்னர் தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் ஸ்ரீ.ல.சு.க. ஆட்சி அமைக்க



படிப்பகம்.

www.padippakam.com

முன் வந்தபோதும் தேசாதிபதி அதனை ஏற்காமல் பாராளுமனறத்தைக் கலைத்தார். 1960இலேயே அடுத்த தேர்தலையும் நடத்த நேர்ந்தது.

5வது பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் மே மாதம் 20ஆம் திகதி நடந்தது. இதன் போது நான்கு பெண்கள் மாத்திரம் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். முன்னைய தேர்தலில் 14 பெண்கள் போட்டியிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கவை. இவர்களில் மூவர் முன்னைய பாராளுமன்ற அங்கத்தினர்கள். மற்றவர் விவியன் குணவர்தன.

விவியன் குணவர்தன கொழும்பு வடக்கில் போட்டியிட்டார். இத்தேர்தலின் போது விவியன் குணவர்தனவுக்கு எதிராக கொழும்பு வடக்கைச் சேர்ந்த பல கத்தோலிக்க தேவாலயங்கள் பிரச்சாரம் செய்திருந்தன. விவியனை ஆதரித்த கொழும்பு வடக்கு வாசிகளை கண்டித்ததன் கத்தோலிக்க தேவாலயங்கள். விவியன் மார்க்சிஸ்ட் என்பதனாலேயே அவருக்கெதிராக செயல்பட்டனர் என்பதை பலர் அறிந்திருந்தனர். (இது பற்றி சென்ற கட்டுரையில் கண்டோம்.)

இறுதியில் இரு பெண் வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெற்றனர். ஊவா பரணகம தொகுதியில் போட்டியிட்ட திருமதி குசுமா ராஜரட்னவும், தெஹியோவிட்ட தொகுதியில் போட்டியிட்ட சோமா விக்கிரமநாயக்கவுமே அவர்கள். விமலா கன்னங்கர தோல்வியடைந்தார்.

இத் தேர்தலின் போது ஸ்ரீ.ல.சு.க.வின் தலைவராக இருந்த சிபி.டி.சில்வா தலைமைப் பதவியிலிருந்து விலகி, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அப்பதவியை ஏற்கச் செய்தார். அதன்பின் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீ.ல.சு.க. யூலை தேர்தலுக்காக ஏனைய இடதுசாரிக் கட்சிகளுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. இத்தேர்தலின் போது திருமதி சிறிமா போட்டியிடவில்லை.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் கட்சியொன்று ஒரு பெண் தலைமையில் தேர்தலில் பங்கு பற்றிய முதற் சந்தர்ப்பம் இது தான். இந்தத் தேர்தலின் பின் அமைக்கப்பட்ட 5வது பாராளுமன்றத்தில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பிரதமராக நியமிக்கப்பட்டார்.

"தேர்தலில் கூட போட்டியிடாத ஒருவருக்கு எப்படிப் பிரதமர் பதவி வழங்க முடியும்? இது அரசியலமைப்புக்கு முரணானது" என எதிர்த்தரப்பினர் இதனை சர்ச்சைக்குள்ளாக்கினர். ஆனால் "செனட் சபைக்கு நியமன உறுப்பினராக ஒருவரைக் கொண்டு வரலாம். செனட் சபையில் உறுப்பினராக இருக்கின்ற ஒருவரை பிரதமராக நியமிக்கவும் முடியும். சோல்பரி அரசியலமைப்பின் படி இதைச் செய்வதில் ஒரு தடையும் இல்லை" என ஸ்ரீ.ல.சு.க. தரப்பினர் சுட்டிக் காட்டினர். இப்படித் தான் இலங்கையின் வரலாற்றில் முதல் பெண் பிரதமர் நியமனமானார். அதே போல் உலகிலேயே முதலாவது பெண் பிரதமரையும் உருவாக்கிய நாடு என்ற பெருமையை இலங்கை.

**விமலா கன்னங்கர**

1960 யூலை தேர்தலில் போட்டியிட்ட விமலா கன்னங்கர ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளருடன் போட்டியிட்டு தோல்வியடைந்தார். எனினும் 1965 தேர்தலில் மீண்டும் கல்கமுவ தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1965ல் பதவிக்கு வந்த டட்லி சேனாநாயக்க அரசாங்கத்தில் சுகாதார பிரதி அமைச்சராகப் பதவியேற்றார்.

ஓதரபத்து கிராம நிர்வாக சபையின் தலைவியாக பதவிவகித்து வந்த விமலா கன்னங்கர அதற் கூடாக அரசியலுக்குள் பிரவேசித்தார். கொழும்பு மகளிர் வித்தியாலயமொன்றில்



படிப்பகம்

www.padippakam.com



விமலா கன்னங்கர

கல்வி கற்ற விமலா கிராமத் தலைவர்கள் சம்மேளனத்தினது தலைவியாகவும் இருந்தார். மேலும் ஆரம்ப பாடசாலைகள் பற்றிய அதிக அக்கறையும் கொண்டவர் விமலா 'கொழும்பு திட்டத்' தின் கீழ் புலமைப்பரிசு பெற்று விசேட கல்விக்காக அவுஸ்ரேலியா சென்று கல்வி கற்றார்.

1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது தோல்விக்குள்ளான விமலா, 1977ஆம் ஆண்டு தேர்தலில் ' கல்கமுவ ' தொகுதியில் மீண்டும் வெற்றி பெற்று ஜே.ஆர்.ஜயவர்தனாவின் அமைச்சரவையில் உல்லாச மற்றும் கப்பல், விமானப் போக்குவரத்து அமைச்சராகப் பதவி வகித்தார். 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது "கிராமிய அபிவிருத்தி" அமைச்சராகப் பதவியேற்றார். 1989 பொதுத் தேர்தலில் விமலா கன்னங்கர போட்டியிடாததுடன் அதன் பின் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார்.



சோமா விக்கிரமநாயக்க

**சோமா விக்கிரமநாயக்க**

சோமா விக்கிரம நாயக்க தொடர்ந்து இரண்டு தேர்தல்களில் (1960 மார்ச், 1960 யூலை) வெற்றி பெற்றார். இவர் 1939இல் லங்கா சமசமாஜக் கட்சியின் உறுப்பினராகச் சேர்ந்ததோடு சில வருட காலம், அகில இலங்கை சமசமாஜ பெண்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றினார்.

தன்னை முழு நேர அரசியலுக்கு உள்ளாக்குவதற்கு முன் கேகாலை வித்தியாலயம், கணேமுல்ல வித்தியாலயம், கொலன்னாவ வித்தியாலயம் என்பனவற்றில் விரிவுரையாளராகவும் ஆசிரியராகவும் கடமையாற்றியிருந்தார்.

மார்க்சீயம், சோஷலிசம் தொடர்பாக சாதாரண மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில் விளக்கமளிப்பதில் இளவயது முதல் நல்ல தேர்ச்சி பெற்ற சோமா 1960 தொடக்கம் 1965 வரை பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த காலத்துள் பாராளுமன்றத்தில் பல விவாதங்களில் காரசாரமான கருத்துக்களை முன் வைத்தவர் என சக உறுப்பினர்கள் தெரிவிக்கிறார்கள். சோவியத் யூனியன், ஜெர்மன், பிரித்தானியா போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட சர்வதேச பெண்கள் சம்மேளன மாநாடுகளில் இலங்கைப் பிரதிநிதியாகவும் கலந்து கொண்டிருக்கிறார்.

1965ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராக அவிஸ்ஸாவெல தொகுதியில் போட்டியிட்ட சோமா விக்கிரமநாயக்க அத்தேர்தலில் தோல்வியைத் தழுவினார். தனது 74வது வயதில் 1989ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி அவர் மரணமானார்.



படிப்பகம்

www.padippakam.com



"உலக வரலாற்றில் மகாராஜாக்களைப் போல மகாராணிகளாகவும் பெண்கள் அரசியல் தலைமைத்துவத்தில் இருந்திருக்கிறார்கள் என்றெல்லாம் நாம் கூறிக் கொண்ட போதிலும், அதிகாரம்மிக்க பிரதம மந்திரியாக பெண்ணொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டது உலக சரலாற்றில் சாதனையாக்கப்பட்டது இதுவே முதற்தடவை."



சிறிமா பண்டாரநாயக்க

இப்படி 1960ஆம் ஆண்டு யூலை 21ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து வெளியாகிய நியுயோர்க் டைம்ஸ் (Newyork Times) எனும் பத்திரிகையில் வெளிவந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சிறிமா பண்டாரநாயக்கா உலகிலேயே முதற் பிரதம மந்திரியாக பதவியேற்றதைக் குறிப்பிட்டே மேற்படி பத்திரிகையில் அச் செய்தி வெளியாகியிருந்தது.

பெண்ணொருவர் பிரதமராகப் பதவி வகிப்பதென்பது கனவாகக் கருதப்பட்ட அந் நாட்களில் இந் நிகழ்வு முக்கிய திருப்பமாகக் கருதப்பட்டது.

1960 யூலை பொதுத் தேர்தலின் போது எதிர்க்கட்சிகளினால், சிறிமா பண்டாரநாயக்காவுக்கு எதிரான பிரச்சாரம் பாரிய அளவு மேற்கொள்ளப்பட்டது. அதில் பெரும் இனவாதமும் கக்கப்பட்டது. என்ன வேடிக்கை என்றால், பணம் படைத்த பெரும் முதலாளிகளினால், சிறிமா பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தால் வடக்கு கிழக்கைப் பிரித்து தமிழர்களுக்கு கொடுத்து விடுவார் என்றும், இலங்கை வரைபடத்தில் வடகிழக்கை சிகப்பு நிறத்தால், பிரித்துக் காட்டி பிரச்சாரம் செய்தனர். (இச்செயலை அப்படியே 1994 பொதுத் தேர்தல் மற்றும் அதே ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றோடு பொருத்திப் பார்க்கலாம். இத்தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்காவின் மகளான சந்திரிகா குமாரணதுங்கா போட்டியிட்ட போது சிங்களயே மஹா சம்மத்த பூமி புத்திர பக்ஷய, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகள் கூட சந்திரிகா பதவிக்கு வந்தால் தமிழ் ஈழத்தை தமிழர்களுக்குக் கொடுத்து விடுவார் என்றெல்லாம் பிரச்சாரம் செய்திருந்தனர்.)

1916ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி பலங்கொட பிரதேசத்தில் மஹாவலதென்ன வளவ்வையில் பிறந்தார் சிறிமாவோ ரத்வத்தை. கொழும்பு புனித பிரிஜ்ஜட் பெண்கள் கல்லூரி, (St Bridget Ladies College) இல் கல்வி கற்று பின் மீண்டும் தமது ஊருக்குத் திரும்பி சமூக வேலைகளில் ஈடுபட்டார்.

தனது தந்தையிடமிருந்து ஒரு சிறு நிலப்பகுதியை பெற்றுக் கொண்டு அதில் கட்டிடத்தையும் கட்டி பலாங்கொடை சமூக சேவை சங்கம் எனும் அமைப்பை ஆரம்பித்து அதில் சூழ உள்ளவர்களின் குறைகளைத் தீர்ப்பதில் முன்னின்று இயங்கினார். குறிப்பாக அந்தக் கட்டத்தில் ஒரு சிறு வைத்தியசாலை அவ்வமைப்பின் மூலம்



படிப்பகம்

www.padippakam.com

இயக்கப் பெற்றது. 1930களில் மிக வேகமாகப் பரவிய மலேரியா நோயை ஒழிப்பதில் இவ்வமைப்பு மிகத் தீவிரமாகப் பங்காற்றியது.

1940ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி சிறிமாவுக்கு திருமணமானது. அதுவரையில் அரசாங்க சபையின் பிரதிநிதியாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சராகவும், சிங்கள மகா சபையின் தலைவராகவும், பதவி வகித்து வந்த பிரபல அரசியற் தலைவரான சொலமன் வெஸ்ட் ரிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்காவே, சிறிமாவை மணந்தார். திருமணமான சிறிமா, லங்கா மகிலா சமித்தி அமைப்பில் சேர்ந்து இயங்கினார்.

1951இல் பண்டாரநாயக்கவினால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தோற்றுவிக்கப்பட்டதன் பின் சிறிமா அதன் அரசியல் வேலைகளில் தன்னையும் இணைத்துக் கொண்டார். 1952 மற்றும் 1956 பொதுத் தேர்தல்களின் போது தனது கணவருக்கு ஆதரவாக பிரச்சார வேலைகளில் இயங்க சிறிமா விரும்பவில்லை. இருந்த போதும் 1959க்குப் பின் அதாவது எஸ்.டப்ள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் மரணத்தைத் தொடர்ந்து அரசியலில் பிரவேசிக்க வேண்டிய சூழல் உருவானது.

1956இல் பிரதம மந்திரியாகப் பதவியேற்ற எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா, 1959ஆம் ஆண்டு செப்டெம்பர் 25ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். அந்நேரம சிறிமாவுக்கு மூன்று பிள்ளைகள். "ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்காகவென்றே கணவர் அழிக்கப்பட்டார். எனவே அவரது பாதையைத் தொடர்ந்து நீங்கள் செல்ல வேண்டும் . ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு நீங்கள் தலைமை கொடுக்க வேண்டும் சிறுபராயத்தைத் தாண்டிவிட்ட பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக மட்டும் வாழ்க்கையை செலவிடாமல் கணவர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து நீங்கள் தொடர வேண்டும்." என்று கட்சியின் தலைமையால் வற்புறுத்தப்பட்டார். இதன் காரணமாக வெற்றிடமாகப் போன அத்தனகல்ல தொகுதியில் நடக்கப் போகும் 1959ஆம் இடைத் தேர்தலில் போட்டியிட முன்வந்தார். ஆனால் இடைத்தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னரேயே அன்றைய இடைக்கால பிரதமராக இருந்த தஹாநாயக்காக பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடாத்துவதற்கான பிரகடனத்தையும் வெளியிட்டார்.

1960 மார்ச்சில் நாலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்தலோடு தோற்றுவிக்கப்பட்ட பாராளுமன்றம், 33 நாட்களில் கலைந்தது. பாராளுமன்ற சிம்மாசனப் பிரசங்கத்தின் போது ஆளும் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐந்தாவது தேர்தலுக்கான அத்திவாரம் இடப்பட்டது. யூலை 20இல் நடந்த ஐந்தாவது பாராளுமன்றத் தேர்தலின் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் வேலைகளை திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பொறுப்பேற்று நடாத்தினார். இலங்கையின் தேர்தல் வரலாற்றில் கட்சியொன்று ஒரு பெண் தலைமையில் தேர்தலில் பங்குபற்றிய முதற் சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைக்கக்கூடிய வெற்றி வாய்ப்புகளை முன்னமேயே கணிக்கப்பட்ட ஏனைய அரசியற் கட்சிகள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசோடு மோதாமல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமை கொடுத்த சிறிமாவோடு தனிப்பட்ட ரீதியில் மோதின. இதிலுள்ள முக்கிய விடயம் என்னவென்றால், சிறிமாவோவின் அரசியலோடு மோதாமல், அவர் பெண் என்பதினாலேயே அவருக்கு எதிரான தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதனைச் செய்வதில் அன்றைய பத்திரிகைகளது பங்கு முக்கியமானது எனலாம். அன்று வெளியான தேசியப் பத்திரிகைகளில் ஒன்றான "வஸ்கவி", "சிலுமின",



படிப்பகம்

www.padippakam.com

"லங்காதீப" என்பன அவற்றில் முக்கியமானவை.

1960ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி வெளியான சிலுமின பத்திரிகையில் பின்வருமாறு ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது.

"பிரதம மந்திரி எனும் பொறுப்பு வாய்ந்த பதவியை ஆணொருவனே வகிக்க வேண்டும். எமது நாடு உள்ளேயும் வெளியேயும் பாரிய சிக்கல்களுக்குள்ளாகியிருக்கிற இவ்வேளையில் இந்தப் பொறுப்பை பெண்ணொருவரின் மீது சுமத்துவது பெரும் அழிவை நோக்கிச் செல்வதற்கு அத்திவாரமிடும்"

1960ஆம் ஆண்டு யூலை 21ஆம் திகதி வெளியான லங்காதீப பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"இந்தத் தேர்தலில் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒத்துழைத்திருந்தோம். ஆரம்பத்திலிருந்தே நாங்கள் திருமதி பண்டாரநாயக்கவுக்கும் அவரது கட்சியின் நடவடிக்கைகளுக்கும் எதிராகவும் எங்களது எதிர்ப்பையும் தெரிவித்து வந்துள்ளோம். ஆனால் மக்கள் அவர்களது தீர்ப்பை வழங்கினார்கள். அவர்களது தீர்ப்பு பூரணத்துவமானதாயின் அதை ஏற்றக் கொள்ளவே வேண்டும். லங்காதீப பத்திரிகையின் "தராசு" அன்று கட்சி சார்பற்ற ரீதியில் நிறுத்தது அதற்காகவே..."

எவ்வாறிருந்த போதும் 1960ஆம் ஆண்டு யூலை தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கலை செனற்சபைக்கு நியமன உறுப்பினராகக் கொண்டு வந்து அதற்கூடாக சட்டசபை பிரதிநிதியாக்கி அவரைப் பிரதமராகத் தெரிவு செய்தது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி. ஸ்ரீமாவோவை பிரதமராக்குவதற்காகவே இத்தனை இடைநிலை தொழிற்பாடுகள் நடத்தப்பட்டன. இதற்கு எதிர்க்கட்சிகள் (குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினர்) பலத்த எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். தேர்தலில் கூட போட்டியிடாத ஒருவரை பிரதமராகத் தெரிவு செய்வது ஜனநாயக விரோத செயல் எனச் சத்தமெழுப்பினர். ஆனால், சோல்பரி அரசியலமைப்பின்படி இதுவொன்றும் பிழையானது அல்ல என ஆதாரம் காட்டினர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர்.

ஆனால் ஸ்ரீ மாவோவின் நியமனம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அரசியல் அவதானிகள் மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவரை நாட்டின் தலைவராக நியமிப்பது ஜனநாயக மரபை மீறும் செயலென்றும் இந்நிகழ்வு மக்களாட்சிக் கோட்பாட்டையே கேள்விக்குள்ளாக்குகிறது என்றும் தெரிவித்தனர்.

எவ்வாறெனினும், திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1960 யூலை 21ஆம் திகதி முற்பகல், 11.30க்கு தேசாபதி ஒலிவர் குணதிலக்க முன்னிலையில் நாட்டின் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இலங்கையின் முதற் பெண் பிரதமராக மட்டுமல்லாது உலகிலேயே முதற் பெண் பிரதமராவும் சாதனை படைத்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மேற்சபைக்கு நியமிக்கப்பட்ட முதற் பெண் என்ற பெருமையையும் உலகிலேயே நியமன உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, பிரதமரான முதல் நபரென்ற பெருமையையும் அடைந்தார்.

1964ஆம் ஆண்டு பாராளுமன்ற விவாதமொன்றின் போது ஆளுங்கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஸ்ரீமாவோவின் ஆட்சி கலைக்கப்பட்டது.

1965ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீமாவோவின் தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தோல்வியடைந்தது. டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்தது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அத்தனகல தொகுதியில் போட்டியிட்டுத்



படிப்பகம்

www.padippakam.com

தெரிவு செய்யப்பட்டார்.

1970ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அத்தனகல தொகுதியில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்தரக் கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. இரண்டாவது தடவையாகவும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். முக்கியமாக இவரது ஆட்சிகாலத்தில் காலனித்துவம் இயற்றிச் சென்ற சோல்பரி அரசியலமைப்பை மாற்றி முதலாவது குடியரசு அரசியலமைப்பை கொண்டு வந்தார்.

1977ஆம் ஆண்டு நடந்த 8வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஆட்சியமைத்தது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் அத்தனகலவில் வெற்றி பெற்றார்.

1980ஆம் ஆண்டு ஒக்டோபர் 16ஆம் திகதி ஜே.ஆர். அரசாங்கத்தினால், திருமதி ஸ்ரீமாவோவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டது. தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்ததுடன் 1982இல் நடத்தப்பட்ட முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட முடியாத நிலையில் கொப்பேகடுவவை வேட்பாளராக நியமிக்க வேண்டிய நிலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குஏற்பட்டது. இறுதியில் ஜே.ஆர்.ஜனாதிபதியானார்.

1989இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசவுடன் போட்டியிட்ட ஸ்ரீமாவோ தோல்வியடைந்தார், என்ற போதும் 1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் மூலம் பாராளுமன்றத்தில் மீண்டும் அங்கம் வகித்த சிறிமாவோ 1994 ஓகஸ்டில் நடந்த பொதுத்தேர்தலோடு அவரது மகள் சந்திரிகாவின் தலைமையில் ஆட்சியமைக்கப்பட்ட பத்தாவது பாராளுமன்றத்தில் நியமன உறுப்பினராக (தேசியப்பட்டியலின் மூலம்) நியமிக்கப்பட்டதுடன் இலாகா இல்லா அமைச்சின் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார் பின்னர். 1995 நவம்பரில் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் வென்ற சந்திரிகா அப்பதவியை ஏற்றதன் பின் தான் வகித்து வந்த பிரதமர் பதவிக்கு தனது தாயாரை நியமித்தார். அதன் மூலம் மூன்றாவது முறையாகவும் பிரதமராகப் பதவி வகித்த உலகின் ஒரே ஒரு பெண் எனும் சாதனையை ஸ்ரீ மாவோ படைத்தார். 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 10இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது சுகவீனமுற்றிருந்த அவர், இறுதியாக அன்று வாக்களித்து விட்டு சென்றபின் மரணமானார். உலகிலேயே அதிக காலம் பிரதமராக இருந்தவராக கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

# 1960 மார்ச் தேர்தல்கள்

| | | |
|---|---|---|
| **கொழும்பு வடக்கு** | | |
| ஏ.எம்.ஜீ.டீ.சில்வா | (LPP) | 1,164 |
| விவியன் குணவர்தன | (LSSP) | 8,602 |
| வின்சன்ட் சிறிபால | (SLFP) | 3,149 |
| கே.ஜே.எஸ்.ஏ.பெர்ணான்டோ | (SMP) | 52 |
| வி.ஏ.சுகததாச | (UNP) | 9,446 |
| எஸ்.ஈ.நெல்சன் பெர்ணான்டோ | (F) | 188 |
| **களனி** | | |
| டீ.வி.அல்கம | (LPP) | 284 |
| திருமதி என்.எஸ்.பெரேரா | (LSSP) | 1,769 |
| டீ.சீ.பீ.பெனரகம | (MEP) | 6,454 |
| எச்.எச்.பீ.சரத்குமார் | (SJS) | 187 |
| ஆர்.எஸ்.பெரேரா | (SLFP) | 9,318 |
| ஜே.ஆர்.ஜெயவர்தன | (UNP) | 10,827 |
| **கொலன்னாவ** | | |
| ஒலிவர் அலஹகோன் | (CIC) | 63 |
| | (LPP) | 119 |
| ரூபா குணவர்தன | (LSSP) | 3,582 |
| கே.ஈ.பெரேரா | (MEP) | 8,608 |
| வில்லியம் கோனருவ | (SLFP) | 2,485 |
| ஆரியசேன லியனகே | (SMP) | 132 |
| ய.ஏ.எஸ்.பெரேரா | (UNP) | 6,088 |
| **தெஹியோவிட்ட** | | |
| என்.ஜீ.எச்.ஜயவர்தன | (LPP) | 235 |
| சோமா விக்ரமநாயக்க | (LSSP) | 6,606 |
| ஏ.பீ.ரணதுங்க | (MEP) | 1,540 |
| சீ.பீ.ரணசிங்க | (SLFP) | 2,072 |
| ஏ.எவ்.விஜயமான்ன | (UNP) | 6,606 |
| என்.ஜீ.ஜயவர்தன | (I) | 1,198 |
| **ரத்னபுர** | | |
| சரத்சந்திர முத்தெட்டுகம | (CP) | 4,117 |
| பீ.ஜயசூரிய | (LPP) | 107 |
| காமன்மீதெனிய | (LSSP) | 3,047 |
| வீ.ஏ. | (MEP) | 5,385 |
| ஹெரால்ட் வேரகம | (UNP) | 7,434 |
| தர்மசிறி குருப்பு | (I) | 1,192 |
| **மஹர** | | |
| டீ.ஆர்.ஜயமான்ன | (CIC) | 147 |
| ஜே.ஏ.கே.பெரேரா | (CP) | 297 |
| திருமதி ஒலிவ் அமரசேகர | (LPP) | 386 |
| ஜே.பீ.சிறிவர்தன | (LSP) | 1,651 |



படிப்பகம்

| | | |
|---|---|---|
| ஜீ.பீ.அபேவிக்கிரம | (MEP) | 1,971 |
| ஆர்.ஏ.ரூபசிங்க | (SJS) | 186 |
| எஸ்.கே.கே.சூரியாராச்சி | (SLFP) | 15,098 |
| திருமதி சிறிதத்த ஜெயக்கொடி | (UNP) | 9,002 |
| டீ.சி.ஜெயகொடி | (I) | 85 |
| **பதுளை** | | |
| ஜே.சீ.ரீ.கொத்தலாவல | (LSSP) | 4,499 |
| பி.எச்.பண்டார | (SLFP) | 4,775 |
| திருமதி லிலியன் பீரிஸ் | (UNP) | 3,549 |
| **கலிகமுவ** | | |
| ஜீ.எவ்.பெரேரா | (BRP) | 200 |
| ரிச்சர்ட் எம்.ராஜபக்ஷ | (CP) | 107 |
| அலெக்சான்டர் பஸ்நாயக்க | (LSSP) | 5,254 |
| எஸ்.ஏ.பி.சமரசுந்தர | (MEP) | 383 |
| பி.ஏ.பீ.பி.பாலசூரிய | (SLFP) | 5,484 |
| ஈ.டி.பி.லேக்கம்கே | (SMP) | 188 |
| திருமதி விமலா கன்னங்கர | (UNP) | 9,025 |
| ஏ.சீ.எம்.ராசிக் | (I) | 217 |
| **ஹக்மன** | | |
| துடோர் வகிஸ்ட்ட | (CP) | 1,318 |
| திருமதி.பி.சோமவதி மெத்திவ் | (LPP) | 2758 |
| ரோய் ராஜபக்ஷ | (MEP) | 9,083 |
| விக்டர் ரத்னாயக்க | (UNP) | 6,884 |
| சேபால ரத்னாயக்க | (I) | 1,500 |
| **மஸ்கெலிய** | | |
| வீ.கே.வெள்ளையர் | (CDC) | 1,349 |
| பீ.பீ.பிள்ளை | (CIC) | 19 |
| யாகந்தவல சேனநாயக்க | (CP) | 121 |
| திருமதி எ.பி.ஜயதிலக்க | (LPP) | 194 |
| பீ.காமினி ஆரியதிலக்க | (LSSP) | 2,256 |
| எஸ்.ஜினதாஸ | (MEP) | 3,031 |
| ஆர்.பண்டார கண்ணேவ | (SLFP) | 631 |
| டொனால்ட் ரணவீர | (UNP) | 4,192 |
| பியதாச வெல்ஹேன | (I) | 116 |
| **ஊவா பரணகம** | | |
| திருமதி குசுமா ராஜரட்ன | (JVP) | 4,662 |
| கே.வி.டொன் சுகததாச | (LPP) | 209 |
| ஹென்றி தர்மசேன | (MEP) | 352 |
| என்.பி.பம்ரபான்ன | (UNP) | 2,695 |
| எஸ்.பி.தெலுகஹாவத்த | (I) | 1,790 |
| டி.சி.விஜயசூரிய | (I) | 855 |
| எம்.டொனிஸ்டர் பெரேரா | (I) | 440 |
| ஈ.பி.திம்புலான | (I) | 429 |

| | | |
|---|---|---|
| **கிரிஎல்ல** | | |
| எச்.அத்தநாயக்க | (LPP) | 131 |
| பி.பி.விஜயசுந்தர | (LSSP) | 5,270 |
| திருமதி குசும்சிறி குணவர்தன | (MEP) | 3,906 |
| டபிள்யு.எல்.பீ.ஜயவர்தன | (SLFP) | 4,654 |
| ஏ.ஈ.பி.கிரிஎல்ல | (UNP) | 6,816 |
| **மொரட்டுவ** | | |
| வின்னி டி சில்வா | (CIC) | 65 |
| வட்சன் பெர்ணாண்டோ | (CP) | 1,091 |
| பி.ஜே.ரி.ரொட்றிகோ | (LPP) | 356 |
| W.T.W.M.பெர்னாண்டோ | (LSSP) | 9,427 |
| திருமதி.ரி.கே.நீனா விஜயசூரிய | (SJS) | 2,137 |
| எம்.ருஸ்கின் பெர்ணாண்டோ | (UNP) | 10,262 |
| சாமுவேல் பெர்ணாண்டோ | (I) | 90 |
| எம்.எஸ்.ஒலிவர் ஸ்டெம்போ | (I) | 197 |
| லியானார்ட் டிமெல் | (I) | 648 |

## 1960 யூலை தேர்தல்

| | | |
|---|---|---|
| **ஊவா பரணகம** | | |
| குசுமா ராஜரட்ன | (JVP) | 6,473 |
| எஸ்.பி.தெலுங்காவத்த | (UNP) | 4,830 |
| **தெஹியோவிட்ட** | | |
| சோமா விக்கிரசசிங்க | (LSSP) | 8,593 |
| குசும்சிறி குணவர்தன | (MEP) | 481 |
| ஏ.எம்.விஜயமான்ன | (UNP) | 7,990 |
| **கலிகமுவ** | | |
| பீ.ஏ.பி.ஏ.பாலசூரிய | (SLFP) | 10,873 |
| விமலா கன்னங்கர | (UNP) | 9,791 |
| **கொழும்பு வடக்கு** | | |
| விவியன் குணவர்தன | (LSSP) | 11,363 |
| வி.ஏ.சுகததாச | (UNP) | 11,507 |

www.padippakam.com

# 6வது பாராளுமன்றம்

1960 யூலை தேர்தலோடு எற்படுத்தப்பட்ட ஐந்தாவது பாராளுமன்றத்தில் இரு பெண்கள் மாத்திரமே பொதுத் தேர்தலினூடாக தெரிவு செய்யப்பட்டாலும் இடைத்தேர்தல் ஒன்றின் மூலமாக இன்னுமொரு பெண்ணும் அங்கம் வகிக்க முடிந்தது.

1961ம் ஆண்டு குருணாகல் தொகுதியில் நடந்த இடைத் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட போதும் தோல்வியடைய நேரிட்டது. நான்கு வேட்பாளர்களோடு போட்டியிட்ட திருமதி தம்மிட்ட ஏ.பீ.குமாரிஹாமி 147 வாக்குகளை மாத்திரமே பெற்றார்.

### பொரல்ல இடைத்தேர்தல்

1964 ஜனவரி மாதம் 18ம் திகதி பொரல்ல தொகுதியில் நடத்தப்பட்ட இடைத் தேர்தல் குறிப்பிடத்தக்க அம்சங்களை மட்டுமே கொண்டிருந்தது. சில வருடங்களாக கட்சிகளாக பிளவுபட்டிருந்த இடதுசாரிக் கட்சிகளான LSSP, MEP, CP ஆகிய கட்சிகள் இணைந்து தோற்றுவித்த "இடது சாரிகள் ஐக்கிய முன்னணி": பொரல்ல இடைத் தேர்தலின் போது பலம் பெற்ற கட்சியாக காணப்பட்டது.

டொக்டர் டபிள்யூ.டி.டி. சில்வாவின் மரணத்தைத் தொடர்ந்து வெற்றிடமான பொரல்ல தொகுதியில் இடம்பெறப்போகும் இடைத் தேர்தலில் போட்டியிட இடது சாரிகள் ஐக்கிய முன்னணி தீர்மானித்தது. அதன்படி விவியன் குணவர்த்தனவை தேர்தலில் நிறுத்த முடிவு செய்தனர். பொரல்ல தொகுதியின் காலஞ்சென்ற முன்னாள் உறுப்பினர் டொக்டர் டி.டி. சில்வாவின் மனைவியை அத் தொகுதியில் போட்டியிடச் செய்தால் அனுதாப வாக்குகளைப் பெறச்செய்து வெற்றி பெறச் செய்யலாம் என சுதந்திர சோஷலிச முன்னணி கருதியது. அதன்படி டொக்டர் சில்வாவின் மனைவி கமலா டி சில்வாவை வேட்பாளராக நிறுத்தியது சு.சோ.மு இவர்களிருவரைத் தவிர சுயேட்சை வேட்பாளர்கள் இருவரும் போட்டியிட்டனர். ஐ.தே.க. தனது வேட்பாளராக ( பின்னாளில் பாராளுமன்ற சபாநாயகரான) எம்.எச். முஹமட்ஐ நிறுத்தியது. இறுதியில் ஐ.தே.க. வேட்பாளர் எம்.எச். முஹமட்டை 423 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்ற விவியன் குணவர்தன இடதுசாரி ஐக்கிய முன்னணியின் முதலாவது: மற்றும் ஒரேயொரு உறுப்பினராகவும் காணப்பட்டார்.



படிப்பகம்

பொரல்ல இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற சில மாதங்களில் ஸ்ரீ.ல.சு.க. சமசமாஜ கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டது. திருமதி விவியன் குணவர்த்தன உள்ளூராட்சி நிர்வாக பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இலங்கையில் பிரதி அமைச்சராக பதவி வகித்த முதற் பெண்மணி எனும் பெருமை விவியனுக்கு உரியது. இலங்கையில் அதிக தேர்தலில் பங்கு பற்றிய சாதனையையும் விவியனைச் சாரும். எட்டுத்தடவைகள் போட்டியிட்டு மூன்று தடவை வெற்றி பெற்றவர் விவியன்.

**6வது பாராளுமன்றத் தேர்தல்**

ஸ்ரீ.ல.சு.க.- சமசமாஜக் கூட்டரசாங்கம் நம்பிக்கை வாக்கெடுப்பின் போது ஒரு வாக்கினால் தோல்வியுற்றது. 1964 டிசம்பர் 3ம் திகதியன்று அரசாங்கத்திலிருந்து 14 பேர் விலகி எதிர்க்கட்சியில் சேர்ந்து வாக்களித்திருந்தனர். இவர்களில் சபைத் தலைவரும் விவசாய,காணி, போக்குவரத்து அமைச்சர் சீ.பி.டி. சில்வாவும் ஒருவர்.

இவ் வாக்கெடுப்பின் போது அன்றைய நிதியமைச்சர் கலாநிதி என்.எம். பெரேராவும் பேனாட் சொய்ஸாவும் தங்கள் அரச கடமை நிமித்தம் வெளிநாடு சென்றிருந்தார்கள்.

ஒரு அரசாங்க உறுப்பினர் பாராளுமன்றத்துக்கு வரும் வழியில் வாகனக் கோளாறினால் இடையிலேயே நின்றார். அரசாங்க உறுப்பினர்களில் ஒருவரான சௌமிய மூர்த்தி தொண்டமான் வாக்கெடுப்பின் போது நடுநிலைமை வகித்தார். மலையக மக்களுக்கெதிரான சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டு இரண்டு மாதங்கள் மட்டுமே ஆகியிருந்த நேரத்தில் திரு தொண்டமான் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்காமல் ஏன் நடுநிலைமை வகித்தார்? என தமிழ் அரசியல் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்ட போது, தான், அரசாங்கத்தின் நியமன எம்.பி. என்றும் தான் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிப்பது தார்மீக விரோதமென்றும் திரு. தொண்டமான் கூறியிருந்தார்.

எவ்வாறிருப்பினும் ஒரேயொரு வாக்கினால் அரசாங்கம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கவர்னர் வில்லியம் கோபல்லாவவினால் டிசம்பர் 17ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

அதன்படி 6வது பாராளுமன்றத்துக்கான அத்திவாரமிடப்பட்டது. 6வது பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் 1965 ஜனவரி மாதம் 11ம் திகதி செய்யப்பட்டது. இத்தேர்தலில் 393 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 13 பேர் பெண்கள். (இது மொத்த வேட்பாளர்களில் 3.56 வீதம்)

போட்டியிட்ட பெண்கள் பின்வரும் எண்ணிக்கையில் கட்சி ரீதியாக வகுக்கக் காணப்பட்டனர்.

ஐக்கிய தேசிய கட்சி - 3
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - 4
லங்கா சமசமாஜக் கட்சி - 2
மக்கள் ஐக்கிய முன்னணி - 1
தேசிய விடுதலை முன்னணி - 1
சுயேட்சை - 2

1965 மார்ச் 22ம் திகதி நடத்தப்பட்ட தேர்தலின் இறுதியில் 4 பெண்கள் மாத்திரமே வெற்றி பெற்றனர்.

www.padippakam.com

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் முன்னாள் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தேர்தலில் போட்டியிட்ட முதற் சந்தர்ப்பமிது. இவர் அத்தனகல்ல தொகுதியில் போட்டியிட்டு 16,535 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். ஸ்ரீ.ல.சு.க சார்பில் மீரிகம தொகுதியில் போட்டியிட்ட ஷீவா ஒபேசேகர 844 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். தேசிய விடுதலை முன்னணி சார்பில் ஊவா பரணகம தொகுதியில் போட்டியிட்ட குசுமா ராஜரட்ன 1951 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். கல்கமுவ தொகுதியில் ஐ. தே.க. சார்பில் போட்டியிட்ட விமலா கன்னங்கர 1687 வாக்குகளால் வெற்றி பெற்றார்.

6வது பாராளுமன்றத்தல் நான்கு பெண்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்ட போதும் 1970 மார்ச் 25ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்ட வேளை மேலும் இருவர் அங்கம் வகிக்கக் காணப்பட்டனர். இவர்கள் இடைத் தேர்தலின் மூலமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவிஸ்ஸாவெல தொகுதியில் ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சோமா விக்கிரம நாயக்க: மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்ட பிலிப் குணவர்த்தனாவுடன் போட்டியிட்டு தோல்விக்குள்ளானார். இவர்கள் இருவர் மாத்திரமே இத் தொகுதியில் போட்டியிட்டார்கள்.

மீரிகம தொகுதியில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட விமலா விஜேவர்தன: ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்ட பீட்டர் ஒபேசேகரவோடு போட்டியிட்டு 744 வாக்குகளால் தோல்வியுற்றார்.

கலகெதர தொகுதியில் ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்ட தமரா குமாரி இலங்கரத்ன: ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட ஜி.டி. பண்ராவுடன் போட்டியிட்டு 574 வாக்குகளில் தோல்வியுற்றார்.

இதைவிட விவியன் குணவர்தன மீண்டும் லங்கா சமசமாஜ கட்சியின் சார்பில் பொரல்ல தொகுதியில் போட்டியிட்ட போதும் ஐ.தே.க. வேட்பாளர் எம்.எச்.மொஹமட்டினால் 1692 வாக்குகளால் தோல்வியுற்றார். ஏற்கனவே இடதுசாரி அமைப்புகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டிருந்த இடதுசாரி ஐக்கிய முன்னணி மீண்டும் பிளவு பட்டு தனித்தனியாக போட்டியிட்டமையாலேயே இந்தத் தோல்வி ஏற்பட்டது என அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்த இலேசான சந்தர்ப்பம் பொரல்ல தொகுதி லங்கா சமசமாஜ கட்சியிலிருந்து ஐ.தே.க.வின் கைக்கு மாற வழிவகுத்ததுடன், அதுவே இதுவரை நிலைத்து வருகிறது.

**1964-01-18 பொரல்ல இடைத்தேர்தல்**

| | | |
|---|---|---|
| பி.நந்தசேன சமரகோன் | JVP | 47 |
| விவியன் குணவர்தன | ULF | 12,529 |
| எம்.எச்.மொஹம்மட் | UNP | 12,106 |
| திருமதி கமலா டி சில்வா | in-soc | 1,356 |
| ஜே.எம்.ரணதுங்க | I | 156 |

**1961-03-29 குருநாகல் இடைத் தேர்தல்**

| | | |
|---|---|---|
| ஹரிச்சந்திர விஜேதுங்க | JVP | 386 |
| ஜயா பத்திரன | SLFP | 10807 |
| டி.பி.வெலகெதர | UNP | 9834 |
| டிடபிள்யு.நரன்பனாவ | I | 173 |
| திருமதி தம்மிட்ட ஏ.டீ.குமாரி | I | 147 |



படிப்பகம்

www.padippakam.com

## 1965 பொதுத்தேர்தல்

| | | |
|---|---|---|
| **அத்தனகல்ல** | | |
| ஜே.கஸ்தூரியாராச்சி | MEP | 288 |
| திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | 26,150 |
| டீ.எல்.டபிள்யூ.ஜீ.செனவிரத்ன | UNP | 9,615 |
| யு.எச்.டீ.எஸ்.விஜேதுங்க | I | 185 |
| **அவிஸ்ஸாவெல்ல** | | |
| பிலிப் குணவர்தன | MEP | 22,093 |
| திருமதி சோமா விக்ரமநாயக்க | SLFP | 10,766 |
| **மீரிகம** | | |
| எம்.பீ.ரத்நாயக்க | MEP | 235 |
| ஜேம்ஸ் பீட்டர் ஒபேசேகர | SLFP | 17,872 |
| திருமதி விமலா விஜேவர்தன | UNP | 17,028 |
| கே.பி.பி.கருணாநாயக்க | I | 1,956 |
| எம்.கே.டபிள்யூ.பொன்சேக்கா | I | 1,015 |
| **கலகெதர** | | |
| பீ.பீ.ஹேரத் | MEP | 83 |
| திருமதி தமரா குமாரி இலங்கரத்ன | SLFP | 9,559 |
| டபிள்யூ.எம்.ஜி.டி. பண்டா | UNP | 10,133 |
| மொஹம்மட் புஸாரி | I | 191 |
| **பாணந்துர** | | |
| லெஸ்லி குணவர்தன | LSSP | 20,033 |
| திருமதி ஜோன் எம்.டி.பொன்சேகா | UNP | 16,005 |
| **கலிகமுவ** | | |
| டீ.கருணாதேவ | MEP | 215 |
| பி.பீ.பாலசூரிய | SLFP | 12,446 |
| திருமதி விமலா கன்னங்கர | UNP | 14,133 |
| **பெல்மடுல்ல** | | |
| எம்.பீ.ஜோதிபால | MEP | 522 |
| டபிள்யூ.ஏ.கருணாசேன | SLFP | 11,917 |
| திருமதி சீதா மொலமூரே செனவிரத்ன | UNP | 8,577 |
| கே.ஏ.ரணசிங்க | I | 97 |
| **பொரல்ல** | | |
| திருமதி விவியன் குணவர்தன | LSSP | 13,218 |
| பிரஜா பாலடி சில்வா | MEP | 374 |
| எம்.எச்.மொஹம்மட் | UNP | 14,910 |
| டி.சி.அபேவர்தன | I | 100 |
| **மொரட்டுவ** | | |
| திருமதி குசலா அபேவர்தன | LSSP | 16,020 |
| எம்.ருஸ்வின் பெர்னாண்டோ | UNP | 11,593 |
| எம்.றஸ்கின் பெர்னாந்து | LSSP | 1,048 |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| **கொலன்னாவை** | | |
| திருமதி குசும்சிறி குணவர்தன | MEP | 12,439 |
| டி.எஸ்.சமரசிங்க | SLFP | 13,267 |
| டி.என்.சமரகோன் | I | 249 |
| டி.பி.எம்.பத்திரன | I | 102 |
| கே.ஈ.பெரேரா | I | 89 |
| எஸ்.டி.ஏ.பெரேரா | I | 59 |
| **ஊவாபரணகம** | | |
| திருமதி குசுமா ராஜரட்ன | JVP | 6,839 |
| எஸ்.பி.தெலுங்காவத்த | SLFP | 3,558 |
| எம்.பி.பம்பரபான்ன | I | 4,888 |
| **புளத்சிங்கள** | | |
| மங்கள முனசிங்க | LSSP | 14,023 |
| டீ.எஸ்.தர்மசேன | MEP | 77 |
| திருமதி ரனித்த எஸ்.ரத்நாயக்க | SLFP | 258 |
| பிபிலே பொன்சேகா | UNP | 10,433 |
| எட்மன் சமரகொடி | VLSSP | 278 |
| பியதாச மலல்கொட | I | 344 |
| **வத்தேகம** | | |
| ஏ.ஜி.பெர்னாண்டோ | SLFP | 9,461 |
| அலோசியஸ் வீரக்கோன் | UNP | 12,373 |
| திருமதி மொனிக்கே சமரகோன | I | 117 |



படிப்பகம்

www.padippakam.com

# உறவு முறைச் செல்வாக்கு அதிகளவு பங்கு வகித்த பாராளுமன்றம்

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் அதிக தேர்தல் முறைபாடுகள் செய்யப்பட்டது 1965 தேர்தலின் பின்னரேயே. 6வது பாராளுமன்ற காலப்பகுதியில் மொத்தம் 42 தேர்தல் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இம்முறைப்பாடுகளில் 12 முறைப்பாடுகள் தொடர்பாக 12 இடைத்தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்தன.

1966 ஒக்டோபர் 24ம் திகதி பலாங்கொட தொகுதியில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிளிபர்ட் ரத்வத்தவின் மனைவி ' மல்லிகா எல்லவல' ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சார்பில் போட்டியிட்டு 1740 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

அதே போல் 1967 ஜனவரி 15ம் திகதி தொடங்கஸ்லந்த தொகுதியில் இடம்பெற்ற இடைத் தேர்தலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.ஆர்.டபிள்யூ. ராஜபக்ஷவின் மனைவி லடீஷியா ராஜபக்ஷ ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றியடைந்தார். இவர், தன்னுடன் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட 'அலவத்துவல' என்பவரைவிட 393 மேலதிக வாக்குகளைப் பெற்றிருந்தார்.

1967 பெப்ரவரி 28ம் திகதி கொலன்னாவ தொகுதியில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் போட்டியிட்ட மூவரில் இருவர் பெண்கள். ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் பிலிப் குணவர்தனாவின் மனைவி குசும்சிறி குணவர்தன. மற்றவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டி.எஸ். சமரசிங்கவின் மனைவி திலகவதி சமரசிங்க. இவர்கள் இருவருமே தேர்தலில் தோல்வியடைந்தனர். இத்தொகுதியில் ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்ட டி.பி.இலங்கரத்ன 3363 மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

1967ம் ஆண்டு ஒக்டோபர் 20ம்திகதி பெல்மடுல்ல தொகுதியில் மீண்டும் போட்டியிட்ட சீதா மொலமூரே செனவிரத்ன 2785 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

1967ம் ஆண்டு யூலை 13ம் திகதி நீர்கொழும்பு தொகுதியில் நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்ட திருமதி எச்.ஜி.சத்தார் 1037 வாக்குகளை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தார்.

**திருமதி சொய்சா**

திருமதி எட்லின் டி.சொய்சா 1958இலேயே மேற்சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவர் 1943 வரை இதில் அங்கம் வகித்தார். அத்துடன் 1958ல் சமூக சேவைகளுக்கான எலிஸ் கொத்தலாவல தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டவர். இவர் ஒன்றிணைந்த உலக பெண்கள் சம்மேளனத்திலும் 1957ல் அங்கத்துவம் பெற்றார். இவர் சிறுவர் மற்றும் பெண்களின் நலன் பேணும் நடவடிக்கைகளுக்காக தனது சொத்தில் பெருமளவு தொகையை செலவு செய்தார் என சொல்லப்படுகிறது.

இலங்கை 1972ல் "சுதந்திர குடியரசு" நாடாக ஆவதற்கு முதலே மேற்சபை என அழைக்கப்பட்ட செனற்சபை 1970ல் ஐக்கிய முன்னணி அரசால் கலைக்கப்பட்டது. அப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக மேலும் இரு பெண்கள் காணப்பட்டனர். ஒருவர் 1954 லேயே தெரிவு செய்யப்பட்ட திருமதி கிளோடா கிட்சிலான் ஜயசூரிய. அடுத்தவர் 1947ல் நியமிக்கப்பட்ட திருமதி சீதா மொலமூரே செனவிரத்ன. இவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் முதற் பெண் உறுப்பினரான எட்லின் மொலமூரேவின் மகளாவார். இவர் 1967ல் மேற்சபைக்கு நியமிக்கப்பட்டு 1970வரை அங்கம் வகித்தார். சிறுவர் மற்றும் இளைஞர் நலன் பேண் சங்கத்தின் தேசிய சபையின் தலைவராகவும், மஹிலா சமித்தி, இளம் கிறிஸ்தவ பெண்கள் சங்கம் என்பவற்றில் முக்கிய பதவிகளையும் வகித்து செயற்பட்டவர் இவர். 1989ல் தேசபந்து விருது பெற்ற சீதா செனவிரத்ன, அவரது கணவர் எல்.ஜே.டி.ஸ். செனவிரத்ன தலைவராக இருந்த பொதுச் சேவைகள் ஆணைக்குழுவில் உறுப்பினராகவும் இருந்தார்.

திருமதி கிளோடா ஜயசூரிய அவிஸ்ஸாவெல தொகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பர்னாட் ஜயசூரியாவின் மனைவி. 1952 பொதுத் தேர்தலின் போது அவிஸ்ஸாவெல்ல தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்டு 929 வாக்குகளால் தோல்வியடைந்தார். 1956ல் மீண்டும் அத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் பெண்கள் சம்மேளனத்தின் தலைவியாகப் பதவி வகித்து தொழிற்பட்ட இவர் பின்னாளில் மேற் சபை உறுப்பினரான எம். டீகிச்சிலான் அவர்களைத் திருமணம் புரிந்தார்.

**லடீசியா**

தொடங்கஸ்லந்த தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட லடீசியா ராஜபக்ஷ கிராண்ட்பாஸ் புனித யோசப் கன்னியர் மடத்தில் கல்வி கற்றவர். மேலும் மஹிலா சமித்தி இயக்கம் போன்ற அமைப்புகளிலும் சேர்ந்து இயங்கியவர். இலங்கை வரலாற்றிலேயே ஞாயிற்றுக்கிழமை நாளில் நடத்தப்பட்ட ஒரேயொரு இடைத்தேர்தல் இந்த தொடங்கஸ்லந்த இடைத்தேர்தல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**மல்லிகா ரத்வத்தை**

இவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் மைத்துணி என்பது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

சப்பிரகமுவா மாகாணத்தின் பிரபலமான புள்ளிகளில் ஒருவரான "எல்லாவல"வின் மகளான இவர் ரத்தினபுரி பெர்குயிஷன் பெண்கள் பாடசாலை, மற்றும் கொழும்பு சென் பிரிஜ்ஜட் கன்னியர் மடத்திலும் கல்வி கற்றார். மல்லிகா, பாடசாலை வாழ்க்கையிலிருந்து வெளியேறிய பின் "லலித கலா நிறுவனம்" எனும் நிறுவனத்தில் ஆசிரியையாகச் சேவை புரிந்தார்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் சகோதரரான கிளிப்பர்ட் சேனக்க ரத்தவத்தவை விவாகம் செய்த மல்லிகா திருமணத்தின் பின் அரசியல் மற்றும் பொது வேலைகளில் ஈடுபடத் தொடங்கினார்.

1966 இடைத் தேர்தலில் 1740 வாக்குகளால் வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மல்லிகா 1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஐ.தே.க.வின் சார்பில் போட்டியிட்ட சீதா மொலமூரே செனவிரத்தனவை தோற்கடித்து 7189 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று மீண்டும் பாபராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1977 பொதுத் தேர்தலின் போது பலாங்கொடை தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்ததன் பின்னர் வேறு தேர்தல்களில் இவர் போட்டியிடவில்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்கா முதற் பெண் பிரதமராக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டு செனட்சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்ட வேளை செனட்சபையின் பிரதித் தலைவராக ஒரு பெண் பதவி வகிக்கக் காணப்பட்டார். அவர் திருமதி எட்லின் மொலமூரே. வரலாற்றில் இப்பதவியை வகித்த ஒரே பெண் இவர். இவர் இலங்கை பாராளுமன்றத்தின் முதற்பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. செனட்சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முதற் பெண்ணும் இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை மேற்சபையில் இன்னொரு பெண்ணும் அங்கம் வகித்தார். அவர் திருமதி ஏ.எல்வின் டி.சொய்ஸா. இவர் தொழிலதிபர்களில் ஒருவரான சேர் வில்பட் டி சொய்ஸாவின் மனைவியாவார். இவர் சமூக சேவை மற்றும் பெண்கள் அமைப்புக்கள் பலவற்றில் முக்கிய பதவிகள் வகித்து வந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

### 1966-10-24 பலாங்கொட தொகுதி இடைத் தேர்தல்

| | | |
|---|---|---|
| திருமதி மல்லிகா ரத்வத்த | SLFP | 1,447 |
| எம்.எல்.எம்.அபுசாலி | UNP | 12,731 |
| என்.பியதாச | I | 338 |

### 1967-01-15 தொடங்கஸ்லந்தை தொகுதி இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| திருமதி லடீசியா ராஜபக்ஷ | SLFP | 14,164 |
| எஸ்.டபிள்யூ.அலவத்துவல | UNP | 13,771 |
| எஸ்.டீ.சமரபால | I | 178 |

### 1967-2-28 கொலன்னாவ தொகுதி இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| திருமதி குசும்சிறி குணவர்தன | MEP | 14,462 |
| டீ.பீ.இலங்கரத்ன | SLFP | 17,825 |
| திருமதி சமரசிங்க | I | 380 |

### 1967-10-20 பெல்மடுல்ல தொகுதி இடைத் தேர்தல்

| | | |
|---|---|---|
| டபிள்யு.ஏ.தர்மதாச | SLFP | 12,627 |
| சீதா மொலமூரே செனவிரத்ன | UNP | 9842 |

### 1967-7-13 நீர்கொழும்பு தொகுதி இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| எஸ்.திசாநாயக்க | SLFP | 11,463 |
| டென்சில் பெர்ணான்டோ | UNP | 18,751 |
| ஜெஸ்டின் பெர்ணான்டோ | I | 1,929 |
| திருமதி எச்.ஜி.சத்தார் | I | 1,037 |
| பெட்ரிக் மிரால் | I | 389 |
| துரின் பெர்ணான்டோ | I | 207 |



படிப்பகம்

www.padippakam.com

# குடியரசின் முதற் பெண் பிரதமர்

1970ஆம் ஆண்டு தேர்தல், உலகம் இலங்கையைக் கூர்ந்து கவனிக்கச் செய்த தேர்தலாகக் கருதலாம். குறிப்பாக பெண்கள் அரசியலை குறிப்பிடலாம்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தின் ஐந்து வருட கால ஆட்சி முடிவு பெற்று 1970 மார்ச் 28ஆம் திகதி பிரதிநிதிகள் சபை கலைக்கப்படும் போது சிறீலங்கா சுதந்திர கட்சி-சமசமாஜ-கம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டிருந்தது. இவ் ஐக்கிய முன்னணியின் தலைவியாக சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கை 1960 யூலை தேர்தலில் பெற்ற சாதனையை ஸ்திரப்படுத்துவதாக இந்த 1970 தேர்தல் இருந்தது எனலாம்.

1970ம் ஆண்டு ஏப்ரல் 23ம் திகதி ஏழாவது பாராளுமன்றத்தை அமைப்பதற்காக 440 பேர் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தனர். இவர்களில் 14 பேர் பெண்கள்.

இவர்கள் கட்சி ரீதியாகப் பின்வருமாறு காணப்பட்டனர்.

1. சிறீலங்கா சுதந்திரக்கட்சி - 4
2. லங்கா சமசமாஜக் கட்சி - 2
3. ஐக்கிய தேசியக் கட்சி - 3
4. மக்கள் ஐக்கிய முன்னணி - 1
5. சிங்கள மக்கள் கட்சி - 4

( சிங்கள மாகாஜன பக்ஷய )

இத்தேர்தலில் மூன்று தம்பதிகள் போட்டியிட்டனர். அவர்கள் பிலிப் குணவர்தனா - குசுமா குணவர்தனா, டீ. பி. இலங்கரத்ன - தமரா குமாரி இலங்கரத்ன, லெஸ்லி குணவர்தனா - விவியன்



படிப்பகம்

www.padippakam.com

குணவர்தனா.

இவர்களில் டீ.பி. இலங்கரத்ன லெஸ்லி குணவர்த்தனா சோடிகளே வெற்றி பெற்றிருந்தனர். பிலிப். குசுமா ஆகிய இருவரும் இரு தொகுதிகளிலும் தோல்வி அடைந்தனர். 1970 மே 27ம் திகதி இடம் பெற்ற தேர்தல் சிறப்பு மிக்க தேர்தல்களில் ஒன்று எனச் சொல்லலாம்.

இத் தேர்தலின் போது 1956ல் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்காவின் கொள்கையை முன்னெடுப்பதற்காகவும் சோஷலிச ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதனை நோக்கமாகவும் கொண்டு 1968ல் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய முன்னணி 156 தொகுதிகளில் 115தொகுதிகளை வென்றது. இதன் மூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி இத்தேர்தலின் போது 128 தொகுதிகளில் போட்டியிட்டிருந்தாலும் 17 தொகுதிகளில் மாத்திரமே வென்றது.

பெண்களைப் பொறுத்தவரையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட நால்வரும் வென்றார்கள். அதேபோல் லங்கா சமசமாஜ கட்சியின் சார்பில் போட்டியிட்ட இருவரும் வென்றார்கள். ஏனைய அனைவரும் தோல்வியடைந்தனர்.

அத்தனகல தொகுதியில் போட்டியிட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கா 21.723 அதிகப்படியான வாக்குகள் பெற்று வென்றார்.

7.180 அதிகப்படியான வாக்குகளை பலங்கொட தேர்தற் தொகுதியில் பெற்று வென்ற மல்லிகா ரத்வத்த இரண்டாவது தடவையும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். இத் தொகுதியில் நான்கு பேர் போட்டியிட்டிருந்த போதும் இரு பெண்களுக்கிடையிலேயே போட்டி காணப்பட்டது. இத் தேர்தலில் மல்லிகாவுக்குப் போட்டியாக ஐ.தே.கவின் சார்பில் சீதா மொலமூரே செனவிரத்ன நிறுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1965ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 844 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று மீரிகம தொகுதியில் வென்ற ஷீவா ஒபேசேகர இம்முறை 5323 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று அதே தொகுதியில் வென்றார்.

1965-1970 காலப்பகுதியில் பிரதிநிதிகள் சபையில் முக்கிய பதவி வகித்த இவர் 1970ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் 1975இல் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

2560 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று கலகெதர தொகுதியில் வென்ற தமரா குமாரி இலங்கரத்ன 1949இலிருந்து 1952வரை கண்டி தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினராகச் சேவை செய்த அனுபவம் பெற்றவர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பெண்கள் அமைப்பின் உப தலைவியாக இவர் கடமையாற்றியவர்.

1970இன் பின் பாராளுமன்ற தலைமைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டதுடன் பாராளுமன்ற க் கூட்டங்களிலும் முக்கியத்துவம் பெற்றவராகத் திகழ்ந்தவர்.

### குசலா அபயவர்தன

பொரல்ல தொகுதியில் 592 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வென்ற குசலா அபயவர்தன முதற் தடவையாக பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். லங்கா சமசமாஜ கட்சியின் சார்பில் போட்டியிட்ட இவர். ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தில் தொழில் வாய்ப்பு. வீடமைப்பு அமைச்சராகப் பதவி வகித்த எம். எச். மொகமட்டை



படிப்பகம்

www.padippakam.com

தோல்வியுறச் செய்திருந்தார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இரண்டாவது தடவையாகவும் இலங்கையின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். அதுவரை காலம் 10 ஆண்டுகளுக்குள் இரண்டு முறை பிரதமராக நியமிக்கப்பட்டவரும் ஒரு தடவை எதிர்க்கட்சித் தலைவியாகப் பதவி வகித்தவரும் சிறிமாவோ பண்டாரநாயக்காவே ஆவார்.

1970ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் லுசாகாவில் நடந்த அணிசேரா நாடுகளின் (Non-Aligned Movement) மூன்றாவது மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் சிறிமா அவ் அமைப்பின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். "இறுதி வரையும், பூரணமாக வல்லரசுகளிடம் அடிமைப்பட்டிருப்பதை இல்லாதொழிப்பதே எமது பிரதான இலக்காக இருக்க வேண்டும்" என அம்மாநாட்டில் உரையாற்றியிருந்தார். "ஏகாதிபத்தியத்திற்கும் காலனித்துவத்திற்கும் எதிராகத் தேசிய விடுதலைக்காகப் போராடும் சகல இனங்களுக்கும் இலங்கை உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்கும்" என தனது உரையின் இறுதியில் தெரிவித்திருந்தார்.

1973மே 13ம் திகதி அல்ஜீரியாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் நான்காவது மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிச் சென்றிருந்தார். 1971 ஜனவரியில் சிங்கப்பூரில் இடம் பெற்ற பொதுநலவாய நாடுகளின் பிரதமர்களின் மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகவும் சிறிமா கலந்து கொண்டிருந்தார்.

1972 மே மாதம் 22ம் திகதி இலங்கை குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டதன் பின் இலங்கை சோஷலிச ஜனநாயகக் குடியரசின் முதற் பிரதமராக சிறிமா காணப்பட்டார்.

1976 ஒகஸ்ட் மாதம் 16ம் திகதி இலங்கையில் 86 நாடுகள் கலந்து கொண்ட அணிசேரா நாடுகளின் ஐந்தாவது மாநாடு ஆரம்பமானது. அத்தினத்தை ஸ்ரீலங்காவுக்கு சிறப்புத் தந்த ஒரு தினமாகக் கொள்வர். இம் மாநாட்டின் போது அணி சேரா நாடுகளின் தலைவராக சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப்பட்டார். பெண் ஒருவர் அப் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதற் சந்தர்ப்பம் அதுவே. 1979ல் கியூபா நாட்டில் ஹவானா நகரில் ஆறாவது மாநாடு நடை பெறும் வரையில் அப்பதவியில் திருமதி சிறிமாவே இருந்தார்.

அணிசேரா மாநாட்டின் புதிய தலைவராக இலங்கைப் பிரதமர் நியமிக்கப்பட்டதைப் பற்றி சாம்பிய ஜனாதிபதி பேராசிரியர் கெனத் கவுண்டா/ சைபிரஸ் ஜனாதிபதி மகாரியோஸ்/ வியட்நாம் சோஷலிச அரசின் பிரதமர் பேம் வென் டொங்/ பனாமா ஜனாதிபதி டமார் டொரிஜோஸ்/ அராரே, கயானா பிரதமர் போர்பஸ் பர்ன்ஹம், மற்றும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஆகியோர் உலகத்தின் முதலாவது பெண் பிரதமரின் தலைமையை தாங்களும் ஏற்றுக் கொண்டோம் எனும் கருத்துப் பொதிந்த உரையை ஆற்றியிருந்தனர். திருமதி சிறிமாவை தலைவர் பதவிக்கு முன்மொழிந்த மிசர் (எகிப்து) ஜனாதிபதி அன்வர் சதாத் உரையாற்றும் போது இது வரை காலம் அணிசேரா கூட்டமைப்புக்கு திருமதி சிறிமாவோவினால் கிடைக்கப் பெற்ற ஒத்துழைப்பினாலும் அவர் உலகம் முழுவதும் பெற்றுள்ள அங்கீகாரத்தினாலும் மாநாட்டின் தலைமைப் பதவிக்கு அவரே பொருத்தமானவர் எனக் குறிப்பிட்டிருந்தார்.

திருமதி சிறிமாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் இந்த மாநாட்டின் போது இந்து சமுத்திரத்தை சமாதானப் பிராந்தியமாக்குதல் காலனித்துவ நாடுகளில் கடத்தப்பட்ட புராதன சொத்துக்களை மீளப்பெறுதல், அணி சேரா நாடுகளுக்கான வர்த்தக வங்கி ஒன்றை ஸ்தாபித்தல் ஆகிய மூன்றையும் மாநாடு அங்கீகரித்தது.



படிப்பகம்

www.padippakam.com

# சிறிமாவின் குடியியல் உரிமை பறிப்பு

### 1977ஆம் ஆண்டுத் தேர்தல்

1977ஆம் ஆண்டுத் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனு ூன் 6ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது. இவ்வாறு தாக்கல் செய்த 756 பேரில் 14 பேர் பெண்களாவர். இது மொத்த வேட்பாளர்களில் 1.9 வீதமாகும். இந்த 14 பேரில் நான்கு பேர் மட்டுமே தெரிவு பாராளுமன்றத்துக்கு செய்யப்பட்டனர். இது மொத்த தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் 2.3 வீதமாகும். 1977 பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பெண்கள் பின்வரும் ரீதியில் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி -3, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி -4, லங்கா சமசமாஜக் கட்சி -2, கொம்யூனிஸ்ட் கட்சி -1, மக்கள் ஐக்கிய முன்னணி -2, சுயேட்சை -1.

இந்தத் தேர்தலில் 160 ஆசனங்களில் 140 ஆசனங்களை ஐ.தே.க. கைப்பற்றியது. இது மொத்த ஆசனங்களில் ஆறில் ஐந்து பங்காகும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எட்டு ஆசனங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களையும் கைப்பற்றின. எதிர்க் கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டார். 1977 ூலை 21இல் நடத்தப்பட்ட இத்தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அத்தனகல தொகுதியிலிருந்தும் ரேணுகா ஹேரத் வலப்பனை தொகுதியிலிருந்தும் விமலா கன்னங்கர கல்கமுவ தொகுதியிலிருந்தும், அமரா பியசீலி ரத்நாயக்கா வாரியபொல தொகுதியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதிகளவு பெண்கள் தெரிவு செய்யப்பட்டது இந்தத் தேர்தலிலேயே.

இந்தத் தேர்தலில் கட்டான தேர்தல் தொகுதியில் கொம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்ட திருமதி நந்தா



படிப்பகம்

www.padippakam.com

டி சில்வாவோடு தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவின் கணவர் விஜேகுமாரணதுங்கவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டிருந்தார். 1972 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஐக்கிய முன்னணி அரசாங்கம் நடைமுறைப் படுத்திய முதலாவது குடியரசு அரசியலமைப்பை நீக்கிவிட்டு 1978இல் ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்தோடு ஆட்சியேறிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், இரண்டாவது குடியரசு அரசியலமைப்பை நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

அது வரைகாலம் நடைமுறையில் இருந்த வெற்றிடமாகிற ஆசனங்களில் இடைத் தேர்தல் நடத்தி நிரப்பி விடும் முறை இவ்வரசியலமைப்பின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது. புதிய விகிதாசாரத் தேர்தல் முறையின் விளைவாக 1989ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்படும் போது புதிதாக ஏழு பெண்கள் தெரியப்பட்டனர்.

1977 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டிருந்த திரு.எம்.கனகரத்னத்தின் மரணத்தைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக அவரது சகோதரி ரங்கநாயகி பத்மநாதன் 1980 நவம்பர் 25ஆம் திகதி நியமிக்கப்பட்டார். திருமதி ரங்கநாயகி திரு.கனகரத்னத்தின் அந்தரங்க செயலாளராகவும், அதற்கு முதல் செயற்பட்டிருந்தார். மட்டக்களப்பு சென் வின்சன்ட் மகளிர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை கற்று பின்னர் (City of London College) சிடி ஒப் கொலேஜ்ஜில் பட்டப் படிப்பையும் முடித்துக் கொண்ட திருமதி ரங்கநாயகி சுதந்திர இலங்கையின் முதலாவது தமிழ் பெண் பாராளுமன்ற உறுப்பினரென்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

கரந்தெனிய தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பந்துல ஹேவா சேனாதீரவின் மரணத்தைத் தொடர்ந்து வெற்றிடமான ஆசனத்திற்கு அவரது மனைவி திருமதி சேபாலி சேனாதீரவை 1982இல் மார்ச் 26ஆம் திகதி ஐ.தே.க. நியமித்தது.

ஹேவாஹெட்ட ஆசனத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்த அனுர டேனியல் 1982 ஏப்ரல் 18ஆம் திகதி இராஜினாமா செய்து கொண்டதை அடுத்து அவரது சகோதரி திருமதி ரூபா சிறியானி டேனியல் ஜூலை மாதம் நியமிக்கப்பட்டார்.

ஹரிஸ்பத்துவ தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.பி. விஜேசிறி 1984 ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட குண்டசாலை இடைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இராஜினாமா செய்து கொண்டதை அடுத்து அவரது மனைவி திருமதி எல்.எம். விஜேசிறி நியமிக்கப்பட்டார்.

1977க்குப் பின் முதலாவது இடைத் தேர்தல் நவம்பர் 11ஆம் திகதி தெஹிவளையில் நடந்தது. அத்தொகுதி எம்.பியான எஸ்.டி.எஸ்.ஜயசிங்கவின் மரணத்தைத் தொடர்ந்து நடந்த அவ்விடைத் தேர்தலில் எஸ்.பி.எஸ்.ஜயசிங்கவின் புதல்வி சுனேத்திரா ரணசிங்க ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு 10,484 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

திருமதி சுனேத்திரா ரணசிங்க பிரதிச் சுகாதார அமைச்சராகவும் இப் பாராளுமன்றத்தின் போது நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதற்குப் பின்னர் சுகாதார மகளிர் விவகார அமைச்சராகவும் கல்விச் சேவை அமைச்சராகவும் தொடர்ந்து அமைச்சுப் பதவிகள் மாற்றப்பட்டன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அமைச்சு முறையின் போது மாவட்ட அமைச்சராக நியமிக்கப்பட்ட முதற் பெண்ணும் இவரே.



படிப்பகம்

www.padippakam.com

1987ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஸ்ரீஜயவர்தனபுர பாராளுமன்ற கட்டிடத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பின் போது காயமுற்று பின் இறந்த தெனியாய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கீர்த்திசேன அபேவிக்கரமவுக்குப் பதிலாக அவரது சகோதரி செல்வி.கீர்த்திலதா அபேவிக்கிரம 1987 செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

ரம்புக்கன தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும் சமூக சேவை அமைச்சராகவும் இருந்த அசோக்கா கருணாரத்தினவின் மரணத்தைத் தொடர்ந்து அவரது இடத்துக்கு அவரின் மகள் சமந்தா கருணாரத்தின நியமிக்கப்பட்டார். இவர் 1989 தேர்தலிலும் தெரிவு செய்யப்பட்டு சமூக புனர்வாழ்வு அமைச்சராகவும் கடமையாற்றியவர்.

இப்படியாக, 1977 யூலை 21ஆம் திகதி ஆறு வருட ஆட்சிக்காக தெரிவு செய்யப்பட்ட 8வது பாராளுமன்றம் 1988 டிசம்பரில் கலைக்கப்படும் போது பல பெண்கள் அங்கம் வகிக்கக் காணப்பட்டனர்.

இதற்கிடையில் 1980ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோனது. 8வது பாராளுமன்றத்தில் ஸ்ரீ.ல.சு.க.வை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே பெண் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மட்டுமே. அவரது உறுப்பினர் பதவியும் 1980இல் பறிபோனதோடு 1989 வரை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வேறு எந்தப் பெண்ணும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கவில்லை. 8வது பாராளுமன்றத்தில் மொத்தம் 11 பெண்கள் அங்கம் வகித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவே அதுவரை கால பெண் பிரதிநித்துவத்தில் கூடிய தொகையாகும்.

8வது பாராளுமன்றத்தின் போது, அமரா பியசீலி ரத்நாயக்க பிரதிப் போக்குவரத்து அமைச்சராகவும் பின் உள் நாட்டலுவல்கள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

8வது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்திருந்த பெண்கள் பின்வரும் ரீதியில் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர்.

**ஐ.தே.க.**

விமலா கனன்னங்கர
ரேணுகா ஹேரத்
அமரா பியசீலி ரத்நாயக்க
சுனேத்திரா ரணசிங்க
ரூபா சிறியானி டேனியல்
எல்.எம்.விஜேசிறி
தயா சேபாலி சேனாதீர
கீர்த்தி லதா அபேவிக்கரம
சமந்தா கருணாரத்ன

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

ரங்கநாயகி பத்மநாதன்

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி**

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க



படிப்பகம்

www.padippakam.com

# 1977 பொதுத் தேர்தல்

| | | |
|---|---|---|
| **ரத்மலான** | | |
| திருமதி விவியன் குணவர்தன | LSSP | 3,055 |
| சி.வி.குணரத்ன | SLFP | 12,141 |
| லலித் அத்துலத் முதலி | UNP | 19,972 |
| யு.ஜி.பெரேரா | I | 108 |
| **கடான** | | |
| திருமதி நந்தா டி சில்வா | CP | 1,045 |
| விஜய குமாரணதுங்க | SLFP | 19,738 |
| டி.நெல்சன் டி.சில்வா | I | 195 |
| டி.விஜயபால மென்டிஸ் | UNP | 23,950 |
| **அத்தனகல்ல** | | |
| கருணாரத்ன தம்புகல | CP | 335 |
| சந்திர குணசேகர | LSSP | 1,067 |
| சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | 30,226 |
| ஏ.டபிள்யு.ஜி.செனவிரத்ன | UNP | 19,563 |
| **களனி** | | |
| எல்.டபிள்யு.பண்டித | CP | 1,076 |
| ஆர்.எச்.ஜயசேகர | MEP | 85 |
| எரின் சேனநாயக்க | SLFP | 16,958 |
| ஏ.சிறில் மெத்திவ் | UNP | 23,477 |
| வீ.ஸ்டிபன் பெரேரா | I | 29 |
| எம்.டி.எச்.டி. சில்வா | I | 45 |
| பி.ஜி.லாரிஸ் | I | 29 |
| எச்.ஏ.செனவிரத்ன | I | 162 |
| **கெஸ்பேவ** | | |
| மாலினி சந்திரசிறி | LSSP | 3,814 |
| டிக்சன் ஜெ. பெரேரா | SLFP | 298 |
| தர்மசேன ஆட்டிகல | UNP | 24,850 |
| டி.என்.பெரேரா | I | 298 |
| **மொரட்டுவ** | | |
| விமலசிறி டிமெல் | LSSP | 7,000 |
| டக்ளஸ் பெர்ணான்டோ | SLFP | 13,614 |
| டிரோன் பெர்ணான்டோ | UNP | 28,488 |
| ருஸ்கின் பெர்ணான்டோ | I | 2,891 |
| கலிஸ்டஸ் பெரேரா | I | 112 |
| எம்.ஏ.எப்.எப். | I | 111 |
| திருமதி நீனா விஜேசூரிய | I | 86 |
| **கலகெதர** | | |
| என்.அலஹகோன் | LSSP | 148 |
| தமரா குமாரி இலங்கரத்ன | SLFP | 11,219 |
| டபிள்யு.எம்.ஜி.ரி.பண்டா | UNP | 17,092 |
| **வலப்பன** | | |
| பியதாச கரன்தகொல்ல | CP | 462 |
| ரி.எம்.ஹேரத் | SLFP | 11,242 |
| திருமதி ரேணுகா ஹேரத் | UNP | 15,162 |
| ஆர்.பி.விமலசிறி | I | 173 |
| உக்கு பண்டா திசாநாயக்க | I | 52 |
| **வாரியபொல** | | |
| என்.கே.பி.குணதாச | LSSP | 155 |
| பியதாச விஜேசிங்க | SLFP | 14,221 |
| திருமதி ஏ.பியசீ ரத்நாயக்க | UNP | 18,311 |
| ஆர்.எம்.செனவிரத்ன | I | 110 |
| **கலிகமுவ** | | |
| பி.ஏ.பஸ்நாயக்க | LSSP | 1,049 |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| பி.ஜகத் பாலசூரிய | SLFP | 14,853 |
| திருமதி விமலா கண்ணங்கர | UNP | 18,608 |
| எச்.கருணாரத்ன | I | 137 |
| பண்டித்தரத்ன பண்டார | I | 73 |
| **பலாங்கொட** | | |
| ஏ.வில்லியம் | CP | 1,676 |
| திருமதி மல்லிகா ரத்வத்த | SLFP | 15,829 |
| எம்.எல்.எம்.அபுசாலி | UNP | 19,502 |
| விஜித சேன சூரவீர.ஆராச்சி | I | 258 |
| **ரம்புக்கனை** | | |
| சேனக மாபிட்டிகம | LSSP | 327 |
| திருமதி எ.ரி.ராணி விமலசேன | MEP | 59 |
| டபிள்யு.ஏ.ஏ.சிறிசேன | SLFP | 12,556 |
| எம்.கருணாநாயக்க | UNP | 1,853 |
| பி.ரத்னாயக்க | I | 135 |
| **ஹோமாகம** | | |
| வில்பிரட் சேனநாயக்க | LSSP | 6,012 |
| திருமதி சோமா சேனாநாயக்க | MEP | 253 |
| யசரத்ன அமரதுங்க | SLFP | 15,152 |
| காமினி ஜயசூரிய | UNP | 2,95,403 |



படிப்பகம்

www.padippakam.com

# 9வது பாராளுமன்றம்

1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பினூடாக உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் அறிமுகத்தின் பின் 1982ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ம் திகதி இலங்கையின் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. எந்தப் பெண்ணும் இத் தேர்தலில் போட்டியிடவில்லை.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டதினால் அவரால் அதனை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்ய முடியாத அளவிற்கு அரசியலமைப்பு காணப்பட்டது மட்டுமல்லாமல் 1982ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலும் அவரால் போட்டி போடக் கூடிய நிலை இருக்கவில்லை.

ஆனால் 1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் திகதி நடந்த இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில் திருமதி பண்டாரநாயக்காவால் போட்டியிட முடிந்தது.

அவருக்கு எதிரான "குடியியல் உரிமைப் பறிப்பு" காலாவதியாகியிருந்தமையினாலேயே அவரால் அத்தேர்தலில் போட்டியிட முடிந்தது. இத் தேர்தலில் பின்வரும் ரீதியில் போட்டியிட்டிருந்தனர்.

ஐக்கிய சோஷலிச முன்னணி- குசும் திசாநாயக்க

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்-ரோகினி ஜோசப்

சுயேட்சைக் குழு-2 (திருகோணமலை) அஞ்சலிதேவி

ஆர்.பிரேமதாச ஐ.தே.க.வின் சார்பில் போட்டியிட்டு வெற்றியடைந்தார். திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வாக்குகளை உடைப்பதற்காகவே திரு.பிரேமதாச அவர்கள் ஒஸி அபேகுணசேகரவை திட்டமிட்டு போட்டியிட வைத்தார் என தேர்தலின் போது பரவலாகப் பேசப்பட்டது. பிற்காலத்தில் ஒஸி திரு.பிரேமதாசவின் நெருங்கிய நண்பராக ஆனதைச் சுட்டிக்காட்டி மேற்படி கருத்து உண்மை தான் என்றும் பேசப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தோல்வியடைந்த போதும் அதற்கடுத்த மூன்று மாதத்தில்



படிப்பகம்

www.padippakam.com

நடக்கவிருந்த 9வது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களை அவர் செய்தார்.

**1989 பொதுத் தேர்தல்**

1989 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் 1988 டிசம்பர் 30 ஆம் திகதியிலிருந்து 1989 ஜனவரி 6ம் திகதிவரை நடந்தது. இதன் போது 1396 பேர் தங்களை வேட்பாளர்களாகப் பதிவு செய்து கொண்டனர். இவர்களில் 57 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது மொத்த வேட்பாளர்களில் 4 வீதத்தினர் பெண்கள். அதே போல் இத்தேர்தலின் மூலம் அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தில், மொத்தம் 12 பெண்கள் அங்கம் வகித்தனர். இது 5.3 வீதமாகும்.

இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் 4 பேரும், ஐ.தே.க.சார்பில் 7 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். ஐ.தே.க.சார்பில் இன்னும் ஒரு பெண் தேசியப் பட்டியலின் மூலம் நியமனம் செய்யப்பட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, சுமித்திரா பிரியங்கனி அபேவீர, குணவதி திசாநாயக்க, திருமதி ஹேமா மற்றும் ரத்னாயக்காவும் தெரிவு செய்யப்பட்டதுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரேணுகா ஹேரத், அமரா பியசீலி ரத்னாயக்க, சுனேந்திரா ரணசிங்க, சமந்தா கருணாரத்ன, சுஜாதா தர்மவர்தன, ராசமனோகரி புலேந்திரன் மற்றும் சந்திரா கருணாரத்னவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் திருமதி சுமித்திரா பிரியங்கனி அபேவர்தனவின் தந்தையும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உப செயலாளருமாக இருந்தவருமான இந்திரபால அபேவீர, வேட்பு மனுத்தாக்கல் செய்ததன் பின்னர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவர் சார்பில் அவரது மகள் சுமித்திரா போட்டியிட்டு களுத்துறை மாவட்டத்தில் வெற்றி பெற்றார். அதே போல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பதுளை மாவட்டத்தில் போட்டியிடவிருந்த ரத்னாயக்க கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவரது மனைவி ஹேமா ரத்னாயக்கவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடச் செய்தது. அதன் மூலமாகவே அவர் தெரிவு செய்யப்பட்டார்.

மொனராகலை மாவட்ட தேர்தலை கட்சியின் சார்பாக வழிநடத்திய திரு.சுமேத ஜயசேன நோய்வாய்ப்பட்டு இறந்ததைத் தொடர்ந்து அவர் சார்பாக அவரது மனைவி குணவதி திசாநாயக்க போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**தேசியப்பட்டியலில்**

விகிதாசார தேர்தல் முறையின் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தேசியப்பட்டியல் முறையைத் தொடர்ந்து, போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும் 29 பேரைக் கொண்ட பட்டியல் ஒன்றை தேர்தல் ஆணையாளரிடம் வழங்குவது வழக்கம். 1989ம் ஆண்டு தேர்தலில் போது 13 அரசியற் கட்சிகளும் 6 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டிருந்த போதும் 9 அரசியற் கட்சிகளும் இரண்டு சுயேட்சைக் குழுக்களும் மட்டுமே தேசியப்பட்டியலைச் சமர்ப்பித்திருந்தது.

அதிலும் இரு அரசியற் கட்சிகளும் ஒரு சுயேட்சைக் குழுவும் மட்டுமே பெண்களுக்கு தமது தேசியப்பட்டியலில் இடம் வழங்கியிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அந்த மூவரில் இருவர் தமிழ்ப் பெண்கள். இறுதியில் இந்த மூவருமே தேசியப்பட்டியலின் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் நியமிக்கப்பட்டிருந்த திருமதி.செனி பெல்பொல விலகிக் கொண்டதைத் தொடர்ந்து அதனை நிரப்புவதற்காக திருமதி.ரூபா சிறியானி டேனியலை ஐ.தே.க.நியமித்தது. இதன் கீழ் புதிய தேசியப் பட்டியல் முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதற் பெண் சிறியானியாகும்.



சமந்தாதேவி கருணாரத்ன

இத் தேர்தலின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ரங்கநாயகி பத்மநாதன் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் போட்டிருந்த போதும் 2526 வாக்குகள் மட்டுமே பெற்றிருந்தார். இவர் தெரிவு செய்யப்படவில்லை.

**சமந்தாதேவி கருணாரத்ன**

ஐ.தே.க.சார்பில் தெரிவு செய்யப்பட்ட இவர், 1952 ஜனவரி 18ம் திகதி பிறந்தவர். இவர் 1978-1981 க்கும் இடையில் அன்றைய சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணாரத்னவின் அந்தரங்க செயலாளராக கடமையாற்றியிருந்தார். இவர் 1981-1988 வரை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினராக (கேகாலை மாவட்டம்) இருந்ததுடன், இவரது தந்தை (ரம்புக்கன தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்) திரு.அசோகா கருணாரத்தினவின் மரணத்தைத் தெடர்ந்து 8வது பாராளுமன்றத்துக்கும் தெரிவு செய்யப்பட்டார். 9வது பாராளுமன்றத்துக்கும் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார். இத் தேர்தலின் பின் சமூக சேவைகள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருதார். இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை பெண்கள் சம்மேளனம், கொரிய-சீன நட்புறவுச் சங்கம் என்பனவற்றின் மத்தியகுழு உறுப்பினராகவும் இருந்தவர்.



ரேணுகா ஹேரத்

**ரேணுகா ஹேரத்**

நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான இவர் சுகாதார, மகளிர் விவகார அமைச்சராகவும் இருந்தவர். நுவரெலியா மாவட்ட அமைச்சராவும் இருந்த இவர், ஒரு பயிற்சி பெற்ற ஆசிரியை. பொல்கொல்ல, மற்றும் மியுசியல் ஆசிரியர் கலாசாலையில் பயின்றவர்.



ராஜமனோகரி

**ராஜமனோகரி புலேந்திரன்**

1949 பெப்ரவரி 7இல் பிறந்த இவர், வவனியா மாவட்ட



படிப்பகம்

www.padippakam.com

ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் திரு.கே.டி.புலேந்திரனின் மனைவியாவார். அவரது அந்தரங்க செயலாளராவும் முன்னைய ஆறு வருடங்கள் கடமையாற்றிய இவர் ஐ.தே.க. மற்றும் ஐ.தே.க.வின் பெண்கள் சம்மேளனத்திலும் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினராவர். தனது கணவரின் படுகொலையோடு பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த இவர் பிரதிக் கல்வி அமைச்சராகவும் கடமையாற்றியவர்.



அமரா பியசீலி

**அமரா பியசீலி ரத்னாயக்க**

1938 மார்ச்சில் பிறந்த அமரா பியசீலி இராஜாங்க அமைச்சராகக் கடமையாற்றியவர். தனது கணவர் கொல்லப்பட்டதோடு அரசியலுக்கு வந்தார். அப்போது இவரது வயது 38. 1977ம் ஆண்டு தேர்தலுக்கூடாக அரசியலுக்கு வந்த இவர் 1988இல் குருநாகல் மாவட்ட அமைச்சராகவும் செயற்பட்டு வந்தார். இவர் அரசியலுக்கு வருமுன் பாடசாலை ஆசிரியையாக இருந்தவர். 1987 நவம்பர் 30ஆம் திகதியிலிருந்து பிரதிப் போக்குவரத்து அமைச்சராகவும், கடமையாற்றியிருந்தார்.

**ரூபா சிறியானி பந்துசேன**

திரு. மஹாசேன பெல்பொலவின் விலகலைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட சிறியானி, ஹேவாஹெட்ட தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டேனியல் அப்புஹாமியின் மகள், தலாது ஓய மத்திய மகாவித்தியலயத்தில் கல்வி பயின்ற இவர் 20 வயதிலேயே அரசியலுக்கு வந்தவர். பிற்காலத்தில் ஐ.தே.க.வின் பெண்கள் சம்மேளனத்தின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

**குணவதி திசாநாயக்க**

1952 யுலை 29 ம் திகதி பிறந்த இவர். இவரது கணவரின் மரணத்தைத் தொடர்ந்து அரசியலுக்குள் பிரவேசித்தார். மொனராகலை மஹாநாம மத்திய மகா வித்தியலயத்தில் கல்வி பயின்ற குணவதி இத்தேர்தலில் 26.193 வாக்குகளைப் பெற்றார். மொனறாகலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்களில் அதிக வாக்குளைப் இவரே பெற்றிருந்தார்.



சந்திரா கருணாரத்ன

**சந்திரா கருணாரத்ன**

1942 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 30ம் திகதி பிறந்த இவர், பதுளை மாவட்டத்தில் ஐ.தே.க சார்பாக தெரிவு செய்யப்பட்டவர். மகளிர் விவகார இராஜாங்க அமைச்சராக இந்தப் பாராளுமன்றத்தில் பதவி வகித்தார். இவரது கணவர் எம்.கருணாரத்ன ஊவா பரணகம தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகவும், கூட்டுறவு பிரதி அமைச்சராகவும் இருந்தவர். திருமதி சந்திரா சமூக சேவைகள், மகளிர் விவகாரம், போக்குவரத்துடன், மாவட்ட அபிவிருத்திச் சபையின் உறுப்பினராகவும் இருந்தவர்.



படிப்பகம்

www.padippakam.com

**ஹேமா ரத்நாயக்க**

இவர் 1946 நவம்பர் 25ம்திகதி பிறந்தவர். இவரது கணவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த இவர், பதுளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். இவரது கணவர் திரு. புஞ்சி பண்டா ரத்நாயக்க 1989 பொதுத் தேர்தலின் போது ஸ்ரீல.சு.க வேட்பாளர் ஆவார். ஹேமா ஒரு பயிற்றுவிக்கப்பட்ட கணித ஆசிரியை.

**சுஜாதா காந்திமதி தர்மவர்தன**

1951 செப்டம்பர் 25ஆம் திகதி பிறந்த இவர் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை முகாமையாளராகக் கடமையாற்றியவர். ஐ.தேக.வின் பெண்கள் சம்மேளனத்தின் செயலாளராகக் கடமையாற்றிய அனுபவமும் இவருக்கு உண்டு. வட மத்திய மாகாண சபை உறுப்பினராகவும் இவர் இருந்துள்ளார்.



சுமிதா

**சுமிதா பிரியங்கனி அபேவீர**

இவரது தகப்பனார் இந்திரபால அபேவீரவின் மரணத்தைத் தொடர்ந்து அரசியலுக்குள் பிரவேசித்தார்செல்வி. சுமிதா பிரியங்கனி. இவர் 1963ஆம் ஆண்டு பெப்ரவரி 24ம் திகதி பிறந்தவர். களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இவர் தெரிவு செய்யப்பட்ட போது இவரது வயது 26 மட்டுமே.

**9வது பராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பெண்கள்**

| | | |
|---|---|---|
| ஐ.தேக. | | |
| 1.சுனேத்திரா ரணசிங்க | கொழும்பு | 37.165 |
| 2.சமந்தாதேவி கருணாரத்ண | கேகாலை | 50.779 |
| 3.ரேணுகா ஹேரத் | நுவரெலியா | 31.271 |
| 4.அமரா பியசீலி ரத்னாயக்க | குருநாகல் | 58.426 |
| 5.சுஜாதா காந்திமதி தர்மவர்தன | புத்தளம் | 26.830 |
| 6.ராஜமனோகரி புலேந்திரன் | வன்னி | 3.260 |
| 7.சந்திரா கருணாரத்ன | பதுளை | 20.026 |
| ஸ்ரீ. ல.சு.க. | | |
| 1.சிறிமாவோ பண்டாரநாயக்க | கம்பஹா | 214.390 |
| 2.சுமித்திரா பிரியங்கனி அபேவீர | களுத்துறை | 51.494 |
| 3.ஹேமா ரத்நாயக்க | பதுளை | 28.635 |
| 4.குணவதி திசாநாயக்க | மொனராகலை | 26.193 |

**1988 ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்**

| | | |
|---|---|---|
| ஆர்.பிரேமதாச(UNP) | 2.569.199 | 50.43 |
| சிறிமாவோ பண்டார நாயக்க(SLFP) | 2.289.860 | 44.95 |
| ஒஸி அபேகுணசேகர(SLMP) | 235.719 | 4.63 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 5.186.223 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 91.445 | |
| பெற்ற பெரும்பான்மை வாக்குகள் | 279.337 | |
| மொத்த வாக்காளர் தொகை | 9.375.742 | |



படிப்பகம்

www.padippakam.com

# 10வது பொதுத் தேர்தல்

**1994 தேர்தல்**

10ஆவது பொதுத் தேர்தல், இலங்கையின் வரலாற்றில் மட்டுமல்ல இலங்கைப் பெண்களின் பாராளுமன்ற அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும்.

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கம் தொடர்ந்து 17 வருட காலமாக ஆட்சி புரிந்தது. இந்த நீண்ட கால எல்லைக்குள் பல சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டிருந்தன. குறிப்பாக இனப்பிரச்சினை உக்கிரம் பெற்று சிறுபான்மை தேசிய இன விடுதலையைப் போராட்டத்தை வேகப்படுத்தியமை, தென்னிலங்கையில் தீவிர இடதுசாரி இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை எண்ணற்ற இளைஞர்களை பலி கொடுத்து நசுக்கியமை, அரசு பிரதானமாகக் கடைபிடித்த திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியமை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியின் சர்வாதிகாரத் தன்மை,ஆளும் கட்சி (வர்க்க) நலன் சார்ந்த ஊழல், லஞ்சம், அடாவடித்தனங்கள் மலிந்து போனமை என்பன போன்ற முக்கியமான நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். இவற்றிற்கெதிரான "மக்கள் அலை" மேலோங்கியிருந்த சூழ்நிலையிலேயே 1994 ஓகஸ்ட் தேர்தல் நடந்தது.

1994 பொதுத்தேர்தல் நடப்பதற்கு முதல் நடந்த இன்னொரு நிகழ்வையும் இங்கு குறிப்பிடுதல் அவசியம்.

அது 1993 மே மாதம் நடந்த மாகாணசபைத் தேர்தலாகும்.

**மாகாணசபைத் தேர்தல்.**

1993 மே மாதம் மாகாண சபைத் தேர்தல் நடத்த திட்டமிட்டிருந்த போது தேர்தலில் பெரும் எதிர்பார்ப்புமிக்க கட்சியாக காணப்பட்ட



படிப்பகம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (DUNF)யின் தலைவரும் அக்கட்சியின் பிரதான வேட்பாளருமான லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டார். அரசாங்க தரப்பினர் இக் கொலைக்கு காரணம் விடுதலைப் புலிகளென்று பிரச்சாரம் செய்த அதே வேளை இது ஆளும் கட்சியின் வேலை என்ற பொது அபிப்பிராயமும் நிலவியது. எனவே ஐ.தே.க. வின் மீதான எதிர்ப்புணர்வு நாடு முழுவதும் மேலும் உக்கிரமடைந்தது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு லலித்தின் மரண ஊர்வலத்தின் போது மக்கள் அரசாங்கத்தின் மீது காட்டிய எதிர்ப்பாகும்.

லலித் கொல்லப்பட்டு ஒரு வாரத்தில் அதாவது மே 1ம் திகதி மேதின ஊர்வலத்தில் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து நாட்டின் பதில் ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்க நியமிக்கப்பட்டார்.

மே மாதம் 17ம் திகதி மாகாண சபைத் தேர்தலை நடத்தியே தீருவது என அரசாங்கம் முடிவு செய்தது. அதன்படி வட கிழக்கு மாகாணம் தவிர ஏனைய 7 மாகாணங்களிலும் தேர்தல் நடத்தப்பட்டது. இத் தேர்தல் பிரச்சார மேடைகளில் முக்கிய ஆயுதமாக மேற்குறிப்பிட்ட படுகொலைச் சம்பவங்கள் பிரயோகிக்கப்பட்டன.

பொதுஜன முன்னணியானது ஐ.தே.க. மீதான மக்களின் எதிர்ப்பலையைக் கூடியபட்சம் பயன்படுத்த முயற்சி செய்த அதே நேரம் காமினி திசாநாயக்கவின் தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியினர் லலித்தின் படுகொலையைக் காட்டி அனுதாப வாக்குக்கான வேட்டையைத் தொடங்கினர். மறைந்த லலித்தின் விதவை மனைவி ஸ்ரீமணி அத்துலத்முதலி ஐ.ஐ.தே.மு.வுக்கு தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்ததோடு ஐ.ஐ.தே.மு.க்கு இன்னும் கூடிய அனுதாப வாக்கை திரட்டக் கூடியதாக இருந்தது. அதேபோல் ஐ.தே.க.வும் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் அனுதாப அலையைப் பெற முயற்சித்தது. ஐ.தே.க. மற்றும் ஐ.ஐ.தே.மு.இரண்டும் விதவைகளைப் பயன்படுத்தி வாக்குகளைப் பெற முயற்சித்து வந்த வேளையில் பொதுஜன முன்னணியின் சார்பிலும் விதவைப் பெண்ணொருவர் நேரடியாகவே தேர்தலில் போட்டியிட்டார். அவர் மறைந்த சினிமா நடிகரும், அரசியல்வாதியுமான விஜயகுமாரணதுங்கவின் மனவியும் முன்னாள் பிரதமர்களான பண்டாரநாயக்க-சிறிமா ஆகியோரது மகளுமான சந்திரிகா குமாரணதுங்கவே. விஜயகுமாரணதுங்க 1988 பெப்ரவரி 16ம் திகதி இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டவர்.

இத் தேர்தலில் திருமதி சந்திரிகாவுக்கு ஐ.தே.க. எதிர்ப்பலை மட்டுமல்லாது, கணவர் மற்றும் தகப்பன் இருவரும் அரசியல் படுகொலைக்குள்ளானவர்கள் என்ற அனுதாப அலையும் பயன்படுத்தப்பட்டது எனலாம். இத் தேர்தலில் இம் மூன்று பிரதான கட்சிகளும் தங்களது அனுதாப பிரச்சாரத்தளமாக மேல் மாகாணத்தையே - குறிப்பாக கொழும்பையே- கொண்டிருந்தன. உதாரணத்திற்கு பிரேமதாசவின் தளமாகவும் கொழும்பு இருந்தது. லலித் அத்துலத்முதலி கொழும்பு மாவட்டத்திலேயே அதிக வாக்கு பெற்று வந்த நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே மாகாணத்திலேயே சந்திரிகாவும் போட்டியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இச் சூழ்நிலை காரணமாக மேல் மாகாணத்தில் பலத்த போட்டி நிலவியதை அவதானிக்க முடிந்தது.

இறுதியில் மாகாணசபைத் தேர்தலில் பலத்த போட்டியின் மத்தியில் மேல் மாகாணத்தில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவு செய்யப்பட்டார். இத்தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைப் (2,98,457) பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட மேல் மாகாண சபையை பொ.ஜ.மு. கைப்பற்றியதைத் தொடர்ந்து, மேல் மாகாண முதல்

www.padippakam.com

அமைச்சராக சந்திரிகா தெரிவு செய்யப்பட்டார். இலங்கை வரலாற்றில் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்ட ஒரே பெண்ணும் இவரே. சந்திரிகா தலைநகரம் உள்ளிட்ட பகுதியை தனது ஆட்சிக்குள் கொண்டு வந்த போதும் ஏற்கனவே மாகாண சபை முறையில் நிலவி வந்த மாகாண அரசாங்க - மத்திய அரசாங்க இழுபறிக்குள் திருமதி சந்திரிகாவும் சிக்க நேரிட்டது. இதைவிட மத்திய அரசாங்கம் ஐ.தே.க.வின் கட்டுப்பாட்டின் கீழும் குறிப்பிட்ட மாகாண அரசாங்கம் பொ.ஐ.மு.வின் கீழும் இயங்கும் சந்தர்ப்பத்தில் இழுபறி மேலும் தீவிரப்படும் என்பது யதார்த்தம்.

இவ்வாறான நிலையில் ஐ.தே.க. எதிர்ப்பு அலை நாடு முழுதும் வேகமாகப் பரவியது. அது மட்டுமன்றி இவ்வெதிர்ப்பலைக்கு சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு. தலைமை கொடுத்தது. DUNFஐச் சேர்ந்த பலர் உடைந்து போய் ஐ.தே.க.வுடனும் பொ.ஐ.மு.வுடனும் சேர்ந்ததைத் தொடர்ந்து அக்கட்சி மிகப் பலவீனப்பட்டு போனமை பொ.ஐ.மு. மேல் நிலைக்கு வருவதை மேலும் இலகுவாக்கியது. ஐ.தே.கவின் ஊழல்களையும் பிழைகளையும் அம்பலப்படுத்துவதில் சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு. முன்னின்றது. சூரிய கந்தை போன்ற மனிதப் புதைகுழிகள் சந்திரிகா தலைமையில் பத்திரிகையாளர்களுடன் போய் இரகசியமாக தோண்டி அம்பலப்படுத்தப்பட்டது. நாடெங்கிலும் சந்திரிகா அலை மிகத்தீவிரமாக பரவியது. பத்திரிகைகள் அவரதும் அவரது கட்சியின் நடவடிக்கைகளுக்கும் பெரும் பிரச்சாரத்தை செய்தார்கள். மாற்றுப் பத்திரிகைகள் உட்பட பல பத்திரிகைகள் "மாற்றம் வேண்டும்", "முற்போக்கு அரசியல் தலைமைத்துவம் வேண்டும்", "முதலாளித்துவ தலைமையை தோற்கடித்து இடதுசாரி அரசாங்கமொன்றை ஏற்படுத்த வேண்டும்" என்ற கருத்துடன் பொ.ஐ.மு.வை நேரடியாக ஆதரித்தனர்.

### ஒகஸ்ட் தேர்தல்

1994 ஒகஸ்ட் பொதுத்தேர்தலுக்காக பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் 10 அரசியற் கட்சிகள் கூட்டுச் சேர்ந்தன. அவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மொஸ்கோ) , ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி (வை.பி.சில்வா அணி) தேச விடுதலை மக்கள் முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி(ஸ்ரீ மணி அணி), இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்(செல்லச்சாமி அணி), நவசமசமாஜகட்சி (வாசு அணி),இலங்கை தோட்ட தொழிலாளர் காங்கிரஸ் ஆகியனவாகும். இன்னும் ஒரு சில சிறு சிறு அமைப்புகள் இக்கூட்டுடன் இணைந்திருந்தன.

1994 ஒகஸ்ட் 16ம் திகதி நடந்த தேர்தலில் பொ.ஐ.மு. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலுமாக மொத்தம் 246 வேட்பாளர்களை நிறுத்தியது. இவர்களில் 171பேர் மட்டுமே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஏனைய 75 பேரும் கூட்டு சேர்ந்த கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

ஐக்கிய தேசிய கட்சி 22 மாவட்டங்களிலுமாக 262 பேரை வேட்பாளர்களை நிறுத்தியது. ஐ.தே.க.வுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. இலங்கை மக்கள் கட்சி (ஒஸி அணி), ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (திலக்கருணாரத்ன அணி), டெலோ (திவ்வியநாதன் அணி), ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் (என்.எம்.முகார்தீன் அணி), உட்பட கூட்டுச் சேர்ந்திருந்தது.

மொத்தம் 1440 பேர் வேட்பாளர்களாக போட்டியிட்டனர். இவர்களில் 55 பேர் பெண்கள். இது மொத்த வேட்பாளர்களில் 3.9 வீதமாகும். அதிக பெண்களை



படிப்பகம்

www.padippakam.com

வேட்பாளராகப் போட்டியிட வைத்த கட்சி இலங்கை முற்போக்கு முன்னணியாகும். (இது ஜே.வி.பி.யுடன் கூட்டமைத்திருந்தது.) இக்கட்சி 15 பெண் வேட்பாளர்களை போட்டியிடச் செய்திருந்தது.

போட்டியிட்ட 55 பெண் வேட்பாளர்களில் 47 பேர் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 8 பேர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். முஸ்லிம். மற்றும் பறங்கிய இனத்தைச் சேர்ந்த பெண்கள் எவரும் போட்டியிட்டிருக்கவில்லை.

இத்தேர்தலின் இறுதியில் 10 பெண்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். இரு பெண்கள் தேசிய பட்டியலின் மூலமாக தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட 10 பேரில் 7பேர் பொ.ஐ.மு.வைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சந்திரிகா குமாரணதுங்க. ஸ்ரீமணி அத்துலத்முதலி. சுமேத ஜயசேன. நிரூபமா ராஜபக்ஷ. பவித்ரா வன்னியாரச்சி. ஹேமா ரத்னாயக. சுமித்ரா பிரியங்கனி.

ஐ.தே.க. சார்பில் 3 பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் ரேணுகா ஹேரத். அமரா பியசீலி ரத்நாயக்க. ராஜமனோகரி புலேந்திரன்ஆகியோர்.

இதை விட தேசியப் பட்டியலின் மூலம் நியமிக்கப்பட்ட 2 பேரில் ஒருவர் ஐ.தே.க. சார்பில் தெரிவு செய்யப்பட்ட அமர பத்திரா திசாநாயக்க. மற்றவர் பொ.ஐ.மு.சார்பில் நியமிக்கப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்க. இதன் படி 10ஆவது பாராளுமன்றத்தில் 5.3 வீதப் பெண்கள் பிரதிநிதித்துவம் வகிக்க முடிந்தது. இத்தேர்தலில் பெண்களின் அரசியலில் முக்கிய குறிப்பிடத்தக்க அம்சங்களை இனங்காட்டலாம்.

- இலங்கை வரலாற்றில் அதிக பெண் உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் இது.
- இலங்கை பொதுத் தேர்தல் வரலாற்றில் எந்த பெண்களும் ஏன் எந்த ஆணும் பெற்றிறாத அளவு கூடிய வாக்குகளை பெற்ற பெண்ணாக திருமதி சந்திரிகா குமாரணதுங்க சாதனை படைத்தார். இவர் 4,64,588 வாக்குகளை இத் தேர்தலில் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இதற்கு முன்னர் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்றவராக லலித் அத்துலத் முதலியே திகழ்ந்தார். 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் திரு லலித் 2,35,447 வாக்குகளைப் பெற்றிருந்தார். இச் சாதனையையே திருமதி சந்திரிகா முறியடித்திருந்தார்.)
- மூன்றாவது தடவையாக இலங்கை மக்கள் பெண் ஒருவரை பிரதமராக தேர்ந்தெடுத்தமை.
- ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்றாவது பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட்டமை.
- முன்னாள் பிரதமர் தாயும். இந்நாள் பிரதமர் மகளும் ஒரே காலத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தமை.
- விதவைத்துவ அரசியல் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டமை.

என்பனவற்றை முக்கியமாக குறிப்பிடலாம்.


ஸ்ரீமணி

10ஆவது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த 12பெண்களில் ஐந்து பேர் பாராளுமன்றத்துக்கு புதியவர்கள். அவர்கள் சந்திரிகா குமாரணதுங்க. ஸ்ரீமணிஅத்துலத்முதலி. நிரூபமா ராஜபக்ஷ. பவித்திரா வன்னி ஆராச்சி. அமரபத்திரா



படிப்பகம்

www.padippakam.com

திசாநாயக்க ஆகியோர்.

## ஸ்ரீமணி அத்துலத் முதலி

1946 ஏப்ரல் 27ஆம் திகதி பிறந்த இவர் கொழும்பு பெண்கள் கல்லூரியின் பழைய மாணவி. கிறிஸ்தவ மாணவர் அமைப்பின் செயலாளராக பணிபுரிந்த அனுபவமுடைய இவர், விளையாட்டுத் துறையில் பரிசில்களைப் பெற்றவர். 1969 விளம்பரப்பிரச்சார நிறுவனமொன்றில் பணிபுரிந்த இவர், 1971இல் ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் செயலாளர் ஆனார். 1974இல் ஐ.நா.வின் வர்த்தக அபிவிருத்தி மாநாட்டில் (UNCTAD) ஜெனிவா தலைமையகத்தின் செயலாளராகப் பணிபுரிந்தார். முன்னாள் அமைச்சரும் ஐ.ஐ.தே.மு.வின் தலைவருமான லலித் அத்துலத் முதலியை மணமுடித்த இவருக்கு 1983இல் முதற் பெண் பிள்ளை பிறந்தது. சேவா வனிதா இயக்கம் மற்றும் அதன் தாய்மார் அமைப்பு என்பவற்றுடன் பணியாற்றிய இவர், 1989 பொதுத் தேர்தலில் கணவருடன் சேர்ந்து தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1992 இல் DUNFஇல் அங்கத்துவம் பெற்றார். கணவர் 1993 ஏப்ரல் 23 படுகொலை செய்யப்பட்டதன் பின் 1994 யூலையில் DUNF லலித் அணியின் தலைவியாகப் பொறுப்பேற்று பொ.ஐ.மு.வுடன் இணைந்து பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு 1,48,727 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். கொழும்பு மாவட்டத்தில் பொ.ஐ.மு வேட்பாளர்களில் அதிக வாக்குகளைப் பெற்றவர் இவரே. பொ.ஐ.மு. அரசாங்கத்தில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள், சுற்றாடல் மகளிர் விவகார அமைச்சராக குறிப்பிட்ட காலம் இருந்தார். பொ.ஐ.மு.வுக்கும் ஸ்ரீமணி அணிக்குமிடையில் நடந்த இழுபறியின் விளைவாக அரசாங்கத்தின் அமைச்சரவை மாற்றத்தின் போது ஸ்ரீ மணிக்கு அமைச்சர் பதவி வழங்குவது ரத்துச் செய்யப்பட்டது. லலித் அத்துலத் முதலி மன்றத்தின் தலைவியாகவும் இருந்து வருகிறார்.

## நிருபமா ராஜபக்ஷ

1962 ஏப்ரலில் பிறந்த இவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோர்ஜ் ராஜபக்ஷவின் மகள் திரு ஜோர்ஜ் ராஜபக்ஷ 1960 மார்ச்சிலிருந்து 1971 யூன் மரணமடையும் வரை பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர். நிருபமாவின் பாட்டனார் டி.ம்.ராஜபக்ஷ அவர்கள். 1936 மார்ச்சிலிருந்து 1945 மே மாதம் வரை அரசாங்க சபையில் அங்கம் வகித்தவர்.

நிருபமா கொழும்பு பெண்கள் கல்லூரியின் பழைய மாணவி. 1983 முல்கிரிகல தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்குப் போக முயுற்சி செய்த போதும் தோல்வியில் முடிந்தது அது. 1985 இடைத்தேர்தலில் போட்டியிடவில்லையென்ற போதும் 1994 மார்ச் தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்று (34,101) தெரிவு செய்யப்பட்டார். 1994 பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மாகாணசபையிலிருந்து விலகினார். இப்பொதுத் தேர்தலில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொ.ஐ.மு.வின் சார்பில் போட்டியிட்டு 46,034 வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்டார். இவரது கணவர் ஒரு தமிழர். பெயர் நடேசன். பொதுத் தேர்தலின் போது எதிர்க்கட்சியினரால் தூஷிக்கப்பட அது காரணமானது குறிப்பிடத்தக்கது. பொ.ஐ.மு. அரசாங்கத்தில் உல்லாச விமானப் போக்குவரத்துப் பிரதி அமைச்சராகவுமிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

**பவித்திரா வன்னி ஆராச்சி**

1964 நவம்பர் 10ஆம் திகதி பிறந்த இவர் குறைந்த வயதையுடைய பெண் உறுப்பினர். இவர் ஒரு வழக்கறிஞர். இவரது தகப்பனார் திரு தர்மதாச வன்னியாராச்சி முன்னாள் பிரதியமைச்சராகவும் இந்நாள் சப்ரகமுவ மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவருமாவார். 1994 பொதுத் தேர்தலில் தந்தையும் மகளும் ஒரே மாவட்டத்தில் போட்டியிட்டனர். தந்தை தோற்றார் மகள் வென்றார். இத்தேர்தலில் பவித்திரா 62,979 வாக்குகளைப் பெற்றார். இதே மாவட்டத்தில் வாசுதேச நாணக்கார அவர்கள் பவித்திராவை விட 10 வாக்குகளே மேலதிகமாகப் பெற்றிருந்தார்.

பெல்மடுல்ல மகிந்த வித்தியாலயம் மற்றும் கங்கந்த மத்திய மகா வித்தியாலயத்திலும் பின்னர் கொழும்பு அனுலா பெண்கள் பாடசாலையிலும் உயர் கல்வி கற்ற பவித்திரா 1985இல் கொழும்பு சட்டக் கல்லூரிக்குள் நுழைந்தார். 1990.இல் வழக்கறிஞரானார். 1992இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கலவான தொகுதியின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். 1993இல் ரத்னபுர மாவட்ட இலங்கை சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் தலைவியாக நியமிக்கப்பட்டதுடன் 1993இல் மகாணசபைத் தேர்லில் சப்ரகமுவா மாகாணத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இத்தேர்தலில் இவரது தந்தையும் போட்டியிட்டிருந்தார். இவரது தந்தை திரு தர்மதாச சப்பரகமுவா மாகாணத்திலேயே அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார். பவித்திரா 32,822 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

வழக்கறிஞர் ஹேமந்த கமகேவுடன் 1993இல் மணமான இவர் கடந்த வன்முறைக் காலப்பகுதியில் (1987-1989) நடந்த பல படுகொலைகளைத் தேடுவதில் முன்னின்று உழைத்தார். எம்பிலிப்பிட்டிய சூரிய கந்த பகுதியில் மனிதப்புதைகுழிகளைத் தேடுவதில் முன்னின்றவர். காணாமல் போன இளைஞர்களின் பெற்றோருக்காக இலவசமாக வழக்காடிய இவர் பொ.ஐ.மு அரசாங்கத்தில் சுகாதார, பெருந்தெருக்கள், சமூக சேவை பிரதியமைச்சராக இருந்தார்.

**அமர பத்திரா திசாநாயக்க**

1949 மே 6ஆம் திகதி பிறந்த இவர் அரசாங்க எழுதுவினைஞராக வாழ்க்கையைத் தொடங்கி பாராளுமன்ற உறுப்பினர் அந்தஸ்து வரை உயர்ந்தவர். இவர் ஐ.தே.க.வின் தேசியப் பட்டியலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதற் பெண். கேகாலை கல்கமுவ மற்றும் நகரகிரி பாடசாலைகளின் பழைய மாணவி. பட்டதாரியான இவர் பாடசாலைக் காலப்பகுதியில் விளையாட்டுத் துறை தலைவியாக செயல்பட்டவர். 1985 தொடக்கம் 1992 வரை சமூக சேவைகள் அதிகாரியாகவும் 1992-1994 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு காரியாலயத்தில் நிர்வாக அதிகாரியாகவும் 1994இல் கொள்கைத் திட்டமிடல் அமைச்சில் பிரதித் தலைவராகவும் கடமையாற்றியவர்.



படிப்பகம்

www.padippakam.com

# 10வது பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பெண்கள்

| பெயர் | மாவட்டம் | வாக்குகள் |
|---|---|---|
| பொ.ஐ.மு. | | |
| சந்திரிகா குமாரணதுங்க | கம்பஹா | 4,64,588 |
| சிறிமாவோ பண்டாரநாயகா | (தேசியப்பட்டியல்) | |
| ஸ்ரீமணி அத்துலத்முதலி | கொழும்பு | 1,48,727 |
| சுமேத.ஜி.ஜயசேன | மொனராகல | 55,369 |
| நிருபம ராஜபக்ஷ | ஹம்பாந்தோட்டை | 4,6034 |
| பவித்திரா வன்னியாராச்சி | இரத்தினபுரி | 6,2979 |
| ஹேமா ரத்னாயக்க | பதுளை | 40,873 |
| சுமித்திரா பிரியங்கனி அபேவீர | களுத்துறை | 85,661 |
| ஐ.தே.க. | | |
| ரேணுகா ஹேரத் | நுவரெலியா | 49,473 |
| அமரா பியசீலி ரத்னாயக்க | குருநாகல் | 53,421 |
| ராஜமனோகரி புலேந்திரம் | வன்னி | 2,271 |
| அமரபத்திரா திசாநாயக்க | (தேசியப்பட்டியல்) | |



படிப்பகம்

www.padippakam.com

# முதல் பெண் ஜனாதிபதி

1994ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும். இத்தேர்தலின் மூலம் முதற் தடவையாக இலங்கையின் ஜனாதிபதியாகப் பெண்ணொருவர் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்லுக்கான வேட்புமனுத் தாக்கல் ஒக்டோபர் 7ஆம் திகதி, செய்யப்பட்டது. இதன் போது மொத்தம் 6 பேர் அபேட்சகர்களாகத் தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

சந்திரிகா குமாரணதுங்க - பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பிலும், காமினி திசாநாயக்கா - ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பிலும், நிஹால் கலப்பத்தி - இலங்கை முற்போக்கு முன்னணியின் சார்பிலும் ஹரிச்சந்திர விஜேதுங்க - சிங்களயே மஹா சம்மத்த பூமி புத்திர பக்ஷய சார்பிலும். ஏ.ஜே.ரணசிங்க, ஹட்சன் சமரசிங்க ஆகியோர் சுயேட்சை வேட்பாளர்களாகவும், களத்தில் இறங்கினர். இவர்களில் சந்திரிகா குமரணதுங்க தனது பாராளுமன்ற அங்கத்துவப் பதவியிலிருந்து விலகி (அதன் பிரகாரம் பிரதமர் பதவியிலிருந்தும் விலகி தனது தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்காவை பிரதமர் பதவியை ஏற்கச் செய்துவிட்டே)



படிப்பகம்

www.padippakam.com

ஜனாதிபதி வேட்பாளரானார்.

இது இவ்வாறிருக்க வேட்பு மனுத் தாக்கல் செய்து 17வது நாளான ஒக்டோபர் 24ஆம் திகதியன்று ஐ.தே.க.வின் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திசாநாயக்கா கொழும்பு-தொட்டலங்கையில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் வைத்து குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

### ஐ.தே.க.வின் தந்திரோபாயம்

இக்குண்டு வெடிப்பைத் தொடர்ந்து காமினி திசாநாயக்காவின் மனைவி வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்காவை ஒக்டோபர் 26ஆம் திகதி ஐ.தே.க. தமது ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தது. உண்மையில் இந்தக் காலப்பகுதியில் ஐ.தே.க.வின் அரசியல் முதிர்ச்சியுள்ள ரணில் விக்கிரமசிங்கவை விட்டுவிட்டு திருமதி ஸ்ரீமா திசாநாயக்காவை வேட்பாளராக்கியதற்குக் காரணம் காமினி திசாநாயக்காவின் மரணத்தின் மூலம் கிடைக்கும் அனுதாப அலையைப் பயன்படுத்திஆட்சியைக் கைப்பற்றுவதே.

ஐ.தே.க.வின் இந்தத் தந்திரோபாயத்தை மேலும் ஊர்ஜிதப்படுத்துவது என்றால் காமினி திசாநாயக்கவுக்குப் பதிலாக அவரது மனைவி ஸ்ரீமாவை வேட்பாளராக நியமித்த ஐ.தே.க. தேர்தலில் ஸ்ரீமா தோல்வியடைந்ததன் பின் காமினியின் இடத்துக்குப் பதிலாக திருமதி ஸ்ரீமாவை பாராளுமன்றத்துக்கு நியமித்திருக்கவில்லை. இதைத் தவிர அனுதாப வாக்குகளுக்காக வேண்டி 24ஆம் திகதி கொல்லப்பட்ட காமினி திசாநாயக்காவின் பிரேதத்தை 30ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்காக எனும் பேரில் வைத்திருந்தது. இதை விட இன்னொரு உதாரணம் ஐ.தே.க.வின் பொறுப்பு வாய்ந்த ஒருவரும் முன்னாள் சபாநாயகருமான எம்.எச்.மொஹமட் அவர்கள் காலியில் பிரச்சாரக் கூட்டமொன்றின் போது "விதவைகளுக்கு வாக்களிக்காதீர்கள் அது எமது மத அனுட்டானங்களுக்கு எதிரானது" எனத் தெரிவித்திருந்த போதும் தனது கட்சியின் சார்பில் போட்டியிட்ட திருமதி ஸ்ரீமா திசாநாயக்கவை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். இக்கட்சிகள் பிழைப்பு வாதத்துக்காக பெண்களின் விதவைத்துவத்தைக் கூட பயன்படுத்தவும் தவறவில்லை என்பதை விளங்களாம்.

### போட்டியிலிருந்து கலப்பத்தி விலகல்

இது இப்படியிருக்க ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான நிஹால் கலப்பத்தி அவர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதாக சந்திகா வாக்குறுதி அளித்தால் தான் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து சந்திரிகா தாம் 1995 யூலை 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதாக வாக்குறுதி அளித்தார். இதனைத் தொடர்ந்து ஒக்டோபர் 28ஆம் திகதியன்று இலங்கை முற்போக்கு முன்னணி வேட்பாளர் நிஹால் கலப்பத்தி போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். ஆனால் இது தேர்தல் ஆணையாளரால் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை. இ.மு.மு.வின் தேர்தல் பிரச்சாரங்கள் நிறுத்தப்பட்ட போதும் தேர்தல் நாளன்று இ.மு.முவுக்கும் வாக்களித்தனர் மக்கள்.

எவ்வாறிருந்த போதும் நவம்பர் 09ஆம் திகதி நடந்த இத்தேர்தலில் கணவரை இழந்த இரு பெண்களுக்கிடையிலேயே பலத்த போட்டி நிலவியது என்பது தான் உண்மை. தேர்தலின் இறுதியில் சந்திரிகா 62.28 சதவீத வாக்குகளையும் பெற்று ஜனாதிபதியானார். ஸ்ரீமா திசாநாயக்கா 35.91 வீத வாக்குகளைப் பெற்றிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

### மாபெரும் வெற்றி

உலகிலும் இலங்கையிலும் முதற் பெண் பிரதமரான ஸ்ரீமாவின் மகள் சந்திரிகா இலங்கையின் முதற்பெண் ஜனாதிபதியானார். அது மட்டுமல்லாது உலகிலேயே தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நான்காவது பெண் ஜனாதிபதியுமானார். இதை விட உலகில் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலேயே கூடிய வாக்கு வீதாசாரத்தைப் பெற்ற இரண்டாவது நபரும் சந்திரிகாவே. (இது பற்றி சில பத்திரிகைகளில் முதலாவது நபரென்றும் உலக சாதனையொன்றும் பிரச்சாரம் செய்கின்றது. அது தவறு. முதலாவது கூடிய வாக்கு வீதாசாரத்தை பெற்றிருப்பவர் நெல்சன் மண்டேலா ஆவார்.)



### சந்திரிகா குமாரணதுங்க

சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் 1945ஆம் ஆண்டு யூன் மாதம் 29ஆம் திகதி பிறந்தவர். முப்பத்தெட்டு வருட இடைவெளிக்குள் மூன்று அரச தலைவர்களை உருவாக்கிய பண்டாரநாயக்க குடும்பத்தின் உறுப்பினர் இவர். சந்திரிகா கொழும்பு சென். பிறிஜ்ஜட் கல்லூரியில் கல்வி கற்றார். சிறிமாவோ - எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க ஆகியோரின் இரண்டாவது பிள்ளையான சந்திரிகா சிறு வயதிலிருந்தே அரசியற் சூழலால் உள்வாங்கப்பட்டவர். சந்திரிகாவின் சகோதரி சுனேத்திரா. சகோதரரான அனுரா பண்டாரநாயக்க பிற்காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். தற்போது ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். தனது ஆரம்பக் கல்வியை சென். பிறிஜ்ஜட் கல்லூரியில் முடித்து விட்டு சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று விட்டு பிரான்சில் பாரிஸ் நகரிலுள்ள சோபோன் பல்கலைக்கழகத்தில் அரசியற் துறையில் பட்டம் பெற்றார். சிங்களம், ஆங்கிலம், பிரெஞ் ஆகிய மொழிகளை சரளமாக பேசக் கூடியவரான சந்திரிகா ரஷ்ய, ஜெர்மனிய, ஹிந்தி ஆகிய மொழிகளிலும் பரிச்சயம் உள்ளவர். அபிவிருத்தி பொருளாதாரத் துறையில் முதுமாணிக் கல்வியையும் கற்றதுடன் தொடர்பு சாதனத்துறையில் குறுகிய கால பாடநெறியையும் பாரிஸில் முடித்தவர்.

"இலங்கையில் நிலம் மற்றும் விவசாய நடவடிக்கையின் மீளுருவாக்கம்", "குடியிருப்புத் திட்டம்: இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான எதிர்கால தொழில்நுட்ப முறை" எனும் தலைப்புகளிலும் "இலங்கையின் அரசியல் வன்முறைகள்", "இலங்கையின் கூட்டுறவுச் சங்கங்கள் 1948-இலிருந்து இன்று வரையில் இலங்கையின் உணவுக் கொள்கையும் அதன் மார்க்கமும்" எனும் தலைப்புகளில் ஆய்வுகளை எழுதியுள்ளார். 1970இல் ஆட்சியேறிய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் 1922இல் அமைக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராக 1976 வரை கடமையாற்றிய சந்திரிகா 1977இல் "குடியிருப்பு ஆணைக்குழு"வினது தலைவராகவும், 1978-1979 காலப்பகுதியில்



படிப்பகம்

www.padippakam.com

உணவு மற்றும் சிறு உற்பத்திச் சங்கத்தின் விசேட ஆலோசகராகவும், 1988-1991களில் பொது நலவாய கல்வி நிறுவனத்தின் (லண்டன் பல்கலைக் கழகம்) ஆய்வாளராகவும் கடமையாற்றிய அனுபவமுள்ள இவர் புது டில்லியிலுள்ள நேரு பல்கலைக்கழகத்திலும் பிரித்தானிய பிரட்போர்ட் பல்கலைக்கழகத்திலும் வருகைதரு விரிவுரையாளராகவும் இருந்திருக்கிறார்.

1971 ஜே.வி.பி கிளர்ச்சியின் போது பிரான்ஸ் நாட்டில் பயின்று கொண்டிருந்த சந்திரிகாவுக்கு அரசாங்கம் கிளர்ச்சியை அடக்கிய விதம் தொடர்பாக உடன்பாடு இருக்கவில்லை. இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மீறுவதை நிறுத்தும்படி கோரி தன்னுடன் பயின்ற 14 இலங்கையருடன் சேர்ந்து கையெழுத்து சேகரித்து பிரதமருக்கு தந்தி அனுப்பினார். அப்போது பிரதமராக இருந்தவர் சந்திரிகாவின் தாயார் சிறிமா என்பது குறிப்பிடத்தக்கது. என்ற போதும் இன்னொரு பக்கம் ஜே.வி.பி.யின் தலைவர் றோகண விஜேவீர தனது மகள் சந்திரிகாவை கடத்த முயலலாம் என்று சந்திரிகாவுக்கு பாதுகாப்பு வழங்கும்படியும் சிறிமா பிரான்ஸ் அரசாங்கத்தைக் கோரியிருந்தார். 1974இல் சந்திரிகா ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பெண்கள் பிரிவு, மத்திய கமிட்டி ஆகியவற்றின் உறுப்பினரானார். 1978ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி தனது முப்பத்து மூன்றாவது வயதில் பிரபல சினிமா நடிகரும் அரசியல்வாதியுமான விஜயகுமாரணதுங்கவை மணமுடித்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரச்சாரத்துக்காக அன்றைய காலப்பகுதியில் "தினகர" எனும் சிங்கள பத்திரிகையைத் தொடங்கி அதன் நிர்வாகியாகவும் செயல்பட்டார்.

1980இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுவிலும் செயற்பாட்டு அணியிலும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1983இல் "இலங்கை அரசாங்கத்துக் எதிராக நக்சலைட் சதி" எனும் பேரில் நக்சலைட் இயக்க சந்தேக நபர்கள் எனக் கூறி ஜே.ஆர். அரசாங்கம் விஜயகுமாரணதுங்க உட்பட சிலரைக் கைது செய்தது. இந்தக் குற்றச்சாட்டை ஏற்படுத்தியதன் பின்னணியில் சில ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர்களும் இருந்தார்கள் என நம்பப்பட்டது. விஜயகுமாரணதுங்கவின் மீதான எந்தக் குற்றச்சாட்டும் ஊர்ஜிதப் படுத்த முடியாமல் போனதால் அவர் விடுதலையானார்.

பின்னர் சந்திரிகாவும் விஜயகுமாரணதுங்கவும் ஸ்ரீ.ல.சு.க.விலிருந்து விலகி 1984 ஜனவரி 22இல் ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியை தோற்றுவித்தனர். இக்கட்சியின் தலைவராக ரி.பி.இலங்கரத்னவும், பொதுச் செயலாளராக விஜயகுமாரணதுங்கவும் உப தலைவராக சந்திரிகாவும் கடமையாற்றினர். 1986இல் ரி.பி.இலங்கரத்ன விலகிக் கொண்டதோடு அப்பதவிக்கு சந்திரிகாவும் கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவிக்கு விஜயகுராணதுங்கவும் நியமிக்கப்பட்டனர்.

சில வருடங்களின் பின் இடதுசாரி இயக்கங்களை ஒன்றிணைத்து "ஐக்கிய சோஷலிச முன்னணி" எனும் பேரில் கட்சியையும் ஸ்தாபித்தனர். இக்கட்சியால் எதிர்கால ஜனாதிபதி வேட்பாளராக விஜயகுமாரணதுங்கவின் பெயர் முன்மொழியப்பட்டிருந்தது. விஜயகுமாரணதுங்க இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டதுடன், யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகள் அமைப்புடனும் தமிழ் நாட்டுக்குச் சென்று அங்கிருந்து இலங்கையின் தமிழ் இயக்கங்களையும் தமிழ் நாட்டு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ராமச்சந்திரனையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார். இப்பேச்சுவார்த்தையின் போதெல்லாம் சந்திரிகாவும் கலந்து கொண்டிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி விஜயகுமாரணதுங்க சுடப்பட்டுக் கொல்லப்பட்டார். இவரது மரணச்சடங்கின் இறுதியின் போது தான் இடதுசாரிக்கட்சிகள் இணைந்து சபதமெடுத்து, ஐக்கிய சோசலிச முன்னணியைப் பிரகடனப்படுத்தினர். ஏற்கெனவே 1959 செப்டம்பரில் தந்தை பண்டாரநாயக்காவும் இதே போன்றே துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தாய் சிறிமாவுக்கும் மகள் சந்திரிகாவுக்கும் இடையில் சில ஒற்றுமைகள் உண்டு. தாயாரான சிறிமா, தனது கணவர் எஸ்டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவை இழக்கும் போது அவரின் வயது நாற்பத்திரண்டைக் கடந்திருந்தது. அதே போல் மகள் திருமதி சந்திரிகாவும் தனது கணவர் விஜயகுமாரணதுங்கவை இழக்கும் போது அவரது வயது நாற்பத்திரண்டு. சந்திரிகாவின் தாயார் உலகின் முதலாவது பெண் பிரதமராக தெரிவு செய்யப்படும் போது சந்திரிகாவின் வயது 14. அதே போல் சந்திரிகா இலங்கையின் முதற் பெண் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்ட்டும் போது அவரது மகள் யசோதராவுக்கு வயது 14.

தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா மகள் சந்திரிகாவைப் பற்றி இப்படிக் கூறுகிறார்.

> "சந்திரிகா அரசியலுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது என்பதை பிற்பகாலத்தில் நான் உணர்ந்தேன். ஆனால் மகன் அனுராவோ மகள் சந்திரிகாவோ அரசியலுக்கு வருவதை நான் விரும்பியிருக்கவில்லை. நாட்டுக்கு பெரும் சேவை செய்த பண்டாரநாயக்கவின் மறைவை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. மகளின் ஜாதகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபடி நாட்டின் தலைவியாக அவள் தெரிவு செய்யப்பட்டாள். ஜாதகத்தை மாற்ற முடியாது அல்லவா? தலைமைத்துவம் சந்திரிகாவுக்கு உரியதென்றால் ஆகியே தீரவேண்டும். சந்திரிகாவுக்கு ஒத்துழைப்பதற்காகவே நான் அமைச்சரவையில் இணைந்தேன். நான் சம்பளம் எடுக்கவில்லை. நான் பன்னிரெண்டு வருடங்களாக நான் பெற்ற அனுபவங்களை மகளுடன் பகிர்ந்து கொண்டு ஒத்துழைப்பேன்"

(நவலிய 1994-08-29)

1992இல் சந்திரிகா மீண்டு ஸ்ரீ.ல.சு.க.வில் இணைந்தார். இவ்வாண்டிலேயே மத்திய குழு உறுப்பினரானார் பின்னர் உப தலைவராகவும் நியமிக்கப்பட்டார். பொது ஜன ஐக்கிய முன்னணியினது உப தலைவராக நியமிக்கப்பட்ட சந்திரிகா 1993 மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு மேல் மாகாண முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

1994 ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு இலங்கையின் இரண்டாவது பெண் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். 1994 நவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையின் தேர்தல் வரலாற்றில் எவரும் பெற்றிராத அளவுக்கு அதிகளவு வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உலகில் இரண்டு வருட குறுகிய காலத்தில் முதலமைச்சராகவும் பின்னர் பிரதமராகவும் அதிலிருந்து ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்ட ஒரே பெண்ணாக திருமதி சந்திரிகா குமாரணதுங்கவே திகழ்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

## 1994 நவம்பர் 9இல் நடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சந்திரிகா குமாரதுங்க | (PA) | 47,09,205 | 62.28 |
| வஜிரா ஸ்ரீமதி திசாநாயக்க | (UNP) | 27,15,283 | 35.91 |
| ஹட்சன் சமரசிங்க | (IND.2) | 58,886 | 0.78 |
| ஹரிச்சந்திர விஜயதுங்க | (SMBP) | 32,651 | 0.43 |
| ஏ.ஜே.ரணசிங்க | (IND.1) | 22,752 | 0.30 |
| நிஹால் கலப்பத்தி | (SLPF) | 22,749 | 0.30 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 75,61,526 | 98.03 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,51,706 | 1.97 | |
| பெற்ற பெரும்பான்மை வாக்குகள் | 19,93,927 | | |
| மொத்த வாக்காளர் தொகை | 1,09,37,279 | | |



படிப்பகம்

www.padippakam.com

# மில்லேனியத் தேர்தல்

உலகின் முதலாவது பெண் அரச தலைவரை உருவாக்கிய நாட்டில் அதே பிரதமரின் (சிறிமாவோ பண்டாரநாயக்காவின்) இறுதி வாக்களிப்போடு 2000 ஆண்டு ஒக்டோபர் 20இல் நடந்து முடிந்த 11வது பாராளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத அளவுக்கு பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டிருக்கின்றனர் என்று நாங்கள் பெருமையுடன் கூறிக்கொள்வோம்.

ஆனால் 1977க்குப் பின்னர் முதற்தடவையாக மீண்டும் பெண்களின் பிரதிநிதித்துவ வீதாசாரம் பாராளுமன்றத்தில் குறைந்து விட்டது என்பதை இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இந்தக் கால இடைவெளிக்குள் அதிகளவு பெண் அமைச்சர்களையும், பெண் உறுப்பினர்களையும், பெண் ஜனாதிபதியையும், பெண் பிரதமரையும் கூட ஏக காலத்தில் கொண்டிருந்தும் கூட அதற்கடுத்தபடியாக நடந்து முடிந்திருக்கிற தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவ வீதாசாரம் இருந்ததை விட குறைந்ததைக் கவனத்தில் எடுக்க வேண்டும். (பார்க்க அட்டவணை) 1977இல் மொத்த பாராளுமன்ற பிரதிநிதிகளில் பெண்களின் வீதாசாரம் 2.3 வீதம் மட்டுமே இருந்தது. 1989 மற்றும் 1995 ஆகிய 9வது 10வது பாராளுமன்றத்தில் 5.1 வீத பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆனால் இம்முறை அது 4 வீதமாக மீண்டும் குறைந்திருக்கிறது.

29 அரசியற் கட்சிகளும் 99 சுயேட்சைக் குழுக்களிலுமாக மொத்தம் 5048 பேர் இம்முறை தேர்தல் களத்தில் குதித்திருந்தனர். வரலாறு காணாத அளவுக்கு இந்த முறை தேர்தலில் போட்டியிட்ட குழுக்களினதும், கட்சிகளினதும் எண்ணிக்கை கூட அவை போட்டியிட்ட தொகுதிகளும் அதிகம். சென்ற தடவை போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 1440 பேர் மட்டுமே ஆகும். இந்த அடிப்படையில் நோக்குகையில் பெண் வேட்பாளர்கள் இம்முறை அதிகரித்தது ஒன்றும் பெரிய விடயம் அல்ல.

ஆனால் இம்முறை போட்டியிட்ட 117 பெண் வேட்பாளர்களில் 9 பேர் தான் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். சென்ற முறை 12 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொ.ஐ.மு.வின் மூலம் 14 பெண் வேட்பாளர்களும், ஐ.தே.க. 8 பெண் வேட்பாளர்களையும், ஜே.வி.பி. 23 பெண் வேட்பாளர்களையும் நிறுத்தியிருநதது.

இம்முறை சுமேதா ஜயசேன, பவித்திரா வன்னி ஆராச்சி, அமரா பியசீலி ரத்நாயக்க, சந்திரானி பண்டார, பேரியல் அஷ்ரப், சோமா குமாரி தென்னகோன், சிறியானி பெர்னான்டோ, அன்ஜான் உம்மா, சுரங்கனி எல்லாவெல ஆகிய 9 பேருமே பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com




முன்னாள் அமைச்சர்களான மகளிர் விவகார அமைச்சா ஹேமா ரத்நாயக்க, பிரதி அமைச்சராக இருந்த நிருபமா ராஜபக்ச, உணவு, வர்த்தக பிரதி அமைச்சராக இருந்த சுமித்ரா பிரியங்கனி அபேவீர ஆகியோர் தேர்தலில் தோல்வியுற்றனர்.

அது போல ஐ.தே.க.விலிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் இருந்த இம்முறை வேட்பாளர்களான சுனேத்ரா ரணசிங்க, கல்யாணி வீரசிங்க, ரேனுகா ஹேரத், வீமாலி கருணாரத்ன, ஷீலா யாப்பா, ராஜமனோகரி புலேந்திரன், சமந்தா கருணாரத்ன, அனுலா பஸ்நாயக்க, பத்மா வெத்தேவ, சம்பா கலுகல்ல, சிறிமணி அத்துலத் முதலி, சுவனீத்தா குணரத்ன ஆகியோரும் இம்முறை ஆசனங்களை இழந்துள்ளனர்.

இம்முறை தெரிவாகியுள்ள 10 உறுப்பினர்களில் 5 பேர் புதிய முகங்கள். பேரியல் அஷ்ரப் (என்.யு.ஏ.), பொ.ஐ.முவிலிருந்து சுரங்கனி எல்லாவெல, சோமா குமாரி தென்னகோன், சிறியானி பெர்ணான்டோ, ஐ.தே.க.விலிருந்து சந்திராணி பண்டார ஜே.வி.பி.யிலிருந்து அன்ஜன் உம்மா, ஆகியோரே அந்த முகங்கள்.

இலங்கையின் சரித்திரத்திலேயே முதலாவது தடவையாக முஸ்லிம் பெண்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பது ஒரு விசேட அம்சம். அதுவும் இரு பெண்கள். முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த பேரியல் அஸ்ரப் ('இவரது கணவர் தான் மறைந்த அஸ்ரப்') மற்றும், ஜே.வி.பியின் சார்பில் தேசியப் பட்டியலின் மூலம் தெரிவாகியிருக்கும் அன்ஜான் உம்மா. இவர்களில் பேரியல் அஸ்ரப் இலங்கையில் பாராளுமன்றவாத அரசியலுக்குள் நுழைய முடிந்த பலரும் உள்நுழைந்த வழியான அனுதாப வாக்கு, குடும்பச் செல்வாக்கு, என்பவற்றால் வந்தவர் எனலாம். ஆனால் அன்ஜான் உம்மா கட்சி அரசியலுக்கூடாக தெரிவானவர். அவர் ஏலவே உள்ளூராட்சி சபையில் அங்கம் வகித்தவர். அது மட்டுமன்றி முதலாவது தடவையாக ஜே.வி.பி.யின் பெண் பாராளுமன்ற உறுப்பினரும் கூட.. ஆனால் இவர் ஜே.வி.பி.யினரால் வெறும் "ஷோ காட்டலுக்கான" (சிறுபான்மை இனங்களுடனான நெருக்கத்தை வெளிக்காட்ட) பொம்மையாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறார் எனும் குற்றசாட்டு ஜே.வி.பி.யின் பலரும் முன்வைக்கின்றனர். இம்முறை ஒரு தமிழ் பெண்ணும் தெரிவாகவில்லை. இருந்த ராஜமனோகரி புலேந்திரனும் தோல்வியடைந்தார்.

கடந்த மூன்று வருடங்களாக பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான கோரிக்கையை உயர்த்திப் பிடித்தபடி பெண்கள் இயக்கங்கள் கோசங்களை முன்வைத்தாலும், நேரடியாகச் சென்று பல அரசியற் கட்சிகளுடன் உரையாடிய போதும் இவை ஒன்றும் நடக்கவில்லை. ஒரு வகையில் இது அரசியல்மயப்பட்ட போராட்டமாக இருக்காததும் ஒரு காரணமாக இருக்கலாம். என்.ஜீ.ஓ.மயப்பட்ட இந்தக் கோரிக்கைகள் வெறும் பருவகால கோரிக்கைகளாக



படிப்பகம்

www.padippakam.com

ஆகிப்போனமையும், (தொடர்ச்சியற்ற தன்மையும், இத்தகைய வேலைத்திட்டத்திற்கான நிதியுதவி முடிந்ததும் அது வேறு வேலைத்திட்டத்திற்கு கொண்டு செல்லப்படுவதுமான நிலைமை) சாதாரண உழைக்கும் வர்க்க கோரிக்கையாக இராததும், இருக்கும் அதிகார கட்டமைப்புடனான தற்காலிக சமரச கோரிக்கை வேண்டி நின்றதுமான போக்கும் இவ்வகைப்பட்ட தேவைகள் அடையப் பெறமைக்கான காரணமாக இருக்க வேண்டும்.

இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானோர் பெண்களாக இருந்த போதும் இன்னமும் 5 வீதத்தைத் தாண்டிச் செல்லாத அரசியற் பிரதிநிதித்துவம் தான் உள்ளது. பெண் அமைப்புகளின் கோரிக்கைகள் கூட நியாயப்படி இருக்க வேண்டிய 50 வீத பிரதநிதித்துவக் கோரிக்கையாகக் கூட இருக்கவில்லை. வெறும் 30 வீதக் கோரிக்கையாக மட்டுமே இருந்தது. இறுதியாக பாராளுமன்றத்துக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் படாமல் போன அரசியல் சீர்திருத்தத்தில் கூட உள்ளூராட்சிப் சபைகளில் 25 வீத அரசியல் பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டுக்கான உத்தரவாதத்தை மட்டுமே அறிவித்திருந்தனர்.



பேரியல் | அன்ஜன் உம்மா

ஒரு தொடர்புடைய அமைச்சர் என்கிற ரீதியில் மகளிர் விவகார அமைச்சர் ஹேமா ரத்நாயக்க பல அரசியற் கட்சிகளை நோக்கி பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரியுங்கள் எனப் பலமாகக் கோரிக்கை வைத்தும் தான் பார்த்தார். ஆனால் அவர் இம்முறை அமைச்சா பதவியை மட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினர் பதவியைக் கூட இழந்தார்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 52 ஆண்டுகளாம், சர்வஜன வாக்குரிமை ஆண்களுக்கும் பெண்களுக்குமாகக் கிடைத்து 79 ஆண்டுகளாம் ஆனால் இலங்கை "ஜனநாயக" "சோசலிச", "குடியரசில்" பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவத்தை 30 வீதத்துக்கு மேல் அதிகரிப்பதற்கு கொள்கையளவில் கூட - அரசியற் கட்சிகளைத்தான் விடுவோம், - அரசு கூட இல்லை என்பது தான் நிலைமை.

மீண்டும் எங்கள் ஜனாதிபதி சந்திரிகா, நிதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், முப்படைகளின் தலைவர் அரசாங்கத்தினதும் தலைவர். இதனைத் தான் இது ஒரு சமூக அதிகாரத்துவ கட்டமைப்பின் விளைவு என்கிறோம். ஆக இதே கட்டமைப்புக்குள் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டாலும் கூட பெண்களின் நலன்கள் நிறைவேற்றப்படுமா என்கிற கேள்வி பலமாக இருப்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வோம்.

(சரிநிகர் - 2000 நவம்பர்)



படிப்பகம்

www.padippakam.com

# ஆண் உறவு முறைச் செல்வாக்கு!

"அதிகளவு விதவைகளின் பிரதிநிதித்துவமுள்ள பாராளுமன்றமாக இலங்கைப் பாராளுமன்றம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறும்" இவ்வாறு 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி வெளியான "லங்காதீப" எனப்படும் சிங்கள வார இறுதிப் பத்திரிகையில் வெளியான "கின்னஸ் புத்தகத்தில்" எனும் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதே கட்டுரையில் "அரசியல்வாதியொருவரின் மனைவியானவர், தான், அரசியல்வாதியாகும் மோகம் ஏற்பட்டு விட்டால் அரசியல்வாதிக்கு கடவுள் தான் துணை" என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அக்கட்டுரையாளர் தனது கட்டுரையில் "பெண்கள் தாம் தன்னிச்சையாகவே விரும்பி தமது விதவைத்துவ பயன்படுத்தலுக்கூடாக அரசியலுக்கு வருகின்றனர்: அதற்காக தமது "அரசியல்வாதி கணவர்" பலியாவதிலும் ஆர்வமுடையவர்கள்" என்கின்ற தொனியில் அக்கட்டுரை தொடர்ந்து செல்கின்றது. இந்த வக்கிரமமான கண்ணோட்டம் ஆணாதிக்க கருத்தியல் கொண்ட கண்ணோட்டமே என்பது ஒரு புறமிருக்க "விதவைத்துவ அரசியல்" தொடர்பாக ஆழமான தேடல், விவாதம் என்பவை அவசியமானவை என்பதும் முக்கியமானது.

இலங்கைப் பெண்களின் பாராளுமன்ற அரசியலில் "விதவைத்துவம்" மற்றும் அரசியற் செல்வாக்குப் பெற்றிருந்த ஆணின் மறைவினால் அனுதாபத்துக்கு ஆளான கிட்டிய உறவு முறையைச் சார்ந்த பெண்களின் "நிலை" என்பவை பாரிய அளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றதென்றால் அது மிகையல்ல.

இலங்கையின் முதலாவது அரசியல் பிரவேசமே இப்படித்தான் தொடங்குகிறது. எட்லின் மொலமூரே அவரது தகப்பன் இறந்ததும் அவரது இடத்திற்கு இடைத்தேர்தலில் நிற்க வற்புறுத்தப்பட்டதன் பேரில் அவர் போட்டியிட்டு வென்று தெரிவானார் என்பதையும் நினைவிற் கொள்வோம்..

1994 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்திருந்த போது



படிப்பகம்

உலகப் பிரசித்தி பெற்ற பி.பி.சி. செய்திச் சேவையில் வாசிக்கப்பட்ட செய்திக் கட்டுரையில் "Battle of the Widows" (விதவைகளின் போராட்டம்) என்று குறிப்பிட்டிருந்தது.

அத் தேர்தலில் போட்டியிட்ட ஆறு பேரில் முக்கிய பிரதான தேசியக் கட்சிகளுக்கிடையிலேயே பலத்த போட்டி நிலவியது. ஐ.தே.க. பொ.ஜ.ஐ.மு. ஆகிய அக் கட்சிகள் இரண்டினதும் வேட்பாளர்களாக முறையே ஸ்ரீமா திசாநாயக்க - சந்திரிகா குமாரணதுங்க ஆகிய இருவரும் காணப்பட்டனர். இத் தேர்தலில் இவர்கள் இருவருமே விதவைத்துவ அடையாளப்படுத்தப்பட்டவர்கள். இதனைக் குறிப்பிட்டே பி.பி.சி. சேவை "விதவைகளின் போராட்டம்" எனக் குறிப்பிட்டிருந்தது.

அதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால் அத் தேர்தலில் அரசியல் பிழைப்புக்காக தேசிய கட்சிகள் தந்திரோபாய ரீதியில் கையாண்ட "விதவைத்துவம்" வென்றதா? அல்லது அன்றைய நடைமுறை சமகாலஅரசியல் சூழல் வெற்றியடைந்ததா? என்ற கேள்வியே.

ஏனெனில் இத்தேர்தலின் போது படுகொலை செய்யப்பட்டிருந்த காமினி திசாநாயக்காவின் மறைவினால் ஏற்பட்ட அனுதாபத்திற்கு உரியவரான அவரது மனைவி ஸ்ரீமாவை ஐ.தே.க. மிகுந்த வற்புறுத்தலின் பேரில் ஜனாதிபதி வேட்பாளராக்கியது. சில பத்திரிகைகள் எதிர்க்கட்சிகள் உட்பட பலர் "கணவர் இறந்து போய் பிரேதம் கூட அடக்கம் செய்யப்படாத நிலையில் கணவருக்கு பதிலாக போட்டியில் இறங்க தீர்மானித்த வேறெந்த பெண் உளர்?" என கேள்வி எழுப்பியிருந்தார்கள். இதே வேளை சந்திரிகாவின் "விதவைத்துவ அனுதாபம்" காலம் கடந்திருந்தது என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆனால் "விதவைத்துவம்" மட்டும் ஆட்சியதிகாரம் செலுத்தக் கூடிய தகுதியாக இருக்க முடியாது என்பதை ஜனாதிபதித் தேர்தல் உணர்த்தியது. இவ் உணர்த்தல் கடந்த கால வரலாற்றில் விதவைத்துவ பயன்பாட்டு அனுபவத்தால் ஏற்பட்ட கணிசமான தாக்கமாக கருத இடமுண்டு.

இலங்கை அரசியலில் விதவைத்துவத்தின் செல்வாக்கை இக் கட்டுரையில் உள்ள அட்டவணை தெளிவாக உணர்த்தும்.

### கடந்த கால ஆண் உறவு முறைச் செல்வாக்கு

இலங்கை அரசியலில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதிலிருந்து (பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டதிலிருந்து) இன்றைய 10வது பாராளுமன்ற காலம் வரை 40 பெண்கள் பாராளுமன்றத்திற்குப் பிரவேசித்துள்ளார்கள். இவர்களில் 29 பேர் அதாவது 75 வீதத்தினர் ஆணைச் சார்ந்தே, கணவனின் மரணத்தினால் அவருக்குப் பதிலாகவோ அல்லது குடும்ப (அல்லது பரம்பரை)ச் செல்வாக்கினாலோ பாராளுமன்ற அரசியலுக்குப் பிரவேசித்திருக்கின்றனர்.

ஆண் உறவு முறைச் செல்வாக்கினால் பிரவேசித்த 30 பேரில் 21 பேர் கணவரின் செல்வாகினாலும் (பெரும்பாலும் விதவைத்துவ அனுதாபத்தினூடாக), 6 பேர் தகப்பனின் செல்வாக்கினாலும், 3 பேர் சகோதரனின் செல்வாக்கினாலும் பாராளுமன்ற அரசியலுக்கு வந்தனர்.

(சந்திரிகா குமாரணதுங்கவின் பாராளுமன்ற அரசியல் பிரவேசத்திற்கு தகப்பனார் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, தாய் சிறிமா, சகோதாரன் அனுர, கணவன் விஜயகுமாரணதுங்க ஆகியவர்களில் எவரது செல்வாக்கு அதிகளவு பயன்பட்டது என்பது விவாதத்திற்கு உரியதென்றாலும் ஆணின் செல்வாக்கு அதிகளவு

இருந்திருப்பதை பலரும் ஏற்பர்.)

பாராளுமன்றத்துக்கான முதல் பிரவேசமே ஆண் உறவு முறைச் செல்வாக்கினாலேயே நடந்தது. 1931 இல் திரு.ஜோன் ஹென்றி மீதெனிய அதிகாரம் என்ற அரசாங்க சபை உறுப்பினரின் மரணத்தைத் தொடர்ந்தே அவரது மகள் எட்லின் மொலமுரே இடைத் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவ செய்யப்பட்டார்.

இடதுசாரிப் பெண்களின் அரசியற் பிரவேசத்திற்கு ஆண் உறவு முறைச் செல்வாக்கு ஒரு ஊக்கியாக இருந்த போதும் அது மட்டுமே காரணமாக இருக்கவில்லை. என்பதை சென்ற இதழில் கண்டோம். குறிப்பாகச் சொல்லப் போனால் இடதுசாரிக் கட்சிகளுக்கூடாக பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த பெண்கள் எவருமே "விதவைத்துவத்தை" பயன்படுத்தியிருக்கவில்லை.

(புளோரன்ஸ் சேனநாயக்க, குசும் சிறி குணவர்தன, டொரின் விக்கிரமசிங்க, விவியன் குணவர்தன, சோமா விக்கிரமநாயக்க போன்றவர்கள்) இன்னும் சொல்லப் போனால் தங்கள் கணவர் உயிருடன் இருக்கும் போதே அரசியலுக்குள் இவர்கள் நுழைந்தனர்.

ஆண் உறவு முறை செல்வாக்கை பெண்கள் "பயன்படுத்தினார்கள்" என்று வாதிடுவோரும் உண்டு. ஆனால் ஆண் உறவு முறைச் செல்வாக்கு பெரும்பாலும் பெண்கள் மீது திணிக்கப்பட்ட ஆதாரங்களையே அதிகம் காண முடிகிறது. இந்தத் திணிப்பை பெண்களின் இயல்பான இசைவாக்கத் தன்மைக் கூடாக பிரவேசித்து வெற்றி காண்பது தேசியக் கட்சிகளின் பொதுவான இயல்பாகவும் இருந்து வந்துள்ளது.

பாராளுமன்ற அரசியலுக்கு இவ்வாறு பிரவேசித்த பெண்கள் பலர் நாளடைவில் தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டு இதே முதலாளித்தவ-ஆணாதிக்க ஒடுக்குமுறை யந்திரத்தை பாதுகாத்து வருவதை நடைமுறையில் காண முடிகிறது. இன்று இடதுசாரி இயக்கங்களைச் சாராத பெண்களே அல்லது பெண்ணியம் பெண்கள் நலன் என்பவற்றில் அதிகம் அக்கறை குறைந்த பெண்களே பிரதிநிதித்துவம் வகிக்கின்ற நிலையில் அது மேலும் சாத்தியமாகிறது. எனவே பெண்கள். பெண்களின் நிலையை பிரதிநித்துவப்படுத்தப்படுத்தும் அரசியல் கூட இந்த அரசியல் அமைப்பு முறைக்குள் இல்லை. இதற்கொரு சிறந்த உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது (காமினியின் மறைவுக்கு முன்) முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தின் உரையை குறிப்பிடுவது பொருந்தும்.

> "இந்த நாட்டில் ஏன் வீட்டில் கூட பிரதானமானவர் ஆண்தான். வீட்டுக் குடியிருப்பாளர் பட்டியலிலும் கூட ஆணைத்தான் முதலில் குறிக்கின்றோம். எனவே நாம் நமது நாட்டின் தலைவராக ஆணொருவரையே தேர்ந்தெடுத்தல் வேண்டும்."

(ராவய 27-11-94)

இதனைச் சொன்னவர் நாட்டில் பெண்கள் உரிமைகளை பாதுகாப்பதற்கான பொறுப்பிலிருந்த முக்கிய பொறுப்பு வாய்ந்தவரின் அறிக்கை என்பதனால் மிகவும் கவனிக்கத்தக்கதாகிறது. தம்மை ஒடுக்குகிற சக்தியை இனங்காண்பது மட்டுமல்லாது தாமும் சேர்ந்து தம்மையே ஒடுக்குகின்ற அவல நிலையையே இங்கு காண்கின்றோம். வர்க்க நலன் சார்ந்த தேசிய அரசியல் எவ்வாறு ஒடுக்கப்படும் பிரிவினரை கொண்டு அவர்களுக்கு எதிராகவே செயல்படுத்துகிறது என்பதை இங்கு தெளிவாகக் காண்கின்றோம்.

www.padippakam.com

## ஆண் உறவு முறைச் செல்வாக்கு பாராளுமன்ற பெண் பிரதிநிதித்துவத்தில் வகித்த பங்கு

| பாராளுமன்ற அங்கத்துவ காலம் | பெண் அரசியல்வாதி | பிரவேசிக்க துணைக் காரணியாக நின்ற ஆண் அரசியற்புள்ளி | உறவு முறை | தொகுதி | கட்சி |
|---|---|---|---|---|---|
| 1931 | எட்லின் மொலமூரே | ஜோன் ஹென்றி | தகப்பன் | ருவன்வெல்ல | LSSP |
| 1931 | நேசம் சரவணமுத்து | ரத்னசோதி | கணவன் | கொழும்பு வடக்கு | ---- |
| 1947 | புளோரன்ஸ் | ரெஜி சேனநாயக்க | கணவன் | கிரிஎல்ல | LSSP |
| 1948 | குசும்சிறி குணவர்தன | பிலிப் குணவர்தன | கணவன் | அவிஸ்ஸாவெல்ல | LSSP |
| 1949 | தமரா குமாரி | டி.பி.இலங்கரத்ன | கணவன் | கண்டி | SLFP |
| 1952 | டொரின் விக்கிரமசிங்க | எஸ்.ஏ.விக்கிரமசிங்க | கணவன் | அக்குரெஸ்ஸ | CP |
| 1956 | விவியன் குணவர்தன | லெஸ்லி குணவர்தன | கணவன் | கொழும்பு வடக்கு | LSSP |
| 1957 | குசுமா ராஜரட்ன | கே.எம்.பி.ராஜரட்ன | கணவன் | வெலிமட | JVP |
| 1960 | சிறிமா பண்டாரநாயக்க | எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க | கணவன் | அத்தனகல்ல | SLFP |
| 1966 | மல்லிகா ரத்வத்தை | கிளிபர்ட் ரத்வத்தை | கணவன் | பலாங்கொட | SLFP |
| 1967 | லற்றீசியா ராஜபக்ஷ | டி.ஏ.ராஜபக்ஷ | கணவன் | தொடங்கஸ்லந்த | SLFP |
| 1978 | தயா சேபாலி | பந்துல சேனாதீர | கணவன் | கரந்தெனிய | UNP |
| 1978 | ரங்கநாயகி | எம்.கனகரத்னம் | சகோதரன் | பொத்துவில் | UNP |
| 1978 | ரூபா சிறியானி | அனுர டேனியல் | சகோதரன் | ஹேவாஹெட்ட | UNP |
| 1978 | எல்.எம்.விஜயசிறி | ஆர்.பி.விஜயசேகர | கணவன் | ஹரிஸ்பத்துவ | UNP |
| 1978 | சுனேத்திரா ரணசிங்க | எஸ்.டி.எஸ்.ஜயசிங்க | தகப்பன் | தெஹிவல | UNP |
| 1978 | கீர்த்தி லதா | கீர்த்தி அபயவிக்கரம | சகோதரன் | தெனியாய | UNP |
| 1978 | சமந்தா கருணாரத்ன | அசோக குணரட்ன | தகப்பன் | ரம்புக்கன | UNP |
| 1989 | ராஜமனோகரி | புலேந்திரன் | கணவன் | வன்னி | UNP |
| 1989 | சுமித்தா பிரியங்கனி | இந்திரபால அபேவீர | தகப்பன் | களுத்துறை | SLFP |
| 1989 | ரேணுகா ஹேரத் | ஹேரத் | தகப்பன் | நுவரெலியா | UNP |
| 1989 | ஹேமா ரத்நாயக்க | பி.பி.ரத்நாயக்க | கணவன் | பதுளை | SLFP |
| 1989 | குணவதி திசாநாயக்க | சுமேத ஜயசேன | கணவன் | மொனறாகலை | SLFP |
| 1994 | சந்திரிகா | பண்டாரநாயக்க | தகப்பன் | அத்தனகல்ல | SLFP |
| | | சிறிமா | தாய் | அத்தனகல்ல | SLFP |
| | | விஜயகுமரணதுங்க | கணவன் | | SLMP |
| 1994 | நிருபா ராஜபக்ஷ | ஜோர்ஜ் ராஜபக்ஷ | தகப்பன் | ஹம்பாந்தோட்டை | SLFP |
| 1994 | சிறிமணி | லலித் அத்துலத்முதலி | கணவன் | கொழும்பு | DUNF |
| 1994 | பவித்திரா | தர்மதாச வன்னியாராச்சி | தகப்பன் | ரத்தினபுரி | SLFP |
| 1994 | சுமேத ஜயசேன | சுமேத ஜீ.ஜயசேன | கணவன் | மொறாகலை | SLFP |
| 1994 | அமரபத்ரா | திசாநாயக்க | கணவன் | | UNP |
| 2000 | பேரியல் அஷ்ரப் | எம்.எச்.எம்.அஷ்ரப் | கணவன் | திகாமடுல்ல | PA |
| 2000 | சுரங்கனி எல்லாவெல | நாலந்த எல்லாவெல | தனயன் | ரத்தினபுரி | PA |

-சந்திரிகா குமாரணதுங்கவின் பாராளுமன்ற அரசியல் பிரவேசத்திற்கு அவரது தகப்பனார் எஸ் டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க, தாய் சிறிமா பண்டாரநாயக்கா, சகோதரன் அனுர பண்டாரநாயக்க, கனவன் விஜயகுமாரணதுங்க ஆகியோரின் நேரடி மற்றும் பங்களிப்பைச் செலுத்தியிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# பாராளுமன்ற அரசியலின் இறுதியாக...

இலங்கையில் கடந்த காலங்களில் அரசியற் கட்சிகள் எதுவுமே பெண்கள் பிரச்சினைகளை ஒரு அரசியல் போராட்டமாக அல்லது கோஷமாகக்கூட முன்னெடுத்ததில்லை. தேர்தல் காலங்களில் கூட தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்களது நலன் தொடர்பான எதுவும் 1977ஆம் ஆண்டு வரை சேர்க்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

1975 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினர் 'சர்வதேச மாதர் ஆண்டாக" பிரகடனப்படுத்திய போது உலகில் பல நாடுகளில் பெண்கள் அமைப்புகளின் போராட்டங்கள் காரணமாக பெண்கள் நலன்களில் லேசான பார்வையைச் செலுத்தியிருந்தன.

கியுபா, அவ்வாண்டில் பெண்களை ஒடுக்குவதில் பிரதான பங்கு வகிக்கின்ற குடும்ப அமைப்பு முறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் என்ற நோக்கத்தில், கியுப ஆண்கள் தமது மனைவியருக்கு வீட்டுப்பணிகளில் உதவிபுரிய வேண்டுமெனக் கோரும் "குடும்ப ஒழுங்குக் கோவை" யொன்றை சர்வதேச மாதர் ஆண்டான 1975இல் சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8ம் திகதியன்று அமுலுக்கு கொண்டு வந்தது.

உலகம் முழுவதும் 1975-1985 வரையான காலப்பகுதியை "பெண்கள் தசாப்தம்"ஆக பிரகடனப்படுத்தியது.

"இந்த சர்வதேச பெண்கள் ஆண்டில் ஏறபட்ட 'பெண்கள் நலன் " தொடர்பான பங்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசியற் கட்சிகள் பெண்கள் விடயங்களை அரசியலில் பிரயோகிக்க முயன்றதன் விளைவே 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெண்கள்



படிப்பகம்

www.padippakam.com

நலன் தொடர்பான ஏற்பாட்டையும் சேர்த்துக் கொண்டது. அன்று தொடக்கம் அரசியற் கட்சிகள் குறிப்பாக தேசியக் கட்சிகள் பெண்கள் விடயங்களை அரசியலில் தொட்டு வருகின்றன.

இதே வேளை பெண்களுக்கு எதிரான அரசியலும் தொடர்ந்து இருந்து வந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது. விஞ்ஞாபனங்களில் அவை சேர்க்கப்படாவிட்டாலும் அரசியல் பிழைப்பு வாதத்திற்காக அவ்வாறான பெண்கள் எதிர்ப்பு பிரச்சாரங்களை அல்லது பெண்கள் தொடர்பான பிழையான கருத்துக்களைக் கொண்டிருந்திருக்கின்றனர்.

இறுதியாக நடந்த (1994ஆம் ஆண்டு) 10வது பொதுத் தேர்தலின் போது சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷய எனும் 'லங்காதீப' (4-8-1994) பத்திரிகையில் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபன அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

"....தொழில் புரியும் அனைத்துப் பெண்களையும் வீட்டிலிருக்கச் செய்வோம். அதன் மூலம் அத்தொழில்களை ஆண்களுக்கு பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஆண்களின் வேலையில்லாப் பிரச்சினைகளைத் தீர்ப்போம்....."

இதன் மூலம் அக்கட்சியின் பெண்கள் தொடர்பான நிலைப்பாடானது பெண்கள் மனைக்கு உரியவள் (மனைவி) அவளுக்கு சமூக உற்பத்தியில் ஈடுபடும் சுதந்திரம் இல்லை. ஆணுக்கு மட்டுமே அவ்வுரிமை உண்டு. ஆண்களது பிரச்சினைக்குத் தீர்வு பெண்களை அடிமைப்படுத்துவதே எனத் தெளிவுறுத்துகிறது.

அதே தேர்தலின் போது பொதுஜன முன்னனியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில். போட்டியிட்ட நீல் ரூபசிங்க 'சரிநிகருக்கு (11-08-94) அளித்திருந்த பேட்டியில் :

"...பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை விட அடுப்படி வேலைகளில் ஈடுபடுவதே நல்லது" எனக் குறிப்பிட்டிருக்கிறார். இவர் போட்டியிட்ட அதே பொது ஜன முன்னணியை தலைமை தாங்கி நடத்தியவர் பெண்ணே (சந்திரிகா).

அதே போல் தற்போது இவர் அரசாங்கத்தின் உறுப்பினர் அரசாங்கத்தின் தலைவர் பெண். இலங்கையில் ஆணாதிக்கம் சார்ந்த அரசியல் கட்டமைப்பின் வெளிப்பாடு இப்படியாகத் தான் இருக்கிறது. இப்படியாகத்தான் இருக்கும். பெண்கள், அரசியலில் தங்களை முழுமையாக ஈடுபடுத்த முடியாத அளவிற்கு சமூக அமைப்பு அமைந்துள்ளது. அவர்களது முழு நேரமும் குடும்பத்திற்கான உழைப்பில் செலவிட நேரிட்டுள்ளது. ஆண்களின் ஆதிக்கம் பெண்கள் வெளியேறி சமூக உற்பத்தியில்-அரசியலில் முழுமையாக ஆண்களைப் போல் பங்குபற்ற முடியாத வகையில் தடை செய்கிறது.

முதலாளித்துவ ஜனநாயக மரபோ, பெண்களுக்கும் சகலவற்றிலும் சமவாய்ப்பு. வாக்குரிமை, சமத்துவம் உள்ளதாக மார் தட்டிக் கொள்கிறது. அம்மரபு பற்றிப்பேசும் மேற்கத்தேய முதலாளித்துவ நாடுகள் கூட இந்த நூற்றாண்டில் தான் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது. இன்றும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படாத ஏராளமான நாடுகள் ஆசிய, ஆபிரிக்க, மத்திய கிழக்கு, தென் அமெரிக்க கண்டம் போன்ற இடங்களில் காண முடிகிறது. இதைத்தான் லெனின் இப்படிக் குறிப்பிடுகிறார்.

"முதலாளித்துவ ஜனநாயகம் என்பது சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் பற்றி அலங்காரமான சொற்றொடர்களும் கம்பீரமான வார்த்தைகளும் மிதமிஞ்சிய வாக்குறுதிகளும் ஆர்ப்பாட்டமாக ஒலிக்கும் கோலங்களும் அடங்கிய ஜனநாயகமாகும். ஆனால் உண்மையில் பெண்களுக்கு சுதந்திரமும் சமத்துவமும் இல்லாதிருப்பதை, இவை மூடி மறைக்கின்றன". (நூல் திரட்டு -தொகுதி- 39)



படிப்பகம்

பெண்களுக்கு சம அந்தஸ்து அரசியலில் வழங்குவதாகக் கூறும் முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு முறையால் அரசியல் கட்டமைப்பில் பெண்களுக்கு ஆட்சியில் சம பிரதிநிதித்துவம் வழங்க முடியாதது ஏன்? குடித்தொகையில் பாதியினராக விளங்கும் பெண்களுக்கு ஆட்சியில் சம பிரதிநிதித்துவமும் வழங்காதது ஏன்? சோஷலிச நாடுகள் எனக் கூறப்படும் நாடுகளில் கூட இப்படி சம வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. ஆனால் முதலாளித்துவ நாடுகளை விட பெண்கள் நலன் தொடர்பாக அதிகளவு அக்கறை செலுத்தப்பட்டிருக்கிறது.

அண்மைய யுனெஸ்கோ அறிக்கையொன்றின் படி 1993இல் உலகில் நாடுகளின் தலைவர்களாக ஆறு பெண்கள் மட்டுமே இருந்தார்கள். 1989இல் உலகில் மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 12த்தினர் மட்டுமே பெண்கள். ஆனால் 1994 இல் இது 10 வீதமாகக் குறைந்தது. இலங்கையில் மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 5 வீதத்தினர் பெண்கள். உலகில் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை என்பதை அறிவீர்களா?

ஐ.நா. சபையின் நிரந்தர உறுப்பினர்கள் 184பேரில் 8 பேர் மட்டும் பெண்கள். அபிவிருத்தியடைந்த நாடுகளை விட அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் உலக நாடுகளிலேயே பாராளுமன்ற அரசியலில் பெண்கள் அதிகமாக ஈடுபாடு காட்டுகின்றனர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் 12 வீதம் ஆக இருக்கும் போது, கைத்தொழில் நாடுகளில் 9 வீதமாக மட்டுமே உள்ளனர்.

"ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே வாக்குரிமை உள்ளது எனச் சமன்படுத்துவதானது முதலாளிக்கும், தொழிலாளிக்கும், சொத்துள்ளவனுக்கும், பாட்டாளிக்கும், எசமானுக்கும், அடிமைக்கும், சமனான வாக்குரிமை உண்டு என சமன்படுத்துவதை ஒக்கும்" இவ்வாறு செ.கணேசலிங்கன் தனது 'பெண்ணடிமை தீர' எனும் நூலில் குறிப்படுகிறார்.

ஆண்களே தேர்தலில் முன் நிற்கின்றனர். பெண்களும் அவர்களுக்கே தமது வாக்கை அளிக்க நேரிடுகிறது. ஆட்சியில் பாதிப் பங்கைப் பெற முடிந்தால் சட்டவாக்கம், நிர்வாகம், நீதித் துறைகளிலும் பெண்கள் பங்கு பெற இலகுவாகும். காலப் போக்கில் சமூக உற்பத்தியில் சமபங்கைப் பெற வாய்ப்பாகும்.

உண்மையில் பாராளுமன்ற அமைச்சரவை, நிர்வாகம், நீதித்துறை என்பவற்றில் சிலருக்கு மட்டும் வாய்ப்பளித்துவிட்டு அவர்களை உதாரணமாகக் காட்டியே பெண்களை ஆணாதிக்கம் மிகவும் விவேகமாக ஏமாற்றி வருகிறார்கள். வாய்ப்புப் பெற்ற பெண்களும் ஏனைய ஒடுக்கப்பட்ட பெண்களின் சமத்துவத்திற்குப் போராடுவதை விட்டு விட்டுப் பெண்ணிணத்தின் கருங்காலிகளாகி ஆண்களின் ஆதிக்கத்தில் நீதி வழங்கப்பட்டுவிடும் என ஒத்தூதிக் கொண்டிருப்பதே இன்றைய பெண் சமூகத்தின் பரிதாப நிலையாகும்.

நவீன முறையில் முதலாளித்துவ நவ காலனித்துவ ஆக்கிரமிப்பின் மூலம் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையும், அதற்கூடாக புது வடிவம் பெற்றுள்ள பெண்ணொடுக்கு முறையுமானது, அரச யந்திரத்தினாலேயே மேற்கொள்ளப்படுகின்ற போதும் அதனை பெண் பிரதிநிதிகள் தட்டிக் கேட்காமல் இருப்பதுமல்லாமல் அவற்றற்கு ஆதரவு வழங்கும் போக்கே நடைமுறையில் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட "பெண்கள் சாசனம்" இன்று அதிக பெண்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்தும் பெண்ணொருவர் ஆட்சித் தலைவராக இருந்தும் கூட அப் "பெண்கள் சாசனத்திற்கு சட்ட அந்தஸ்து வழங்கப்படவில்லை. இலங்கையில் இயங்குகின்ற எத்தனையோ

பெண்கள் அமைப்புக்கள் இப்பெண்கள் சாசனத்தை சட்ட ரீதியில் செல்லுபடியாக்கும்படி இன்னமும் போராடித்தான் வருகின்றன.

சுரண்டலே பிரதான நோக்கமாகக் கொண்ட இந்த சமூக அமைப்பின் பாதுகாவலனாகவே இந்த அரசியல் கட்டமைப்பு உள்ளது. இந்த சமுதாய அமைப்பு நிலைப்பதற்காகவே குடும்ப அமைப்பு பெண்ணெடுக்குமுறை என்பன உறுதியாக நிலை நிறுத்தப்படுகின்றன. எனவே இவ்வெடுகோளின்படி இத்தகைய சமூக கட்டமைப்பு உடைத்தெறியப்படாமல் முதலாளித்துவ அரசால் என்றும் விடிவு கிடையாது.

பெண்களுக்கு தேவைப்படும் அரசியல் அதிகார சம பிரதிநிதித்துவம் கோரிய கோஷம் பெண்களாளேயே முன்னெடுக்கப்படல் வேண்டும். இன்று சாதி ஒடுக்குமுறை இன ஒடுக்குமுறை, நிற ஒடுக்குமுறை, காலனித்துவ ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறைகளால் இரு பாலாருமே ஒடுக்கப்படுகின்ற போதும் அவற்றிற்கு எதிரான போராட்டங்களின் அதிகார மையங்கள் அனைத்தும் ஆணாதிக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழே யே இருக்கிறது. இப்போராட்டங்களில் ஈடுபடும் ஆணாதிக்க கருத்தியலால் உள்வாங்கப்பட்டவர்கள் பெண்களின் மீதான தனித்துவமான ஒடுக்குமுறைகளையும் அவற்றிற்கெதிரான போராட்டத்தின் அவசியத்தையும் இனங்காணத் தவறிவிட்டனர்.

சமூகத்தில் ஒடுக்குமுறைக்குள்ளாகி வரும் முக்கிய சமூக சக்தியாக பெண்கள் இருக்கிறார்கள். பெண்கள் பெண்களாக இருப்பதானாலேயே ஒடுக்கப்படுதலுக்குள்ளாவதை எதிர்க்க அதிகாரத்தில் சமவாய்ப்பை பெறுதல் ஒரு முன்னிபந்தனையான பணியாகிறது.

"சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம்" எனப் பேசும் முதலாளியம் எத்தனையோ இடங்களில் பெண்களைப் பிரித்தே வைத்திருக்கிறது. ஆண் - பெண்களுக்கு வெவ்வேறு கல்வி நிலையங்கள், ஆடைத் தொழிற்சாலைகள், தாதி வேலைகள், விமானப் பணிப்பெண்கள், பாலர் பாடசாலை ஆசிரியை, விளம்பரப் பதுமைகள் போன்ற இன்னோரன்ன வேலைகளைக் குறிப்பிடலாம். தொழில்களில் மிக மட்டமானவற்றைப் பெண்களுக்கு ஒதுக்கி விட்டு உயர்ரக வேலைகளை ஆண்களுக்கு ஒதுக்கி வைத்துள்ளது.

பெண்கள் பகடைக் காயாக சந்தர்ப்பவாத ரீதியில், தேர்தல்களில் பயன்படுத்தப்பட்டு வருவதை இல்லாது செய்ய பெண்களே பெண்களது பிரச்சினை தொடர்பான கோரிக்கைகளுக்கு தலைமை கொடுக்க வேண்டும்..

இந்த ஆணாதிக்கத்தால் ஆக்கப்பட்ட அரசையும், வர்க்க சமுதாயத்தையும் இன்றுவரை உடைத்தெறிய முடியவில்லை. அதன் பன்முகங்கொண்ட போராட்டப் பொறிமுறைகளினால் அனைத்தையும் தகர்த்தெறியும் காலம் வரும். பெண்கள் தில் மகத்தான பாத்திரத்தை ஆற்றப் போவதை இன்று எழுச்சியுற்றுவரும் போராட்ட வடிவங்களும் பண்புகளும் நமக்கு நம்பிக்கையளிக்கின்றன.

www.padippakam.com

# உள்ளூராட்சி மன்ற, மாகாணசபை அரசியலில் பெண்கள்

இலங்கை உள்ளூராட்சி மன்ற முறைமைக்கு ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு வரலாறு உண்டு. பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் 1965இல் முதலாவது மாநாகசபை உருவாக்கப்பட்டது. 1948இல் இலங்கை சுதந்திரமடைகின்ற போது மாநகர சபை, நகர சபை, சிறுநகர சபைகள் மற்றும் பட்டின சபைகள் என பல சபைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றுக்கான உறுப்பினர்கள் தேர்தலின் மூலம் தெரிவு செய்யபபட்டார்கள். 1970க்கும் 1980க்கும் இடைப்பட்ட தசாப்தத்தில் இந்த உள்ளூராட்சி முறைகள் மறுசீரமைக்கப்பட்டதோடு சிறு நகரசபைகள் மற்றும் பட்டின சபைகள் என்பன இல்லாமலாக்கப்பட்டதோடு நகரசபைகள், மாநகரகபைகள் என்பன அப்படியே இருக்க விடப்பட்டன. 1981இல் கிராமிய சபைகளுக்குப் பதிலாக கிராமோதய சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி இன்று 8 மாகாண சபைகள், 13 மாநகரசபைகள், 39நகர சபைகள், 257 பிரதேச சபைகள் உள்ளன. 1990இல் 4193 கிராமோதய சபைகள் இருந்தன. அவற்றில் பல இன்று இயங்காமலுள்ளன.

உள்ளூராட்சி சபைகளைப் பொறுத்தவரை தேசிய அரசியலில் பெண்களின் பங்குபற்றலைவிட குறைவாகவே இருக்கிறது. 1865இல் கொழும்பு மாநகரசபை ஆரம்பிக்கப்பட்ட போதும் 1937 வரை அதில் பெண்களின் அங்கத்துவம் இருக்கவில்லை. 1937இல் டொக்டர் மேரி ரத்தினம் கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவு



படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்ட போதும் அந்தத் தேர்தலில் எழுந்த சட்டப்பிரச்சினை காரணமாக அவர் ஒரு சில மாதங்களில் அங்கத்துவமிழந்தார். 1949இல் ஆயிஷா ரவுப் கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். இவர் தான் இலங்கையில் தேர்தல் அரசியலில் பிரவேசித்த முதல் முஸ்லிம் பெண்ணாகவும் திகழ்கிறார். 1954இல் அவர் ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்ந்து தொடர்ச்சியாக உள்ளூராட்சி அரசியலில் ஈடுபட்டார். ஒரு தடவை அவர் கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1979இல் திருமதி. சந்திரா ரணராஜா கண்டி மாநகரசபைக்கு தெரிவு செய்யப்பட்டதுடன் அவர் அதன் பிரதி மேயராகவும் கடமையாற்றியிருந்தார். திருமதி நளின் திலகா ஹேரத் நுவரெலியா நகரசபையின் தலைவராகக் கடமையாற்றியிருக்கிறார். திருமதி.ஈ.ஆர்.ஜயதிலக்க நாவலப்பிட்டிய நகரசபைத் தலைவராக இருந்திருக்கிறார்.

1987இல் ஆரம்பிக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் 1989 மற்றும் 1993களில் இரண்டு தேர்தல்கள் நடந்தன. 1989இல் மாகாண சபைத் தேர்தலில் இடம் பெற்ற வேட்பாளர்களில் பெண்கள் 2.8 வீதம் தான். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி உட்பட இன்னும் சில கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி 18 வேட்பாளர்களையும், ஐக்கிய சோசலிச முன்னணி 8 பேரையும், லிபரல் கட்சி 7 பேரையும் நிறுத்தியது. 1993 இல் இந்த வீதாசாரம் 3.7 வரை சிறிய அளவு உயர்ந்தது. 1989இல் மாகாண சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட பெண்களின் வீதம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களை விடக் குறைந்திருந்தது. அது 1989இல் 2.9 வரை 1993 இல் 4.7 ஆனது. 1989இல் எந்தவொரு பெண்ணும் முதலமைச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்படவில்லை.

மாகாண சபைகளில் 3 பெண் அமைச்சர்கள் பதவியிலமர்ந்தார்கள். அந்த மூவரதும் கணவர்மார் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். 1989 மற்றும் 1993 ஆகிய இரண்டு தேர்தல்களின் போதும் உருவான மாகாண சபை அமைச்சரவைகளில் 8.5 வீதம் பெண்கள் பிரதிநிதித்துவம் வகித்தனர். 1993 தேர்தலில் விசேடமாக மேல்மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்கு சந்திரிகா குமாரணதுங்க தெரிவானார்.

தேசிய மற்றும் மாகாண சபைகள் மட்டத்தைவிடக் குறைந்தளவு பெண்கள் பிரதிநிதித்துவம் மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேச சபை மட்டங்களில் இருந்தன. உள்ளூராட்சி சபைகளில் வேட்பாளர்களாகப் போட்டியிட்ட பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைந்தே காணப்படுகிறது. 1987 மாநகர சபைகளுக்கான பெண் வேட்பாளர்களின் வீதாசாரம் 3.4. ஆகும். நகரசபைகளுக்கான பெண் வேட்பாளர்களின் வீதாசாரம் 3.6 வீதமாகும். அது நகரசபைகளுக்கு 2.7.உம், பிரதேச சபைகளுக்கு 2.4 மாக இருந்தது.

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட பெண்களின் வீதாசாரம் இதனைவிடக் குறைவாகும். மாநகரசபைகளுக்கு 1987இல் தெரிவு செய்யப்பட்ட பெண்களின் வீதாசாரம் 3.4 வீதமாகும் 1991இல் அது 2.9 வீதமாக குறைந்தது. நகரசபைகளுக்கான 1987இல் இருந்த 1.7 என்கிற வீதமே 1991இலும் நீடித்தது. மாநகரசபைகளுக்கு 1987இல் மேயர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 11 பேரில் ஒருவர் பெண்ணாகவும், அதுபோல பிரதி மேயராக தெரிவு செய்யப்பட்ட 11 பேரில் ஒருவர் பெண் என்கின்ற ரீதியில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். 1991இல் ஒரு பெண்ணும் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்படவில்லை. நகர சபைத் தலைவர்களின் வீதாசாரம் 1987இல் 7.7வீதமும், பிரதித்தலைவராக 2.6 என்கிற வீதத்திலும் பெண்கள் இருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

1991இல் இந்த வீதாசாரம் இரண்டும் 0.0 என்கிற வீதத்தில் தான் இருந்தது.பிரதேச மட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் இதனை விடக் குறைந்தது. 1987இல் பிரதேச சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட பெண்களின் வீதாசாரம் 2.4 வீதமாகும் அதே வேளை 1991இல் 1.6 வீதமாகக் குறைந்தது.

1987இல் பிரதேச சபைத் தலைவர்களாக எந்தவொரு பெண்ணும் இருக்கவில்லை. 191இல் பெண் பிரதேச சபைத்தலைவர்களின் வீதம் 0.8 வீதமாக இருந்தது. பிரதித்தலைவர் வீதாசாரம் 0.4 என்கிற வீதத்தில் இருந்தது.

கிரோமோதய சபைகளுக்கான பிரதிநிதிகள் தேர்தலின் மூலம் தெரிவுசெய்யப்படாத போதும் கிராமோதய சபைப்பிரிவில் இருக்கிற சுயாதீன தொண்டர் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலைவர்கள் மற்றும் சில அரச அதிகாரிகளைக் கொண்டு அது இயங்கி வந்தது. 1991 இல் 4193 கிரோமோதய சபைகள் இருந்ததாக சில தரவுகளின் மூலம் அறியக் கிடைக்கிற போதும் அதன் சரியான தரவுகளை எடுப்பதில் சிரமங்கள் இருந்தன. இருந்தாலும் கிராமோதய சபைகளின் தலைவர்களின் எண்ணிக்கையை வைத்துப பார்க்கின்ற போது அதில் 0.97 வீதம் மட்டுமே பெண்கள் என்பது உறுதியாகின்றது.

1997இல் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் மொத்தமாக 18,586 பேர் போட்டியிட்டனர். 238 சபைகளுக்குமாக மொத்தம் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 3567 ஆகும். இதில் 20 பெண்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டனர். அதாவது தெரிவு செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் 0.56 மாத்திரமே பெண்கள்.

இலங்கையின் தேசிய அரசியலில் பெண்களின் நிலை குறித்து மதிப்பீடு செய்கின்ற போது பெண்கள் பலர் இந்த அடிநிலை அரசியல் நிறுவனங்களிலிருந்து படிப்படியாக தலைமைத்துவத்திற்கு வந்த போக்கு இல்லையென்றே கூறலாம். இவர்களில் பலர் தங்கள் கணவர், தகப்பன், அல்லது தனயன் அல்லது கிட்டிய ஏதேனும் நெருங்கிய ஆண் உறவினர் திடீர் மரணம் சம்பவித்ததாலோ அல்லது இழப்பாலோ அல்லது அவர்களால் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை உருவானதினாலோ அந்த இடங்களை உருவாக்க முன்வந்தவர்களாவர். அவர்கள் அரசியல் குடும்ப உறுப்பினராக இருந்ததொன்றே தகுதியாக கருதப்பட்டிருக்கிறது.

பொதுவாக பிரதேச மட்டங்களில் இருந்து பெண்களின் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது சுலபமானது என்ற நம்பிக்கை பொதுப்புத்தி மட்டத்தில் எம்மில் பலருக்கு இருக்கின்ற போதும் அது அவ்வாறில்லை. எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை வைத்துப் பார்க்கையில் அது எவ்வளவு சிரமமானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# பெண்களும் அரசியற் கட்சிகளும்

அரசியற் செயற்பாடுகளை நோக்கி மக்களைத் தள்ளுகின்ற அடிப்படைச் சக்தியாக அரசியல் கட்சிகள் விளங்குகின்றன. அரசியல் கட்சிகள் எனப்படுவை சமூகப் பிரிவுகள் மற்றும் வர்க்கங்களை அரசியல் ரீதியில் பிரதிநிதித்துப்படுத்துகின்ற நிறுவனங்கள் ஆகும். இந்த சமூகப் பிரிவுகள், வர்க்கங்களினது நலன்களையும் அபிலாசைகளையும் அரசியல் தளத்தில் ஒன்று குவிக்கின்றன. மேலும் இச்சமூகப் பிரிவுகள் தமது நலன்களையும் அபிலாசைகளையும் அரசின் மூலமாக அடைந்து கொள்வதற்கான கருவியாகவும் அரசியற் கட்சிகள் தொழிற்படுகின்றன. அந்த வகையில் இலங்கையில் அரசியல் கட்சிகளில் பெண்களின் நிலை குறித்து பார்ப்போம்.

1919இல் இலங்கை தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்ட போது ஆண்களுக்கும் பெண்களுக்குமாக அங்கத்துவம் திறந்து விடப்பட்டது. தேசிய அளவில் அரசியல் இயக்கமொன்று முதற்தடவையாக அங்கத்துவத்தை திறந்துவிட்ட சந்தர்ப்பமாக ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடுவார்கள். முதலாவது காங்கிரஸ் மாநாட்டில் டொக்டர் நல்லம்மா முருகேசு என்பவர் உரையாற்றியிருக்கிறார். இலங்கை தேசிய காங்கிரசில் இணைந்து கொண்ட அமைப்புகளில் ஒன்று மல்லிகா குலங்கன சமித்திய எனும் பெண்கள் அமைப்பு. 1928இல் இலங்கை தொழிற்கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது அதில் பெண்கள் தீர்மானம் எடுக்கும் அங்கங்களில் கூட இருந்திருக்கிறார்கள். அதன் முதலாவது நிறைவேற்றுக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். திருமதி அக்னஸ் டி சில்வா, டொக்டர் சத்தியவாகீஸ்வர ஐயர் (முதற் பெயர் நல்லம்மா முருகேசு).

திருமதி அக்னஸ் டி சில்வா, திருமதி டபிள்யு.ஏ.டி.சில்வா, திருமதி ஆர்.எஸ்.எஸ. குணவர்தன (இவர்களது கணவர்மார் பிரபல அரசியல்வாதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் சாலமன் டயஸ் பண்டாரநாயக்க (எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் தாயார்.), திருமதி எஸ்லின் டயஸ் ஆகியோர் இ.தே.கா.வின் நிறைவேற்றுக்குழுவிலும் அங்கம் வகித்தனர். இந்த நிலைமை 1940



படிப்பகம்

www.padippakam.com

வரை நீடித்தது. ஆண் உறவுமுறைச் செல்வாக்குள்ள, மேட்டுக்குடிப் பெண்களான இவர்களின் பிரதிநிதித்துவம் தேசிய அரசியல் சார்ந்ததாக இருந்ததே ஒழிய பெண்களின் நலன்களை பிரதிநதித்துவப்படுத்துவதாக அப்போது இருக்கவில்லை. தேசிய காங்கிரஸ் பெண்களுக்குமான வாக்குரிமையை எதிர்த்தபோது இவர்கள் பலமற்று இருந்தார்கள். இந்த நிலையில் தான் 1935இல் லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. 1942இல் அதில் பிளவு ஏற்பட்டு கொம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி 1942-1945 காலங்களில் இ.தே.கா.வுடன் இணைந்தும் கருமமாற்றியிருந்தது.

டொக்டர் மேரி ரட்னம் கனடாவில் மணமுடித்த இவரின் வெகுஜன அரசியல் தளத்திலான வேலைகள் அன்றைய நிலையில் பெரும் அரசியல் பங்களிப்பாக இருந்தது. இலங்கை பெண்கள் ஒன்றியம் (Ceylon Women's Union - 1904) , தமிழ் பெண்களின் ஒன்றியம் (Tamil Womens Union -1909) , கத்தோலிக்க பெண்கள் ஒன்றியம் (Wome's Christian Temperance Union - 1927), பெண்கள் வாக்குரிமைச் சங்கம் (Women's Franchise Union -1927), ஆகியவறின் உருவாக்கத்திற்கும் அதன் செயற்பாடுகளுக்கும் பெரும் பங்களிப்பை வழங்கியவர். டொக்டர் மேரி ரட்னம் கொழும்பு மாநாகர சபையின் முதலாவது பெண் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்.

இலங்கையின் மூத்த இடதுசாரித் தலைவரான எஸ்.ஏ.விக்கிரமசிங்கவின் துணைவியாரான டொரின் விக்கிரமசிங்கவும் காலனித்துவத்திற்கு முந்திய இலங்கை அரசியலில் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் தேசிய மற்றும் மார்க்சிய அரசியலுக்குப் பெரும் பங்காற்றியவர்கள்.

இலங்கையின் பழமைவாய்ந்த கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி பிரித்தானிய காலனித்துவ எதிர்ப்போடு ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்சியின் கொள்கைப் பிரகடனத்திலேயே இலங்கையில் முதற்தடவையாக பெண்களின் சமத்துவம் குறித்த அம்சங்களும் அறிவிக்கப்பட்டது. கட்சியின் யாப்பின்படி அதன் ஒரு நோக்கமாக "பால் ரீதியான அடக்குமுறைகளையும் அசமத்துவங்களையும் நீக்குதல் என்பது" இருந்தது. லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து பிரிந்து 1943இல் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அக்கட்சியும் இது போலவே பெண்களின் பிரச்சினைகளை அணுகியது. உழைக்கும் பெண்களின் நிலையை உயர்த்துதல், அவர்களுக்கு எதிரான அசமத்துவங்களை நீக்குதல், அவர்கள் ஆண்களைப் போலவே சம ஊதியத்தை பெற்றுக் கொடுப்பதற்கான போராட்டங்களை மேற்கொள்ளல், என்பன போன்றவை யாப்பு ரீதியாக உறுதியளிக்கப்பட்டன. 1952, 1956 மற்றும் 1960 ஆகிய தேர்தல்களில் இந்த இரு கட்சிகளும் பெண்கள் குறித்த விடயங்களை தங்களது தேர்தல் கால வெளியீடுகளில் உள்ளடக்கியிருந்தன.

1946இல் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி அதன் பின்னர் எத்தனையோ தடவைகள் தேர்தல்களில் போட்டியிட்ட போதும், ஆட்சியேறிய போதும் 1977 வரை அது எந்தவொரு தேர்தல் வெளியீடுகளிலும் பெண்களின் நலன்கள் குறித்துப் பேசியதில்லை. 1951இல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி 1970 வரை பெண்களின் நலன்கள் குறித்து பேசவில்லை. 1970இல் அக்கட்சியின் தேர்தல் வெளியீடுகளில் "வகுப்புவாத, சாதிபேத, பால்பேத மற்றும் மதபேதங்கள் இல்லாமல் மனிதஉரிமைகள் மற்றும் சமவாய்ப்புகளை அனுபவிக்க வழிசெய்யப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

1977ஆம் ஆண்டு தேர்தலின் போது ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ.ல.சு.க. பெண்களைப் பற்றி



படிப்பகம்

தமது விஞ்ஞாபனத்தில் சிலவற்றை உள்டக்கியிருந்தன. ஆனால் ல.ச.ச.க., கொ.க. மற்றும் சில ஜனநாயகக் கட்சிகளுடன் இணைந்து உருவாக்கப்பட்ட ஐக்கிய சோசலிச முன்னணியின் தேர்தல் வெளியீடுகளில் பெண்கள் பிரச்சினைகள் குறித்து விசேடமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. பெண்களுக்கெதிரான அசமத்துவத்தை நீக்குதல், சமூகத்திலும், தொழில்புரியும் இடங்களிலும் பெண்களின் நிலையை உயர்த்துதல் போன்றவற்றிற்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது. சமதொழிலுக்கு சமசம்பளம் குறித்தும், பெண்களுக்கு அநியாயம் இழைக்கப்படும் சொத்துரிமை குறித்த சட்டங்கள், விவாகம், விவாகரத்து குறித்த சட்டங்களை நீக்குதல், வீட்டுக்கு வெளியில் தொழில்புரியும் தாய்மார் முகம்கொடுக்கும் தடைகளை இல்லாமல் செய்தல் போன்ற வாக்குறுதிகள் இடதுசாரி முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

தமிழ் கட்சிகள் பற்றி ஆயுதப் போராட்ட இயக்கங்கள் பற்றிய அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

1977 தேர்தலின் போது ஐக்கிய தேசியக்கட்சி பெண்கள் குறித்த விடயங்களில் அவ்வளவு அக்கறை காட்டாத போதும் அது ஆட்சியலமர்ந்ததன் பின் முக்கிய இரண்டு விடயங்களைச் செய்தது. ஒன்று 1978இல் பெண்கள் பியூரோ ஒன்றினை உருவாக்கியது. மற்றது 1983இல் முதற்தடவையாக பெண்கள் விவகாரத்துக்கென தனியான அமைச்சொன்றினை உருவாக்கியது. இந்த அமைச்சு உருவாக்கப்பட்டதன் பின்னர் பெண்கள் குறித்த தனியான, குறிப்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முடிந்தது. கிராமியப் பெண்களை நிறுவனமயப்படுத்தும் நோக்கில் பெண்கள் செயற்பாட்டு சமூகக்குழு என்கிற பெயரில் ஒன்றையும் உருவாக்கியது. 1988இல் இவ்வகைக் குழுக்கள் நாடெங்கிலும் 900 செயற்பட்டன. பெண்களுக்கென "காந்தா புவத்", "காந்தா உதானய", "காந்தா சவிய" போன்ற சஞ்சிகைகளும் வெளியிடப்பட்டன. 1975-1985 காலப்பகுதி பெண்கள் தசாப்தமாக சர்வதேச அளவில் பிரகனடப்படுத்தப்பட்டிருந்ததால் இந்தக்காலப்ப குதியில் உலகிலுள்ள பல நாடுகளும் பெண்கள் குறித்த விடயங்களில் தமது முழு அக்கறையையும் செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. இலங்கையில் 1977க்குப் பின் ஏற்பட்ட பெண்கள் குறித்த முக்கிய கவனத்தையும் இவற்றின் விளைவாக ஏற்படுத்தப்பட்டதாகவே கொள்ளலாம்.

1989ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெண்கள் குறித்த விடயங்களையும் சேர்த்திருந்தது. ஜனநாயக மக்கள் முன்னணி என்பன பெண்கள் பற்றிய பல புதிய உறுதிமொழிகளை தமது தேர்தல் வாக்குறுதிகளில் முன்வைத்தனர்.

1994இலும் ஐ.தே.க. பெண்கள் குறித்த பல விடயங்களை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்திருந்தது. 1993இல் அமைச்சரவையினால் வெளியிடப்பட்ட பெண்கள் சாசனத்தை அமுல்படுத்துவதாகவும் வாக்குறுதியளித்திருந்தது. அதற்காக விசேடமாக பெண்கள் தேசிய கமிட்டியை அமைப்பதெனவும் உறுதி தந்திருந்தது. இதே வாக்குறுதிகளை பொதுஜன ஐக்கிய முன்னணியும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்திருந்தது. ஆனால் பொ.ஐ.மு. தனது ஆட்சி காலத்திலும் இதனை நிறைவேற்றவில்லை. 2000ஆம் ஆண்டு தேர்தலின் போது கூட அதே வாக்குறுதியை திருப்பியளிக்கும் ஒன்றையே காண முடிந்ததேயொழிய இந்த வாக்குறுதியின் நடைமுறைத்தன்மைக்கு எந்தவித உத்தரவாதமும் இது வரை இல்லை. 1994இல் சந்திரிகா தலைமையில் ஆட்சியதிகாரம் அமைக்கப்பட்டதும், பாராளுமன்றத்திலும், அமைச்சரவையில் பெண்களின்

பிரதிநிதித்துவம் முன்னைய சந்தர்ப்பங்களை விட அதிகமிருந்தும், ஜனாதிபதி, பிரதமர் என முக்கிய அரச தலைமை பதவிகள் பெண்களிடம் இருந்தும் கூட அந்த ஆட்சிகாலத்தில் பெண்கள் தொடர்பான முக்கிய சட்டதிருத்தங்களை இந்த ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட போதும், பெண்கள் சாசனத்தை நடைமுறைக்கு கொண்டுவரமுடியவில்லை.

1994ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாத்திரம் எந்தவொரு அரசியற் கட்சியும் முன்வைக்காத ஒரு வாக்குறுதியை அளித்ததை பெண்கள் அமைப்புகள் பல கவனத்திற் கொண்டன. பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் இல்லாதொழிக்கின்ற CEDAW எனும் பிரகடனம், மற்றும் சிறுவர் உரிமைகள் குறித்த பிரகடனம் என்பனவற்றை அமுல்படுத்துவதற்கு தேவையான யாப்புரீதியான மற்றும் சட்டரீதியான திருத்தங்களை மேற்கொள்ள வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் பிரதான கட்சிகள் உட்பட அதற்கடுத்த மட்ட கட்சிகள் வரை சமீப காலமாக பெண்கள் பிரச்சினைகளில் கரிசனை கொள்வதைக் காணமுடிகிறது. குறிப்பாக இந்த மாற்றம் பெண்கள் தசாப்த பிரகடனத்திற்குப் பின் எற்பட்ட மாற்றங்கள் எனலாம். மேலோட்டமாகப் பார்த்தால் இவை பெண்கள் பிரச்சினையில் அக்கறை காட்டுவதாகத் தோற்றமளித்த போதும், வெறும் ஜனநாயக வேடத்துக்கான போலி காட்சிப்படுத்தலுக்காகவே இவற்றை செய்வதாகவே நடைமுறையில் அவற்றின் செயற்பாடுகள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன. வெளித்தோற்றத்தில் வெளியிடுகின்ற வாக்குறுதிகள், விஞ்ஞாபனங்களின் மூலமும் கூட சமூகத்தில் சீர்திருத்தவாத வாக்குறுதிகளைத் தருவதோடு, ஆணாதிக்க சமூகத்திற்குள் பெண்களை பாதுகாப்பது என்கின்ற வகையிலேயே அவற்றின் உள்ளடக்கம் அமைந்திருப்பதைக் காணலாம்.

இலங்கையிலுள்ள இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் பெண்களின் உரிமைகள் விடயத்தில் வலதுசாரிக் கட்சிகளோடு ஒப்பிடுகையில் பெண்களின் பிரச்சினை குறித்த அடிப்படை அம்சங்களைத் தொட்டுக்காட்டி அவற்றுக்கான மாற்று வழிகளை முன்வைத்து வந்திருக்கின்றன. என்றாலும் அடித்தளம் மேற்கட்டுமானம் பற்றிய வழமையான மரபுவாத கருத்துக்களுடன் கூடிய கொள்கைகளில் அவை உறுதியாக இருந்தன. எனவே புரட்சிகர சமூகமாற்றதுக்காக பெண்களை அணிதிரளும்படி கோரிக்கை வைப்பதும் அதன் பின்னர் அனைத்தும் மாறிவிடும் என்றும், அது வரை காத்திருக்கும்படி கோருகின்ற சாராம்சத்தைக்கொண்ட கருத்துக்களையும் செயற்பாடுகளையுமே அவை இதுவரை கொண்டியங்கி வந்துள்ளன.

இதுவரை எந்தக் கட்சியும் பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவத்தை சமப்படுத்துவதற்கான எந்த ஆதரவையும் அக்கறையுடன் அளித்தது கிடையாது. குறைந்தபட்சம் தத்தமது கட்சிகளில் அங்கத்துமுள்ள பெண்களின் வீதாசாரத்திற்கிணங்க தமது வேட்பாளர் பட்டியல்களில் பெண் போட்டியாளர்களை நிறுத்தக் கூட தயாராக இல்லை.

மேலும் கட்சிக் கூட்டங்களில் எதிரணியைச் சேர்ந்த பெண்களைச் சாடுவதற்கும், வசைபாடுவதற்கும் கட்சிப் பெண்களை பிரதான கட்சிகள் பயன்படுத்தி வந்திருப்பதை அவதானிக்க முடியும். இந் நிலைமையை அதிகளவு 1994ஆம் ஆண்டுத் தேர்தலின் போது அவதானிக்க முடிந்தது.

கட்சித் தலைமைத்துவம் பற்றிப் பேசுகையில் இலங்கையில் இலங்கையின் பிரதான

கட்சிகளில் ஒன்றான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் 1960இலிருந்து தலைமைத்துவத்தை வகித்து வந்தவர் சிறிமாவோ பண்டாரநாயக்க. இவரது மகள் சந்திரிகா குமாரணதுங்க அதன் உபதலைவராக இருந்து வந்தார். 1989இல் அவரது கணவரான ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் தலைவர் விஜயகுமாரணதுங்க கொல்லப்பட்டதன் பின் அதன் தலைவியாகச் செயற்பட்டு ஸ்ரீ.ல.ம.க.வுடன் கூட்டுச் சேர்ந்து அமைக்கப்பட்ட ஐக்கிய சோசலிச முன்னணியை அமைத்து அதனதும் தலைவியாகச் செயற்பட்டு பின் மீண்டும் ஸ்ரீ ல.சு.க.வின் அதிகார பீடத்தில் இருந்தார்.

அது போல ஐ.தே.க.விலிருந்து விலகி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை அமைத்துக் கொண்ட லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டதன் பின் அக்கட்சியின் தலைவியாக ஸ்ரீமணி அத்துலத்முதலி தெரிவு செய்யப்பட்டார். இவ்வாறு தலைமைத்துவத்திற்கு ஆண் உறவு முறையொன்றின் செல்வாக்கிற்கூடாக ஆண் தலைமைத்துவ கட்டமைப்பைக் கொண்ட கட்சிகளுக்கு தேவைப்படுகையில் பெண்களை தலைமைக்குக் கொண்டு வந்து விடுகின்றனர். ஆனால் மறுபுறம் கீழங்கங்களில் பெண்களின் தலைமைத்துவம் குறைந்தளவே காணப்படுகிறது. ஐ.தே.க.வின் நிறைவேற்றுக்குழுவில் பெண்கள் 5 வீதத்தினரும், ஸ்ரீ ல.சு.க.வின் நிறைவேற்றுக்குழுவில் 10 வீதமும், ல.ச.ச.க. 2 வீதமும், கொம்யூனிஸ்ட் கட்சியில் 4 வீதமுமே பெண்களின் பங்கேற்பு உள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பனவற்றில் இது பூஜ்ஜியம். எந்தவொரு அரசியற் கட்சியிலும் இது வரை பொதுச்செயலாளர் பதவிக்கு ஒரு பெண்ணும் அமர்ந்ததில்லை.

இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் பெண்களின் பிரவேசத்தின் ஆரம்பகாலங்களில் இடதுசாரி இயக்கங்களைச் சேர்ந்த பெண்களே பெரும்பாலும் அரசியலுக்குள் பிரவேசித்தனர். இவர்கள் அன்று இடதுசாரி இயக்கங்களின் அரசியல் போராட்டங்கள் மற்றும் வேறு பல அரசியல் ஈடுபாடுகளினூடாக பிரவேசித்தனர். மார்க்சீய கருத்துக்களினால் உந்தப்பட்டு அந்த நோக்கிலேயே அவர்கள் சகல பிரச்சினைகளையும் இனங்கான முயன்றனர். எனவே பெரும்பாலும் முழுமையாக உணர்வுபூர்வமாக தங்களது அரசியல் கடமைகளையாற்றினர். புளோரன்ஸ் சேனநாயக்கா இலங்கையின் முதலாவது இடதுசாரி இயக்க பெண் பாராளுமன்ற உறுப்பினராவர். இவரைவிட குசும் குணவர்தன, டொரின் விக்கிரமசிங்க, விவியன் குணவர்தன, சோமா விக்கிரமநாயக்க போன்ற பெண் இடதுசாரிகள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தனர்.

இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கு "ஆண் உறவு முறைச் செல்வாக்கு" ஒரு ஊக்கியாக இருந்த போதும், அது மட்டுமே காரணமாக இருந்திருக்கவில்லை. ஏனைய தேசியக் கட்சிகளான முதலாளித்துவக் கட்சிகளைச் சேர்ந்த பெரும்பாலான பெண்கள் "ஆண் உறவு முறைக் செல்வாக்கை" அதிகளவு பயன்படுத்தி பிரவேசித்திருக்கின்றனர். இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால், ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க. போன்ற கட்சிகைளைச் சார்ந்த பெண்கள் பலரது பிரவேசமானது "ஆண் உறவு முறைச் செல்வாக்கைப்" பயன்படுத்தி திடீரென்று அரசியலில் குதித்திருந்தனர். இதேவேளை காலப்போக்கில் ஏற்பட்ட இடதுசாரி இயக்கங்களின் உடைவுகள், முதலாளித்துவ கட்சிகளுடனான கூட்டுகள், பாராளுமன்ற வாதத்தின் மீது ஏற்பட்ட பிடிப்பு, இருப்பு மற்றும் இன்னோரன்ன காரணங்களினால் அரசியல் வேலைகளில் ஏற்பட்ட மந்தப் போக்கு, சோர்வு என்பனவற்றின் ஓட்டத்தினூடே பெண்களின் அரசியல் பங்களிப்பும் இயல்பாகவே இல்லாது போயின. குறிப்பாக 70களின் இறுதியிலிருந்து இடதுசாரிப்

பெண்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாது போயின. சந்திரிகா குமாரணதுங்க, ஐக்கிய சோஷலிச முன்னணியின் முக்கிய உறுப்பினராக இருந்த போதிலும் பிற்காலங்களில் அவர் தன்னை ஒரு மார்க்சிஸ்டாக அடையாளம் காட்ட முனைந்த போதும் சந்திரிகாவின் ஆட்சியை விமர்சனத்துக்குள்ளாக்கும் அரசியல் விமர்சகர்கள் அவரையொரு முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதியாகவே கொள்கின்றனர்.

1970களில் ஒரு புறம் பாரம்பரிய இடதுசாரிகளின் தேய்வுக்கூடாக மொத்த பாராளுமன்ற இடசாரி பிரதிநிதித்துவத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்த அதே சமயம், மக்கள் விடுதலை முன்னணிக்கூடாக தீவிர இடதுசாரி நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துக் கொண்டிருந்தது எனலாம். இவர்கள் பாராளுமன்ற அரசியலை தமது இருப்பாக்கிக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறிருந்த போதும் பெண்ணியக் கருத்துக்களை முன்னெடுக்கக்கூடிய சக்திகள் என எதிர்பார்க்கப்பட்ட இவ் இடதுசாரிக் கட்சிகள் பெண்களது உரிமைக்காக அல்லது பெண்ணியம் தொடர்பாக ஆக்கபூர்வமான அக்கறையைக் காட்டவில்லை என்றே கணிக்க முடிகிறது.

இதேவேளை தேசியக் கட்சிகள் தமது கட்சிகளைச் சேர்ந்த செல்வாக்கு படைத்தவர்களின் இறப்பினைப் பயன்படுத்தி இறந்தவர்களின் கிட்டிய உறவுமுறையைச் சார்ந்த பெண்ணின் மீதான அனுதாபத்தைப் பயன்படுத்துவதன் மூலமாகவே பெரும்பாலான பெண்களைப் பாராளுமன்றத்துக்குள் பிரவேசிக்கச் செய்த தன்மையைக் காண முடிகிறது.

இது தேசியக் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் கூட தேசிய அரசியலோடு சேர்ந்து இழுபட்டு போகிற பண்பும் பொதுவாக நிலைத்து வருகிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் ஆக்கப்படும் சட்டமூலங்கள் அனைத்தும் ஆண்நிலைப்பட்டவை என்பது அறிந்ததே. இச்சட்டமூலங்கள் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படும் போது கூட அங்கு பெரும்பான்மை ஆண்களால் நிறைவேற்றப்படுகிறது. இதே மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது கூட பெரும்பான்மை ஆண்களால் நிறைவேற்றப்பட்டு விடுகிறது. ஆனால் இச்சட்டமூலங்கள் ஒவ்வொன்றிலும் பெண்களது நலன் தொடர்பாக ஆராய்வது விவாதிப்பது என்பது, பெண் பிரதிநிதிகளிடம் மிகமிகக் குறைவு அல்லது இல்லையென்றே சொல்லலாம்.

எனவே தான் பெண் உறுப்பினர்கள் பெண்களது நலன்களுக்காக இயங்குவதை விட தேசிய அரசியலோடு இழுபட்டு போகிறார்கள் என்பதைக் கூறக்கூடியதாக உள்ளது.

2000 ஆண்டு ஒக்டோபர் 10இல் இடம்பெற்ற 11வது பொதுத் தேர்தலின் போது தான் முதன் முதலில் முஸ்லிம் பெண்கள் பாராளுமன்றத்திற்கு பிரவேசித்தனர். ஜே.வி.பி.யின் அன்ஜன் உம்மா முதலாவது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராகவும், பேரியல் இஸரப் முதலாவது முஸ்லிம் அமைச்சராகவும் தெரிவானார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட எந்த முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் பெண்களை தங்களது கட்சிகளது வேட்பாளர்களாக்குகின்ற பாரம்பரியம் இல்லாத போதும் இறுதியாக 2000இல் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் இறந்துபோன முஸ்லிம் காங்கிரசின் தலைவர் அஸ்ரப்பின் மனைவி பேரியல் அஸ்ரப்பை நிறுத்தினர். அக்கட்சியின் தலைமைப் பொறுப்பிலும் அவரை இருத்தியிருந்தனர். பொதுவாகவே இலங்கையில் நிலவுகின்ற கட்சி முறைமையில் காணப்படுகின்ற தனிநபர் வழிபாட்டு முறைமை, தனிநபரை சுற்றி

www.padippakam.com

மையப்படுத்திய கட்சியின் அதிகார கட்டமைப்பானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்த தனிநபரின் மறைவுக்குப் பின் அவரது மிகக்கிட்டிய உறவினருக்கு கட்சியின் தலைமை, அல்லது அவர் வகித்த பதவி கைமாற்றப்படுவது வழக்கமாகி விட்டது. இது உலகில் மூன்றாமுலக நாடுகளில் காணப்படும் பொது அம்சமும் கூட. எனப் பல ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.. இவ்வாறான வழிகளின் மூலம் தான் இலங்கையில் பெண்கள் அரசியலுக்கு வரவேண்டியுள்ளதா என்கிற கேள்வியையே இவை எழுப்பி நிற்கின்றன. இவரை விட 2000ஆம் ஆண்டில் நடந்து முடிந்த தேர்தலில் ஜே.வி.பி. தனது பாராளுமன்ற உறுப்பினர்களில் தேசியப்பட்டியல் உறுப்பினராக அன்ஜான் உம்மா என்பவருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கியிருந்தது. முஸ்லிம் சமூகத்தின் தரப்பிலிருந்து இஸ்லாமிய மத ஆசார முறைகள் இதற்கு காரணமாக காட்டப்படுகின்ற போக்கு நடைமுறையிலுள்ளது என்கின்ற போதும் முஸ்லிம் நாடுகளில் பெண்கள் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கின்றனர். ஆனால் அதற்கு இஸ்லாமிய வழியமைந்த விவாதங்களும் இல்லாமலில்லை.

இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதிலிருந்து 11வது பாராளுமன்றம் வரை 45 பெண்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்துள்ளனர். இந்த நாற்பது பேரில் அதிகளவு பெண்களை பிரதிநிதித்துவப்படுத்திய கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி (அல்லது அதன் தலைமையிலான கூட்டு) ஆகும். 40 பேரில் 18 பெண்களை அது பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கின்ற அதே நேரம், 15 பெண்களை ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநித்துவப்படுதியிருக்கிறது. இடது சாரிக் கட்சிகளைச் சேர்ந்த 9 பெண்கள் இது வரை அங்கம் வகித்துள்ளனர்.

இன ரீதியில் எடுத்துக் கொண்டால் நாற்பது பெண்களில் மூன்று தமிழ்ப் பெண்கள் (நேசம் சரணவணமுத்து, ரங்கநாயகி பத்மநாதன், ராஜமனோகரி புலேந்திரன்) பிரதிநிதித்துவம் வகித்துள்ளனர். முஸ்லிம் சமூகத்திலிருந்து பேரியல் அஸரப், அன்ஜான் உம்மா ஆகியோர் அங்கம் வகித்துள்ளனர். மலையக, பறங்கி சமூகங்களைச் சேர்ந்த ஒரு பெண்ணும் இது வரை இலங்கை பாராளுமன்றத்தில் அங்கம் வகித்ததில்லை.

இதே வேளை இலங்கையிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 7 மாவட்டங்களிலிருந்தும் இது வரை பெண்கள் எவரும் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதில்லை.

அவை மாத்தளை, யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை என்பனவே. 1977இல் அமைக்கப்பட்ட 8வது பாராளுமன்றத்திலேயே அதிகப் பெண் நியமன உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிக பெண்கள் வேட்பாளர்களாகப் போட்டியிட்டதும் அதிகப் பெண்கள் பாராளுமன்றத்தக்குத் தெரிவு செய்யப்பட்டதும் 9வது பாராளுமன்றத்திலேயே. 1989இல் நடந்த 9வது பாராளுமன்றத் தேர்தலின் போது மொத்தம் 57 பெண்கள் போட்டியிட்டதுடன் 12 பேர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கவும் செய்தனர்.

இதுவரை பராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒரே பெண் சிறிமாவோ மட்டுமே. இவர் 6வது (1965-1970) பாராளுமன்றததிலும், 9வது பாராளுமன்றத்தின் போதும் எதிர்க்கட்சித் தலைவியாகச் செயற்பட்டுள்ளார்.

இதுவரைகாலம் சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் ஆகிய பதவிகளுக்கு எந்தப் பெண்ணும் நியமிக்கப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# ஆயுதப் போராட்டத்தில் பெண்கள்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆயுதப் போராட்டமொன்றின் மூலம் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக முயற்சித்த முயற்சித்து வருகின்ற இரு சக்திகளைத் தான் முக்கியமாக குறிப்பாக குறிப்பிட முடியும். ஒன்று ஜே.வி.பி. மற்றையது இன்றைய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். இடதுசாரி இயக்கங்களின் தலைமையில் 1930களில் இருந்து ஆரம்பமான பல இரகசிய, தலைமறைவு அரசியல் பேராட்டத்தில் கிளர்ச்சிகர பாத்திரத்தை பெண்கள் ஆற்றியிருக்கிறார்கள் என்ற போதும், இலங்கையில் ஆயுதப் போராட்ட அரசியலாக 1970களில் இருந்து தொடங்கப்படுகின்ற தென்னிலங்கை மற்றும் வடகிழக்கு போராடட்ங்களையே ஆயுதப் போராட்டமாக விளங்கிக் கொள்ளப்படுகிறது. குறிப்பாக மரபு இடதுசாரி செயற்பாடுகளிலிருந்து தங்களை முறித்துக் கொள்வதாக பிரகடனப்படுத்திக் கொண்டு ஆயுதக்கிளர்ச்சிக்கு ஒழுங்கமைத்துக் கொண்ட ஜே.வி.பி. அரசியல். 1971 ஏப்ரல் கிளர்ச்சி மற்றும் 1987-1989 காலப்பகுதிகளில் இரண்டு தடவைகளை ஆயுதக் கிளர்ச்சியுடன் தொடர்புடைய அரசியல்.

இரண்டாவது தமிழீழப் பகுதிகளில் 1970களில் கைவிடப்படுகிற அஹிம்சைப் போராட்டங்களும், உடைத்துக் கொண்டு எழுகின்ற ஆயுதப் போராட்டமும்.

### ஜே.வி.பி.

இலங்கையில் முதற்தடவையாக பெண்கள் ஒரு அமைப்பு வடிவம் சார்ந்து ஆயதப் போராட்டத்தில் ஈடுபட்ட முதற்சந்தர்ப்பம் 1971 கிளர்ச்சியாகும். 1965இல் உருவாக்கப்பட்ட ஜே.வி.பி. (மக்கள் விடுதலை முன்னணி) 1971இல் தனது இலட்சியத்தை அடைய ஆயுதக் கிளர்ச்சிகர பாதையைத் தெரிவு செய்தது. 1971 கிளர்ச்சி தோல்வியுற்றதன் பின்னர் சிறிமா அரசாங்கம் வேட்டையாடிக் கைது செய்த பல ஆயிரக்காணக்கானவர்களில் 450 பெண்கள் அடங்குவர். ஆனால் ஜே.வி.பி.யில் அப்போது ஏறத்தாழ 15 பேரளவில் தான்



படிப்பகம்

www.padippakam.com

முழு நேர உறுப்பினர்களாக செயற்பட்டிருந்தனர். 150 பேரளவில் கட்சியின் இரகசிய அரசியல் வகுப்புகளில் கலந்து கொண்டிருந்தவர்கள். ஏனைய அனைவரும் ஆதரவாளர்கள், மற்றும் கட்சியின் ஆண் உறுப்பினர்களின் பெண் உறவினர்களாவர்.

"உண்மையில் ஜே.வி.பி. பெண்களை அமைப்புக்குள் உள்வாங்கத் தொடங்கியதற்கான காரணம் பெண்ணியம் குறித்து அவர்களது பிரக்ஞையினாலல்ல. புரட்சிகர இயக்கமொன்றில் பெண்களின் பங்கேற்பு இன்றியமையாத ஒரு அம்சமாக இருக்க வேண்டுமென்ற காரணம் தான்." (கெலிசேனநாயக்க - முன்னாள் ஜே.வி.பியின் பொதுச்செயலாளராக இருந்தவர் - சரிநிகர் - 1997.செப்.11)

1968 வரைக்கும் பெண் உறுப்பினர்கள் எவரும் கட்சியில் சேரவில்லை. அதன் பின்னர் சேர்ந்தவர்கள் மேலணிகளுக்கான தகுதிகளிருந்தும் சீனியரான ஆண் உறுப்பினர்களை மீறி தலைமைக் குழுக்களுக்கு வர கடைசி வரை வாய்ப்பு இருக்கவில்லை. ஆரம்பத்தில் வித்தியோதய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சந்திரா மஹாரகே, கமானி, சம்பதி தர்மசோகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சேபாலி மற்றும் இரேயின் போன்றோர் இணைந்தனர். இவர்கள் முழு நேர உறுப்பினர்களாகி அரசியல் பயிற்சிகள் மட்டுமன்றி ஆயுதப் பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டனர். கிளர்ச்சி தோல்வியுற்று போராளிகள் பின்வாங்கத் தொடங்கிய கட்டத்தில் தாக்குதல் நடாத்திக் கொண்டே வில்பத்து காட்டுக்குள் பின்வாங்கிய அணிகளில் பெண்களின் சமர் குறிப்பிடத்தக்கது. அதே போல காடுகளுக்குள் தலைமறைவாக இருந்த உறுப்பினர்கள் மத்தியில் தகவல் பரிமாற்றம். வெளியில் இருந்து விநியோகங்களை மேற்கொள்தல் போன்றவற்றை மேற்கொண்டதும் பெண்கள் தான். கிளர்ச்சி முடிந்ததன் பின் பெண் என்ற காரணத்தினாலேயே அனுபவித்த துயரங்களை அவர்கள் தங்களுக்குள் புதைத்துக்கொண்டார்கள். சமூகத்தில் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் எற்பட்ட அவலங்கள், துயரங்கள், நிராதரவான நிலையின் காரணமாக விரக்தியுற்ற பெண் உறுப்பினர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் பலர் ஒட்டுமொத்தமாக தங்களை அரசியல் வாழ்க்கையிலிருந்து முறித்துக் கொண்டனர்.

கதிர்காமத்தில் அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரேமவதி மனம்பேரி கிளர்ச்சிக் காலத்தில் கெரில்லா சீருடை தயாரித்துக் கொடுத்தவர். படையினர் இவரை பாலியல் வல்லுறவு புரிந்து கதிர்காம நகர வீதிகளில் நிர்வாணமாக அழைத்துச் சென்று தலையில் சுட்டுவிட்டு உயிர் இருக்கும் போதே குழிதோண்டி புதைத்துக் கொன்றனர். பெண்கள் பலர் இவ்வாறு சித்திரவதை முகாம்களில் மிகக் கொடுமையான சித்திரவதைக்குள்ளானர்கள். இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் இந்த பெண்கள் அனைவரும் இத்தனை அவலங்களுக்குள்ளாக்கப்பட்டது சிறிமா பண்டாரநாயக்க தலைமையிலான ஆட்சியதிகாரத்திலேயே.

71 கிளர்ச்சி பற்றிய புகழ்பெற்ற விசாரணையின் போது றோஸ்மீட் வழக்கு என்று அறியப்பட்ட வழக்கில் (பிரதமர் சிறிமாவை கடத்தும் முயற்சி) குற்றம் சுமத்தப்பட்டவர்களில் நான்கு பேர் பெண்களாவர்.

ஜே.வி.பியில் கிளர்ச்சி முடியும் வரை ஆண், பெண் உறுப்பினர்கள் திருமணம் செய்யக்கூடாது என்று விதிமுறை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இது தலைமை உறுப்பினர்களாலேயே மீறப்பட்டது.

கிளர்ச்சி முடிந்து பலர் சிறை சென்றர்கள். 1978இல் பலர் விடுதலை செய்யப்பட்டு ஜே.வி.பி.. மீண்டும் இயங்கத்தொடங்கியபோது தான் பெண்கள் அமைப்பும்



படிப்பகம்

www.padippakam.com



உருவாக்கப்பட்டது. சோசலிச மகளிர் அமைப்பினால் "சமாஜவாதீ காந்தாவ" (சோசலிச பெண்கள்) எனும் பெயரில் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.

1978இல் தான் முதன்முதலாக பெண்கள் பிரிவொன்று ஜே.வி.பியில் ஆரம்பிக்கப்பட்டது. சோசலிசப் பெண்கள் முன்னணி எனும் பெயரிலமைந்த இதில் ஆறு முழு நேர உறுப்பினர்கள் இருந்தனர். நந்தசீலி, கருணா, லீலா, பத்மா ஆகியோர் அவர்களில் சிலர். இதன் மையக்குழுக்கூட்டங்கள் ஆண் தலைமை உறுப்பினராலேயே தலைமை தாங்கப்பட்டது. மேலும் புரட்சிகர அமைப்பொன்றுக்கு பெண்களின் பங்களிப்பின் அவசியத்தையே சுட்டிநிற்கும் வகையிலேயே அதன் ஆரம்ப செயற்பாடுகள் இருந்தன. பெண்ணியக் கருத்துக்கள் புரட்சியைச் சிதைக்கின்ற மேலைத்தேய முதலாளித்துவ கருத்துக்களின் நீட்சியென்ற சாரம் கொண்ட விடயங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டது. குறிப்பாகச் சொல்லப் போனால் பெண்கள் அமைப்புக்குள்ளும் கூட பெண்கள் சுயாதீனமாக தீர்மானமெடுப்பதற்கும், கொள்கையாக்கத்திற்கும் உரிமையற்றவர்களாகவே இருந்தனர்.

ஜே.வி.பி. அமைப்பு வடிவம் ஒரு கம்யூனிஸ்ட் கட்சிக்குரிய கட்டமைப்புடன் கட்டப்பட்ட போதும் அதன் தலைவராக 1990இல் றோகண விஜேவீர கொல்லப்படும் வரை அவரே இருந்தார். இந்தக் காலப்பகுதியில் அவர் எப்போதும் தமது கட்சி உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படவில்லை. அதே வேளை கட்சிக்குள், மேலிருந்து கீழ்வரையான அங்கங்களின் மீதான அதிகாரத்தைப் பிரயோகிக்கக்கூடிய நிர்வாக வலையமைப்பை அவர் பேணிக் கொண்டார். மேலும் கட்சி அங்கங்களின் யோசனைகள் கீழிருந்து மேல்நோக்கிச் செல்வதற்கான கட்டமைப்பைக் கொண்டு இயங்கவுமில்லை. ஜனநாயக மத்தியத்துவம் என்பது குறித்த விளக்கம் கூட முன்னணி அங்கங்களுக்கு இருக்கவில்லை. 1976 -81க்கும் இடைப்பட்ட காலத்தில் மாத்திரம் ஒரே ஒரு பெண் மத்திய குழுவில் அங்கம் வகித்தார். இவர் கூட ஒரு குழந்தை பிறந்ததன் பின் மத்தியகுழுவில் இருந்து நீக்கப்பட்டார். ஒன்றில் குடும்பத்தையோ அல்லது அரசியலையோ தீர்மானிக்கும்படி பெண்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு ஜே.வி.பி.யின் மீது தொடர்ச்சியாக வைக்கப்பட்டு வந்தது. கட்சிக் கட்டமைப்பின் படி மாவட்ட மட்டங்களிலிருந்து தான் ஓரளவு தீர்மானமெடுக்கின்ற நிலைகளில் பெண்கள் இருந்து வருகிறார்கள். கிராமிய மட்டங்களில் பெண்கள் தீவிர செயற்பாட்டாளர்களாக இருந்து வருகிறார்கள்.



படிப்பகம்

ஆனாலும் தென்னிலங்கை அரசியல் இயக்கங்களிலேயே பெண்கள் பிரக்ஞைபூர்வமான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஈடுபட்டு வருகின்ற முக்கிய கட்சியாக ஜே.வி.பியையே கூறலாம். கட்சியின் தனியான முன்னணி அமைப்பாகவே சோசலிச மகளிர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு அதற்கென்று தனியான பத்திரிகையும் வெளிக்கொணரப்பட்டது என்றாலும் இவை ஆண் தலைமை உறுப்பினர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வருவது மறுக்க முடியாத உண்மையாகும். பிரதான அரசியல் செயற்பாடுகளை மையப்படுத்திய செயற்பாடுகளை நோக்கியே பெண்கள் அமைப்பின் செயற்பாடுகள் நிர்ப்பந்திக்கப்பட்டன. அவற்றுக்கு பக்கபலமாக அறிக்கை விடுகின்ற, துண்டுப்பிரசுரம் வெளியிடுகின்ற, சுவரொட்டி ஒட்டுகின்ற, பிரச்சாரம் செய்கின்ற, கோசம் எழுப்பி ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்களில் குரல்கொடுகின்ற ஒன்றாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றால் அது மிகையில்லை. சோசலிச மகளிர் இயக்கத்தின் தனியான ஒரு செயற்பாடு என்பது, அது வருடாந்தம் மேற்கொள்கின்ற பெண்கள் தின நிகழ்ச்சி மாத்திரமே. ஆக மொத்தத்தில் மகளிர் அமைப்பின் நிகழ்ச்சி நிரலானது ஒட்டுமொத்த கட்சியின் நிகழ்ச்சிநிரல் தான். இந்த ஒட்டுமொத்த நிகழ்ச்சிநிரலைத் தீர்மானிப்பது பெண்களல்லாத மைய தலைமை அங்கமே.

1971 ஏப்ரல் கிளர்ச்சிக்காக பெண்களுக்கும் ஆயுதப்பயிற்சி வழக்கப்பட்டபோதும் போருடை தயாரித்தல், உணவு சமைத்தல், காயப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்தல், தகவல் பரிமாறுதல் என்பனவற்றுக்காகவே பெண்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டார்கள். எவ்வாறிருந்த போதும் 1971 மற்றும் 1987 - 1989 காலப்பகுதிகளில் பெண்களின் ஆயுதப் போராட்டம், அவர்களின் அர்ப்பணிப்பு, தியாகம் என்பன குறைத்து மதிப்பிடக்கூடியனவல்ல. கூட்டம் கூடுதல், விரிவுரை நடாத்துதல், ஆர்ப்பாட்டம், வேலைநிறுத்தம், ஊர்வலங்கள் நடாத்துதல் என பெண்களின் துடிப்புமிக்க பங்களிப்புக்கள் அனைவரையும் கவருகின்ற விடயங்கள். இந்த தலைமறைவு காலத்தில் "செபளிய" (பெண்போராளி) என்கின்ற ஒரு சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. 1988ஆம் ஆண்டு கண்டியில் நடத்தப்பட்ட ஜே.வி.பி.யின் கூட்டமொன்றில் உரையாற்றிய பெண் பேச்சாளர் இப்படி உரையாற்றினார். "உதவிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவை கொலை செய்ய ஜே.வி.பி.யின் பெண்விடுதலை இயக்கம் உறுதி பூண்டுள்ளது. இதனைச் செய்ய எங்கள் ஆண் தோழர்களுக்கு நாங்கள் அனுமதி தரப்போவதில்லை." (உடுகம்பொல இந்தக் காலப்பகுதியில் பல ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட காரணமான அதிகாரி)

இந்தக் காலப்பகுதியில் பாடசாலை மாணவிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவிகள் பலர் ஜே.வி.பி.யுடன் இணைந்து தலைமறைவு இரகசிய செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டதுடன், படையினரின் வதைமுகாம்களில் மோசமாக வதைபுரியப்பட்டு கொல்லப்பட்டார்கள். இதே காலப்பகுதியில் பெண்கள் வாரத்துக்கு ஒரு முறையாவது கூடுவர். பல்கலைக்கழகம், பாடசாலை, அரசாங்க, தனியார் காரியாலயங்களில் கிளைகளை உருவாக்கினர். ஆனால் இவற்றின் தலைமையை ஆண்களே வகித்தனர். கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களுக்கான பெண்கள முன்னணி பிரிவுகளாக டீ 1,2,3,4, என்கிற பெண்களில் அமைக்கப்பட்டிருந்தது. இவற்றிற்கு பெண்களே தலைமை வகித்தனர்.

இந்த காலப்பகுதியில் பல பெண்கள் புதைகுழிகளுக்கும், ரயர் எரிப்புகளுக்கும், டீ.56களுக்கும் பலியாக்கப்பட்டனர். பல பெண்கள் முண்டங்களாக ஆறுகள், குளங்கள், கடற்கரைகள் என மிதந்தனர். இவர்களில் 1988 மார்ச் 8ஆம் திகதி படையினரால் வதை

www.padippakam.com



தீபிகா சாமினி

புரியப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு, பின் கொல்லப்பட்ட தீபிகா முதுஹெட்டி, சாமனி கீதாஞ்சலி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஜே.வி.பி.யின் தலைவர் றோகண விஜேவீர கூட தான் எப்போதும் கட்சி உறுப்பினரொருவரை திருமணம் செய்யப்போவதில்லை என்றும் அவ்வாறு திருமணம் செய்தால் கட்சி ஒரு பெண் உறுப்பினரை இழந்து விடும் என்று கூறி வந்தார். இதன் உள்ளர்த்தம் என்னவென்றால் அவர் திருமணமுடிக்கும் பெண் அரசியல் அல்லது சமூகச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ள முடியாது என்று ஆகிறது. அவர் விருப்பப்படியே அவர் திருமணமும் செய்து கொண்டார். அவரது மனைவி அரசியல் நடவடிக்கைகளில் ஒரு போதும் ஈடுபட்டது கிடையாது.

ஜே.வி.பி.யின் "புரட்சிகர கொள்கைப் பிரகனடத்தில்" பெண்களின் பிரச்சினைகள் குறித்து பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அடிப்படையில் இலங்கைப் பெண்கள் தமது சமத்துவ உரிமைகளை அனுபவிக்க வாய்ப்பற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளதாக கீழ்வரும் வகையில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

"மக்கள் தொகையில் அரைவாசிப்பேரான பெண்கள் ஆண்களைப் போல சமஉரிமைகளை அனுபவிக்க முடியாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளதுடன் பெண்கள் முதலாளித்துவ கட்டமைப்புக்குள் அடிமைகளாகவும், இரண்டாந்தரமாகவும் ஆக்கப்பட்டுள்ளார்கள்."

மேலும் பெண்களின் தொழில் நிலை அவர்களின் சம்பளமற்ற வேலை தொடர்பான விடயம் குறித்து இவ்வாறு குறிப்பிடுகிறது.

"பெண்கள் மற்றும் யுவதிகளின் தொழில் வாய்ப்பானது ஆண்களுக்கு இருக்கின்ற தொழில்வாய்பைவிட குறைந்த நிலை. பெண்களுக்கு ஆண்களைப் போல சம ஊதியம் வழங்கப்படுவதில்லை. சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கோட்பாட்டு சகல துறைகளிலும் பெண்களினதும் யுவதிகளினதும் உரிமைகளை நசுக்கிக் கொண்டு அவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர்."

இதில் உள்ளவை தவிர அடிப்படையில் முகம் கொடுத்து வரும் தொழிலின்மை, சமஊதியமின்மை, சீதனப் பிரச்சினை, வீட்டுக்குள்ளான சுரண்டல் போன்றவற்றை தாம் அதிகாரத்தைக் கைப்பற்றினால் தகுந்த தீர்வினைத் தருவதாக உறுதியளிக்கின்றனர். இது போன்ற வாக்குறுதிகள் நீளுகின்றன அந்தப் பிரகடனத்தில். இந்தக் கொள்கைகள் தென்னிலங்கை சிங்கள இளம் சமூகத்தினர் பெருமளவு இணைய வாய்ப்பளித்திருக்கிறது.



படிப்பகம்

என்றாலும் பெருமளவிலான கொள்கைகள் பின்னைய காலங்களில் மாற்றப்பட்டதாகப் பெண்களின் முன்னணியின் மாவட்ட தலைமைப் பொறுப்பிலிருந்தவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதன்படி...

"பெண்களுக்கு ஓரளவாவது இடமளிக்கப்பட்ட ஒரேயொரு அரசியற் கட்சி ஜே.வி.பி.யொன்று தான். இதன் ஆரம்பத்தில் பெண்களின் நலன்கள் குறித்த நோக்கங்களைக் கொண்ட மிகவும் கவரக்கூடிய சிறிய அளவிலான கொள்கை விளக்கம் தான் அதற்கிருந்தது. மேலும் ஆண் பெண் சமத்துவத்தை ஏற்படுத்துவதே அதன் அடிப்படை அரசியல் உறுதிபூணலாகக் கூட இருந்தது. இதன்அடிப்படையில் தான் பெண்கள் பத்திரிகையும்கூட பிரசுரிக்கப்பட்டது."

(G.Obeysekara.,Some Comments on the Social Backrounds of the April 1971 Insurgency in Sri Lanka, Journal ofAsian Studies. Vo-33, அயல் 1974.)

ஜே.வி.பி.யில் 2001ஆம் ஆண்டு மத்தியில் உள்ள நிலைமைகளின்படி மத்தியகுழுவில் மூன்று பெண்கள் அங்கம் வகிப்பதாக குறிப்பிடுகின்றனர். மத்தியகுழுவானது இரகசியமாக வைக்கப்பட்டிருப்பதனால் இவர்களின் பெயர்கள் பகிரங்கமானதல்ல என்கின்றனர். அரசியல் குழுவில் திமுது ஆட்டிகல உறுப்பினராக இருக்கிறார். இவர்தான் ஜே.வி.பி.யின் முன்னணி அமைப்புகளில் ஒன்றான சோசலிச மகளிர் இயக்கத்திற்கு தலைவியாக இருக்கிறார். சோசலிச மகளிர் இயக்கத்தின் வெளியீடாக ஆரம்ப காலம் தொட்டு காந்தா விமுக்தி (அதாவது பெண் விடுதலை) எனும் பெயரில் மாதாந்த பத்திரிகை வெளியிடப்பட்டு வந்தது. இது ஜே.வி.பி.யின் வீழ்ச்சி காலங்களைத் தவிர்ந்த காலங்களில் வெளிவந்திருக்கின்றது. 1994இல் மீண்டும் பகிரங்க அரசியலுக்கு ஜே.வி.பி. பிரவேசித்தபோது 1995இலிருந்து காந்தா விமுக்தியை அதன் வெளியீடாகக் கொண்டு வந்தனர். 2001ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இப்பத்திரிகை நவோதய (புதியஉதயம்) எனும் பெயரில் வெளிவருகின்றது.

இவை ஒருபுறமிருக்க ஜே.வி.பி. மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு போன்ற இரகசிய தலைமறைவு அரசியல். போராட்டச் பின்னணியைக் கொண்ட கட்சிகளின் விபரங்களை திரட்டுவதில் ஆய்வாளர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். கிடைக்கப்பெற்ற தகவல்களிலிருந்து இவ்வாறான போராட்ட இயக்கங்கள் பெரும்பாலும் தீர்மானமெடுக்கின்ற அங்கங்களில் பெண்களின் பங்களிப்பை நிராகரிப்பதும், மாறாக பெண்கள் செயலாற்றலை உச்ச அளவில் உள்வாங்கிக் கொள்வதில் அக்கறை செலுத்தலையும் இரு சக்திகளுக்கும் பொதுவான ஒன்றாகக் கொள்ளலாம். பெண்களின் சுயத்தை மதித்து அவர்களின் தனித்த பிரேத்தியேகமான நலன்களை அவர்கள் வாயிலாகவே மேற்கொள்ளப்பட வழி திறந்து விடப்படவில்லை என்பது மட்டும் உண்மை.

## தமிழீழ விடுதலைப் போராட்டமும் பெண்களும்

தமிழீழ விடுதலைப் போராட்ட அரசியலில் பெண்களின் அரசியலைப் புரிவதற்கு அதன் உட் கட்டமைக்கப்பட்ட புரையோடிப்போன சமூக ஆதிக்க சித்தாந்தங்கள், விழுமியங்கள், ஐதீகங்கள், மாயைகள், என்பவற்றால் கட்டமைக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தை விளங்கிக் கொள்வது முன்நிபந்தனையானது. இதன் அடிப்படையில் தான் ஒட்டுமொத்த தமிழரசியலில் இதுவரை பெண்களுக்கு வழங்கப்பட்ட இடம், பாத்திரம் என்பவற்றை

www.padippakam.com

நாங்கள் விளங்கிக் கொள்ளவும் முடியும்.

இன்று உலகம் முழுவதும் வியக்கின்ற பெண்போராளிகளாக ஆகியிருக்கின்ற தமிழீழப் பெண்களின் அரசியல் பாத்திரத்தை இன்றைய அதன் பண்பு, வடிவம், திசைவழி, என்பனவற்றைக் கொண்டு ஒவ்வொரு சித்தாந்தங்களுக்கூடாக பார்க்கின்ற போதும் உலகப் பெண்களின் போராட்ட வரலாற்றில் குறிப்பான தடங்களாக சுட்டுகையில் தமிழ்ப் பெண் போராளிகளை விட்டு விட்டு பதிய முடிவதில்லை.

**யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்:**

1. ஈழத்தமிழ் அரசியல் களத்தில் தோன்றி சமூக சீர்திருத்தத்தில் காத்திரமான பாத்திரம் வகித்த யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் (1924-1934) அமைப்பு சமூக சீர்திருத்த இயக்கமென்ற வகையில் இவர்கள் பெண்களது அடக்குமுறை நிலைமைக்கு எதிராக தமது கூட்டங்களில் சிற்சில தீர்மானங்களை மேற்கொண்டதுடன் தமது பத்திரிகைகளான கேசரி, ஈழகேசரி ஆகியவற்றிலும் கட்டுரைகளைப் பிரசுரித்தனர்.

- 1925இல் நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தில் சீதன எதிர்ப்புக் கோரிக்கையை முன்வைத்தனர்.
- டொனமூர் கமிஷன் அறிக்கை பெண்களுக்கு வாக்குரிமை மறுத்த போது வாலிபர் காங்கிரஸ் அதை எதிர்த்தது.
- 1930இல் நடைபெற்ற தமது 6வது வருடாந்தக் கூட்டத்தில் பின்வரும் கருத்தை முன்வைத்தனர்.

"நாட்டின் சமூகவாழ்வில் பெண்களது காத்திரமான பங்குபற்றுதல் இல்லாத எந்த நாடும் அதன் பூரண ஆற்றலை அடைய முடியாது. அவ்வகையில் எமது நாட்டின் பெண்களை நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஆண்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு முன்வர வேண்டுமெனக் கோர வேண்டும்."

- 1930இல் ஈழகேசரி பாரதியின் பெண்விடுதலைக் கவிதைகளைப் பிரசுரித்தது.
- கேசரி, இந்திரா நேருவின் "Women in the USSR" எனும் கட்டுரையை பிரசுரித்ததுடன், இலங்கைப் பல்கலைக் கழகப் பெண்களின் சம்மேளனத்தின் வருடாந்தக் கூட்டத்தில் திருமதி ஆர். ஆர். செல்லையாவினால் வாசிக்கப்பட்ட "Women and the brave new world" எனும் கட்டுரையைப் பிரசுரித்தது.

(நன்றி: செல்வி திருச்சந்திரன், Spectrum of feminity. 1998)

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசில் பெண்கள் சிலரும் அங்கம் வகித்தாலும் தலைமை ஆண்களிடமேயிருந்தது. இவ்வியக்கத்தினர் பெண்விடுதலைக் கருத்துக்களை வெளிப்படுத்தினாலும் சமூக அளவில் அவற்றை விரிவாகக் கொண்டு சென்று பெண்ணடக்குமுறைக்கெதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை.

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் எத்தனை இருந்த போதும் ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் பெண்களது பிரச்சனை தொடர்பாகக் குரல் கொடுத்த ஒரு அமைப்பு வீழ்ச்சியுற்றது பெண்களின் நிலையில் துயரமானதே.



படிப்பகம்

www.padippakam.com

### தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி

யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க, சுரண்டும் வர்க்க சமூகக் கட்டமைப்புக்குள் அச்சமூக அமைப்பை நேரடியாக பிரதிநிதித்துவப் படுத்திய பழமைவாத கட்சியான தமிழ்க் காங்கிரஸ் (Tamil Congress) இலிருந்து முறித்துக் கொண்டு S.J.V. செல்வநாயகத்தால் 1949 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தாராளவாதக் கட்சியே தமிழரசுக் கட்சி. முழுக்க முழுக்க ஆண் தலைமைத்துவத்திலான இக்கட்சியில் செயல்வீச்சம் மிக்க பெண்கள் இருந்தபோதும் தலைமைத்துவத்திற்கு வருவதற்கான வாய்ப்புகள் பெண்களுக்கு இருக்கவில்லை.

தமிழரசுக்கட்சிக்குப் பின் அரசியல் அரங்கிற்கு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் இதே பாணியிலான பால்நிலைக் குருட்டுத் தன்மையையே கடைப்பிடித்தது. பெண்களை வெறுமனே தமது அரசியலுக்கு ஆதரவாளராகவும், வாக்காளராகவும் தான் இவர்கள் அனைவரும் பாவித்தனர். "தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!" என்னும் ஆண்களுக்கான அரசியலையே இவர்கள் முன்னெடுத்தனர். இதனூடாக சமூகத்தில் ஆணின் தலைமைத்துவத்தை தம் பங்கிற்கு உறுதிப்படுத்தினர். ஆணாதிக்க சமூக அமைப்புக்கு அரசியல் ரீதியாக பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கினர். எனினும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் பேரவையில் செயலாற்றலும் துணிச்சலும் மிக்க பெண்கள் இயங்கி வந்தனர் என்பதை வரலாறு மறந்து விடாது. தமிழர் விடுதலைக் கூட்டணி பின்னர் தமிழ் ஈழ மகளிர் அணி என்ற அமைப்பை உருவாக்கியபோது மங்கயற்கரசி அமிர்தலிங்கம் அதன் பொதுச்செயலாளராக செயற்பட்டார். இதன் தலைவவியாக அன்னலட்சுமி பொன்னுத்துரை (போராளி சிவகுமாரனின் தாயார்) இருந்தார்.

### விடுதலை இயக்கங்களில் பெண்கள் :

தீவிரவாத இளைஞர் இயக்கங்களின் ஆரம்பகாலந் தொட்டே, அவற்றில் செயற்பட்டு வந்த ஆண்கள் பலரதும் சகோதரிகள், உறவினப் பெண்கள் இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளனர். பொலிஸ் தேடிவரும் போது இவர்களை ஒழித்து வைப்பது, உணவு வழங்குவது, ஆவணங்கள், நகைகள், ஆயுதங்களை மறைத்து வைப்பதில் உதவி செய்வது......... போன்றவற்றைச் செய்து வந்துள்ளனர். இதனால் இப்பெண்கள் கைது செய்யப்படவும் சிறையில் சித்திரவதைக்குள்ளாகவும் கூட நேர்ந்தது. புலோலி வங்கியில் பறிமுதல் செய்யப்பட்ட நகைகளைப் பாதுகாத்த புஸ்பராணி (புஸ்பராஜாவின் சகோதரி) என்பவர் தமிழ்ழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதல் சிறை சென்ற பெண்ணாவார் (1976ஆம் ஆண்டு).

### தமிழீழ புதிய புலிகள்:

1981 இற்கு முன்னர் செயற்பட்டு வந்த தமிழீழ புதிய புலிகள் அமைப்பின் பெண்கள் தொடர்பான கண்ணோட்டத்தை அல்லது அணுகுமுறையைப் பரிசீலிப்பது எமது ஆய்விற்கு முக்கியமானது.

அன்றைய தமிழீழ புதிய புலிகள் அமைப்பில் பிரபாகரன், உமாமகேஸ்வரன், சந்ததியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். உமாமகேஸ்வரன் இவ்வமைப்பின் செயலாளராய் இருந்தார். அதேநேரம் த.வி.கூட்டணியின் கொழும்புக்கிளை செயலாளரும் இவர் தான். த.வி.கூ கொழும்புக் காரியாலயத்தில் அமிர்தலிங்கத்தின் செயலாளராக



படிப்பகம்

ஊர்மிளாதேவி கடமையாற்றினார். தமிழ் இளைஞர் பேரவையின் தீவிரமான செயல் வீரரான ஊர்மிளா புலிகளுக்கான இரகசிய உதவிகளைச் செய்து வந்தார்.

1979 யூலை 29 அன்று ஜே.ஆர் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டதைப் பிரகடனப்படுத்தி த.வி.பு அமைப்பினரைத் தேடத் தொடங்கியதும் அவர்கள் தலைமறைவாயினர்.

தீவிர செயற்பர்டாளராக மட்டுமே இவரால் இருக்க முடிந்ததே ஒழிய தீர்மானம் நிறைவேற்றுபவர்களில் ஒருவராகவோ ஆலோசனை வழங்கவோ வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

பெண்கள் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு உதவி செய்பவர்களாக மாத்திரம் பார்க்கும் ஆண்களின் மனோபாவம் தான் ஊர்மிளாவின் அரசியல் பங்குபற்றலுக்கு முட்டுக்கட்டை போட்டிருந்தது.

அரசினால் தேடப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் நாடு திரும்பிய ஊர்மிளா வவுனியா காந்தியப் பண்ணையில் புனர்வாழ்வு வேலைகளில் ஈடுபட்டிருந்த பொழுது நோய்வாய்ப்பட்டு 1980 இறுதிப் பகுதியில் பண்ணையிலேயே மரணமானார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் முதன் முதல் தலைமறைவு வாழ்வை மேற்கொண்ட பெண்ணாக, முதல்பெண் போராளியாக ஊர்மிளா திகழ்கிறார்.

## பெண் விடுதலை இயக்கம்

புலிகளிலிருந்து பிரிந்து புதிய பாதை குழுவாக செயற்பட்டவர்கள் 1981 தை 14ஆம் திகதி தம்மை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்திக் கொண்டனர். காந்தீயப் பண்ணையில் ஊடுருவிச் செயற்பட்டு வந்த கழகத்தினர் தமக்கான துணை அமைப்புகளை செயற்கையாக உருவாக்கினர். அவற்றில் ஒன்றுதான் 1982ல் உருவாக்கப்பட்ட பெண் விடுதலை இயக்கம்.

இப்பெண்விடுதலை இயக்கத்தின் ஆரம்பத்தில் ராதா (யூலி) உஷா (சரோஜினிதேவி) ஆகியோர் தீவிரமாகச் செயற்பட்ட முன்னணி உறுப்பினர்களாவர். பெண்விடுதலை இயக்க பெண்களுக்கு பெண்விடுதலைக் கருத்துக்களை ஆண்களே (டொமினிக், தோழர் காந்தன் ஆகியோர்) எழுதிக் கொடுத்து வந்தனர்.

1983 யூன் மாதத்தில் கழக இராணுவத்தினர் வவுனியாவில் தளமமைத்திருந்த விமானப்படையினரைத் தாக்கிவிட்டு தப்பியோடி பெண்கள் பண்ணைக்கருகில் தான் ஒழிந்தனர். இதனால் காந்தியப் பண்ணைகள் அரச படைகளால் தாக்கப்பட்டு கழக உறுப்பினர்கள் தேடப்பட்டனர். பெண்கள் பண்ணையில் முன்னணிப் பாத்திரம் வகித்த தோழர்கள் உஷாவும் ராதாவும் பொலிஸாரால் தேடப்படத் தொடங்க அவர்களும் பின் தளத்திற்கு (இந்திய) செல்ல நேர்ந்தது. இதனுடன் பெண்கள் விடுதலை இயக்கத்தின் வாழ்வும் முடிந்தது.

## தமிழீழ பெண்கள் இயக்கம் (TWC)

1983 யூலை கலவரமானது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாரிய பாய்ச்சலை ஏற்படுத்தியது. இதனுடன் தமிழ் சமூகத்து பெண்களது ஐதீக வாழ்க்கை

www.padippakam.com

முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. பொழுது சாயும்முன் வீட்டில் இருக்க வேண்டுமெனும் சமூக கட்டளைக்குட்பட்டிருந்த பெண்கள் வீடுகளிலிருந்து தலைமறைவாகினர். இது தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரை ஒரு பேரதிர்வே. பெண்கள் இயக்கங்களுக்குச் சென்றது முற்றிலும் அவர்களது சுய தீர்மானமாய் இருந்தது என்பது இங்கு முக்கியமானது.

இந்த நேரத்தில் கழகத்தால் 1983 இறுதியில் உருவாக்கப்பட்டதே தமிழீழ பெண்கள் இயக்கம் (TWO).

ஆயுதமேந்திப் போராட வேண்டும் எனும் ஆவலுடன் அரசியலுக்கு வந்த பெண்களை கழகம் தனது மைய அரசியல் நீரோட்டத்தில் பிரவேசிக்க விடாது துணைப்பாத்திரங்களாக செயற்பட வைத்தது. இதன் மூலம் கழகம் தன் பங்கிற்கு தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களது அரசியல் பங்களிப்பை ஒரு எல்லைக்குள் கட்டிப் போட்டது.

TWO தனக்கான ஒரு பெண்கள் சஞ்சிகையையும் கொண்டிருந்தது. அதன் பெயர் தோழி. அதன் ஆசிரியையாக செல்வி (செல்வநிதி) செயற்பட்டார். (இவரை 1991 யூன் 19ம் திகதி புலிகள் கடத்திச் சென்றனர். அதன் பின்னர் இவரைப் பற்றிய தகவல் எதுவும் இல்லை.) தோழி பெண்கள் தொடர்பாக ஓரளவு முன்னேறிய சிந்தனைகளைப் பிரபலித்த சஞ்சிகையாகும். எனினும் மூன்று இதழ்கள் வெளிவந்ததோடு இது நின்று போனது.

நூற்றுக்கணக்கில் பெண்களைக் கொண்டிருந்த கழகத்தின் மத்திய குழுவிலும் கூட ஒரே ஒரு பெண் தான் (தோழர் உஷா) அங்கம் வகித்தார்.

சுருங்கக் கூறின் பெண் விடுதலைக் கருத்துக்கள் பெண்கள் பிரிவுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தனவே அன்றி ஒட்டுமொத்த அமைப்பினதும் சிந்தனையாக மாற்றப்படவில்லை. பெண்விடுதலை என்பது பெண்களின் சமாச்சாரமாகக் கருதப்பட்டு பெண்களிடமே விடப்பட்டது. எனினும் இது தொடர்பான அறிவூட்டல் வகுப்புகளை பெண்களுக்கு நடத்துபவர்களும் ஆண்களே. எனவே ஆணாதிக்க சட்டகத்திற்கு உட்பட்ட (Frame) கருத்துக்களே பெண்களைச் சென்றடைந்தன. சீதனம், தாலி, சடங்கு, சம்பிரதாயங்கள் போன்றவற்றை விமர்சிப்பதுடன் கருத்துக்கள் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்டன. எனினும் பெண்கள் குடும்பத்தில் பெண்களின் பாத்திரம் தொழில் தளத்தில் சம சம்பளம், எதிலும் ஆணுக்கு சமமாக பெண்கள் நடாத்தப்பட வேண்டும்... ... எனும் கருத்துக்களை நடைமுறை அனுபவத்தினூடாகப் பெற்றுக் கொண்டு முன்வைக்கையில் சோசலிச சமுதாயத்திலே பெண் விடுதலை பூரணப்படும். தற்போது ஆண் பெண் முரண்பாட்டை கூர்மைப்படுத்தக் கூடாது எனும் கருத்துக்கள் மார்க்சிசம் பேசும் ஆணாதிக்க தலைமையால் முன்வைக்கப்பட்டது. இது கழகத்தின் அகக்கட்டமைப்பினுள் காணப்படும் ஆணாதிக்கப் போக்குகளுக்கு எதிரான பெண்களின் எதிர்ப்பை மழுங்கடிப்பதாயிருந்தது.

இங்கு வினோதமானது என்னவென்றால், கீழணி சீர்திருத்த திருமணத்தை ஆதரித்தும் பின்பற்றியும் வர மறுபுறம் கழகத்தின் பொதுச் செயலாளரான உமாமகேஸ்வரன் தாலி கட்டித் திருமணம் செய்து கொண்டார். உமாமகேஸ்வரனைப் பொறுத்தவரையில் அவர் தனது யாழ் சைவ வேளாள ஆணாதிக்க சிந்தனை முறையில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொண்டவரல்ல. அதைவிட அவரொரு தூய தமிழ்வாதியுமாவார். இதெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

சேர்ந்தே கழகத்தின் பெண்கள் தொடர்பான சிந்தனையைக் கட்டமைத்தன. இதற்குச் சிறந்த உதாரணம் 1985 நடுப்பகுதியில் இராணுவப் பயிற்சி பெற பின்தளம் சென்ற பெண்கள் சேலை உடுத்தி அடையாளப் புகைப்படம் எடுக்க வேண்டும் என்பதே உமாமகேஸ்வரனின் கட்டளையாய் இருந்தது. கெரில்லா உடையணிந்து பயிற்சிபெற்ற பெண்கள் சேலை உடுத்தி தமது அடையாளத்தைக் காட்ட வேண்டி இருந்தது.

கழகத்துள் உள்முரண்பாடுகளைத் தொடர்ந்து உட்படுகொலைகள், பிளவுகள் எனத் தொடர்ந்தன. பெண்கள் பிரிவு தான் பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணம் எனும் கருத்து அனைவரிடமும் காணப்பட்டது. இறுதியில் 1986 முற்பகுதியில் நடந்த தளமாநாட்டில் கழகத்தின் பெண்கள் பிரிவான "தமிழீழ பெண்கள் இயக்கம்" கலைக்கப்பட்டது. அவ்வளவு எளிதாக பெண்கள் பிரிவைக் கலைக்க தீர்மானம் எடுக்கும் அளவுக்கு கழகத்தின் அரசியல் ஆணாதிக்க தன்மையாய் இருந்ததையே இது காட்டுகிறது.

கழகத்தின் சிதைவும் கழகப் போராளிப் பெண்களின் நிலையும்

1985 நடுப்பதியில் கழகத்தில் உள் முரண்பாடுகள் மேலோங்கியிருந்த நிலையில் அவசர அவசரமாக தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஏறத்தாழ 50 பெண்களைத் திரட்டிப் பயிற்சிக்காக அன்றைய பெண்கள் பிரிவு பொறுப்பாளர் பின்தளம் அனுப்பி வைத்தார். 1986 முற்பகுதியில் நாடு திரும்பிய இவர்களில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர்கள் மாத்திரம் தமது வீடுகளுக்குத் திரும்பிப் போகக் கூடியதாக இருந்தது. ஆனால், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கழக ஆதரவாளர் பெண்களும் கூட அங்கிருக்க முடியாமல் யாழ்பாணம் வந்து முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இவர்களுக்கு கழகத்தலைமை உணவுக்காக காசை வழங்கி வந்தது. ஆரம்பத்தில் இவர்கள் முகாமில் இருந்து கொண்டு அப்பளம், சவர்க்காரம் போன்ற கைத்தொழில்களைச் செய்து வந்தனர். மூலப்பொருள் கொள்வனவு சந்தைப்படுத்தல் போன்றவற்றில் எதிர்கொண்ட சிக்கல்களால் அவை கைவிடப்பட்டன.

- இயக்கத்திற்கு வந்த பெண்களை யாரும் திருமணம் செய்ய முன்வர மாட்டார்கள். எனவே அவர்கள் யாரையாவது காதலித்துத் தான் திருமணம் செய்தாக வேண்டும்.
- பெண் சுயாதீனமாக வாழ முடியாது பொருளாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஆணைச் சார்ந்தே வாழவேண்டும்.
- பெண்கள் அமைப்புக்கு சுமை - அவர்களை வைத்து உணவு போடுவதே வீண்.
- பெண்களுக்கு எதற்கு அரசியல், குடும்பமே அவர்களுக்கான இடம்.

கழகப் பெண் போராளிகள் வெற்றியுடன் வீடு திரும்பியவர்களல்ல. அவர்கள் வீடுகளில் இருந்து எப்படியெல்லாம் போராடிக் கொண்டும் வீட்டாரை தூக்கியெறிந்து விட்டும் வந்தார்களோ அதற்கு எதிர்மாறாக வீட்டாரின் உதவியை நாடிச் செல்ல அவர்களுக்கு நேர்ந்தது. அவர்கள் எதிர் கொண்ட அனைத்து சிரமங்களுக்கும் பரிசாகக் கிடைத்தது அரசியல் தோல்வியும் விரக்தியுமே. இதில் கூடுதல் பாதிப்புக்குள்ளானவர்கள் வன்னி மற்றும் கிழக்கு மாகாணப் பெண்களே.

**இயக்கத்தில் இருந்து வீடு திரும்பிய பெண்கள் எதிர் கொண்ட**



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினைகள் :

- சமூக அவதூறுகளை எதிர்கொண்டாலும் யாழ் மத்தியதர வர்க்கப் பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவும் தனது கல்வியைத் தொடரவும் முடிந்தது.
- வன்னி மற்றும் கிழக்கைச் சேர்ந்த பெண்களும், யாழ்ப்பாணத்தின் அடக்கப்பட்ட வர்க்க சாதியப் பிரிவைச் சார்ந்த பெண்களும் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்கொள்ள நேர்ந்தது.
- கல்வியை இடையில் முறித்ததால் பொருளாதார வறுமை காரணமாக திட்டமிட்டு வேறு துறைகளில் ஈடுபட முடியாதநிலை.
- இதனால் கல்விசார் தொழிலை தேடிக்கொள்ள முடியாதநிலை.
- இதனால், அநேகமான பெண்கள் தாம் இயக்கத்தில் சந்தித்து காதலித்த ஆணை மனைவி என்னும் பெயரில் சார்ந்திட வேண்டிய நிலை.
- இன்னும் சில பெண்களது ஆண் காதலர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டு விட்டனர். சிலர் காணாமல் போய் விட்டனர்.
- இயக்கத்திற்கு சென்று வந்த பெண்ணை திருமணம் செய்து கொள்ள யாரும் முன்வராதது.
- இயக்க ஆண்கள் கூட "அடக்க ஒடுக்கமான" "குடும்பப்பாங்கரன" "அழகான" பெண்களையே சீதனத்துடன் திருமணம் செய்து கொள்ள விரும்பினர்.
- இயக்கங்களுக்குச் சென்று வந்த பெண்களது குடும்பங்களைப் பார்த்தும் சமூகம் பலவித கேள்விகளையும் கேட்டது. பெண்களது ஒழுக்கத்தைக் குறை கூறியது. இதனால் போராளிப் பெண்கள் தமது சொந்தக் குடும்பத்தவர்களாலேயே பல்வேறு குற்றச் சாட்டுகளுக்கும், புறக்கணிப்புகளுக்கும் உள்ளாகினர். நித்தம் நித்தம் வசவுகளை எதிர் கொண்டனர்.

இந்த ஆணாதிக்க சமூகக் கொடுமைகளுக்கெல்லாம் தாக்குப் பிடிக்க முடியாது கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மனோரஞ்சிதம் (கலா) என்னும் பெண் போராளி தற்கொலை செய்து கொண்டார்.

**வெகுஜன மட்டத்தலான பெண்களது பங்களிப்புகள**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் ஆதரவாளர்களாக இருந்து செயற்பட்ட பெண்களது பங்களிப்பு மிகவும் மகத்தானது. இவர்கள் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு கொள்ளவில்லை. ஆனால் இவர்கள் மறைமுகமாக ஆற்றி வந்த பங்களிப்பானது போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் போராட்டத்தைப் பலப்படுத்துவதாயிருந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலம் தொட்டே போராட்டத்தில் பங்கு பற்றியவர்களது குடும்பத்தினரும் அவர்களைச் சார்ந்தவர்களும் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தனர். போராளிகள் உயிர் வாழவும் போராட்ட அமைப்பு பாதுகாக்கப்படவும் இவர்கள் வழங்கிய பங்களிப்பே காரணமாகும். குறிப்பாக இக்குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் ஆபத்தை எந்நேரமும் எதிர் கொண்ட நிலையில் போராளிகளுக்கான ஒத்தாசைகளை ஒழுங்கி வந்தனர். இது இவர்கள் கைது செய்யப்படவும் விசாரிக்கப்படவும் சித்திரவதைக்குள்ளாகவும் கொல்லப்படவும் கூட காரணமானது. இந்நிலை இப் போராட்டத்தில் இன்று வரை தொடர்ந்திடும் ஒன்றாகும்.



படிப்பகம்

குறிபபாக, போராட்டத்தில் தொய்வு காணப்பட்ட கட்டங்களில் எதிரியிடமிருந்து போராளிகளைப் பாதுகாப்பதில் பெண்களே முன்னின்று செயற்பட்டனர். இந்தியப்படை போராளிகளை வேட்டையாடித் திரிந்த போது போராளிகளின் உயிரைப் பாதுகாப்பதில் பெண்களுக்குப் பெரும் பங்குண்டு. அதே போல் புலிகளால் ஏனைய அமைப்புகள் அழித்தொழிக்கப்படும் போது இவ் அமைப்புகளின் உறுப்பினர்களைப் பாதுகாத்தவர்களும் பெண்களே.

பெண்களது பங்களிப்புகள் மனதை உருக்குபவையாகும். குறிப்பாக தேசத்தின் பெரும்பான்மையான வறுமைப்பட்ட உழைப்பிலீடுபடும் பிரிவைச் சார்ந்த பெண்களே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தாங்கு சக்தியாக இன்று வரையிலும் செயற்பட்டு வருகின்றனர்.

- போராளிகளை தமது வீடுகளில் தாராளமாக புழங்குவதற்கு இவர்கள் இடமளித்தனர். இவ்வீடுகளோ குடும்பத்தவர் பாவனைக்குக் கூட போதிய இடவசதி இல்லாதவையாகும் ஆனால். இதை அப் பெண்கள் தமக்கு இடைஞ்சலாகக் கருதவில்லை.
- தூர இடங்களில் இருந்து தண்ணீர் அள்ளி வந்தும், விறகு பொறுக்கி வந்தும், சமையல் செய்து கொடுத்தனர். போராளிகள் தமது வீடுகளுக்கு வரும் போதெல்லாம் அவர்களுக்கு உணவும் தேநீரும் வழங்க அவர்கள் தயங்கவில்லை.
- அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கே அன்றாடம் போராடிக் கொண்டிருக்கும் வறிய குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் தமது காதில் கிடக்கும் சிறிய தோட்டை அடைவு வைத்துக் கூட போராளிகளுக்கு உணவு தயாரித்து வழங்கிய சம்பவங்களும் உண்டு.
- போராளிகள் இரகசியக் கூட்டம் நடாத்துகையில் இரவில் கண்விழித்திருந்து தேனீர் தயாரித்துக் கொடுப்பர், காவலிருப்பர்.
- எந்தச் சாமத்தில் சென்றாலும் தம்மிடம் இருப்பவற்றைக் கொண்டு போராளிகளின் பசியை ஆற்றுவர்.
- தமது உணவையே போராளிகளுக்குக் கொடுத்து விட்டு பட்டினி கிடந்த தாய்மார்கள் பலர்.
- எதிரி போராளிகளைத் தேடித்திரியையில் தமது பிள்ளைகள் என்றும் சகோதரர்கள் என்றும் கூறி போராளிகளைத் தமது வீட்டில் வைத்துப் பாதுகாப்பர். அல்லது எதிரியின் கண்களுக்குப் படாதவாறு மறைத்து வைப்பர்.
- போராளிகளின் ஆவணங்கள், பத்திரிகைகள் எதிரியிடம் சிக்காதவாறு மறைத்து வைப்பர். தமது காணி நிலங்களில் ஆயுதங்களை ஒழித்து வைக்கவும் அனுமதிப்பர்.
- ஒழிந்து வாழும் போராளிகளுக்கிடையே தகவல் கொண்டு செல்பவர்களாகவும் தொடர்பாளராகவும் செயற்படுவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டதின் நியாயத் தன்மையை உலகிற்கு வெளிப்படுத்தும் மக்கள் சக்தியாகவும் பெண்களே உள்ளனர். எதிரிக்கெதிரான வெகுஜன மட்டத்திலான பெண்களது போராட்டங்கள் (ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதம்) எதிரியை அதிர்ச்சிக்குள்ளாக்குவனவாய் இருந்ததோடு சர்வதேச அளவில் தாக்கம் ஏற்படுத்துபவையாகவும் இருந்தன. இத்தகைய ஊர்வலங்கள்,

www.padippakam.com

ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்களில் பெண்கள் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலம் தொட்டே பங்கு பற்றி வந்துள்ளனர். ஆனால், போராட்ட அமைப்புகள் அதன் அரசியல் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளாததோடு பெண்களது போராட்ட ஆற்றலை தமது இயக்க நலனுக்கேற்ப கட்டுப்படுத்த விளைந்தன. இதனால் பெண்களது தன்னியல்பான எழுச்சிகள் யாவும் முளையிலேயே நசுக்கப்பட்டன.

1985 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் உருவான அன்னையர் முன்னணி மிகவும் காத்திரமான பாத்திரம் வகித்தது. அதே காலகட்டத்தில் மட்டக்களப்பில் உருவான "காணாமற் போனோரின் தாய்மாரது இயக்கம்" ஆனது இராணுவத்தால் கைது செய்யப்படும் காணாமற் 'போகும் தமது பிள்ளைகளை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டங்கள் நடாத்தியதுடன் அழுத்தக் குழுவாகவும் செயற்பட்டு வந்தது. எதிரிக்கெதிராக மாத்திரமின்றி போராட்டஅமைப்புகளின் பாசிசப் போக்குகளுக்கெதிராகவும் பெண்கள் போராடினர். 1985 நடுப்பகுதியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) உட்கட்சி அராஜகத்தை எதிர்த்து வெளியேறிய தீப்பொறி குழுவின் மூன்று உறுப்பினர்களை கழக இராணுவம் கடத்திச் சென்றது. இவர்களை விடுவிக்கக் கோரியும், கழக அராஜகத்தை எதிர்த்தும் திருநெல்வேலியில் மக்கள் ஆர்ப்பட்டம் நடத்தினர். இதில் முன்னணியில் இருந்தவர்கள் பெண்களே.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழத்தில் வெறியாட்டம் நடத்திய போது அதற்கெதிராக பெண்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். இந்தியப் படைகளை வெளியேறக் கோரி 1989 காலப்பகுதியில் மட்டக்களப்பைச் சார்ந்த பூபதி எனும் 65 வயதுப் பெண் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீர்த்தார். (புலிகள் இவரது போர்க்குணாம்சத்தையும் தியாகத்தையும் கையகப்படுத்திக் கொண்டதுடன் தமது பிரச்சாரத்திற்காக இவரது பெயரைப் பாவித்தனர்) எனினும் திலீபனை வீரனாகவும் தியாகியாகவும் மொத்த தேசமும் உணர்த்திக் கொண்டாடும் அளவுக்கு வீரப்பெண் பூபதியின் வீரமும் தியாகமும் நினைவு கூரப்படுவதில்லை. அவர் ஒரு பெண்ணாகவும் தென் தமிழீழத்தைச் (மட்டக்களப்பு) சேர்ந்தவரகவும் இருந்ததுவும் இதற்குக் காரணமாயிருக்கலாம்.

ஏனைய போராட்ட அமைப்புகளில் பெண்கள் பிரதிநிதித்துவம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக் கட்டத்தில் (குறிப்பாக 83-85 காலப்பகுதியில்) பல்வேறு போராட்ட அமைப்புகள் களத்தில் செயற்பட்டு வந்தன. அவற்றில் ஈ.ம.பு.வி.மு மற்றும் த.ம.வி.க ஆகிய இரு அமைப்புகளுமே பெண்களை நிறுவன ரீதியாக உள்வாங்கிய அமைப்புகளாகும். கழகத்தில் பெண்களின் அரசியல் பாத்திரத்தை பரிசீலித்தோம். கழகத்தைப் போன்றே பெண்களது பங்களிப்பை அதிகளவில் கொண்டிருந்த அமைப்பு எனும் வகையில் ஈ.ம.பு.வி.மு இல் பெண்களது பாத்திரத்தை பரிசீலனைக்குட்படுத்த வேண்டியது எமது கடமையாகும். ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியினரும், (ஈ.ம.பு.வி.மு யின் பெண்கள் பிரிவு) தமிழீழ பெண்கள் இயக்கத்தினரும் (புளொட்டின் பெண்கள் பிரிவு) சமகாலத்தில் தேசவிடுதலைப் போராட்ட களத்தில் நின்று செயற்பட்ட பெண்களாவர். எனினும் போராட்ட இயக்கங்களிடையே நிலவிய பகைமை உணர்வும் காழ்ப்புணர்வும் சக போராட்ட இயக்கங்களை சினேகபூர்வமாக அணுகவும் பரஸ்பர ஒத்துழைப்புக்களை வழங்கிக் கொள்ளவும் தடையாயிருந்ததன் விளைவு இவ்விரு பெண்கள் அமைப்பினரும் தமக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்திக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளவும். எதேச்சையாக சந்திக்கையில் கூட சகோதரத்துவ உணர்வோடு பழகவும் முடியாமற் போனது. காரணம் பெண்கள் தம்மை தேசத்தின் அடக்கப்பட்ட பிரிவினராகவும் பெண்களாகவும் உணராது தாம் சார்ந்த இயக்கங்களின் உறுப்பினர்களாக மாத்திரம் இனங்கண்டதாகும். இதனால் சமகாலத்தில் சக போராட்ட அமைப்பில் அங்கம் வகித்த பெண் போராளிகள் தாம் சார்ந்த அமைப்பினுள்ளும் சமூகத்திலும் எதிர் கொண்ட சவால்களையும் அவர்கள் அதற்கெதிராக மேற்கொண்ட போராட்டங்களையும் அவர்கள் மீதான அடக்கு முறைகளையும் பரஸ்பரம் அறிந்து கொள்ள முடியாமற் போனது. மாறாக சக போராட்ட அமைப்புப் பெண்களை பரஸ்பரம் ஏளனத்துடனும் காழ்ப்புணர்வுடனும் அணுகியதே தேசிய விடுதலையில் பெண்களது நிலையாயிருந்தது. கிடைத்திருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இங்கு சுருக்கமாக ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் பற்றி விபரிக்கப்படுகிறது.

ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி:

1983 இறுதிப் பகுதியில் ஈ.ம.பு.வி.மு.வின் பெண்கள் பிரிவான ஈ.பெ.வி.மு உருவாக்கப்பட்டது. செந்தணல் எனும் சஞ்சிகை பெண்கள் பிரிவின் பத்திரிகையாக வெளியிடப்பட்டது. கழகத்தின் அரசியலை ஒத்த அதே குட்டி பூர்சுவா அராஜகவாத அரசியலையே ஈ.ம.பு.வி.முயும் கொண்டிருந்தது. இங்கும் பெண்கள் அரசியலில் துணைப் பாத்திரங்களாகவே இருந்தனர். புளொட்டின் பெண் போராளிகள் தமது அரசியல் நடவடிக்கைகளில் எதிர் கொண்ட அதே அடக்கு முறைகளையும் சமூகத்தின் எதிர்ப்புகளையும் ஈ.ம.பு.வி.முவின் பெண்கள் பிரிவினரும் எதிர் கொண்டனர்.

ஆனால், இவ்விரு தாபனங்களினதும் அகக்கட்டமைப்புகளின் தனித்துவத் தன்மைகள் காரணமாக புளொட்டின் பெண்களிலும் விட ஈ.ம.பு.வி.மு யின் பெண்கள் பிரிவினர் பெயரளவிலாவது சில அரசியல் செயற்பாட்டுக்கான உரிமைகளை அமைப்பினுள் அனுபவிக்க முடிந்தது.

புளொட் பெண்களுக்கு இராணுவ பயிற்சி வழங்க தட்டிக் கழித்து வந்த கால கட்டங்களில் ஈ.ம.பு.வி.மு பெண்களை இந்தியாவிற்கு அனுப்பி பயிற்சி அளித்தது. ஈ.ம.பு.வி.மு யின் பி.எல்.எ. (ம.வி.படை) இல் பெண்களும் அங்கம் வகித்தனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் முதன் முதல் களப்பலியான பெண் போராளி ஈ.ம.பு.வி.மு யின் ம.வி.படை உறுப்பினரான வனிதா, (சோபனா) எனும் 16 வயதுடைய பெண்ணாவார். (காரைநகர் கடற்படை தளத்தின் மீதான தாக்குதல் முயற்சியின் போதே எதிரிப்படையால் இவரும் இவருடன் சென்ற சக போராளிகளும் கொல்லப்பட்டனர்.)

எனினும் அமைப்பினுள் அதிகாரம் மிக்கவர்களாக ஆண்களே இருந்தனர். இராணுவத்தினுள்ளும் பெண்கள் எந்தப் பொறுப்பிலும் இருக்கவில்லை. ஈ.ம.பு.வி.மு யின் மத்திய குழுவில் பெண்கள் யாரும் இடம் பெற்றிருக்கவில்லை. யாழ் வட்டாரக் குழுவில் மட்டும் அஞ்சலி, தாரிணி ஆகிய இரு பெண்கள் அங்கம் வகித்தனர். நெருப்பு தினம் என்று வருடந்தோறும் பெண்களுக்கான தினம் ஒன்று நினைவு கூரப்பட்டுவந்தது. மேலும் "பெண் விடுதலை" எனும் தலைப்பு ஆண்களுக்குமான அரசியல் வகுப்பில் ஒரு தலைப்பாகவே இடம்பெற்றது. இவ்வகுப்புகளை சாந்தி சச்சிதானந்தன் போன்றோர் நடாத்தினர்.

**ஈரோஸ், என்.எல்.எவ்.டீ. அமைப்புகளில் பெண்களின் பங்கு**

மரபான இடதுசாரிப் பாரம்பரியத்தைக் கொண்ட இவ்விரு அமைப்புகளும் தமக்கான



படிப்பகம்

பெண்கள் பிரிவைக் கொண்டிருக்கவில்லை. இந்திய மக்கள் யுத்தக் குழுக்களில் உள்ளது போன்ற வடிவத்தில் புரட்சிகர பெண்கள் அணி (RWL- Radical Women league) எனும் பெயரில் ஒரு பெண்கள் அணி என்.எல்.எவ்.டீ யில் இருந்திருக்கிறது. இதன் வெளியீடாக 1984இல் "சக்தி" என்கிற சஞ்சிகையும் கொண்டுவரப்பட்டது. ஒரு சஞ்சிகையோடு அது நின்று போனது. முதன் முதலில் பெண்ணிநிலைச் சிந்தனைகள் என்கிற பதப்பிரயோகத்துடனான கருத்தாக்கங்களும் முன்வைக்கப்பட்டதோடு, பெண்கள் அணிக்கான யாப்பு என்பனவற்றையும் அது கொண்டிருந்தது. இவ்வியக்கங்கள் இரண்டும் பெண்கள் நேரடியாக அமைப்பின் அரசியல் செற்பாட்டில் பங்கு பெற வேண்டும் எனும் நோக்கத்தை அவை கொண்டிருந்தது. ஆனால் இவை பெண்களை அடக்கப்பட்ட சமூகப் பிரிவாகவோ, தனித்துவமான அடக்குமுறைகளை எதிர்கொள்பவர்களாகவோ காணவில்லை. மிகவும் சிறிய எல்லைக்குள் செயற்பட்ட இவ் அமைப்புகளில் ஒரு சில பெண்களே அங்கம் வகித்தனர். முற்றிலும் ஆண்களினால் தலைமை தாங்கப்பட்ட இவ் அமைப்புகளில் பெண்கள் கீழ்நிலை உறுப்பினர்களாகவும் ஆதரவாளர்களாகவுமே செயற்பட முடிந்தது.

**தமிழீழ விடுதலை இயக்கத்தில் (டெலோ) பெண்களின் செயற்பாடு:**

தேசியப் போராட்டத்தில் முன்னணி வகித்த ஐந்து அமைப்புக்களில் இதுவும் ஒன்றாகும். சமூக விடுதலையைப் புறக்கணித்த வெறுமனே தேசிய விடுதலை அமைப்பாகவே இது விளங்கியது. ஏயை அமைப்புகளில் பெண்கள் செயற்படுவதினால் இவ்வமைப்பும் சில பெண்களை இணைத்துக் கொண்டது. இவர்கள் பெரும்பாலும் ஆண் அங்கத்தவர்களது குடும்பங்களைச் சார்ந்தவர்களாகும். இவர்களில் சிலர் இந்தியாவிற்குச் சென்று அங்கு டெலோ காரியாலயத்தில் செயற்பட்டு வந்தனர். தளத்தில் அங்கத்தவர்களாகவும் ஆதரவாளர் மட்டத்திலும் செயற்பட்ட பெண்கள் அமைப்பிற்கு பெரும் பங்களிப்புகள் செய்திருப்பினும் அவர்கள் அமைப்பின் அகச் செயற்பாடுகளில் பங்கு பற்ற ஊக்குவிக்கப்படவில்லை. முற்றிலும் ஒரு ஆணாதிக்க அராஜக அமைப்பாகவே டெலோ இருந்தது.

**சுதந்திரப் பறவைகள் :**

த.வி.பு அமைப்பின் பெண்கள் பிரிவே சுதந்திரப் பறவைகள். சுதந்திரப் பறவைகளின் அரசியல் பாத்திரத்தை விளங்கிக் கொள்வதென்றால் அதற்கு முன்னர் புலிகள் அமைப்பினதும் அதன் தலைமையினதும் பெண்கள் தொடர்பான அணுகுமுறையையும் அதன் தாபனக் கட்டமைப்பையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

புலிகள் அமைப்பானது அதன் தொடக்கத்திலிருந்தே தனிநபர் ஒருவரின் தலைமையால் கட்டமைக்கப்பட்டிருக்கும் அமைப்பாகும். தீர்மானமெடுக்கக் கூடிய மத்தியகுழு என்றொன்று இவ்வமைப்பிற்கில்லை. இதனால் பெயரளவில் கூட ஜனநாயகத் தன்மையற்ற ஸ்தாபனக் கட்டமைப்பையுடைய அமைப்பாக புலிகள் அமைப்பு உள்ளது. ஜனநாயகமற்ற தன்மையே-எதேச்சாதிகாரமே இவ்வமைப்பின் அகவாழ்வை நிர்ணயிப்பதாயிருப்பதுடன் மக்களுடன் அல்லது தேசத்துடனான உறவை நிர்ணயிப்பதாயுமிருக்கிறது. ஆண் தலைவரே அமைப்பின் அரசியலை மாத்திரமல்ல அதன் சிந்தனைத் திசைவழியையும் வடிவமைப்பவராய் இருக்கிறார். தலைவருக்கு அடுத்ததாக செயற்படும் இரண்டாம், மூன்றாம் மட்டத் தலைவர்களும் ஆண்களே.

www.padippakam.com

பெண்களை அமைப்பில் சேர்த்துக் கொள்வதில்லை என்னும் முடிவில் பிரபாகரன் உறுதியாகவே இருந்தார். ஏன் பெண்களை அமைப்பில் சேர்த்துக் கொள்வதில்லை எனும் மக்களின் கேள்விக்கு புலிகளின் பதில் மேற்கண்டதாகவே இருந்தது.

ஏனைய அமைப்புகள் பெண்களை உள்வாங்கிய போது புலிகள் அதனைக் கேலி செய்தனர். அவதூறுபடுத்தினர். 1983 இன் பின் கழகம், ஈ.ம.பு.வி.மு ஆகிய அமைப்புகள் மக்கள் மத்தியில் பெற்று வந்த செல்வாக்கை முறியடித்து அவ்விடத்தைத் தாம் கைப்பற்றுவதற்கான வழிமுறையாக அவ்வமைப்புகளின் பெண் அங்கத்தவர்களது பாலியல் ஒழுக்க நெறியைக் கேள்விக்குட்படுத்துவதையே தமது பிரச்சார நடவடிக்கைகளில் ஒன்றாகக் கொண்டிருந்தனர். குறிப்பாக கழகத்தை எதிர்ப்பதற்கு உமா-ஊர்மிளா காதல் விவகாரத்தை பகிரங்கக் கூட்டங்களில் கூறி வந்ததுடன், கழக அங்கத்தவர்களது பிரச்சாரக் கூட்டங்களில் புகுந்து இது பற்றிய கேள்விகளை எழுப்பி அவர்களை அவமானப்படுத்தினர். அத்துடன் கிராம மட்டங்களில் ஆண்களுடன் இணைந்து செயற்பட்டு வந்த கழக மற்றும் ஈ.ம.பு.வி.மு. பெண் அங்கத்தவர்களது பாலியல் ஒழுக்கநெறி பற்றிய கட்டுக்கதைகளையும் அவதூறுகளையும் கூட சில புலி உறுப்பினர்கள் பரப்பினர். இப்படியாக, பெண்கள் தொடர்பான மிகவும் வக்கிரத்தனமான வழிமுறைகளை எல்லாம் அரசியல் பிரச்சாரம் எனும் பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகள் கைக் கொண்டு வந்தனர்.




1985இன் பிற்பகுதிலேயே "சுதந்திரப் பறவைகள்" எனும் பெயரில் புலிகளின் பெண்கள் பிரிவு உருவாக்கப்பட்டது. அது வரை புலிகள் அமைப்பில் பெண்கள் ஆதரவாளர்களாகத் தான் இருந்தனரே தவிர உறுப்பினர்களாக இருக்கவில்லை. அதற்கு முதல் தமிழகத்தில் ஒரு சில பெண்கள் புலிகளுக்காக செயற்பட்டு வந்தனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவராக நிர்மலா நித்தியானந்தன் இருந்தார். இவரை விட பல்கலைக்கழகத்தில் உண்ணாவிரதமிருந்து புலிகளால் கட்த்திச் செல்லப்பட்ட இரு பெண்கள் (இதிலொருவர் மதிவதனி) உட்பட புலிகளின் தீவிர உறுப்பினர்களின் குடும்பங்களைச் சார்ந்த பெண்களும் இருந்தனர்.

ஆரம்பத்தில் சுதந்திரப் பறவைகளில் உறுப்பினர்களாக இணைந்து கொண்ட பெண்களும் ஒரு தீவிர ஆதரவாளரின் பாத்திரத்தைத்தான் ஆற்ற முடிந்தது. இவர்களது குறிப்பான செயற்பாடுகள்:

- பத்திரிகை விற்றல்
- உணவு வழங்கல்
- ஏனைய இயக்கங்களில் நடமாட்டங்களை அவதானித்தலும், உளவறிதலும், தகவல் கொடுப்பதும்.
- உள்ளூர் கிளினிக்குகளில் தாதிப்பயிற்சி பெறுவது.

அத்தோடு "தமிழீழ பொருளாதாரம்" எனும் பெயரில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட குடிசைக் கைத்தொழில் திட்டங்களிலும் (பனம்பொருள் உற்பத்தி, சவர்க்காரம், பற்பொடி, சந்தனக் குச்சி... ... ... ஆகியன தயாரித்து விநியோகிப்பது) இவர்கள் பங்கெடுத்த வந்தனர்.

ஒரு தீவிர கெரில்லா அமைப்பாக செயற்பட்டு வந்த புலிகளுக்கு ஆளணி



படிப்பகம்

www.padippakam.com

நெருக்கடிகள் ஏற்பட்ட வண்ணமே இருந்தன. 1986 பிற்பகுதியில் ஆளணி நெருக்கடி தீவிரமடைய, பெண்களையும் புலிகள் அங்கத்தவர்களாக்கத் தொடங்கினர். (புலிகளின் அங்கத்தவர் என்பவர் பயிற்சி பெற்று இராணுவ சீருடையும் சயனைட் குப்பியும் பெற்றுக் கொண்டவராகும்).

இந்த முடிவு பெண்கள் தொடர்பாகத் தாம் கொண்டுள்ள பிழையான சிந்தனையின் முறிவினாலும், தமது அமைப்பில் பெண்கள் இணைவது பெண்களது அரசியல் உரிமை என்னும் ஜனநாயக உணர்வின் அடிப்படையிலும் அல்லாமல், வெறுமனே ஆள்பற்றாக்குறையின் காரணமாகவே எடுக்கப்படுகிறது.

1987 ஆரம்பத்தில் நடைபெற்ற "ஒப்பரேஷன் லிபரேஷன்" நடவடிக்கை கால கட்டங்களில் பெண்கள் பயிற்சி எடுக்கத் தொடங்கி விட்டிருந்தனர். எனினும் ஆரம்பத்தில் மருத்துவம், பிரச்சாரம் போன்ற பணிகளிலேயே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.



செல்வி

வடக்கு கிழக்கு பகுதிகளில் அத்துமீறி உள்நுழைந்த இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை உத்தியோகபூர்வமாக வரவேற்கும் நிர்ப்பந்தம் புலிகளுக்கு ஏற்பட்டது. சுதுமலையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பெண்புலிப் போராளிகள் இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு குளிர்பானம் பரிமாறப் பணிக்கப்பட்டனர். இது பெண்கள் தொடர்பான புலிகளின் பிற்போக்கு மனோபாவத்தை வெளிப்படுத்தும் சம்பவமாயிருந்தது. இதில் கலந்து கொண்ட பெண்கள் இராணுவச் சீருடையணிந்து காணப்பட்டனர்.

அதன் பின்னர், யுத்த நிறுத்த காலத்தில் பெண் புலிகள் பகிரங்கமாகவே சீரடையணிந்து திரியத் தொடங்கினர். எனினும் பெண்களுக்கு தமது போர்த்திறனை வெளிப்படுத்தும் உரிய சந்தர்பப்ம் இன்னும் கிடைக்கவில்லை. ஆண்களே போரிடும் கலையில் வல்லவர்கள், வீரமானவர்கள் எனும் சமூக மனோபாவத்திற்கு இன்னும் ஈழத்தமிழ்ப் பெண்கள் சவால் விடத் தொடங்கியிருக்கவில்லை.

1987 ஒக்டோபர் 10ம் திகதி இந்திய ஆக்கிரமிப்பு படைகளுக்கெதிராக புலிகள் போர்ப் பிரகடனம் செய்து கொண்டனர். அத்தோடு ஈழத்தேசப் பெண்கள் வரலாற்றை திருத்தி எழுதத் தொடங்கினர். கோப்பாயில் முன்னேறி வந்த இந்தியப் படைகளை பெண்கள் படையணி எதிர் கொண்டது. அதில் போராளி மாலதி வீரமரணமானார். அதன் பின்னர், உக்கிரமான போர்க் களங்களில் பெண்கள் தமது போர்த் திறனை வெளிப்படுத்துவது சர்வ சாதாரணமாயிற்று.

இதே காலத்தில் இந்திய இராணுவத்தை வெளியேற்ற உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த அன்னை பூபதி நினைவிற்கொள்ள வேண்டிய முக்கியமானவர்.

**புலிகள் அமைப்பினுள் பெண்களது செயற்பாட்டு வீச்சம்:**

ஆண் தனிநபரின் தலைமையில் கட்டமைக்கப்பட்டிருக்கும் இவ்வமைப்பில் தலைமைக்கு வருவதற்கான கதவுகள் தலைவருக்கு விசுவாசமான ஆண்களுக்கே திறந்து விடப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

"சுதந்திரப் பறவைகள்" எனும் பெண்கள் பிரிவின் கட்டமைப்பிற்குள்ளேயே பெண்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். இதைக்கடந்து தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் விரிவான அமைப்பின் செயற்பாடுகளில் பங்கெடுக்கும் வாய்ப்பு பெண்களுக்கில்லை. பெண்கள், பெண்கள் பிரிவிற்கே தலைமை தாங்குகிறார்கள். ஆண்களையும் உள்ளடங்கிய கெரில்லா அணிகளுக்கல்ல. பெண்கள் பிரிவையும் ஆண்கள் பிரிவையும் உள்ளடக்கிய கெரில்லா அணிகளுக்கு ஆண்களே தலைமை தாங்குகின்றனர். பெண்களும் ஆண்களும் ஒரே களத்தில் செயற்பட்டாலும் பெண்கள் அரசியல் அர்த்தத்தில் துணைப்பாத்திரங்களே. ஏனைய அமைப்புகளில் பெண்களின் இந்நிலை வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால் புலிகள் அமைப்பில் ஆண்கள் பெண்கள் அனைவரும் சீருடை அணிந்த ஆயுதங்களுடன் இருப்பதும் இருபாலினருமே போர்க்களம் செல்வதும் காரணமாக பெண்களது துணைப்பாத்திரமாற்றும் நிலை உடனடியாகத் வெளித் தெரிவதில்லை.




எனினும் பெண்களது சிந்தனை ஆயுதப் போராட்டத்திலும் தேசவிடுதலையிலும் குவிமையம் கொண்டிருப்பதில் தலைமை மிகவும் அவதானமகவே இருக்கிறது. முதலில் தேசவிடுதலை அதன் பின்னரே பெண்விடுதலை என்னும் சிந்தனையை இவர்கள் போராளிப் பெண்களிடமும் தேசத்துப் பெண்கள் மத்தியிலும் ஆழமாகப் பதித்து வருகின்றனர். அதனால் தாம் எதிர் கொள்ளும் பெண்களது சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக சிந்தனையைச் செலுத்தவும் செயற்படவும் முடியாத நிலையில் சுதந்திரப் பறவைகள் உள்ளனர்.

சமூதாய அடக்குமுறைகளை தம்மளவில் எதிர்த்துக் கொண்டிருக்கும் பெண்கள் ஏதோ ஒரு வகையில் பெண்ணிய சிந்தனைகளின் பால் தமது சிந்தனைகளை விஸ்தரிக்கும் தேவைக்குள்ளாகின்றனர். இந்தப் பெண்ணிய சிந்தனையின் அடிநாதமே ஜனநாயகமாயிருக்க, பாசிசத்தாலும் ஆணாதிக்கத்தாலும் பிற்போக்கு சித்தாந்தங்களாலும் இறுகிய அமைப்பில் இருக்கும் பெண்கள் இரு நேரெதிரான வழிமுறைகளுக்கிடையில் தடுமாற நேர்கின்றது. எனினும் இவர்கள் தேசத்தின் நலன் என்னும் பெயரால் ஆணாதிக்க பாசிசப்போக்குகளுக்கு பணிந்து போக நேர்கிறது.

இந்நிலையில் பெண்கள் தாம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக மக்களுடனான உறவிலும் குறிப்பாக கைது செய்யப்படும் பெண்களுடனும் தமது அதிகாரத்தையும் வன்முறையையும் தயங்காது பிரயோகிக்கின்றனர். அதைத் தமது வீரத்தின் ஒரு பண்பாயும் ஆண்களுக்கு நிகராக தாமும் செயற்படுவதாயும் கருதிக் கொள்கின்றனர். பாசிசத்தின் தாங்கிகளாக பெண்களும் மாறி வருவது துயரமான நிகழ்வுப் போக்காகும்.

சுதந்திரப் பறவைகள் பெண்கள் பிரிவுக்கு பெண்கள் தொடர்பான விடயங்களை



படிப்பகம்

சுதந்திரமாக முன்னெடுப்பதற்கான அதிகாரங்கள் எதுவும் இல்லை. பெண்களது சமூக அடக்கு முறைகளுக்கான தீர்வுகளை ஆண் தலைமையின் பணிப்புரைகளுக்கேற்ப அவர்கள் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

**பெண்விடுதலை தொடர்பாக புலிகள் அமைப்பின் நிலைப்பாடும் செயற்பாடும்:**

- முதலில் தேசவிடுதலை அதன் பின்னரே மற்றதெல்லாம் என்பதில் புலிகள் மிகவும் இறுகிப் போயுள்ளனர். இதனால் சமூகத்தில் குமுறிக் கொண்டிருக்கும் பெண்களது பிரச்சினைகளில் தம்மால் இலகுவில் தீர்க்கக் கூடிய வற்றிலும் கூட கைவைப்பதில்லை.
- பாலியல் வல்லுறவில் ஈடுபடுவோருக்கு மரணதண்னை வழங்கப்பட்டாலும், பாதிக்கப்பட்ட பெண்ணை இவர்கள் அணுகுவது முற்றிலும் பூர்ஷ்வா பொலிஸ், மற்றும் நீதிமன்றங்களின் பாணியிலானதாகவே உள்ளது... ... ... திருமணத்தின் போது வாங்கப்படும் சீதனத்தின் தொகைக்கேற்ப குறிப்பிட்ட வீத கொமிசனை இயக்கத்திற்காக வாங்குகிறார்கள்.
- குடும்பத்தில் பெண்கள் மீது (மனைவி, தாய், சகோதரிகள்) வன்முறைகளில் ஈடுபடும் ஆணை முறைப்பாடு செய்யும் பட்சத்தில் சில நாட்களுக்கு தண்டனை என்னும் பெயரில் கடின உழைப்பில் ஈடுபடுத்துகின்றனர். (பங்கர் வெட்டப் போடுவர்) இது சம்பந்தப்பட்ட ஆண் மீதான பயமுறுத்தலாக மாத்திரம் குறுக்கப்பட்டு விடுகிறது. பெண்கள் மீதான வன்முறைக்கெதிரான விழிப்புணர்வு சமூக அளவில் ஏற்படுத்தப்படவில்லை.
- சமூகத்தில் பெண்களது பாத்திரத்தை இரண்டாம் பட்சமாகவே பார்க்கின்றனர். அது பெண்களது பொருளாதார நடவடிக்கையை குடும்பத்தைப் போஷிப்பதற்கானதாகப் பார்க்காது மேலதிக உழைப்பாக பார்க்கச் செய்கிறது. 1997 ஐப்பசி சுதந்திரப் பறவைகள் இதழில் பெண்களது பொருளாதார நடவடிக்கை தொடர்பாக புலிகள் முன்வைதிருக்க்கும் திட்டத்தைப் பார்த்தாலே புரியும். "ஊற்றுக் கண் பெண்கள் தோட்டம்" எனும் கணக்கின் மூலமாக பெண்களை சிறுசேமிப்பில் ஈடுபடத் தூண்டுகின்றனர். கணவனை இழந்து குடும்பச் சுமைகளைப் பொறுப்பேற்கும் பெண்களுக்கும் இத்தகைய சிறு சேமிப்பு வழிகளே முன்வைக்கப்படுகின்றன. இது இன்று குடும்பப் பொருளாதாரத்தை தனியொருவராக சுமக்கும் தேசத்தின் ஆயிரக்கணக்கான பெண்களின் குடும்பத் தலைவர் - குடும்பப் போஷகர் பாத்திரத்தை புலிகள் உணர்ந்து கொள்ளாததையே காட்டுகிறது.
- பெண்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதை புலிகள் தடை செய்துள்ளனர். தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வைத்தியசாலைகள், தனியார் கிளினிக்குகளில் மூன்றிற்கும் குறைவான குழந்தைகளைப் பிரசவித்துள்ள பெண்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்யக் கூடாதெனும் தடையை விதித்துள்ளனர். இதன் காரணம் தேசத்திற்கு சந்ததிப் பெருக்கமும் தமக்குத் தொடர்ச்சியான ஆளணியும் தேவை என்பதனாலாகும். இது பெண்ணுடலை கட்டுப்படுத்தும் செயலன்றி வேறென்ன?
- தமது பாசிசக் கரங்களால் தேசத்தின் சுதந்திர உணர்வுடைய பெண்களை நசுக்குகின்றனர். ரஜனி திராணகம, செல்வநிதி தியாகராஜா (செல்வி) போன்றோர் பெண்ணியப் பார்வையும், ஜனநாயக உணர்வும் கொண்ட பெண்களாவர். தமது பாசிசப் போக்கிற்கு இவர்கள் சவாலாய் இருப்பதை ஜீரணித்துக் கொள்ள முடியாத

www.padippakam.com

புலிகள் இவர்களைப் படுகொலை செய்தனர். சுதந்திரமான சிந்தனையுடைய ஆளுமை நிரம்பிய பெண்களை சுயாதீனமாக வாழ புலிகள் அனுமதிப்பதில்லை. புலிகளைப் பொறுத்தவரையில், இத்தகையப் பெண்களை தமது செயற்பாட்டிற்கு இடைஞ்சலானவர்களாகவே காண்கின்றனர்.

- பால் நிலை விழிப்புணர்வு (Gender Awareness) பற்றிய அக்கறையற்ற புலிகள் ஈழத்தமிழரிடையே நிலவும்ஆணாதிக்க நிலப்பிரபுத்துவ கலாசாரத்தையே, தேசியக் கலாசாரமாக கட்டமைக்கின்றனர். இதனூடாக தமது பங்கிற்கு பால் நிலை வேறுபாட்டை (Gender Differenion) சமூகத்தில் மேலும் வலுப்படுத்துகின்றனர். அவர்களது கலை நிகழ்ச்சிகளிலும், பாடல்களிலும் இதைக் காணக்கூடியதாய் உள்ளது. ராதிகா குமாரசாமி அவர்களுக்கு பெண்போராளிகளும். புலிகள் சார்ந்த ஆண்களும் அளித்த பதில்களிலிருந்து (இவை சரிநிகர் பத்திரிகையில் வெளிவந்தன) அவர்கள் பெண்மை எனும் கருத்தாக்கத்தையும் அதனடிப்படையிலமைந்த பெண்களது வாழ்வியல் முறையையும் கேள்விக்குட்படுத்தாது அப்படியே ஏற்றுக் கொண்டிருப்பது தெரிகிறது.
- ஆணாதிக்கத்தின் சின்னங்களான தாலி, குங்குமப் பொட்டு போன்றவற்றை கேள்விக்குட்படுத்தாது அதைத் தாமும் கடைபிடித்து வருகின்றனர். இதை தமிழ்க் கலாசாரமாகக் காண்கின்றனர்.

பெண்விடுதலை எனும் கோஷத்தைத் தவிர சாராம்சத்தில் பெண்விடுதலை தொடர்பான எந்த விதமான அடிப்படை விருப்பார்வமற்ற ஒரு அமைப்பே தமிழீழ விடுதலைப் புலிகள். இவர்கள் "பெண்விடுதலை" எனும் கோஷத்தை முன்வைத்திருப்பது பெண்களை அணிதிரட்டவும், போராளிப் பெண்களை திருப்திப்படுத்தவுமான தந்திரோபாய நோக்குடனேயாகும். புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் நிலவும் ஆணாதிக்கக் கட்டமைப்பில் சிறு சலனத்தையும் கூட ஏற்படுத்தப் போவதில்லை. சமூகத்தில் ஆட்சி செலுத்தும் யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சுரண்டும் வர்க்கப் பிரிவினரின் நலன்களைக் கட்டிக்காத்து அப்பிரிவினரின் பிரதிநிதியாக அவர்களுக்கு விசுவாசமாக இருப்பதும், அப்பிரிவினரைப் பகைத்துக் கொள்ளாதிருப்பதுமே புலிகளின் அடிப்படைக் கொள்கையாயுள்ளது.

**பெண்போராளிகளும் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கமும்:**

ஈழத்தமிழ் சமூகமானது நிலப்பிரபுத்துவ- ஆணாதிக்க சிந்தனையால் இறுகிய ஒரு சமூகமாகும். இத்தகைய ஒரு சமூக அமைப்பினுள் இளம் பெண்கள் வீடுகளை விட்டு வெளியேறுவதும், இராணுவப்பயிற்சி பெற்று போர்க்களம் செல்வதும், காடுகளில் அலைந்து திரிந்து தலைமறைவு வாழ்வை மேற்கொள்வதும் அச்சமூகம் பெண்கள் தொடர்பாக கட்டமைத்திருக்கும் சமூக உளவியலுக்கு நேரெதிரானதாய் உள்ளது.

ஈழத்தமிழ் சமூகத்தில் உருவாகியிருக்கும் இப்புதிய போக்கானது சமூகத்தில் சில அதிர்வுகளை ஏற்படுத்தியே உள்ளது.

- ஆயுதங்களுடன் பெண்கள் நடமாடும் சமூகத்தில் பெண்களை தெருவில் ஆண்கள்அவ்வளவு எளிதில் இம்சிக்க முடியாது. பெண் புலிகளது நடமாட்டம், அவர்கள் வழங்கும் தண்டனைகள் காரணமாக பெண்கள் மீதான பாலியல் இம்சைகள் ஓரளவு குறைந்துள்ளது.
- சமூகப் பிற்போக்குத் தனங்களை போர்ராளிப் பெண்கள் தம்மளவில் குறிப்பிட்ட



படிப்பகம்

அளவாவது இனங்காண்பதுடன் அவற்றை எதிர்க்கவும் செய்கின்றனர். (உ-ம்: சீதனம்) இதனால் இப் பிற்போக்கு நடவடிக்கைகள் பற்றிய கேள்வி ஒன்று ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடமாவது ஏற்பட்டுள்ளது.

- பெண் உடல் பலவீனமானது எனும் ஐதீகத்தை இவர்கள் முறியடித்துள்ளனர்.
- பெண்கள் துணிச்சலும் போர்த் திறனும் மிக்கவர்கள் என நிரூபித்துள்ளனர்.
- ஆண்களுக்கு சளைக்காத சிறந்த போர் வீராங்கனைகள் என்பதை நிரூபித்துள்ளனர்.
- உலகம் வியக்கும் வண்ணம் அனைத்து படைப்பிரிவுகளிலும் தங்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.
- சமூகத்தில் நிலவும் தாய்மை, பெண்ணழகு, பெண்மைக் குணாம்சங்கள் போன்ற சித்தாந்தங்களுக்கெல்லாம் போராளிப் பெண்கள் தம்மளவில் சவால் விடுவதுடன் அவற்றை நடைமுறையில் எதிர்த்துக் கொண்டு வாழவும் செய்கின்றனர்.
- தமது வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொண்டவர்கள் என்னும் வகையில் இவர்கள் சுயாதீனமானவர்களும், சுயஆளுமை உடையவர்களுமாவர்.

இவ்வாறு நடை முறையில் ஆணாதிக்கத்திற்கு சவால்விடும் சுதந்திரப் பறவைகள், பெண்கள் மீதான சமூக அடக்குமுறைகள் தொடர்பாக முழுமையான விழிப்புணர்வு பெறவில்லை. எனினும் இவர்கள் இந்த அடக்குமுறைகள் பெரும்பாலானவற்றை தம்மளவில் முறித்துக் கொண்டு விடுதலை பெற்றவர்களாய் தற்போது வாழ்கின்றனர்.

பெண்ணடக்குமுறை தொடர்பாக போதிய விழிப்புணர்வை பெறாததால் இவர்களால் பெண் விடுதலைக்கான திட்டமிட்ட போராட்டங்களை முன்னெடுக்க முடியாது. அத்தோடு இன்றைய போராட்ட வாழ்க்கையில் இருந்து இவர்கள் மீள சாதாரண சமூக வாழ்க்கைக்கு திரும்புகையில் மீளவும் இவர்கள் சமூக அடக்கு முறைகளுக்கு உள்ளாக நேரும். எனினும், சாதாரண சமூக வாழ்வில் முகம் கொடுக்க நேரும் அடக்குமுறைகளை தாம் ஏற்கனவே சுவீகரித்துக் கொண்டு இருக்கும் ஆளுமைப் பண்புகளின் காரணமாக தனிநபர்களாக இவர்கள் எதிர்த்துக் கொண்டு வாழவும் முடியும். ஆனாலும் சமூக அளவிலான பெண் விடுதலைக்கான பிரக்ஞை பூர்வமான அடித்தளத்தை இட இவர்களால் முடியாது. எனினும் ஆணாதிக்கத்தை தமது அசைவுகளினால் ஒவ்வொரு கணமும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கி வரும் இவர்களை பிரக்ஞைபூர்வமற்ற பெண்ணியவாதிகள் என குறிப்பிடுவது பொருத்தமாகும்.

நாம் இன்னொன்றை குறிப்பாக அவதானத்திற்கொள்ள வேண்டியுள்ளது. மொத்த அரசியலில் பெண்கள், மற்றும் பெண்களின் அரசியல், இடதுசாரி இயக்கங்கள் முதல், வலதுசாரி கட்சிகள் ஈராக ஆயதப் போராட்ட அமைப்புகள் வரை பெண்களின் நலன்களை கையாண்டு வந்திருக்கிற விதங்கள் என்பது ஒன்று. அடுத்தது பெண்கள் இந்த அரசியல் நிறுவனங்களில் வகித்த பாத்திரம், செயற்பாடு என்பது. இந்த அனைத்து தளங்களிலும் பெண்கள் பெண்களுக்கான வேலைத்திட்டங்களை தனித்து எடுத்தார்கள் என்றில்லை. அந்த காலகட்டத்தேய அரசியல் தேவைகளின் நிமித்தம் பெண்களின் அரசியல் தெரிவாக அந்த அந்த அரசியல் சித்தாந்தங்கள் உள்வாங்கப்படுகின்றன. அல்லது உள்வாங்க வைக்கப்படுகின்றன. காலனித்துவ காலத்தில் இடதுசாரி இயக்கங்கள் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்தை முன்நிபந்தனையாக கொண்டிருந்தார்கள். சுதந்திரத்திற்குப் பின்னர் கட்சி முறைமைக்குள்ளமைந்த தேர்தல் அரசியலில்

ஈடுபட்டார்கள். இதன் போது கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு கீழ் தங்களது அரசியல் பங்களிப்பை வழங்கத் தொடங்குகிறார்கள். இன்று இனத்துவ அரசியல் என்பது வளர்ந்து தவிர்க்கமுடியாதபடி அரசியற் செயற்பாடுகளின் வடிவங்களையும், பண்பையும் பன்முகப்படுத்தியிருக்கிறது. அந்தந்த அடிப்படை அரசியல் தேவைகளின் மீது பெண்களின் அரசியல் தெரிவும் அமைந்து விடுகிறது. இவ்வாறான நிலைமைகளையும் கவனத்திற் கொண்டே பெண்களின் அரசியலையும், அரசியலில் பெண்களையும் நாம் மதிப்பிட வேண்டியிருக்கிறது.

www.padippakam.com

பின்னிணைப்புகளாக...

# மகளிர் தினமும் மகளிர் பிரதிநிதித்துவமும்

(1997 - மார்ச் -06,சரிநிகர்)

வழமைபோல இம்முறையும் மார்ச் 8ம் திகதியன்று "சர்வதேச பெண்கள் தினம்" கொண்டாடப்படுகிறது. இம்முறையும் பெண்கள் தினத்துக்கான ஆயத்தங்களில் பெண்கள் அமைப்புகள் மும்முமரமாக ஈடுபட்டு வருகின்றன. அவ்வாறான அமைப்புகளில் அரச சார்பற்ற அமைப்புகள், கட்சிகள் சார்ந்த அமைப்புகள், இரண்டையும் சாராத சுதந்திர அமைப்புகள் என்பவை முக்கியமானவை. இவற்றில் கட்சி சார்ந்த பெண்கள் அமைப்புகள் அல்லது கட்சிகளுக்குள் கிளையாக இயங்குகின்ற பெண்கள் அணி என்பவை பெரும்பாலும் இம்முறை சர்வதேச பெண்கள் தின நினைவு கூரலை கைவிட்டு விட்டன. காரணம் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஆயத்தங்களின் முன்னிலையில் பெண்களின் பிரச்சினை இரண்டாம் பட்சமானதாக அல்லது தேவையற்றதாகப் போய் விட்டுள்ளது போலும்.

பொதுவாக பெண்கள் அமைப்புகளைப் பொறுத்தவரையில் உலகம் முழுவதும் பெண்களின் எழுச்சியையும், பலத்தையும், பெண்களின் கோரிக்கைகளையும் உன்னிப்பாக கவனிக்கும் இந்நாளை கூடிய பட்சம் பயன்படுத்த விளைவதே இயல்பானது.

ஆனால் இங்குள்ள அமைப்புகளுக்கு இது முக்கியமாகப் படவில்லை. அதைவிட தேர்தல் அவர்களுக்கு முக்கியமாகி விட்டது.

இந்த கட்சி சார்ந்த அமைப்புகள் போலவே பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்களும் இம்முறை நேரடியாகவோ மறைமுகமாகவோ கட்சிகளுக்கு ஆதரவளித்து இயங்கும் வேலைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளன. பெரும்பாலும் பொதுஜன ஐக்கிய முன்னணியை வெல்லச் செய்வதே பெருமளவான அரசசார்பற்ற பெண்கள் அமைப்புகளின் நோக்கமாக இருப்பதைக் காண முடிகிறது. இதில் முக்கியமாக அவதானிக்க வேண்டியது என்னவென்றால் அவ்வாறான பெண்கள் அமைப்புகள் எவ்விதத்திலும் பெண்களின் கோரிக்கைகளை முதன் மைப்பத்திய நிபந்தனைகள் எதுவுமில் லாமல் ஆதரவளிப்பதே.

பொ.ஐ.மு.வே ஐ.தேகவுக்கு சரியான மாற்று என்றும் ஐ.தேகவோடு ஒப்பிடுகையில் ஜனநாயகம், போர், இனப்பிரச்சினை, மனித உரிமை மீறல் என்பவை முன்னரை விட நல்ல நிலையில் அணுகப்படுவதாகவும், ஓரளவு சாத்தியமான அரசியல் தீர்வு முன்மொழியப்பட்டிருப்பதாகவும் இவ்வமைப்புகளைச் சார்ந்தவர்கள் பகிரங்கமாக கூறித் திரிவதைக் காணமுடிகிறது.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்தாவது இவ்வமைப்புகள்



படிப்பகம்

www.padippakam.com

அவதானத்துடன் அணுகுகின்றனவா என்றால் அதுவும் இல்லை.

குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் 40 வீதத்தினர், 16-35க்கு இடைப்பட்ட இளைஞர்களாக இருக்க வேண்டும் எனும் விதி தேர்தல் ஆணைக்குழுவினரால் கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்விதி மீறப்பட்ட பல பட்டியல்கள் இம்முறை நிராகரிக்கவும் பட்டன. இவ்வாறான "இளைஞர்" பிரதிநிதித்து வத்தைப் பெற பிரயத்தனம் செய்த ஆணாதிக்க ஆட்சியதிகார கட்டமைப்பு பெண்கள் பிரதிநிதித்துவம் குறித்து சிறிதும் சட்டை செய்யவே இல்லை. இதில் ஆச்சரியமும், அனுதாபமும் கொள்ள வேண்டிய விடயமென்னவென்றால் இது குறித்து எந்தவொரு பெண்கள் அமைப்புமே கவனத்தில் கொள்ளாதது தான்.

இந்த 40 வீத இளைஞர் பிரதிநிதித்துவத் துக்கான பின்னணியை நோக்குவது இங்கு முக்கியமானது.

1987-1989 காலப்பகுதியில் நடந்த அரச பயங்கரவாதத்தை எவரும் இலகுவில் மறக்கமாட்டார்கள். அந்தக் காலப்பகுதியில் ஜே.வி.பியினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பிரேமதாசவின் படையினரால் கொன்றொழிக்கப் பட்டார்கள். அவ்வாறு கொல்லப்பட்ட போது சர்வதேச ரீதியில் பிரேமதாச அரசாங்கம் சாடப்பட்டது, கண்டிக்கப்பட்டது. இதை மூடி மறைப்பதற்காகவும் இளைஞர் பிரச்சினைக ளைத் தீர்க்க வந்தவராகவும் காட்டிக் கொள்ள வேண்டிய தேவை பிரேமதாசவுக்கு இருந்தது. அதன் விளைவாக 1989இல், "இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று பிரேமதாசவால் உருவாக்கப்பட்டது. அவ் ஆணைக் குழுவில் இருந்த ஐவரில் ஒருவர் இன்றைய நீதித்துறை அமைச்சர் (அன்றைய கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர்.) ஜீ.எல்.பீரிஸ், இன்னொருவர் ஐ.நா.சபையில் பெண்கள் மீதான வன்முறை பற்றிய அறிக்கையாளராக கடமையாற்றும் ராதிகா குமாரசுவாமி.

அவ்வாணைக்குழு விசாரணையின் முடிவில் பல பிரேரணைகள் முன்வைக் கப்பட்டன. அப்பிரேரணைகளில் ஒன்று தான் அரசியலில் இளைஞர்களுக்கு 40 வீத பிரதிநிதித்துவம் என்பது.

அவ் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகளை முழுமையாகப் பார்க்கும் போது அது இளைஞர்களை கட்டிப் போடுவது எப்படி? இளைஞர்களின் புரட்சிகர குணாம்சங்களை வளரவிடாமல் தடுப்பது எப்படி? என்பது போன்ற இலக்கைக் கொண்டே தயாரிக்கப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. மற்றொரு அம்சம், அது "இளைஞர்" என கருதிக் கொண்டது ஆண்களை மட்டுமே என்பது. இளைஞர்கள் சம்பந்தமாக ஆராயப் பட்ட அவ் ஆணைக்குழு அறிக்கையில் எந்த அத்தியாயமும் "இளம்" பெண்கள் பற்றி ஆராயப்படாததும் விதிவிலக்காகவே பெண்களை சந்தித்து விசாரி த்துள்ளனர் என்பதுவும் முக்கியமானது. அப்படிப்பட்ட ஒரு ஆணைக்குழுவால் "இளைஞன்" களுக்கு மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தில் விதிகள் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது.

அது மட்டுமன்றி அவ் ஆணைக்குழுவில் பெண்நிலைவாதி என்று உலகம் முழுவதும் அறியப்பட்ட ஒருவர் இருந்தும் இவ்விடயம் குறித்து அக்கறை செலுத்தப்படவில்லையென்றால் அதை சட்டமாக அமுலுக்கு கொண்டு வந்த ஆணாதிக்க சட்ட அமுலாக்க கட்டமைப்பை பற்றி மட்டும் கூறவா வேண்டும்?

"பிரதிநிதித்துவம்" எனும் போது சனத்தொகையில் சரிபாதியாக இருக்கின்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமான பிரநிதிநிதித்துவம் இருக்கக் கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும். வெறுமனே அரசியலமைப்பில் "சட்டத்துக்கு முன்



படிப்பகம்

www.padippakam.com

அனைவரும் சமம்' எனும் போலி வாசகம் மாத்திரம் போதுமானதல்ல. இன்னமும் சர்வதேச ரீதியில் பெண்களின் பாராளுமன்ற பிரதிநித்துவம் 5 சதவீதத்தைக் கூட தாண்டவில்லை என்பதே யதார்த்த நிலை. இந்நிலையில் குறைவிருத்தியுடைய (குறைவிருத்திக்குள்ளாக்கப்பட்ட) பெண்கள் பிரதிநிதித்துவத்தை ஆகக் குறைந்த பட்சமேனும் மேலே கொண்டு வருவதெனில் குறிப்பிட்ட காலத்துக்கு விசேட கவனிப்பு செலுத்தப்பட்டே ஆக வேண்டும். அப்படியாக விசேட கவனிப்பு செலுத்துவதாகவிருந்தால் குறைந்த பட்சம் அக்குறிப்பிட்ட காலத்துக்கு வேட்பாளர் பட்டியலில் 50 வீதத்துக்கும் அதிகமான வீதத்தை பெண்களுக்கு வழங்குவது அத்தியாவசியமானது. ஆனால் இங்கு 3 வீதத்தைக் கூடக் காணவில்லை.

இதன் அர்த்தம் வேட்பாளர் பட்டியலில் பெண்களின் எண்ணிக்கையை கூட்டிவிட்டால் பெண்களின் பிரதிநிதித்துவம் கூடிவிடும் என்பதல்ல. எப்படியோ வாக்காளப் பெண்கள் கூட ஆண்களை நோக்கியே தமது வாக்குகளையிடுவார்கள் என்பதும் வேட்பாளப் பெண்களும் தமது வெற்றி யின் பின் பெண்களை பிரதிநித்துவப்படுத்தப் போவதில்லை என்பதுவும் உண்மை. ஆனால் இந்த முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்புமுறை மாற்றமுறுவது வரையிலான காலம் வரை பெண்களது அரசியல் ஈடுபாட்டை நிர்ப்பந்திக்க கணிசமான அளவுக்கு இது உதவுமென்று நம்பலாம்.

இந்தியாவில் கூட பாராளுமன்ற த்தில் 30 வீத பெண் பிரதிநிதித்துவ கோரிக்கை நாடு முழுவதும் மிகவும் துடிப்பாக எழுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நமக்கு சில கேள்விகள் எழுகின்றன.

இன்னமும் பெண்களின் பாராளுமன்ற பிரதிநிதிந்துவம் குறித்த அசமத்துவ நிலை குறித்து அரச மட்டத்திலேயோ அரசு சாராமட்டத்திலேயோ கேள்வி எழாததன் காரணம் என்ன? ஏன் ஒரு முறையேனும் பெண்கள் அமைப்பினரால் கூட குரல் எழுப்பப்படவில்லை? 1987-1989இல் நடந்த இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் தான் இன்று 40 வீத இளைஞர் பிரதிநிதித்துவம் வழங்கப் படக் காரணம் என்றால் பெண்கள் கூட தமது உரிமைகளுக்காக அப்படியொரு தனித்த போராட்டத்தை முன்னெடுத்தால் தான் கவனத்தில் கொள்ளப்படுமோ?

இக்கேள்விகள் நியாயமான முறையில் பரிசீலிக்கப்படாவிட்டால் அப்படியொரு நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



படிப்பகம்

# பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவம்:

## சில கேள்விகள்...

(1998 ஜனவரி 18 சரிநிகர்)

"பொ.ஐ.மு. ஆட்சியமைவதற்கு பெண்களின் பங்களிப்பு காத்திரமானது.

இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இரு முக்கிய பதவிகளையும் பெண்களே வகிக்கின்றார்கள். உலகிலேயே இலங்கையில் மட்டுமே இப்படியான ஒரு நிலையுள்ளது...

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 50 வருடங்களாகப் போகின்ற இந்தத் தருணத்தில் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5.3 வீதமாகவே உள்ளது. எமது நாட்டின் பெண்களுக்கு உள்ள குடும்பப் பொறுப்புக்கள் காரணமாக இது அதிகரிக்காமலிருந்தாலும் குறைந்த பட்சம் 25 வீதமாவது பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கமுடியுமாயிருந்தால் நல்லது.""

கடந்த 10ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் நடந்த வரவு செலவுத்திட்ட - மகளிர் விவகாரத் துறைக்கு நிதி ஒதுக்குவது தொடர்பான - விவாதத்தின் போது மகளிர் விவகார அமைச்சர் ஹேமா ரத்னாயக்க ஆற்றிய உரையிலேயே மேற்படி தெரிவித்தார்.

### பத்திரிகைகளின் செய்தியிடல்

இவ்வுரையானது அடுத்த நாள் பத்திரிகைகளில் வெளியானது. சிங்களப் பத்திரிகைகளில், திவய்ன, லங்காதீப ஆகியவற்றில் வெளியான பாராளுமன்ற உரைகளில் ஏனைய ஆண் உறுப்பினர்களின் உரைகள் வெளியாகின. பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் கூட வேறு விடயங்கள் குறித்த அம்சங்கள் வெளியாகினவே ஒழிய இவ்விடயம் குறித்தவை வெளியாகியிருக்கவில்லை. தினமின (அரச கட்டுப்பாட்டுக்குள்ளிருப்பது) மாத்திரம் இதனைப் பிரசுரித்திருந்தது. அதற்குக் காரணம் சொல்லப்பட்ட விடயம் பற்றியதற்காக அல்ல. சொல்லிய நபர் ஆளும் அரசாங்கத்தின் அமைச்சர் என்பதற்காகவே.

தமிழ்ப் பத்திரிகைகளிலோ இது குறித்த உரை எங்கும் வெளியாகியிருக்கவில்லை. அதற்கடுத்த நாள் வீரகேசரி பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் இது குறித்த குறிப்பு வெளியாகியிருந்தது.

ஆணாதிக்க செய்தி நிறுவனங்கள் அனைத்துமே இச்செய்தியின் முக்கியத்துவத்தை உணராததில் ஆச்சரியமென்ன இருக்க முடியும்?

www.padippakam.com

இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செய்தி தான் என்ற போதும் கூறப்பட்ட விடயம் குறித்து அமைச்சரின் அதே வாதத்தை அப்படியே ஏற்றுக்கொள்வது இன்னொரு பிரச்சினையாகும்.

காரணம் இந்த 25 வீதம் குறித்தது தான். இந்தக் கோரிக்கையானது ஆணாதிக்க அதிகாரக் கட்டமைப்பைப் பொறுத்தளவில் எதிர்ப்புகளின்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் சனத்தொகையில் சரிபாதி (அதைவிடவும் கூட) பெண்கள் உள்ள நிலையில் அதே அளவு வீதாசாரத்தைக் கூடக் கோரப்படாததானது ஆணாதிக்கத்துக்கு வெற்றியேயன்றி வேறென்ன?

என்ற போதும் 25 வீதக்கோரிக்கை குறித்து கூட, இது வரை அரச தரப்பிலிருந்து சம்மதம் வரவில்லை. அது குறித்து பரிசீலிப்பதாகவே கூறியிருக்கிறது. அக்கோரிக்கையை அதிகாரத்தரப்பு ஏற்றுக் கொண்டதாகக் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை நாம் இங்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்தக் கோரிக்கை அதிகாரத் தரப்பிலிருந்து, அதுவும் மகளிர் விவகார அமைச்சரிடமிருந்து வெளிவந்துள்ளமை எல்லோரையும் கூர்ந்து கவனிக்கச் செய்திருக்கிறது என்பது உண்மையே. ஆனால் இக் கோரிக்கையின் அற்பத்தனத்தை அடையாளம் காண எத்தனை பேரின் ஆதிக்க கருத்தியல் இடம் கொடுக்கும்?

அமைச்சர் ஹேமா, சரிபாதி ஜனத்தொகையைக் கொண்ட பெண்களுக்கு 25 வீத பிரதிநிதித்துவத்தை மட்டுமே கோருவது மட்டுமல்லாமல் குடும்ப அமைப்புக்குள் பெண்களுக்குள்ள மரபான பொறுப்புக்களை மறைமுகமாக நியாயப்படுத்துவதையும் கண்டு கொள்ளாமலிருக்க இயலுமா? அவர் சார்ந்த அதிகாரத்துவம் மிக்க கட்சியினதும், அரசாங்கத்தினதும், அரசினதும் கூடிய பட்ச எல்லை இவ்வளவாகத்தான் இருக்க முடியும்.

## அற்பக் கோரிக்கை?

அண்மையில் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக "increasing political participation of women through a reservation system" எனும் வேலைத்திட்டமொன்றை உருவாக்கியிருக்கிறார்கள். அதன்படி அரசாங்க மட்டங்களில், பெண்களுக்கு மூன்றில் ஒரு வீத பிரதிதித்துவக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். 15 வருடங்களுக்கு இது செல்லுபடியாக வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

பல அரச சார்பற்ற நிறுவனங்களும் இக்கோரிக்கையை முன்கொண்டு செல்ல அணிதிரண்டு வருவதாகத் தெரிகிறது. WERC யின் தலைவி செல்வி திருச்சந்திரன் இது குறித்து எமக்கு தெரிவிக்கையில், "இது குறித்து அரசியற் கட்சிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான முயற்சியாக லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, த.வி.கூட்டணி, ஐ.தே.க. என்பவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றோம். அவர்களைப் பொறுத்தளவில் இக்கோரிக்கையில் எதுவித ஆட்சேபமுமில்லை." என்றார். அற்பக் கோரிக்கைக்கு ஆட்சேபமென்ன இருக்க முடியும். (பிரதான கட்சிகளும் கூட இக்கோரிக்கையை அங்கீகரித்துள்ளன என்றால் அதன் அர்த்தம் வாக்கு வங்கிகளை நிரப்பிக் கொள்ள இதனை உச்ச அளவில் பயன்படுத்தலாம் என்ற கற்பனையினாலேயொழிய, இக்கோரிக்கையின் அவசியத்தை உணர்ந்து விட்டார்கள் என்றோ தமது ஆணாதிக்க நிலைப்பாட்டிலிருந்து மீண்டு விட்டார்கள் என்பதாலோ அல்ல) என்ற



படிப்பகம்

www.padippakam.com

போதும் இக்கோரிக்கையும் கூட போதுமான கோரிக்கையாக இருக்க முடியாது.

இக்கோரிக்கை இலங்கையில் எழுவதற்கு பின்புலமாக இருந்தது, இந்தியாவிலும் மூன்றில் ஒரு வீத பெண் பிரதிநிதித்துவ கோரிக்கை எழுப்பப்பட்டு வருவதே. இக்கோரிக்கையின் பரப்பு, அது தரப்போகும் நீண்டகால பிரதிபலன், அதன் போதுமான தன்மை குறித்து எந்த வித பரிசீலனையும் இன்றி அதே கோரிக்கையை இலங்கையிலும் பிரதிபண்ணுவதாகவே தெரிகிறது. சரியான புரட்சிகர மாற்று சக்தியேதுமில்லாத நிலையில் பெண்களின் கோரிக்கையினை முன்கொண்டு செல்ல பெண்களுக்கென்று கட்சியொன்று இல்லாததன் குறை இங்கு தான் தெரிகிறது.

"25வீதம்", "மூன்றில் ஒரு வீதம்" போன்ற கோரிக்கைகள் முன்வைப்பதன் மூலம் உண்மையில் முன் வைக்கப்பட வேண்டிய கோரிக்கையை அற்பத்தனமான கோரிக்கை-யாக்கி, சிறு தேவையாக குறுக்கி விடும் ஒன்றாகவே இதனைக் காண முடிகிறது. இது வரை அரசு சார்பற்ற நிறுவனங்கள் சகல துறைகளிலும் செய்து வருவதும் இதனைத் தான். பிரதான அரசியல் கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்ற போதெல்லாம் அதற்குள் வலிந்து போய் தலையிட்டு, தலைமை கொடுத்து சிறு கோரிக்கையாக குறுக்கி விடும் போக்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கே உரியன. அப்படியான ஒரு போக்காகவே இதனையும் காண முடியும். இவ்வமைப்புகள் அவ்வாறான கோரிக்கைகளில் கூட உறுதியாக தொடர்ச்சியாக நிற்கும் என்றோ, மிகவும் துடிப்புடன் போராடும் என்றோ நம்பிக்கை வைக்க முடியாது.

இவ்வமைப்பு "மூன்றில் ஒரு வீத கோரிக்கை"யை எழுப்பியது ஒரு புறமிருக்க அக்கோரிக்கை 15 வருடங்களுக்கு செல்லுபடியாகும்படி செய்ய வேண்டும் என்று கூறியிருப்பதானது, மேலும் அதன் தூரநோக்கற்ற, துரோகத்தனமான கோரிக்கையையே வெளிப்படுத்துகிறது.

ஏ

ன் தேவை?

-சனத்தொகையில் சரிபாதியையுடைய பெண்களுக்கு அதே அளவிலல்லவா பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். முதலாளித்துவ ஜனநாயகம் கூட விகிதாசாரத்தை மறுக்காதே. இது சமூகத்திலுள்ள சிறுபான்மையோர் சம்பந்தமான பிரச்சனையல்லவே, சம விகிதாசாரத்தையுடையவர்கள் அதிகாரமற்றிருப்பது, மற்றும் இன்னொரு தரப்பால் அடக்குமுறைக்குள்ளாகிக் கொண்டிருப்பது பற்றிய பிரச்சினை. சிறுபான்மையினர் விடயத்தில் கூட கொள்கையளவில் இவ்விகிதாசாரத்தை ஏற்றுக் கொள்ள முடிந்த அதிகாரத் தரப்புக்கு பெண்கள் விடயத்தில் ஏன் இந்த விகிதாசாரத்தைக் கடைப்பிடிக்க முடியாது?

-தேர்தல்களின் போது வேட்பாளர் பட்டியலில் 35 வீதம் இளைஞர்களை (16க்கும் 35க்கும் இடையில்) உட்படுத்துவது குறித்த விதி பிரேமதாச காலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இளைஞர்கள் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசாகவே இது அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வாணைக்குழு "இளைஞன்"களை மட்டுமே கருத்திற் கொண்டு இப் பிரேரணைகளை முன் வைத்திருந்தது. ஜனத்தொகையில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினரை மட்டுமேயுடைய தரப்பினருக்கு இவ்வாறான பிரதிநிதித்துவ ஒதுக்கீடு வழங்க முடியுமானால் பெண்களுக்கு வழங்குவதில் உள்ள பிரச்சினை தான் என்ன? மேலும் மேற்படி இளைஞர் ஒதுக்கீட்டினை "இளம்" பெண்கள் அனுபவிக்க



படிப்பகம்

முடியாமலிக்கும் போக்கையும் அவதானிக்க வேண்டும்.

-உண்மையில் பெண்களின் அரசியல் ஈடுபாட்டையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதாயின் இக்கோரிக்கை போதுமானதாக இருக்க முடியாது. சமூகத்தில் எப்போதும் குறை விருத்தியையுடைய (குறை விருத்திக்குள்ளாக்கப்பட்ட) தரப்பினரை ஆகக் குறைந்த பட்சமேனும் மேலே கொண்டு வருவதாயிருந்தால் குறிப்பிட்ட காலத்துக்கு விசேட கவனிப்பு செலுத்தப்பட்டே ஆக வேண்டும். உதாரணத்திற்கு அவர்களின் உண்மையான வீதாசாரம் 50 வீதமாக இருக்கிறதென்றால் (குறிப்பிட்ட பத்தாண்டோ பதினைந்தாண்டோ விசேட திட்டத்தின் மூலம்) அதனை விட மேலதிகமாக அவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதன் முலமே உயர்த்தலாம். இதனை அரசியல் கோரிக்கையாக முன்வைப்பதாயிருந்தால் இதனடிப்படையிலேயே அமைய வேண்டும். அதை விட்டு 15 ஆண்டுக்கு மூன்றில் ஒரு வீதத்தைக் கோருவதோ, எந்த விதமான பரீசிலிப்புமின்றி இன்னொரு நாட்டை பிரதிபண்ணுவதோ அல்லது முக்கியத்துவம் வாய்ந்த அரசியற் கோரிக்கையை சொற்ப கோரிக்கையாக எழுப்புவதோ அக்கோரிக்கையை செயலிழக்கவே செய்யும்.

-இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட காலம் தொடக்கம் இது வரை பெண்களின் பிரதிநிதித்துவம் 5வீதத்தைக் கூடத் தாண்டவில்லை. அமைச்சரவையிலும் கூட பெரும்பாலும் "மகளிர் அமைச்சு " தவிர்ந்த வேறு அமைச்சுகள் அவ்வளவாக வழங்கப்பட்டதில்லை. பெண்களுக்கு அமைச்சுக்கள் வழங்கப்படுவது கூட 9 வீதத்தை இது வரை தாண்டவில்லை. சமூக அரசியல் நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடுவதற்கும் அரசியல் ரீதியில் அவற்றில் தலையீடு செய்வதற்கும் பெண்களுக்கு உள்ள உரிமை இதுவரை காலம் மட்டுப்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. குறைந்த பட்சம் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரச்சினைகள் குறித்த விடயங்களில் கூட ஆண்கள் பெண்களுக்கு எதிரான முடிவுகளை எடுத்து வந்த வேளைகளில் அதனை எதிர்க்க பாராளுமன்றத்தில் பலமில்லாதவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இதற்கு சிறந்த ஒரு உதாரணம் 1995ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20, 21 ஆகிய திகதிகளில் "கருக்கலைப்பு" தொடர்பான சட்ட திருத்தங்கள் குறித்த பாராளுமன்ற விவாதங்களின் போது ஆண் பிரதிநிதிகள் முன் வைத்த கருத்துக்களும் அதன் மோசமான முடிவுகளும்.

உருப்படியான புரட்சிகர சமூக மாற்றம் இடம்பெறாத சூழ்நிலையில் இக்கோரிக்கையும் கூட பூர்ஷ்வா கோரிக்கையாக இருக்கலாம். ஆனால் குறிப்பிட்டளவிளான வளர்ச்சிக்கு இது இட்டுச் செல்ல உதவும்.

நிச்சயமாக ஆரம்பத்தில் இது உடனடி பிரதிபலனைத் தராது.

சில புரிதல்...

- ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்கள் வாக்களிப்பில் பங்கு கொள்வது மிகவும் குறைவே.
- பெண்கள் கூட பெண்களுக்குத் தான் அல்லது பெண்களது தேவைகள் குறித்து அக்கறைப்படுபவர்களுக்கு தான் வாக்களிப்பார்கள் என்றும் கூறிவிட முடியாது.
- ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டு அதன்படி வேட்பாளர் பட்டியலில் பெண்களையும் சேர்த்து தேர்தலில் போட்டியிடச் செய்தாலும் பெண்கள் அதே அளவு வீதாசாரத்தில் தெரிவு செய்யப்படப் போவதுமில்லை. அதே அளவு தெரிவு

www.padippakam.com

செய்யப்படுவதாகக் கொண்டாலும் நிர்வாகத்துறையில் (அமைச்சரவையில்) அதே விதாசாரம் கிடைக்கப் போவதுமில்லை. அப்படிக் கிடைத்தாலும் பெண்களின் நலன்களுக்கு சார்பாகத் தான் இருப்பார்கள் என்றோ கற்பனை செய்யத் தேவையில்லை.

- மேட்டுக்குடிப் பெண்களே (ஓரளவு குடும்பச் சுமையிலிருந்து விடுபட்ட. பொருளாதார ரீதியில் ஆண்களில் தங்கியிருக்காத, வர்க்க, சாதிய, மத, இனத்துவ செல்வாக்கு போன்ற ஆதிக்க பண்புகளைக் கொண்ட, பெண்களே) அரசியல் அதிகாரத்துக்கு வரக்கூடிய வாய்ப்புகள் அதிகளவு உண்டு.

ஆனாலும் நிச்சயமாக இது பெண்களுக்கு அரசியல் பயிற்சியை வழங்கும். அரசியல் பங்களிப்பை ஊக்குவிக்கும். அரசியல் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் அதிகரிக்கும். இவை பெண்கள் சம வாய்ப்புகளை அடைய முன்நிபந்தனையாக அமையும். பெண்களை தமது சந்தர்ப்பவாதத்துக்காக கையாண்டு வரும் கட்சிகளின் பிடியிலிருந்து விடுபடவும் இப் பயிற்சி கணிசமான அளவு உதவும்.

முதலாளித்துவ தேர்தல் முறையில் பெண்களின் அரசியல் ஈடுபாட்டுக்கு பல சமூகத் தடைகள் உள்ளன. இன்றைய நிலையில் பெண்களுக்கு மரபான ஆணாதிக்க குடும்ப அமைப்பு முறை சுமத்தியுள்ள பொறுப்புகள், வன்முறை மிகுந்த சூழல், பெண்களின் பகிரங்க சமூக நடவடிக்கைகளை ஆணாதிக்க சமூக அமைப்பு கொண்டிருக்கும் சந்தேகப் பார்வை, ஒழுக்க மீறலாக அதனைக் கருதும் போக்கு, கலாசார பண்பாட்டு ஐதீகங்கள், போன்றன தடையாகத் தான் இருக்கின்றன. இவற்றிலிருந்து விடுபட நிச்சயம் இக்கோரிக்கைகள் கூட போதுமானதாக இருக்க முடியாது. புரட்சிகர சமூக மாற்றத்தின் மூலமே இதனை வென்றெடுக்க முடியும்.

எவ்வாறாயினும் பெண்களின் அரசியல் பங்களிப்பை அதிகரிப்பதில் ஈடுபடும் எந்த சக்தியும் வரும் கேள்விகளை கவனத்திற் கொள்வது முக்கியம்.

சில கேள்விகள்...

- சகல தேர்தல்களிலும் ஆண்களைப் போலவே பெண்களும் சமனாக வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்களா? உண்டாயின் ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்களின் வாக்களிப்பு வீதம் எத்தனை?
- அரசியற் கட்சிகளின் உறுப்பினர்களில் எத்தனை சதவீதத்தினர் பெண்கள்? அரசியற் பணிகளில் பெண்களின் பங்களிப்பு எத்தகையது? அத்தகைய பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய அக்கட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனவா? அந் நடவடிக்கைகளின் தன்மை எத்தகையன?
- தேர்தல்களின் போது பெண் வேட்பாளர்களின் விகிதாசாரம் என்ன? வேட்பாளர்களுக்கான நிபந்தனைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமானது தானா? பெண்களின் கோரிக்கைகளை பெண்கள் எவ்வளவு தூரம் முன் வைக்கிறார்கள்? பெண்களின் வாக்களிப்பு வீதாசாரம் என்ன? பெண்களை வெற்றிபெறச் செய்வதில் பெண் வாக்காளர்களின் பங்களிப்பு என்ன? ஆண்களோடு ஒப்பிடுகையில் எத்தனை வீத பெண்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்? நிர்வாகத்துறைக்கு தெரிவு செய்யப்படும் பெண்களின் வீதாசாரம் என்ன?
- பெண்களின் அரசியல் ஈடுபாட்டுக்கான தடைகள் எவை? அத்தடைகளை



படிப்பகம்

www.padippakam.com

ஏற்படுத்துவதில் சமூக ஐதீகங்களுக்கும், குடும்பச் சுமைகளுக்கும், அரசியற் சக்திகளுக்கும், அரசியற், பொருளாதார சூழலுக்கும், உள்ள பாத்திரம் எவை?

- இவற்றை தாண்டிவர பெண்களுக்குள்ள தெரிவு என்ன?

மேற்படி கேள்விகளுக்கான விடைகளானது பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவ அதிகரிப்புக்கு முன்னர் விடை காண வேண்டிய முன்நிபந்தனையான கேள்விகளாகும்.

மற்றும்படி அரசினதும் (அமைச்சரினதும்) அரசு சாரா நிறுவனங்களினதும் திடீர் கரிசனைகளைக் கண்டு மலைக்கவோ நம்பிக்கை கொள்ளவோ தேவையில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவமும் முன்நிபந்தனையான கேள்விகளும்!

1998 - சரிநிகர்

மீண்டும் பெண்களின் அரசியற் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இம்முயற்சிகட்கான உடனடி முக்கிய காரணங்களாக இரண்டினைக் குறிப்பிடலாம். முதலாவது இந்திய மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவையில் சென்ற மாதம் நிறைவேற்றப்பட்ட் பெண்களுக்கு 30 வீத அரசியற் பிரதிநிதித்துவம் பற்றிய மசோதா. அடுத்தது இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்களுக்கான ஆயத்தங்கள்.

இந்த இரண்டு காரணங்கள் மட்டும் தான் காரணமென்றில்லை. இவற்றிற்கான முயற்சிகளை பெண்கள் அமைப்புகள் கடந்த சில வருடங்களாக மேற்கொண்டு வருவது உண்மையே. ஆனால் மீண்டும் இன்னும் பல பெண்கள் அமைப்புகளை இணைத்துக் கொண்டு முயற்சிகளை மேலும் முடுக்கி விட்டுள்ளன.

இந்த முயற்சிகளை கடந்த சில காலமாக சில பெண்கள் அமைப்புகள் தனித்தனியாகவே முயன்று வந்தன. இம்முறை "இலங்கைப் பெண்களின் அரசு சார்பற்ற நிறுவனங்களின் கூட்டு" (Sri Lanka Women's NGO Forum) எனும் அமைப்பின் கீழ் திரண்டுள்ள பெண்கள் அமைப்புகள் இணைந்து செயற்படத் தொடங்கியுள்ளன. இதன் கீழ் நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்ற 49 பெண்கள் அமைப்புகள் இணைந்துள்ளன.

1995ஆம் ஆண்டு பீஜிங்கில் நடந்த நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை பரப்புவது, கண்காணிப்பது போன்ற காரியங்களையும் இந்த அமைப்பே மேற்கொண்டு வருகிறது. அம்மாநாட்டின் போது பெண்களை சகல மட்டங்களிலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரமின்மையைப் போக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. தற்போதைய அரசியற் பிரதிநிதித்துவ கோரிக்கையும் இதன் விளைவே.

இம்முறை மாகாண சபைத் தேர்தலுக்காக பொதுவாக,

1. கூடியளவு பெண்களை வேட்பாளர் பட்டியலில் இடம்பெறச் செய்தல், பெண்கள் தொடர்பான விடயங்களை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொள்ளல்.
2. பெண்கள் தங்களின் வாக்குரிமையைப் பயன்படுத்த ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல்.
3. வன்முறையற்ற தேர்தலை உறுதி செய்யுமாறு கோருதல்

என்பவற்றை அரசியற் கட்சிகளிடம் கோரிக்கையாக முன்வைத்துள்ளன.

அரசியற் கட்சிகள், பெண்கள் அமைப்புகள், வேறும் சமூக வெகுஜன இயக்கங்கள் போன்ற பல்வேறு சமூக நிறுவனங்களுடனும் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது இந்த அமைப்பு.

இது வரை ஐக்கியத் தேசியக் கட்சியுடன் இது குறித்து பேச்சுவார்த்தை



படிப்பகம்

www.padippakam.com

நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தாங்கள் பேசிய வேளையில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தங்களிடம் "பெண்களின் பிரதிநிதித்துவத்தை 30 வீதம் அதிகரிப்பது குறித்து எமக்கு பிரச்சினை இல்லை. ஆனால் தகுதியானவர்களை நியமிப்பதா பெண்களை நியமிப்பதா என்ற கேள்விக்கு உங்களால் பதில் தரமுடியுமா?... உள்ளூராட்சி, மாகாண மட்டங்களில் இதனை செயற்படுத்துவது குறித்து சிந்திக்கலாம் ஆனால் பாராளுமன்றம் என்று வரும் போது எங்களுக்கு செல்வாக்கு மிகுந்தவர் தான் முக்கியம்" என்று அவர் தெரிவித்ததாக சுனிலா அபேசேகரா சரிநிகருக்கு தெரிவித்தார்.

"இன்று வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்படும் ஆண்களில் எவர் தகுதியுடன் தெரிவாகிறார்? சகலரும் குடும்ப செல்வாக்குடனும், சண்டித்தனத்தினாலும், தனது வர்க்க செல்வாக்குகளினாலுமே தெரிவாகின்றனர். இந்த நிலையில் பெண்களிடம் தகுதி குறித்து கேள்வி எழுப்புவது சுத்த அபத்தம். மேலும் இதன் மறுபக்க அர்த்தம் பெண்கள் ஊழல், மோசடிகள் செய்யமாட்டார்கள் என்பதோ அல்ல அப்படி நடக்காது என்று உறுதி செய்ய முடியாது. ஆனாலும் அவர்களின் பிரச்சினையை அவர்களுக்குப் பேசக் கூட அதிகாரமற்றவர்களாக இருக்கும் நிலையில் அரசியல் அதிகாரம் அவசியமாகிறது." என்கிறார் சுனிலா.

இப்படித் தான் 1931இல் சர்வஜன வாக்குரிமை முதற் தடவை வழங்கப்பட்ட போது டொனமூர் "நீந்த வேண்டுமாயின் நீரில் இறங்கியே ஆக வேண்டும்" என்று குறிப்பிட்டது நினைவு கொள்ளத்தக்கது.

உண்மையில் பெண்களின் அரசியல் ஈடுபாட்டையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதாயின் இக்கோரிக்கை போதுமானதாக இருக்க முடியாது. சமூகத்தில் எப்போதும் குறை விருத்தியையுடைய (குறை விருத்திக்குள்ளாக்கப்பட்ட) தரப்பினரை ஆகக் குறைந்த பட்சமேனும் மேலே கொண்டு வருவதாயிருந்தால் குறிப்பிட்ட காலத்துக்கு விசேட கவனிப்பு செலுத்தப்பட்டே ஆக வேண்டும். உதாரணத்திற்கு அவர்களின் உண்மையான வீதாசாரம் 50 வீதமாக இருக்கிறதென்றால் (குறிப்பிட்ட பத்தாண்டோ பதினைந்தாண்டோ விசேட திட்டத்தின் மூலம்) அதனை விட மேலதிகமாக அவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதன் மூலமே உயர்த்தலாம். இதனை அரசியல் கோரிக்கையாக முன்வைப்பதாயிருந்தால் இதனடிப்படையிலேயே அமைய வேண்டும்.

"ஏன் அவ்வாறு அதிக பட்ச பிரதிநிதித்துவத்தைக் கோராமல் குறுக்கி விட்டீர்கள்?" என்று சுனிலாவிடம் கேட்ட போது,

நீண்ட கால அரசியல் முழக்கமாக (Political Slogan) 50வீதத்தைக் கோர முடியும். ஆனால் அரசியல் தந்திரோபாயமாக (political strategy) நாங்கள் 30வீதத்தைத் தான் தற்போதைக்குக் கோரமுடியும் காலப்போக்கில் எமது நீண்டகால கோரிக்கையை வெல்ல அடுத்த கட்ட கோரிக்கையை முன்வைக்கலாம். இல்லையென்றால் ஒரே நேரத்தில் இக்கோரிக்கையை அடித்து வீழ்த்தி விடுவார்கள் என்கிறார்.

இதற்கிடையில் இம்முறை ஊவா மாகாணசபைக்காக நுவரெலியா மாவட்டத்தில் ஒரு பெண்கள் குழு தேர்தல் களத்தில் இறங்கியுள்ளது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படும் இதற்கு பல பெண்கள் அமைப்புகள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. 22 பேர் அடங்கிய வேட்பாளர் பட்டியலில் 3 ஆண்களையும் சேர்த்திருக்கிறார்கள். இக்குழுவின் தலைவி விமாலி கருணாரத்ன நுவரெலியா மாவட்டத்தில் வெகுஜன செயற்பாடுகளில் பேர் போனவர். இவ்வருடம் "தலைமைத்துவம், மற்றும் சமூக சேவைகளுக்கான ஜனாதிபதி விருது" இவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

மூவினத்தவர்களும் அடக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் சகலரும் சமூக செயற்பாட்டாளர்கள்.

இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட காலம் தொடக்கம் இது வரை பெண்களின் பிரதிநிதித்துவம் 5வீதத்தைக் கூடத் தாண்டவில்லை. அமைச்சரவையிலும் கூட பெரும்பாலும் "மகளிர் அமைச்சு " தவிர்ந்த வேறு அமைச்சுகள் அவ்வளவாக வழங்கப்பட்டதில்லை. பெண்களுக்கு அமைச்சுக்கள் வழங்கப்படுவது கூட 9 வீதத்தை இது வரை தாண்டவில்லை. சமூக அரசியல் நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடு-வதற்கும் அரசியல் ரீதியில் அவற்றில் தலையீடு செய்வதற்கும் பெண்களுக்கு உள்ள உரிமை இதுவரை காலம் மட்டுப்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. குறைந்த பட்சம் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரச்சினைகள் குறித்த விடயங்களில் கூட ஆண்கள் பெண்களுக்கு எதிரான முடிவுகளை எடுத்து வந்த வேளைகளில் அதனை எதிர்க்க பாராளுமன்றத்தில் பலமில்லாதவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் இதற்கு முன் எழுப்பிய கேள்விகளை மீண்டும் எழுப்புவது பொருத்தமாக இருக்கும். இந்த கோரிக்கைகள் பாராளுமன்ற அரசியலை மேலும் உறுதி செய்கின்ற அதில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற ஒரு நிலைக்கு இட்டுச் செல்வதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

## அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம்

| நிறுவனம் | வருடம் | வேட்பாளர்கள் | | | தெரிவுசெய்யப்பட்டவர்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | M | வீதம் | மொத்தம் | F | வீதம் |
| பாராளுமன்றம் | 1947 | 358 | 3 | 0.6 | 117 | ' | 2.5 |
| | 1977 | 730 | 14 | 1.9 | 168 | 4 | 2.3 |
| | 1989 | 1382 | 22 | 1.6 | 225 | 12 | 5.1 |
| | 1994 | 1,410 | 55 | 3.9 | 225 | 12 | 5.1 |
| | 2000 | 5,048 | 117 | 2.31 | 225 | 9 | 4.0 |
| இடைத் தேர்தல் | 1977-89 | 257 | 5 | 1.9 | 28 | ' | 3.6 |
| மாகாண சபை | 1989 | 1327 | 38 | 2.8 | 437 | 13 | 2.9 |
| | 1993 | 2,351 | 12 | 0.5 | 382 | 12 | 3.1 |
| உள்ளூராட்சி சபை | | | | | | | |
| 1. மாநகர சபை | 1983 | 1068 | 27 | 2.5 | 233 | 3 | 1.3 |
| | 1987 | 641 | 22 | 3.4 | * | -- | - |
| | 1991 | 1152 | 42 | 3.6 | 207 | 6 | 2.9 |
| 2. நகர சபை | 1983 | 1396 | 33 | 2.4 | 347 | 6 | 1.7 |
| | 1987 | 984 | 31 | 3.2 | * | -- | -- |
| | 1991 | .53 | 40 | 2.8 | 241 | 6 | 2.5 |
| 3. மாவட்ட அபிவிருத்திச் சபை | 1981 | 470 | 11 | 2.3 | 161 | 3 | 1.9 |
| 4. பிரதேச சபை | 1987 | 7198 | 133 | 1.8 | * | -- | -- |
| | 1991 | 13385 | 325 | 2.4 | 2674 | 42 | 1.6 |

* 1987-89 காலப்பகுதியில் ஒரேயொருவரே மாநகர சபையின் மேயராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

## அமைச்சரவை அந்துஸ்து பெற்ற அமைச்சர்கள் 1977-1994

| வருடம் | மொத்தம் | ஆண் | பெண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1977 | 28 | 26 | 2 | 7.1 |
| 1980 | 26 | 25 | 1 | 3.8 |
| 1985 | 28 | 26 | 2 | 7.1 |
| 1990 | 26 | 25 | 1 | 3.8 |
| 1993 | 29 | 28 | 1 | 3.4 |
| 1994 | 23 | 20 | 3 | 13.0 |

## அமைச்சரவை இல்லாத அமைச்சர்கள் (பிரதி அமைச்சர்கள்) 1977-1994

| வருடம் | மொத்தம் | ஆண் | பெண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1977 | 69 | 66 | 3 | 4.3 |
| 1980 | 39 | 39 | 0 | 0 |
| 1985 | 42 | 42 | 0 | 0 |
| 1990 | 52 | 47 | 5 | 9.5 |
| 1993 | 52 | 47 | 5 | 9.5 |
| 1994 | 31 | 28 | 3 | 9.7 |

### தீர்மானம் எடுப்பதில் பெண்கள் -1995

| துறை | பெண்களின் நிலை |
|---|---|
| இலங்கை நிர்வாகச் சேவை | 12.6 |
| இலங்கை விஞ்ஞானச் சேவை | 10.3 |
| இலங்கை திட்டமிடற் சேவை | 11.5 |

### 1994இல் பட்டதாரிப் பெண்களின் வெளியேற்றம்-1994

| துறை | பெண்களின் வீதம் |
|---|---|
| கலை | 52.3 |
| சட்டம் | 59.0 |
| வி ஞ்ஞானம் | 36.9 |

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, புள்ளிவிபரத் திணைக்களத் தகவல்கள் என்பவற்றின் தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது**



படிப்பகம்

# மனம்பேரி:
# போராளி மனம்பேரியின் 25 வருட நினைவுகள்

(இக்கட்டுரை ஜே.வி.பி.யின் முதலாவது கிளர்ச்சியான 1971 கிளர்ச்சியின் 25 வருடங்கள் பற்றிய நினைவு கூரல் நாடெங்கிலும் நடந்து கொண்டிருந்த வேளை அதில் கொல்லப்பட்ட மனம்பேரியை நினைவு கூருகிறது. இக்கட்டுரை எழுதுவதற்கென்று முன்னாள் ஜே.வி.பி.யின் உறுப்பினர்களுடன் கதிர்காமத்திலுள்ள மனம்பேரியின் வீட்டுக்குச் சென்று வீட்டாருடனும் உரையாடினேன். கதிர்காமத்தில் மனம்பேரி கொல்லப்பட்ட இடத்தையும் சென்று பார்வையிட்டேன். மனம்பேரி வழக்கின் முக்கிய சாட்சிகளில் ஒருவரான எலடினையும் போய் சந்தித்தேன். அது தவிர 71 கிளர்ச்சி பற்றி விசாரணை செய்த விசேட நீதிமன்ற நீதிபதி ஏ.சி.அலஸ் எழுதிய நூலில் இருந்த தகவல்கள் சில கட்டுரை இக்கட்டுரைக்கு உதவிற்று. மனம்பேரியுடன் செயற்பட்ட ஜே.வி.பி. தோழர்கள் சிலருடனும் உரையாடக் கிடைத்தது. மேலும் மனம்பேரி வழக்கு இடம் பெற்ற (1973 - மே) காலப்பகுதியில் வெளியான பத்திரிகைகளை தேசிய சுவடிகூடத் திணைக்களத்தில் சில நாட்கள் இருந்து புரட்டியதில் திரட்டிய தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் இக்கட்டுரை தயாரிக்கப்பட்டது.)



இலங்கையில் முதன் முதலில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினர். 1971 ஏப்ரல் கிளர்ச்சி என அழைக்கப்பட்ட இது அரசாங்கத்தின் கொடூர ஒடுக்குமுறையினால் அடக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் கொல்லப்பட்ட ம.வி.மு. பெண் போராளி மனம்பேரி பற்றி இந்த இருபத்தைந்து வருட நினைவில் சில குறிப்புகள்.

அவள் கொல்லப்பட்டு 25 வருடங்கள். 20,000க்கும் மேற்பட்ட அவளின் தோழர்கள்

www.padippakam.com

கொல்லப்பட்டு 25 வருடங்கள். அவளையும் அவளது தோழர்களையும் கொன்றழித்த அந்த அரசமைப்பு மட்டும் இன்னமும் வாழ்கிறது. அவர்களது போராட்டம்..?

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் போது அரச படையினால் கொல்லப்பட்ட பெண் போராளிகளில் அவளும் ஒருத்தி. இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட இளம், ஆண், பெண் போராளிகளை அரச யந்திரம் கொன்றொழித்தது. ஆனால் அத்தனைக்கும் நியாயம் கற்பித்த அரசு, ஒரே ஒரு கொலையை மாத்திரம் படையினரின் அதிகார துஷ்பிரயோகச் செயல் எனக் கூறி கண்துடைப்புக்காக விசாரணையை நடத்தியது. அவ்விசாரணை தான் பிரேமவதி மனம்பேரியின் கொலை விசாரணை.

இதிலுள்ள இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில் படையினருக்கு எதிரான விசாரணையொன்றில் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட விசாரணையும் இதுவொன்றே.

**கதிர்காமத் தாக்குதல்.**

1971 ஏப்ரல் 5ஆம் திகதி ஜே.வி.பி.யினர் (மக்கள் விடுதலை முன்னணி) திட்டமிட்டபடி நாடெங்கிலும் உள்ள பல பொலிஸ் நிலையங்களை நள்ளிரவில் ஒரே நேரத்தில் தாக்கினர். யாத்திரைப் புகழ் பெற்ற கதிர்காமத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையமும் இதே நேரத்தில் தாக்கப்பட்டது. இதன் போது இரண்டு ஜே.வி.பி. உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். எனினும், தாக்குதல் மறுநாள் 6ஆம் திகதியும் இடம் பெற்றது. கதிர்காமப் பொலிஸார் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் பின்வாங்கியோடினர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் நாட்டின் கிளர்ச்சித் தளங்களுக்கு அனுப்பப்பட்டனர். கதிர்காமத்தில் லெப்டினன்ட் விஜேசூரிய தலைமையிலான குழுவொன்று ஏப்ரல் 15ஆம் திகதியன்று முகாம் அமைத்தது. இம்முகாம் இ.போ.ச.வுக்கு சொந்தமான ஓய்வு நிலையத்திலேயே அன்று அமைக்கப்பட்டிருந்தது. இம்முகாம் அமைக்கப்பட்டதன் பிறகு கதிர்காமப் பொலிஸ் நிலையமும் புனரமைக்கப்பட்டது.

இம்முகாமை அமைத்தவுடனேயே லெப்டினன்ட் விஜேசூரிய முதல் வேலையாக கிளர்ச்சியாளர்களை வேட்டையாடுதல் எனும் போர்வையில் கதிர்காமத்தில் பல பெண்களைக் கைது செய்தும், கடத்தியும் கொண்டு வந்து முகாமில் தடுத்து வைத்தான். ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி மனம்பேரியின் வீட்டுக்குச் சென்று அவளையும் கடத்திச் சென்றனர்.

**அழகு ராணி மனம்பேரி**

பிரேமவதி மனம்பேரிக்கு அப்போது வயது 22. ஜே.வி.பி.யின் ஐந்து வகுப்புக்களையும் ஆர்வமாக முடித்தவள். கிளர்ச்சியின் போது கதிர்காமத்தில் பெண்கள் அணிக்கு தலைமை தாங்கியவள். ஜே.வி.பி.க்கான சீருடை தைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தவள். தகப்பனார் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தில் கண்காணிப்பாளர். மனம்பேரியுடன் கூடப்பிறந்தவர்கள் பத்துப்பேர். குடும்பத்தில் மூத்தவள். கதிர்காம வித்தியாலயத்தில் க.பொ.த. (சா-த) வரை கற்று முடித்துவிட்டு விட்டு பௌத்த பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தாள். 1969ம் புதுவருட அழகு ராணிப் போட்டியில் இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். 1970 ஏப்ரல் 16ம் திகதி நடத்தப்பட்ட புதுவருட அழகு ராணிப் போட்டியில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டாள். அடுத்த வருடம் அதே நாள் கொலைஞர்களால் கடத்தப்பட்டாள்.

**கடத்தலும் வதையும்**

1971 ஏப்ரல் 16ம் திகதி காலை 9 மணியளவில் மனம்பேரியின் வீட்டுக்குள் புகுந்த



படிப்பகம்

www.padippakam.com

லெப்டினன்ட் விஜேசூரிய தலைமையிலான குழு வீட்டிலுள்ள பொருட்களைக் கிண்டிக் கிளறி தூக்கியெறிந்தது. மனம்பேரியை அடித்து தலை முடியுடன் இழுத்துச் சென்றது. தாய் லீலாவதி 'பெட்டப்பிள்ளையப்பா ஒண்டும் செஞ்சு போடாதீங்கோ ஐயா!' என கதறி அழுத வண்ணம் பின் தொடர்ந்த போது காலால் உதைத்துத் தள்ளிவிட்டு மனம்பேரியை தூக்கிக் கொண்டு வாகனம் பறந்தது.

அன்றைய இரவு முழுவதும் மனம்பேரி சித்திரவதை செய்யப்பட்டாள். அடுத்தநாள் 17ம் திகதி மனம்பேரியிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

'ஐந்து வகுப்புகளிலும் கலந்து கொண்டாயா?'

மௌனம்

'ஜே.வி.பி.யுடன் எவ்வளவு காலம் தொடர்பு வைத்திருந்தாய்?'

"......"

"நீ என்னென்ன நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருந்தாய்?"

இதற்கும் மௌனம் சாதிக்கவே தங்களது வக்கிர இயல்பை வெளிக்காட்டினர். மனம்பேரி விசாரணை வழக்கின் போது வெளிவந்த தகவல்கள் இவை.

"சரி... நான் சொல்வதை அவதானமாகக் கேள். சொல்வதைச் செய்யாவிட்டால் உனது உயிர் போகும்." இது லெப்டினன்ட் விஜேசூரிய. அவர் தொடர்ந்தும் "உனது ஆடைகளைக் ஒவ்வொன்றாகக் கழற்று..."

"ஐயோ.. சேர். வேண்டுமென்றால் சுட்டுப் போடுங்கள். ஆடையைக் கழற்றச் சொல்லாதீங்க..." என மனம்பேரி கண்ணீர் விட்டுக் கதறினார்.

"அது எனது வேலை. நான் சொல்வதை மட்டும் நீ செய்!" என துப்பாக்கியைத் தலையில் அழுத்தி மிரட்டிய போது அழுகையுடன் மேலாடைகளைக் கழற்றி உள்ளாடையுடன் இருந்தாள். மீண்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கி உள்ளாடைகளையும் கழற்றி விட்டு நிர்வாணம் ஆக்கினர். தனது கைகளால் மனம்பேரி மறைவிடங்களை மறைத்தாள்.

மனம்பேரியை லெப்டினன்ட் விஜேசூரிய முதலில் பாலியல் வல்லுறவு புரிந்தான். அதன் பின் மாறி மாறி ஏனைய சில இராணுவத்தினரும் பாலியல் வல்லுறவு புரிந்தனர். இதேவேளை அதே முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய இளம் பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்கள்.

ஒரு அறையில் இந்த அட்டூழியங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது பக்கத்து அறையில் "வெடகிட்டி கந்த பாமுல விகாரை"யின் பிக்குவும் இதே முகாமில் வதைக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தார். இப்பிக்குவை தடுப்பிலுள்ள பெண்கள் மீது பலாத்காரமாக பாலியல் வல்லுறவு புரிய வைத்தனர். இறுதியில் இந்த பிக்குவையும் தோண்டி வைக்கப்பட்டிருந்த குழிக்கு அருகில் நிறுத்தி வைத்து சுட்டு வீழ்த்தினர். "புனித பூமி" என சொல்லப்படுகின்ற கதிர்காமத்தில் தான் இந்த கொடுமைகள் நிறைவேற்றப்பட்டன.

**உயிர் பிரிந்தது.**

எல்லாவற்றையும் முடித்த பிறகு மனம்பேரியை கைகளிரண்டையும் மேலே தூக்கச் சொல்லி மீண்டும் பணிக்கப்பட்டது. திரும்பியவாறு வீதியில் நடக்க கட்டளை பிறப்பித்தனர். அரை மயக்க நிலையில் தள்ளாடியபடி துப்பாக்கி முனையில் வீதியில்



படிப்பகம்

www.padippakam.com

நடத்தப்பட்டாள் நிர்வாணமாக. சார்ஜன்ட் அமரதாச ரத்னாயக்காவின் துப்பாக்கி முனையிலேயே மனம்பேரி வீதியில் நடத்தப்பட்டாள். மனம்பேரியை முன்னே செல்ல விட்டு துப்பாக்கி தோட்டக்களால் முதுகைத் துளைத்தான் சார்ஜன்ட் அமரதாச. கீழே விழுந்த மனம்பேரியை மீண்டும் உலுக்கி நிறுத்தி நடத்தினான் மீண்டும் அவனின் துப்பாக்கிக் குண்டுகள் மனம்பேரியின் உடலைத் துளைத்தன.

"தண்ணீர் தண்ணீர்..." என முனுகிய மனம்பேரிக்கு எலடின் எனப்படும் வியாபாரி ஒருவர் தண்ணீர் கொடுக்க முற்பட்டபோது "விலகிப் போ! உதவி செய்ய முற்பட்டால் நீயும் கொல்லப்படுவாய்" என அச்சுறுத்தப்படவே அவரும் விலகிச் சென்றார். நடுவீதியில் சூட்டுக் காயங்களுடன் விழுந்து கிடந்த மனம்பேரியை அப்படியே விட்டுவிட்டு திரும்பினர். இராணுவத்தினர். பின்னர் ஊர்வாசிகளான எலடின் (இவர் இன்னமும் உயிருடன் இருக்கிறார். மனம்பேரியின் வழக்கில் முக்கிய சாட்சிகளில் இவரும் ஒருவர். இவரைச் சந்திக்க "சரிநிகர்" கதிர்காமத்துக்கு சென்ற நேரத்தில் "மன்னியுங்கள் அந்த கொடூர சம்பவத்தை நினைவுக்கு கொண்டுவர விரும்பவில்லை" என அது பற்றி கருத்துரைக்க மறுத்து விட்டார்.)

காதர். பெருமாள் ஆகிய ஊர்வாசிகளை அழைத்து பிணங்களைப் புதைப்பதற்கான குழிகளைத் தோண்டும்படி கட்டளையிட்டனர். அவர்கள் தோண்டினர். மனம்பேரியின் முனகலைக் கேட்ட எலடின் அருகில் சென்ற போது :அந்த பையனிடம் (பெருமாள்) எனது காதணிகள் இருக்கின்றன அதனைக் கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்து தங்கைக்கு அதனை கொடுக்கச் சொல்லுங்கள். நான் ஒருவருடனும் கோபமில்லை காமினி பாஸ் தான் குழப்பிப் போட்டார்..." (கிளர்ச்சியின் போது கதிர்காமத்தாக்குதலுக்கு தலைமை தாங்கியவர் தான் காமினி பாஸ்) எனக் கூறிக் கொண்டே தண்ணீர் கேட்டிருக்கிறாள். உடனே தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு இராணுவ முகாமுக்குச் சென்று "உயிர் இன்னமும் இருக்கிறது. எனவே புதைப்பதற்கு முடியாது." என்பதைத் தெரிவித்தார். உடனே இருவரை அனுப்பி உயிரைப் போக்கும்படி பணித்தான் லெப்டினன்ட் விஜேசூரிய. அவர்கள் இருவரும் அப்பாவச் செயலை செய்ய முடியாது என திரும்பி விடவே இன்னொருவன் அனுப்பப்பட்டான். அவன் போய் இறுதியாக மனம்பேரியின் நெற்றிப் பொட்டில் சுட்டான். மனம்பேரி புதை குழியில் சாய்ந்தாள். (இறுதியாக சுட்ட நபர் இறுதி வரை அடையாளம் காணப்படவில்லை.)

முன்னைய வருடம் இதே நாள் அழகுராணியாக காட்சியளித்த அதே தபால் நிலையத்திற்கருகிலேயே மனம்பேரியின் உயிரும் பிரிந்தது. அதே இடத்தில் மனித புதைகுழிக்குள் புதைந்தது. அவளது உடல்.

மனம்பேரியின் படுகொலை தொடர்பான பொலிஸ் முறைப்பாடுகள் சிலவற்றின் பின்னர் கண்துடைப்புக்காகவே அன்றைய சிறிமா அரசாங்கம் மனம்பேரியின் வழக்கை சிசாரணைக்கு எடுத்துக் கொண்டதென்றால் அது மிகையில்லை.

### கொலைஞர்களின் முடிவு

1971ம் ஆண்டு மே. மாதம் 24ம் திகதி முற்பகல் 10.30க்கு மனம்பேரியின் சடலம் புதைகுழியிலிருந்து மீள எடுக்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. 1973 மே மாதத்தில் இவ்வழக்கு விசாரணை 11 நாட்கள் நடந்தது. வழக்கின் இறுதியில் லெப்டினன்ட் அல்பிரட் விஜேசூரிய சார்ஜான்ட் அமரதாச ரத்நாயக்க ஆகிய இருவருக்கும் பதினாறு வருட கடுழிய சிறைத்தண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டது. 1973ம் ஆண்டு



படிப்பகம்

www.padippakam.com

மே மாதம் 30ம் திகதி இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. தண்டனை வழங்கப்பட்ட இரு இராணுவத்தினரும் தங்கள் மீதான தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தனர். இம்மேன்முறையீட்டு வழக்கு 1973 ஒக்டோபரில் நடத்தப்பட்டது. இவ்வழக்கிலும் சரியானதே என தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் தண்டனையை அனுபவித்து வந்தனர்.

அவர்களில் லெப்டினன்னட் விஜேசூரிய சிறையில் நோயுற்று மரணமானான். சார்ஜன்ட் அமரதாச தண்டனை முடிவுற்று விடுதலையான பின் 1988இல் ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டான்.

(1996 ஏப்ரல்.4 சரிநிகர்)

(தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் "நிறப்பிரிகை" சஞ்சிகையில் மீள்பிரசுரம் செய்யப்பட்டது.)



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ ஒறுப்புச் சட்டமும் பெண்களின் உரிமைகளும்!

இன்று தென்னிலங்கையில் எவர் விரும்புகிற அல்லது விரும்பாத போதும் "தமிழீழம்" என்கின்ற அரசாங்கம் ஒன்று இயங்கி வருவதை நாம் அறிவோம். அந்த அரசாங்கம் அரசாக (State) இன்னும் ஆகவில்லை என்பதும் உண்மை. எவ்வாறாயினும் வடக்கில் எழுதப்படாத அரசியலமைப் பொன்று நடைமுறையில் இருக்கத் தான் செய்கிறது. அந்த எடுகோளி லிருந்து வடக்கில் அமுலாக்கப்பட்டிரு க்கிற சட்டங்களை அலசிப் பார்ப்பது அவசியமானதொன்றே. அந்த வகை யில் "தமிழீழ ஒறுப்புச் சட்டம்" (PCTE-Penal Code of Tamil Ealam) ('தண்டனை' இங்கு "ஒறுப்பு" என அழைக்கப்படுகிறது.) முக்கியமான ஒன்று. அச்சட்டத்தில் பெண்களது உரிமை பேணப்பட்டிருக்கிறதா? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். அதில் பெண்களுக்கான உரிமை பாதுகாக்கப் படக்கூடிய வகையில் சட்டம் ஆக்கப் பட்டிருக்கும் என்ற நம்பிக்கை கூட இருக்கிறதா? என்ற வினாவை ஒரு சிலர் எழுப்பக்கூடும். ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனது பொன்மொழிகள் என சொல்லப்படுப வையோடு இது எத்தனை தூரம் பொருந்துகிறது என்கின்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு இது பற்றிய விமர்சனங்களை முன்வைக்கலாம் என்று தோன்றுகிறது. வே.பிரபாகரன் சொன்னதை இங்கு நோக்குவோம்.

"பெண்கள் சம உரிமை பெற்று சகல அடக்குமுறையில் இருந்தும் விடுதலை பெற்று ஆண்களுடன் கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகர சமுதாயமாகத் தமிழீழம் அமைய வேண்டும் என்பதே எனது ஆவல் -தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன்" (ஆதாரம்:- நாற்று-2வது இதழ்-மாறன் பதிப்பகம், பக்கம்-6, தமிழீழ பெண்கள் ஆய்வு நிலையம்)

"ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும்." (அதே நூல்-பக்கம்-31)

"பெண் விடுதலை என்பது அரச ஒடுக்குமுறையில் இருந்தும் சமூக ஒடுக்குமுறையிலிருந்தும் பொருளாதாரச் சுரண்டல் முறையிலிருந்தும் விடுதலை பெறுவதேயாகும்" (அதே நூல்- பக்கம்-35)

நடைமுறையில் உலகமெங்கும் சகல ஆட்சி நிர்வாக துறைகளிலும் ஆண்களது செல்வாககும் மேலாதிக்க முமே நிறைந்து காணப்படுவதை எவரும் அறிவர். சட்டமியற்றுதல், அதனை பிரயோகித்தல், என்பனவற்றைக் கூட ஆண்களே மேற்கொள்கி ன்றனர். எனவே ஆண்நிலைப்பட்ட ஆணாதிக்க தீர்மாணங்களும், முடிவுகளுமே



படிப்பகம்

பொதுவாக பெண்கள்மேல் திணிக்கப்படுகிறது. எனவே பெண்கள் தொடர்பான மரபு ரீதியான கருத்தியல் சிந்தனையிலிருந்து வெளிவரும் சட்டங்களினால் பெண்கள் பல்வேறு முறைகளில் பாதிப்புக்குள்ளாகி வருவது சர்வசாதாரண நிகழ்வாகியுள்ளது. அந்த எடுகோளுடன் பார்த்தால் 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்" கூட இவ்விடயத்தில் விதிவிலக்கல்ல. இனி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**தண்டனை**

தண்டனைக்குரிய பதமாக தமிழீழ ஒறுப்புச் சட்டத்தில் "ஒறுப்பு" எனும் பதம் பிரயோகிக்கப்படுகிறது. இந்த தண்டனை விடயத்தில் எவருக்கெல்லாம் தண்டனை விதிக்கப்படல் வேண்டும் எனும் வரையறைக்குள் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"குற்றவாளியாகக் காணப்படும் காலத்தில் கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு எதிராக மரண தண்டனை விதிக்கப்படலோ, பதியப்படலோ ஆகாது. ஆனால் அதற்கு மாறாக கடுஞ்சிறை யொறுப்போ எளிய சிறையொறுப்போ வழங்கலாம்" (பார்க்க - PCTE - சரத்து - 47)

கருவுற்றிருக்கும் காலத்தில் பெண் ணுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என சொல்லப்பட்டது சரி. ஆனால் கருவுற்றிருக்கிற பெண்ணுக்கு கடுஞ்சிறையொறுப்பு வழங்கலாம் என்ற விடயம் பாரதூரமானது. 'கடுஞ்சிறையொறுப்பு" என்பதன் அர்த்தம் கடுமையான உடல் உழைப்போடு கூடிய தண்டனை என்பது குறிப்பிடத்தக்கது. (பார்க்க - PCTE - சரத்து - 45 ஆ (1)).

ஏற்கனவே கருவளச் சுமை பெண்ணி டம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் "கடும் உடலுழைப்பு" என்பது மிகவும் மோசகர மான தண்டனையாகவே கொள்ள முடியும்.

அது தவிர அந்த குறிப்பிட்ட பெண்ணுக்கு மாத்திரமல்லாது கருவுற்றிருக்கும் அப்பெண்ணின் கருவளத்திற்கும் ஏற்படுத்தும் உடல், உள ரீதியி லான தண்டனையாகவே இதனைக் கொள்ள முடியும்.

எனவே, செய்த குற்றத்திற்கான தண்டனையாக எளிய சிறையொறுப்பு போதுமானதெனலாம் அதிலும் கருவுற்றிருக்கிற நிலையில் சிறைக்குள் அவளது செயற்பாடுகளுக்கான சுதந்திரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**கருக்கலைப்பு**

கருக்கலைப்பு சுதந்திரமென்பது ஒவ்வொரு பெண்ணினதும் முக்கியமான ஒன்றாதல் வேண்டும்.

ஒறுப்புச் சட்டத்திலும இது விடயத்தில் பிழையான அணுகு முறைகளையே காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக:

உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் மட்டுமே கருக்கலைப்பு செய்யலாம் அல்லாது போனால் 3 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய எவ்வகை சிறையொறுப்பும் வழங்கலாம். அப்பெண் உயிர்ப்புடன் துடிக்கும் கருவினை உடையவராக இருந்தால் ஏழு ஆண்டு சிறைத் தண்டனையுடன் குற்றக்காசிறுப்படக்கும் ஆளாதல் வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. (PCTE - சரத்து - 215)

சகல பெண்களும் விரும்பித்தான் கருவுறுகின்றனர் என்று கொள்ளவும் முடியாது. பாலியல் வல்லுறவுக்கூடாகவும், அவள் கருவைத் தாங்க நேரிடக்கூடும். (அது குடும்பத்தில் கணவனால் மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவாகவும் இருக்கலாம்.) உற்ற கருவை

www.padippakam.com

கலைக்க முடியாமலும் போயிருக்கலாம். பாலியல் வல்லுறவு. அடிப்படையாக அமைந்தால் கருக்கலைப்பு செய்வதில் தவறில்லை என அதே சரத்தில் 'புறநடை விலக்கு" எனும் பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. என்ற போதும் 'புறநடை விலக்கு" (2) இல் கருக்கலைப்பு செய்வதானால் ஆணினதும் 'இசைவு" தேவை என கூறப்பட்டுள்ளது.

கருவை சுமக்கும் பெண்ணிடம்தான் கருவை சுமக்கும் சம்மதம் பற்றிக் கேட்டறிய வேண்டுமேயொழிய கனவ னது இசைவை அங்கு வலியுறுத்துவது பாரதூரமானது. பெண் விரும்பாத போதும் ஆணின் நிர்ப்பந்தத்தால் இப்படி நடப்பதுவுமுண்டு. அதாவது கருவை சுமப்பவள். தான் விரும்பாத போதும் ஆணின் கட்டாய ஆணையின் பேரில் அதனை சுமக்க வேண்டும் என இதன் மூலம் மறைமுகமாக நிர்ப்பந்திக் கப்படுகிறது. அது மட்டுமன்றி ஆணாதி க்க திணிப்புச் சூழலும் பெண்ணடிமை கருத்தியற் சமூக அமைப்பும் இன்று "பாலியல் வல்லுறவு" என்பதை புறநிலையிலேயே கொள்கிறது. மனைவி விரும்பாத போதும் கனவனால் கட்டாய பாலியல் உறவுக்கு உள்ளாகும் வழமையான இயல்பு நிலையை பாலியல் வல்லுறவாக கொள்ளும் நிலை பல நாட்டு சட்டங்களில் இல்லை. எனவே இப்படியான சூழ்நிலையில் கருவை சுமத்தல் அல்லது கலைத்தல் தொடர்பான உரிமைகள் பெண்ணின் முழு உரிமைக்குரியன.

கருக்கலைப்பு விடயத்தில் சில வேளை புலிகள் இயக்கத்தினா் தங்களது போர்க்கால மனித வள திரட்டலுக்கான (நீண்ட கால நோக்கைக் கொண்ட) - தந்திரோபாயமாக இதனைக் கொண்டிருக்கக் கூடும். என்ற போதும் போராட்டத்திற்கான பயன்படு த்தலுக்கு மாத்திரம் பெண்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களது உரிமைகளுக்கு எதிராக நடந்து கொள்கிறார்கள் என்ற அபிப்பிராயம் பரவுவதற்கும் இது வழிவகுக்கிறது.

**மறுமணம்**

'மறுமணம்" விடயத்தில் அது இப்படிக் கூறுகிறது. "துணைவனோ. துணைவியோ உயிருடன் இருக்கும் போது அல்லது விவாகரத்து நடவாதிருக்கும் போது அவா்களில் எவரும் மறுமணம் செய்யக்கூடாதெ ன்றும் செய்தால் ஏழு ஆண்டுகள் வரை சிறைதண்டனை வழங்க வேண்டும். (PCTE -சரத்து 273) எனக் கூறப்பட்டி ருக்கிற போதும் அதன் 'புறநடை" பகுதியில் திருமணமான எவரும் துணைவியைப் பற்றியோ துணைவ னைப் பற்றியோ தகவல் எதுவுமில்லாமலிருப்பின் 5 வருடங்கள் காத்திருத்தல் வேண்டுமென நிர்ப்பந்திக்கிறது.

திருமணமான எவரும் துணைவியைப் பற்றியோ துணைவனைப் பற்றி யோ தகவல் எதுவுமில்லாமலிருப்பின் 5 வருடங்கள் காத்திருத்தல் வேண்டு மென நிர்ப்பந்திக்கிறது.

திருமண கட்டமைப்பு என்பதே அது ஆண். பெண் ஆகிய இரு சாராரினதும் சகல சுதந்திரங்களையும் கட்டுப்படுத்தும் நிறுவனம் என்பது அறிந்ததே. பெரும்பாலும் திருமண கட்டமைப்பினால் ஆணைவிட பெண். அதிக பாதிப் புக்குள்ளாகிறாள் என்பது இன்னொரு விடயம். இந்நிலையில் மேலே குறிப்பிட்டுள்ள காத்திருக்கும் வரையறை" என்பது அத்தியாவசியமானதென கருதமுடியாது.

**பாலியல் வல்லுறவு**[1]

பாலியல் வல்லுறவு குறித்து பல விடயங்களை நல்ல முறையில் அணுகியிருக்கிற போதும் ஆங்காங்கு சில பலவீனங்களைக் காண முடிகிறது.

'பாலியல் வல்லுறவு குற்றம்" புரிந்த ஒருவருக்கு மரண தண்டனையோ அல்லது 14 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையுடன் கூடிய குற்றக்கா சிறுப்போ விதிக்கப்படுமென



படிப்பகம்

www.padippakam.com

கூறுகிறது. (PCTE சரத்து-279-(அ)) குற்றம் புரிந்தவர் 24 வயதையடையாதவராக இருப்பின் தண்டனையைக் குறைக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. என்ற போதும் 'பாலியல் வல்லுறவு" பற்றிய குற்ற வழக்கானது. அத்தவறு இழைக்கப்பட்டதிலிருந்து 3 மாதங்களுக்குப் பின் தொடரப்படலாகாது எனக் கூறப்பட்டு ள்ளது. (PCTE-சரத்து-283-(4)) சில நிர்ப்பந்தங்கள் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ முதல் மூன்று மாதங்களுக்குள் வழக்கு தொடர முடியாமல் போனவர்களுக்கு நீதித்துறை நீதி வழங்க முடியாது என கூறுவது சரியான ஒன்றல்ல.

இச்சட்டத்தில் 'பாலியல் வல்லுறவு", 'பாலியல் வன்முறை" இரண்டுக்கும் வெவ்வேறு அர்த்தப்படுத்தல்களுடன் கூடிய வரைவிலக்கணங்கள் தரப்பட்டிருக்கிறது. அந்த வரையறை இதுவரை வேறு யாரும் செய்யாத ஒன்று என்ற ரீதியில் தமிழீழ ஒறுப்புச் சட்டத்திற்கு பெருமையுண்டு. உதாரணத்திற்கு.

"ஆண் குறியை சிறிதளவு பெண்குறியினுள் நுழைத்தாலும் 'பாலியல் வல்லுறவு" நடைபெற்றதாகக் கொள்ளப்படும்" என்றிருக்கிறது.

"பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அவளது பாலியல் உறுப்புக்களில் பாலியல் உணர்வுடன் அல்லது அவரை இழிவு படுத்தும் நோக்குடன் தீண்டுவது பாலியல் வன்முறைத் தவறாகும்" என்றும் கூறப்பட்டுள்ளது.

என்றாலும் இது தொடர்பாக ஒறுப்புச் சட்டத்திலுள்ள பலவீனமென்ன வென்றால் மேற்படி வரையறையிலி ருந்து 'பாலியல் வல்லுறவு" மற்றும் பாலியல் வன்முறை" ஆகியன ஆணொருவன் ஆண் மீது அல்லது பெண் பெண் மீது பிரயோகிக்கப்படும் 'பாலியல் வல்லுறவு"களையும் பாலியல் வன்முறைகளையும் கண்டும் காணாது விடுவதா என்ற கேள்வி எழுகின்றது. மேலும் இன்று குடும்பங்களில் கணவ னால் மேற்கொள்ளப்படுகின்ற பலாத் கார பாலியல் உறவுகளையும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம். சமூக யதார்த்த நிலையில் பெண். ஆண்மீது பாலியல் பலாத்காரம் பண்ணுமளவு நிலைமை இல்லை என்பதை நாமறிவோம். சில வேளை இது மிக அபூர்வமாகவே இடம் பெறும். ஆனால் ஆண். ஆண் மீது இக்குற்ற த்தை இழைப்பது இன்று சாதாரணமாகி வருவதை நடைமுறையில் அறிய முடிகிறது.

இதை விட 'பாலியல் வல்லுறவு" (Rape) மற்றும் 'பாலியல் வன்முறை" (Sexual Violence) என்பதைப் போலவே 'பாலியல் தொந்தரவுகள்" (Sexual Disturbance) என்ற ஒன்றை வேறுபடுத்தி பார்க்க வேண்டிய அவசியமும் உள்ளது. குறிப்பாக பாலியல் வக்கிர நோக்கில் தீண்டுவது. இழி சொற்க ளைப் பயன்படுத்துவது. மற்றும் தொடர்பு சாதனங்கள். கலை வடிவங்களுக்கூடாக பாலியல் ரீதியிலான இழிவுகளைப் பிரதிபலிக்கச் செய்தல். அசிங்கப்படுத்திக் காட்டுதல் என்பவற்றை வேறு படுத்தி இனங்காண வேண் டியதும் அவசியமானதாகும். இவ்வகையில் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளை வேறுபடுத்தி இனங்காண்பது நீண்ட நோக்கில் நன்மைகள் பயக்கும். குறிப்பாக இது தொடர்பான தண்டனையளித்தலின் போதும் வேறுபடுத்தி பரிசீலிப்பதற்கு இது மிகவும் துணைபுரியும். எதிர்காலத்தில் இப்பாகுபடுத்தல் மேலும், விரிவடையலாம்.

இச்சட்டத்திலேயே முதற் தடவை யாக 'பாலியல் வல்லுறவு" எனும் பதம் தமிழில் பாவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப த்தில் தமிழில் 'கற்பழிப்பு" எனும் பதம் பயன்படுத்தப்பட்டபோது பெண்களுக்கு மட்டுமே கற்பின் தத்துவத்தை வலியுறுத்துவதாக அப்பதம் அமைந்திருந்த தாலும் பொருத்தமில்லாத சொல்லாக இருந்ததாலும் புதிய



படிப்பகம்

www.padippakam.com

மாற்றுப் பதம் ஆக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக பெண்ணிலைவாதிகளால் கருத்தாடப்பட்டதைத் தொடர்ந்து 'பாலியல் பலாத்காரம்" மற்றும் 'பாலியல் வன்முறை" ஆகிய பதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்பதத்தை அறிமுகம் செய்ததில் 'சரிநிகர்" பத்திரிகைக்கு மிகுந்த பங்குண்டு. ஆனாலும் 'பாலியல் பலாத்காரம்" மற்றும் 'பாலியல் வன்முறை" ஆகிய பதங்களில் 'பாலியலுறவு" என்பது உள்ளடக்கப்படவில்லை என பல பெண்ணிலைவாதிகளால் பேசப்பட்டது. இந்நிலையில் தமிழ்ழ ஒறுப்புச்சட்டம் அறிமுகப்படுத்தியிருக்கிற 'பாலியல் வல்லுறவு" எனும் பதத்தில் பாலியல் (sexual) + வன்மை (violence) + உறவு (intercource) ஆகிய மூன்று விடயமும் உள்ளார்ந்திருப்பதால் இப்பதமே பொருத்தமானது என்பதைப் பலர் ஏற்றுக் கொள்கின்றனர். சில வேளைக ளில் இதை விட நல்ல பதம் எதிர் காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம்.

**இயற்கைக்கு முரணான பாலியல் உறவு**

எவரேனும் ஆணுடன் அல்லது பெண்ணுடன் அல்லது ஏதேனும் விலங்குடன் இயற்கை இயல்புகளுக்கு முரணாக உடலுறவு கொள்ளும் எவரும் 10 ஆண்டுகள் வரை இருவகையி லொருவகை சிறைத் தண்டனையுடன் குற்றக்காசிறுப்புக்கும் உள்ளாதல் வேண்டும் என கூறுகிறது. (PCTE -சரத்து -(286))

இதில் 'இயற்கை இயல்புக்கு முரண்" என எதனை வரையறுத்திருக்கின்றனர் என்பதை குறிப்பிடாதது குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

இன்று பெண்களது விடுதலைக்கு தடையாக இருக்கும் முக்கிய ஒரு பிரச்சினையாக பாலியல் சுரண்டல் பாலியல் உறவுக் கட்டுப்பாடு என்பன காணப்படுகிறது. இந்நிலையில் மேற்குலக நாடுகளில் பெண்களின் பாலியல் தேவை பாலியல் சுரண்டலிலிருந்து விடுதலையடைதல் என்பன அங்கு புதிதாக விஞ்ஞான ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்கை பாலியல் புணர்வு முறைகள் அறிமுகமானதிலிருந்து சில வளர்ச்சிகளையும் ஏற்படுத்தியிருக் கிறது. மரபு ரீதியிலான கருத்தியல் கட்டுப்பாடு நிலவும் நாடுகளுக்கு இவை வழக்கத்துக்கு வர சில காலமெடுக்கக் கூடும். எனவே இயற்கைக்கு மாறாக உறவு கொள்தல் கூடாது என கூறுவது பெண்களது மட்டுமல்ல ஆண்களி னதும் சுதந்திர இயல்புகளினதும் மீதான மோசகரமான கட்டுப்பாட்டு திணிப்பாகும்.

**பரத்தமை**

'பரத்தமை" (விபச்சாரம்) பற்றி இன்னமும் நமது சமூகத்தில் நிலைபெற் றிருக்கிற கருத்தியல் காரணமாக பரத்தமையை குற்றத்திற்குரிய ஒன்றாகவே காண்கிறதே ஒழிய அதற்கான ஒட்டு மொத்தமான சமூக நிர்ப்பந்தத்தை இனங் காண்பதில் தவறிழைத்தே வருகிறது.

பரத்தமையில் ஒரு பெண் ஈடுபடுவதற்குக் காரணமாக பெண்ணின் பாலியல் மேலுணர்வை கொள்ள முடியாது. அதற்கான சமூகச் சூழலே பரத்தமை நிலையினை அடையக் காரணமாக இருக்கிறது. எனவே, அந்தச் சூழல் மாற்றியக்கப்படாதவரை இவற்றிற்கான தீர்வுமில்லை.

"காசு நோக்கத்திற்காக ஒரு பாலார் மறுபாலாருடன் உடலுறவு கொள்ளுதல் 'பரத்தமை" தவறாகும். இத்தவறுக்கு நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூ டிய இருவகையிலொருவகை சிறையொ றுப்பு வழங்கப்படுதல் வேண்டும்." (PCTE.-சரத்து (481),(420))



படிப்பகம்

www.padippakam.com

பரத்தமை விடயத்தில் எப்போதும் பெண்ணே தண்டிக்கப்பட்டு வரும் இயல்பை நாம் காணலாம்.

"பணம் கொடுத்து பாலியல் புணர்ச்சிக்கு அழைப்பதற்கு ஆண்கள் தயாராக இருக்கும் போது பெண் மட்டும் ஏன் தண்டிக்கப்படுகிறாள்?" என வினவுகிறார் பெண்ணிலைவாதிகளில் ஒருவரான சுனிலா அபேசேகர.

இக்கேள்வியின் நியாயத்தன்மை சரியானதே. லஞ்சக் குற்றச்சாட்டின் போதெல்லாம் லஞ்சம் வாங்கியவரை மட்டுமல்லாது லஞ்சம் வழங்கிய வரையும் தண்டிக்கும் இந்த சட்டங்கள் பரத்தமை விடயத்தில் மாத்திரம் பரத்தமையை தூண்டும் ஆண்களைத் தப்ப விட்டுவிட்டு பெண்களை மட்டும் தண்டிப்பது மிக மோசமான நடைமுறை.

மேலும் இறுதியில் "விபச்சாரி" அல்லது 'வேசி" என்று தூற்றப்படும் செய்கை கூட பெண்களுக்கு எதிரானதாக மாத்திரமே பாவிக்கப்படுகிறது. இவ்வகையான பதப் பிரயோகங்கள் ஆண் மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் பதப் பிரயோகமே. அப்பதங்களை பெண்கள் மீது மட்டுமே ஆணதிகார மொழி பிரயோகித்து வருகிறது.

ஆண்கள் பல பெண்களுடன் பாலியலுறவில் ஈடுபட்டால் அவனை "விபச்சாரன்" அல்லது "பரத்தன்" போன்ற பதங்களைப் பாவிப்பதற்கான தமிழ்ச் சொல் வழக்காடல் இன்னமும் இல்லை. பெண்ணே தொடர்ந்தும் ஏசப்படலுக்குள்ளாகிறாள்.

இப்படி "தமிழீழ ஒறுப்புச் சட்டம்" தயாரிக்கப்படும் போது பெண்கள் தொடர்பான விடயங்களில் அசட்டையாகவே இருந்துள்ளனர் என ஒடுக்கப்படும் பெண்ணினம் குற்றம் சுமத்துவதை இலகுவாக மறுதலிக்க முடியாதே.

ஒறுப்புச் சட்டத்தில் இதுவரை காணாத பல புதிய நல்ல கருத்துக்களுடன் கூடிய சட்டமியற்றல் நடைபெற்றிருக்கிற போதும் சிற்சில பலவீனங்களை உள்ளடக்கியிருப்பதை உணராது விட முடியாது. அதிலுள்ள "பெண்கள்" பற்றிய சிறு மதிப்பீடு மட்டுமே இதில் அடங்கியிருக்கிறது.

முழுமையாக அவை விமர்சனத்துக்கும் திருத்தங்களுக்கும் உள்ளாக வேண்டியதன் அவசியத்தை சம்பந்தப்பட்டவர்கள் உணர்வார்களாயின் மேலும் ஆரோக்கியமான நகர்வுக்கு அவை வழிசமைக்கும்..

சரிநிகர் 1996,



படிப்பகம்

## 2000 ஆண்டு வரை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பெண்கள்

| பாராளுமன்றக் காலப்பகுதி | பெயர் | கட்சி | தொகுதி |
|---|---|---|---|
| 1931.07.07 - 1935.12.07 | எடலின் மொலமுரே | - | ருவன்வெல்ல |
| | ○நேசம் சரவணமுத்து | - | கொழும்பு வடக்கு |
| 1936.03.17 - 1947.07.04 | நேசம் சரவணமுத்து | - | கொழும்பு வடக்கு |
| 1947.10.14 - 1952.04.08 | புளோரன்ஸ் சேனநாயக்க | LSSP | கிரிஎல்ல |
| | ○குசும்சிறி குணவர்த்தன | LSSP | அவிஸ்ஸாவலை |
| | ○தமாரா குமாரி இலங்கரத்ன | I | கண்டி |
| 1952.06.09 - 1956.02.18 | குசும்சிறி குணவர்த்தன | VLSSP | அவிஸ்ஸாவலை |
| | டொரின் விக்கிரமசிங்க | CP | அக்குரஸ்ஸ |
| 1956.04.19 - 1959.12.05 | விவியன் குணவர்த்தன | NLSSP | கொழும்பு வடக்கு |
| | குசும்சிறி குணவர்த்தன | VLSSP-MEP | கிரிஎல்ல |
| | விமலா விஜயவர்த்தன | SLFP-MEP | மீரிகம |
| | ○குசுமா ராஜரட்ண | SLFP-MEP | வெலிமட |
| 1960.03.30 - 1960.04.23 | விமலா கன்னங்கர | UNP | கலிகமுவ |
| | குசுமா ராஜரட்ண | JVP | ஊவா பரணகம |
| | சோமா விக்கிரமநாயக்க | LSSP | தெஹியோவிட்ட |
| 1960.08.05 -1964.12.17 | குசுமா ராஜரட்ண | JVP | ஊவா பரணகம |
| | சோமா விக்கிரமநாயக்க | LSSP | தெஹியோவிட்ட |
| | ○விவியன் குணவர்த்தன | LSSP | பொரல்ல |
| 1965.04.05 -1970.03.25 | சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | அத்தனகல்ல |
| | ஷீவா ஒபசேக்கர | SLFP | மீரிகம |
| | விமலா கன்னங்கர | UNP | கலிகமுவ |
| | குசுமா ராஜரட்ண | JVP | ஊவா பரணகம |
| | ○லடீஷியா ராஜபக்ஷ | SLFP | தொடங்கஸ்லந்த |
| | ○மல்லிக்கா ரத்வத்த | SLFP | பலங்கொட |
| 1970.07.06 - 1977.05.18 | சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | அத்தனகல்ல |
| | குசலா அபேவர்த்தன | LSSP | பொரல்ல |
| | விவியன் குணவர்த்தன | LSSP | தெஹிவளை |
| | தமரா குமாரி இலங்கரத்ன | SLFP | கலகெதர |
| | ஷீவா ஒபசேக்கர | SLFP | மீரிகம |
| | மல்லிகா ரத்வத்த | SLFP | பலாங்கொட |
| 1977.07.25 - 1988.12.20 | சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | அத்தனகல்ல |
| | விமலா கன்னங்கர | UNP | கலிகமுவ |
| | ரேணுகா ஹேரத் | UNP | வலப்பனை |
| | அமரா பியசீலி ரத்நயக்க | UNP | வாரியபொல |
| | ○சுனேத்திரா ரணசிங்க | UNP | தெஹிவளை |
| | ●ரூபா சிறியாணி டேனியல் | UNP | ஹேவாஹெட்ட |
| | ●எல்.எம்.விஜயசிறி | UNP | ஹரிஸ்பத்துவ |
| | ●ரங்கநாயகி பத்மநாதன் | UNP | பொத்துவில் |

www.padippakam.com

| | | | |
|---|---|---|---|
| | ●தயா சேபாலி ஜேதிர | UNP | கரந்தெனிய |
| | ●கீர்த்தி லதா அபேவிக்கிரம | UNP | தெனியாய |
| | ●சம்பந்தா கருணாரத்ன | UNP | ரம்புக்கனை |
| 1989.02.15 - 1994.08.16 | சிறிமாவோ பண்டாரநாயக்க | SLFP | கம்பஹா |
| | சுமித்திரா பிரியங்கனி அபேவீர | SLFP | களுத்துறை |
| | ஹேமா ரத்நாயக்க | SLFP | பதுளை |
| | குணவதி திசாநாயக்க | SLFP | மொனராகலை |
| | சுனேத்திரா ரணசிங்க | UNP | கொழும்பு |
| | சமந்தா கருணாரத்ன | UNP | கேகாலை |
| | ரேணுகா ஹேரத் | UNP | நுவரெலியா |
| | அமரா பியசீலி ரத்நாயக்க | UNP | குருணாகல் |
| | சந்திரா கருணாரத்தின | UNP | பதுளை |
| | ●ரூபா சிறியானி டேனியல் | UNP | தேசியப் பட்டியல் |
| 1994இலிருந்து | சந்திரிக்கா குமாரணதுங்க | PA | கம்பஹா |
| | ●சிறிமாவோ பண்டாரநாயக்க | PA | தேசியப் பட்டியல் |
| | சிறிமணி அத்துலத் முதலி | PA | கொழும்பு |
| | சுமேத ஜயசேன | PA | மொனராகலை |
| | நிருபமா ராஜபக்ஷ | PA | அம்பாந்தோட்டை |
| | பவித்திரா வன்னியாராச்சி | PA | இரத்தினபுரி |
| | ஹேமா ரத்நாயக்க | PA | பதுளை |
| | சுமித்திரா பிரியங்கனி அபேவீர | PA | களுத்துறை |
| | ரேணுகா ஹேரத் | UNP | நுவரெலியா |
| | அமரா பியசீலி ரத்நாயக்க | UNP | குருணாகல் |
| | ராஜமனோகரி புலேந்திரன் | UNP | வன்னி |
| | ●அமர பத்திரா திசாநாயக்க | UNP | தேசியப்பட்டியல் |
| 2000 ஒக்டோபர் | சுமேத ஜயசேன | PA | மொனராகல |
| | பவித்திரா வன்னியாசராச்சி | PA | ரத்தினபுரி |
| | சோமா குமாரி தென்னகோன் | PA | குருநாகல் |
| | சிறியாணி பெர்ணான்டோ | PA | புத்தளம் |
| | சுரங்கனி எல்லாவெல | PA | ரத்தினபுரி |
| | பேரியல் அஷ்ரப் | PA | திகாமடுல்ல |
| | சந்திரானி பண்டார | UNP | அனுராதபுரம் |
| | அமரா பியசீலி ரத்னாயக்க | UNP | குருணாகல் |
| | ●அன்ஜன் உம்மா | JVP | தேசியப்பட்டியல் |



படிப்பகம்

○ இடைத்தேர்தல்களின் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்கள்.

● நியமிக்கப்பட்டவர்கள்.

திருமதி சந்திரிகா ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்காக 1994 ஒக்டோபரில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார்.

மேற்படி அட்டவணையில் 60கள் 70களில் உள்ள JVP என்றிருப்பது மக்கள் விடுதலை முன்னணி அல்ல. தேசிய விடுதலை முன்னணியாகும். 2000ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட JVPயானது மக்கள் விடுதலை முன்னணியாகும்.

UNP - United National Party
SLFP - Sri Lankla Freedom Party
MEP - Mahajana Eksath Peramuna
LSSP - Lanka Sama Samaja Party
CP - Communist Party
JVP- Jathika Vimikthi Peramuna
JVP - Janatha Vimukthi Peramuna
PA - People Alliance

**1947 இலிருந்து 1971 வரை மேற்சபைக்கு நியமிக்கப்பட்ட பெண்கள்**

| | |
|---|---|
| எட்லின் மொலமூரே | (1947) |
| சிசிகுரே | (1947) |
| கிளோடா ஜயசூரிய | (1954) |
| எவ்லின் டி சொய்சா | (1958) |
| சிறிமாவோ பண்டாரநாயக்க | (1960) |
| சீதா செனவிரத்ன | (1967) |

**பொதுத் தேர்தல்களில் பெண் வேட்பாளர்கள் (1947-1994)**

| கட்சி | வேட்பாளர்கள் தொகை | பெண்கள் | வீதம் |
|---|---|---|---|
| UNP | 1477 | 40 | 2.7 |
| SLFP | 1223 | 35 | 2.8 |
| LSSP/NLSSP | 317 | 18 | 5.6 |
| CP | 131 | 4 | 3.1 |
| TULF | 137 | 4 | 2.9 |
| SLMC | 233 | 0 | 0 |

www.padippakam.com

# விடுதலையின் மைற்கற்கள்

**சர்வதேச ரீதியல்**

1691:- அமெரிக்கா: மஸாசூஸெட் ராஜ்யத் தில் பெண்களுக்கு வாக்குரிமை இருந்தது. இதனை அவர்கள் பின்னர் 1780ல் இழந்தனர்.

1792:- அமெரிக்கா: பெண்களுக்கும், கறுப்பர்களுக்கும் சமத்துவ உரிமைகோரி"சமத்துவ உரிமைகள் சங்கத்தை " லுக்கியர்மொற் என்பவர் தாபித்தார்.

1859:- ரஷ்யா: சென் பீற்றர்ஸ்பேர்க்கில் "பெண்கள் விடுதலை இயக்கம்" ஆரம்பிக்கப்பட்டது.

1862:- சுவீடன்: மாநகர சபைத் தேர்தலில் பெண்களுக்கு வாக்குரிமையளிக்கப்பட்டது.

1868:- பிரிட்டன்: தேசிய பெண்கள் வாக்குரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

1888:- ஐரோப்பாவினதும்,வட அமெரிக்காவினதும் பெண்கள் சங்கங்கள் வாஷிங்டனில் ஒன்று கூடி சர்வதேச பெண்கள் சபையைத் தாபித்தது.

1893:- பெண்களுக்கு நிப்சிலாந்தில் வாக்குரிமை அளிக்கப்பட்டது.

1906:- பின்லாந்து: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1909:- பிரான்ஸ்: சோஷலிஸப் பிரதிநிதி ரெனே விவியானி கொண்டுவந்த ஒரு பிரேரணை மூலம் பெண்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமை பற்றி பிரெஞ்சுப் பாராளுமன்றம் முதற் தடவை விவாதித்தது.

1909:- நோர்வே: மாநகர சபைத் தேர்தல்களில் பெண்கள் வாக்களிக்க ஆரம்பித்தார்கள்.

1910:- டென்மார்க்: மார்ச் 22 "சர்வதேச பெண்கள் தினமாக" நினைவு கூறுமாறு சோஷலிசப் பெண்களின் இரண்டாவது உலகப் பேரவைக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டது.

1913:- நோர்வே: பெண்களுக்கு சம வாக்குரிமை வழங்கப்பட்டது.

1917:- நெதர்லாந்து: ரஷ்யா ஆகிய நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1918:- பிரித்தானியாவில் 30வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமையளிக்கப்பட்டது. 1928ல் இது18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு என மாற்றப்பட்டது.

1919:- ஜெர்மனி,செக்கோஸ்லோவாக்கியாவிலும் பெண்கள் வாக்குரிமை பெற்றனர்.

1920:- அமெரிக்கா: பெண்கள் வாக்களிப்பதற்கு சகல ராஜ்யங்களிலும் உரிமை வழங்கப்பட்டது.

1925:- ஜப்பானிய பாராளுமன்றம் மார்ச் 30ம் திகதி நிறைவேற்றிய "சர்வஜன வாக்குரிமைச்சட்டத்தில்" பெண்கள் நீக்கப்பட்டனர். இது ஜப்பானிய பெண்கள் விடுதலை இயக்கத்தை வீறு கொள்ளச் செய்தது.

1925:- இந்தியா: இந்தியப் பெண்கள் விடுதலை இயக்கத்தின் பலம் வாய்ந்த பாதுகாவலர்களில் ஒருவரான கவி சரோஜினி நாயுடு அம்மையார் இந்திய தேசிய காங்கிரஸின் தலையியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

1928:- பிரித்தானியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1928:- ஈகுவடோர்: பெண்கள் வாக்குரிமை பெற்றனர்.



படிப்பகம்

1932:- ஸ்பெயின்: குடியரசு அரசியலமைப்புச் சட்டம் பெண்களுக்கும் வாக்குரிமை அளித்தது.

1936:- பிரான்ஸ்: பெண்களுக்கு வாக்குரிமை இல்லாத போதிலும் நோபல் பரிசு பெற்ற பௌதிகவியல் அறிஞர் ஐரின் ஜூலியட் மேரி அம்மையார் உட்பட மூன்று பெண்கள் லியோன் புருமின் மக்கள் முன்னணி அரசில் நுழைந்து கொண்டனர்.

1945:- இத்தாலியும்,பிரான்ஸும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது.

1946:- பாரகுவே,லத்தீன் அமெரிக்கா பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது.

1964:- பாகிஸ்தான்: முதன் முறையாக ஒரு பெண் (செல்வி பாத்திமா ஜின்னா) பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.

1971:- சுவிட்சர்லாந்து: பெண்களுக்கு வாக்குரிமையளிக்கப்பட்டது.

1975:- ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மகளிர் ஆண்டாக பிரகடனம்.

1975:- கியுபா: கியுபா ஆண்கள் தமது மனைவியருக்கு வீட்டுப்பணிகளில் உதவி புரிய வேண்டுமெனக்கோரும்"குடும்ப ஒழுங்குக் கோவை" ஒன்று மார்ச் 8ம் திகதியான சர்வதேச பெண்கள் தினத்தன்று அமுழுக்கு கொண்டு வந்தது.

**இலங்கையில்**

1927:- பெண்களுக்கு வாக்குரிமைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

1928:- கிராமிய பெண்களின் முதலாவது பெண்கள் அமைப்பு உருவாக்கப்பட்டது.

1929:- இலங்கையில் முதன்முதலில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட போது பெண்களும் வாக்குரிமைப் பெற்றனர்.

1931:- எட்லின் மொலமூரே இலங்கைப் பாராளுமன்றத்தின் முதல் பெண் உறுப்பினராக தெரிவு.

1932:- நேசம் சரவணமுத்து முதலாவது (தமிழ்ப் பெண்) பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு.

1936:- நேசம் சரவணமுத்து இலங்கையில் முதலாவது தடவையாக பொதுத்தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பெண்ணானார்.

1956:- இலங்கையின் முதல் பெண் அமைச்சராக (தென்னிந்தியாவிலே முதல் பெண் அமைச்சராக) விமலா விஜயவர்தன நியமனம்.

1960:- முதற் தடவையாக பொதுத் தேர்தலொன்றின் போது தேர்தலுக்கான கட்சியின் ஒழுங்குகளை பெண்ணொருவர் தலைமைதாங்கி செய்தார். (ஸ்ரீ.ல.சு.கவுக்கு சிறிமாவோ பண்டாரநாயக்க)

1960:- இலங்கையின் முதற் பெண் பிரதமராகவும், உலகிலேயே முதற் பெண் பிரதமராகவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவுசெய்யப்பட்டார்.

1964:- இலங்கையின் முதலாவது பெண் பிரதியமைச்சராக விவியன் குணவர்தன நியமனம். இலங்கையில் அதிக தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளரும் இவரே.

1965:- சிறிமாவோ பண்டாரநாயக்கா முதல் பெண் எதிர்கட்சித் தலைவராக சிறிமா நியமனம்.

1976:- 86 நாடுகளைக் கொண்ட கூட்டுச் சேரா நாடுகளின் மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதமர் அடுத்து மூன்றாண்டுகளுக்கான தலைவியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

www.padippakam.com

(தெரிவு செய்யப்பட்டவர் சிறிமாவோ பண்டாரநாயக்க)

1993:- இலங்கையில் - மாகாண சபைக்கு சந்திரிகா குமாரணதுங்க முதல் பெண் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

1994:- இலங்கையில் பொதுத் தேர்தலில் இதுவரைக்காலம் எவரும் பெற்றிராத அளவுக்கு அதிகப்படியான வாக்குகளை சந்திக்கா பெற்றார். இவர் 4,64,588 வாக்குகளைப் பெற்றார்.

1994:- இலங்கையின் முதல் ஜனாதிபதியாக சந்திரிக்கா குமாரணதுங்க தெரிவு செய்யப்பட்டார். இலங்கையில் எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலிலும் எவரும் பெற்றிராத அதிகப்படியான வாக்கு வீதாசாரத்தை (62.29) சந்திரிக்கா பெற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

## உசாத்துணை...


1. Kumari Jayawardaha, "The women's movement in srilanka 1985-95-A glance back over ten years" facets of change: women in srilanka 1986-1995. centre for women's research , (CENWOR) colombo 1995, pp 396-408.
2. Women, political empowerment and decision making , Colombo, cenwor, 1995.
3. Wimala de Silva, "Women and political participation –the current scene" in lalitha dissanayake ( ed.) status of women, Colombo, ministry df health and women's affairs, 1993, p 84.
4. Tenth parliament of Sri Lanka, Colombo, Associated newspapers of ceylon ltd., 1996, p 680
5. Sirima Kiribamune, " women in local government politics in srilanka" in Anne Seyfferth ( ed.) , women claim their rights in local politics, bankok, friedrich ebert stiftung, 1994, pp 81-115.
6. Women's political empoweremnt and decisition- making ( this survey wos done only on a female sample), Colombo, cenwor, 1995, p 17.
7. A.C.Alles, the jvp –1969-1989, Colombo, lake house, 1990, pp 33, 34.
8. Socialist Tamil eelam –the ltte, quoted from sumentre bose, states, nations, sovereighty: Sri Lanka, india Tamil Eelam Movement, New Delhi, sage publication, 1994, p 110.
9. "Tamil women in the struggle for a free and independent tami eelam" London, ltte, 1991, p 8, quoted from peter schalk, 1992 , op . cit., p 77.
10. Adele Ann, women fighters of liberation tigers, publication section, ltte, Jaffna, printers, 1993, pp 8-13, 42-43 .
11. K.M.De silva, personal comment at the ICES conference in kandy, "Women in srilanka politics," 10-11 february 1996.
12. Sirima Kiribamuna, " women in local government politics in srilanka," women claim their rigths in local politics, documentation of a regionl workshop organised by friedrivh ebert stiftung in Bankok, 1994
13. Kumari Jayawardana, Doreen Wicramasinga: a western radical in srilanka, Colombo, social scientists association, 1993.
14. Selvy Thiruchandrena the politics of gender and women's agency in post- colonial srilanka, Colombo, women's education and research centre, 1997.
15. UN decade for women;progressand achievements of women in Sri Lanka, Colombo, CENWOR, 1995.
16. Sirima Kiribamuna, Women and Politics in Sri Lanka, A comarative perspective, ICES, Kandy, 1999.
17. Chitra Wijewardane - Women in our legislature A Srilankan Study, Colombo, 1995




படிப்பகம்

www.padippakam.com

18. புரட்சிகர கொள்கைப் பிரகடனம், கொழும்பு - மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) 1996. (சிங்கள மொழி)

19. போராட்டக்குறிப்புகள் (சோசலிச மகளிர் அமைப்பு). கொழும்பு, 2001 மார்ச். (சிங்கள மொழி).

20. டபிள்யு.ஏ.அபேசிங்க - டொனமூர் அரசியல் திட்டம்இஸ்.கொடகே சகோதரர்கள் வெளியீட்டகம் - கொழும்பு 1993 (சிங்கள மொழி)

21. பேராசிரியர்.கமலா லியனகே - இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு , பிரடிக் ஈபர்ட் மன்றம், 1998 (சிங்கள மொழி)

22. ஃபாதிமா மெர்னிஸ்ஸி (மொழிபெயர்ப்பு எம்.ஏ.நுஃமான்) - முஸ்லிம் பெண்களும் அரசியல் தலைமைத்துவமும், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி. ஒக்டோபர் 1999)



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



அதிகாரத்துவத்தை ஒழித்துக்கட்ட அதிகாரம் நமக்குத் தேவை என்பார் டொக்டர் அம்பேத்கார்.

உலகெங்கிலும் சகல பிரச்சினைகளும் மையங்கொண்டிருப்பது இந்த அதிகாரத்துவப் பிரச்சினையிலேயே. இந்த அதிகாரத்துவம் தான் வலுத்தவரையும் சளைத்தவரையும் தீர்மானிக்கிறது. இந்த அதிகாரத்துவம் தான் சுரண்டலையும் அச்சுரண்டலுக்கான நியாயங்களையும் கற்பிக்கிறது.

சமூக ஒடுக்குமுறைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் சமூக சக்திகளில் முக்கிய சக்தியாக பெண்கள் காணப்படுகின்றனர். இங்கு ஆணாதிக்கம் அதிகாரம் படைத்த நிலையிலும், பெண்கள் அவ்வதிகாரத்துக்கு வெளியில் இருந்து கொண்டு அவ்வதிகாரத்துக்கு பலியாகும் சக்தியாக விளங்கி வருகின்றனர்.

ஆணாதிக்கமயப்பட்ட சகல சூழல்களிலிருந்தும் தப்பி அதிகாரத்தில் பெண்களும் பங்கு செலுத்துவது என்பது எளிமையான காரியமல்ல. அந்த வகையில் இலங்கையின் அரசியலில் பெண்களும், பெண்களினது அரசியலும் என்கிற தலைப்பில் இவற்றை ஆராய முற்பட்டுள்ளார் ஆசிரியர்.

ISBN 955-97535-0-9

**இலங்கை:**
**அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும்**

**என்.சரவணன்**

படிப்பகம்